வெளியீடு 8-2-99 Issued 8-2-99

424/99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

C

புதன்கிழமை, ஏப்ரல் 22, 1998 – தொகுதி 46 – எண் 2

Wednesday the 22nd April, 1998 – Volume 46 – No. 2

...ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
...ve Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

D.
V211, 31'N98.
N98.46.2
218458

[Price Rs. 3.00

22-4-1998

424/99

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 185-186 |
| **2. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 186-218 |
| **3. விதி 111-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை—** | |
| 15-3-1997 ஆம் தேதியன்று மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது தெரிவித்த விவரங்களில் திருத்தம். வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை | 219 |
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு | 220 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998. | 220-221 |
| **6. தகவல் கோரல்—** | |
| மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகளை ஒரு நாள் முன்னதாக உறுப்பினர்களுக்கு அளித்தல். | 221-222 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 35 - பாசனம்<br>கோரிக்கை எண் 36 - பொதுப்பணிகள்-கட்டடங்கள்<br>கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு<br>கோரிக்கை எண் 55 - பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 223-339 |
| *மாண்புமிகு திரு. துரைமுருகன் | 223, 229 235<br>237, 243, 252,<br>256-257<br>261, 262,<br>268-269, 294,<br>305-331 |
| *திரு. பா. வேல்துரை | 240-246 |
| திரு. ஆர். சக்கரபாணி | 246-251 |
| *திரு. டி. மணி | 251-256 |
| திரு. சி. வேலாயுதன் | 257-264 |
| திரு. ஏ. கோதண்டம் | 264-266 |
| திரு. எஸ்.எஸ். மணி நாடார் | 266-269 |
| திரு. ச. இராஜரெட்டி | 269-271 |
| திரு. ப. பாலசுப்பிரமணியன் | 271-273 |
| திரு. ஜி.கே. மணி | 273-278 |
| திரு. சொ. கருப்பசாமி | 278-280 |
| திரு. துரை. சந்திரசேகரன் | 280-284 |
| திரு. எஸ். டேவிட் செல்வின் | 284-287 |
| திரு. அ. வெங்கடாசலம் | 287-291 |
| திரு. கே.எம். விஜயகுமார் | 292-293 |
| *திரு. ச. புரட்சிமணி | 294-296 |
| திரு. அ.வ. அப்துல் நாசர் | 297-300 |
| திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் | 300-304 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 340-341 |

218458

D
V211,51'N98
N.98.462

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 9, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 ஏப்ரல் 22, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு."

உழுவதைக் காட்டிலும் உரம் இடுதல் நல்லது; களை எடுப்பதும், நீர் பாய்ச்சுவதும் மிகவும் நல்லது; அதைவிட நல்லது அந்தப் பயிரைப் பாதுகாப்பது.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ.ஆர். பெருமாள் அவர்கள் 21-04-1998 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த திரு. ஏ.ஆர். பெருமாள் அவர்கள் அன்றைய இராமநாதபுரம் மாவட்டம், காரியாபட்டி தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவு குறித்து அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 22

மறைந்த பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்).

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள். வினா எண் 281, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. மோகனதாசன் மற்றும் திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**281—**

### தலைஞாயிறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

***4587—திரு. கோ. மோகனதாசன்:**
**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை 1994 ஆம் ஆண்டு விரிவாக்கம் செய்ததில் ஏற்பட்ட மோசடி சம்பந்தமாக விசாரணைக் கமிஷன் அமைத்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை விரிவாக்கம் செய்வதில் ஏற்பட்ட பணியில் ஊழல் நடந்துள்ளதா என்று இதுவரை உறுதியாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் எதுவும் பெறப்பட்டால் அதன்மீது அரசு விசாரணை நடத்தி, உண்மையைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளும்.



1998 ஏப்ரல் 22]

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை விரிவாக்கம் செய்வதில் பல்வேறுபட்ட முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. எந்தவித அக்ரிமெண்ட்டும் இலலாமலே, கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல். எந்தவித முன் அனுபவமும் இல்லாதவருக்கு - பின்னி ஆலையினுடைய உரிமையாளர் உடையார் அவர்களுக்கு - வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவருடைய சர்க்கரை ஆலை ஒன்று உத்திரமேரூரில் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு அதை வடநாட்டில் இருக்கின்ற ஒரு கம்பெனிக்கு ஓராண்டுக்குள் கொடுத்துவிட்டார்கள். அப்படியிருக்கும்போது, அரசினுடைய 4, 5 சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் வினாவாகக் கேட்க வேண்டும். இப்போது சொற்பொழிவு ஆற்றும் நேரம் இல்லை. துணை வினா மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வினா பற்றிய விவரங்களைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவரங்கள் இப்போது சொல்ல வேண்டியதில்லை. துணை வினாவிற்கு வாருங்கள். சுருக்கமாகத் துணை வினாவைக் கேளுங்கள்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலையை நிர்மாணம் செய்கின்றபோது தரமான இயந்திரங்களைப் பொருத்தாமல் தரமற்ற இயந்திரங்கள் வாங்கி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வளவு விவரங்கள் உங்களிடம் இருந்தால், தனியாக முதல்வர் அவர்களைப் பார்த்து மனு கொடுங்கள். அதற்குப் பிறகு நீங்கள் எதிர்பார்க்கின்ற பதில் கிடைக்கும். இப்போது நீங்கள் உட்காருங்கள். அடுத்து, திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலையைப் பொறுத்தவரையில், இரண்டாவது யூனிட் விரிவாக்கம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது

[1998 ஏப்ரல் 22

மதிப்பீட்டுத் தொகையான ரூ. 40 கோடி, வேலையே நடக்காமலே கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுகுறித்து ஒரு முழுமையான விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரங்களைக் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் எனக்கு வழங்குவாரேயானால், அதைப்பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 282, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**282—**

### காவல் நிலையம் அமைத்தல்

***10085—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டையில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொதட்டூர்பேட்டையிலே உள்ள புறக்காவல் நிலையத்தை முழுக்காவல் நிலையமாக நிலை உயர்த்தி, அரசு ஆணை (பல்வகை) எண் 1033, உள் (காவல் 14) துறை, நாள் 11-7-1997-ல் ஆணை வெளியிடப்பட்டாகிவிட்டது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தொகுதியிலேயே அதிக எண்ணிக்கையில் மக்கள் தொகை கொண்ட பொதட்டூர்பேட்டையிலே, முழு அந்தஸ்து பெற்ற காவல் நிலையம் அமைத்ததற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கு



1998 ஏப்ரல் 22]

நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன். இப்போது சர்க்கிள் ஆக இருக்கின்ற ஆர்.கே. பேட்டையிலே வேலைப்பளு அதிகமாக இருப்பதனால், பள்ளிப்பட்டு மற்றும் பொதட்டூர்பேட்டையையும் சேர்த்து ஒரு தனி வட்டமாக, சர்க்கிள் ஆக அமைத்து, ஒரு ஆய்வாளரை நியமித்து அங்கு வாகனத்தையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; அதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதற்கான செயற்குறிப்பு ஏதும் இப்போது அரசிடத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 283, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**283—**

### மும்முனை இணைப்பு வழங்குதல்

***7193—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டாரத்தில் மின்சாரம் தடையின்றிக் கிடைக்க மும்முனை இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம் காடையாம்பட்டி பகுதிக்கு, காடையாம்பட்டி 22 கி.வோ. [illegible] மின் ஊக்கி மூலம் 12 மணி நேரம் (பகலில் 4 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும்) மும்முனை மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. மற்ற நேரங்களில் இருமுனை மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 22

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே தாராபுரம், செம்மாந்தபட்டி, சின்ன திருப்பதி போன்ற பகுதிகளிலே சிறிய விசைத்தறிகளைக் கொண்டு பட்டு நெசவும், பாய்த் தொழிலும், அதேபோல் கிழங்குமாவுத் தொழிற்சாலை, ஜவ்வரிசித் தொழிற்சாலை, வெல்லம் உற்பத்தி செய்யும் கரும்பு ஆலைகளும் நிறைய அளவிலே இருக்கின்றன. இப்போது குறைந்த அளவு மின்சார விநியோகம் காரணமாக இந்தத் தொழில்களும் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்நிலை மின்பற்றாக்குறையினால் மட்டும் ஏற்பட்டதல்ல; கடந்த பல ஆண்டுகளாகவே இருந்து வருகின்றது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த காடையாம்பட்டி வட்டாரத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டாரமாக அறிவித்தார்கள். இருந்த போதிலும், அங்கே தொழில்கள் சரிவர நடத்த முடியாமல் இருப்பதற்குக் காரணம் மின் பற்றாக்குறைதான். ஆகவே, அங்கே மின் கடத்திகளை மாற்றி Industrial Feeder என்ற அமைப்புகளை ஏற்படுத்தி மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள சூழ்நிலையில Industrial Feeder-ஐ கிராமப் பகுதிகளிலே அமைக்க முடியாத நிலையில மின்சார வாரியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகலில் 4 மணி நேரம், இரவில் 8 மணி நேரம் மின்சாரம் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பகலில் 4 மணி நேரம் என்பதை 6 மணி நேரமாக அதிகரித்தும், இரவில் 8 மணி நேரம் என்பதை 6 மணி நேரம் என்று குறைத்தும் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூலை மாதத்திலிருந்து பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே மின்சாரப் பற்றாக்குறை இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், இப்போதைக்கு பகலில் 4 மணி நேரமும்



1998 ஏப்ரல் 22]

இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்குவது என்று அரசு தீர்மானித்து, 20 ஆம் தேதி முதற்கொண்டு இது அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே பல கிராமங்களிலே, அரசு அறிவித்த மின்வெட்டு அல்லாமல், குறிப்பாக இரவு நேரங்களிலே பல தடவை மின்வெட்டு ஏற்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? அதைச் சரிசெய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் நிலவி வந்த காரணத்தால்தான் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்குவதிலே 30 சதவீதம் வெட்டு ஏற்படுத்தி, இப்போது விவசாயிகளுக்கும் மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றவர்களுக்கும் தாராளமாக மின்சாரத்தை வழங்கிக் கொண்டு இருக்கின்றோம். 20 ஆம் தேதியிலிருந்து பொதுவாக தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியிலே விவசாயம் செய்ய முடியாத விவசாயிகள் எல்லாம் கோழி வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற தொழில்களைச் செய்து வருகிறார்கள். அதற்கான மின்சாரக் கட்டணத்தை Industrial Tariff-ல் விதிக்கிறார்கள். சாதாரணமான பல்புகளைத்தான் அவர்கள் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கு உபயோகப்படுத்தக்கூடிய பல்புகளைத்தான் போட்டு இருக்கிறார்கள். கோழிப்பண்ணை வளர்ப்பதற்குச் சரி, பட்டுப்புழு வளர்ப்பதற்குச் சரி, இப்போது Industrial Tariff-ல் விதிக்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தை ஆகவே, அந்த விவசாயிகள் மனம் மகிழ்ச்சியடையும் வண்ணம் இதற்கும் சாதாரணமாக வீடுகளுக்கு விதிக்கக்கூடிய கட்டணத்தையே விதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40 [1998 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்திலே பலர் விவசாயத்திற்கு என்று பெறுகின்ற மின் இணைப்பிலேயே வீடுகளுக்கும் மின் இணைப்பு எடுத்துக் கொள்கின்றார்கள். அதிலே ஏ.சி-யும் ஓடுகிறது. எல்லாவற்றுக்கும் பயன்படுத்துகின்றார்கள். இதற்கெல்லாம் மின்சார இலாக்கா வசதிகளை ஏற்படுத்தித் தருவதன்மூலம், இந்தச் சலுகைகளையும் அளிக்குமானால், இப்போது இருக்கக்கூடிய நஷ்டம் இன்னும் பல மடங்காகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே அதைப் பற்றி அரசு பரிசீலிப்பதற்கான வாய்ப்பே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியில் குறைந்த மின்னழுத்தம் இருப்பதால், வீடுகளிலே எரிகின்ற மின்சார விளக்குகள் சிம்னி விளக்கைவிட மங்கலான வெளிச்சத்தையே தருகிறது. அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில் புதுப்பாளையம் மற்றும் சமுத்திரம் போன்ற பகுதிகளில், மின்னழுத்தம் மிகவும் குறைவாக இருப்பதால், இரவில் எதிரில் வருகின்ற ஆட்கள் கூடத் தெரியாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. மேலும், குழந்தைகளின் படிப்பும் வெகுவாகக் கெட்டுப்போகிறது. ஆகவே, சரியான வோல்டேஜ் கொடுத்து மின்னழுத்தத்தைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? விவசாயத்திற்கு இரவிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டாலே வினா முடிந்துவிடுகிறது. அதற்குப் பிறகு திரும்பவும் கேள்வி ஏன்? அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20-ஆம் தேதிக்குப் பிறகு கிராமத்திற்குச் சென்றிருக்கமாட்டார் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும் இங்கிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு 20-ஆம் தேதிக்குப் பிறகு கிராமங்களில் நிலைமை எப்படி இருக்கிறது என்று அறிந்த பிறகு இங்கே கேட்பாரேயானால் விடை சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். (குறுக்கீடு)



1998 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பொது விவாதமல்ல. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுடைய மின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக, பஞ்சாபிலிருந்து மின்சாரம் பெறப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு சொல்லியிருந்தார்கள். பஞ்சாபிலிருந்து இதுவரை எவ்வளவு மெகாவாட் மின்சாரம் பெறப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு 150 மெகாவாட் மின்சாரம் பஞ்சாபிலிருந்து நாம் பெற்று வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், பல இடங்களில் வோல்டேஜ் குறைவாக இருந்ததால், புதியதாக டிரான்ஸ்பார்மர் போட வேண்டுமென்று சொல்லி, அதற்கு முயற்சி எடுத்து டிரான்ஸ்பார்மர் போட்டிருக்கிறார்கள். ஆனால் அதை இயக்குவதற்கு ஏ.பி. என்று சொல்லக்கூடிய ஸ்விட்ச் வராத காரணத்தால், அந்த டிரான்ஸ்பார்மர் இயங்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, அந்த ஏ.பி. என்கின்ற ஸ்விட்சை விரைவில் வாங்கிக் கொடுத்து டிரான்ஸ்பார்மரை இயக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குறையை உடனடியாகப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை தொலைபேசி மூலமாக நான் என்னுடைய கிராமத்திற்குத் தொடர்பு கொண்டேன். கீரப்பாளையம் பீடரில் நேற்று பகல் முழுவதும் மின்சாரம் வரவில்லை என்று சொன்னார்கள். எங்களிடம் எந்தவிதமான குறையும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அவர்களை நேரில் பார்த்து இதைச் சொல்லி சங்கடப்படுத்த வேண்டாம் என்பதற்காக நான் சொல்லவில்லையேயொழிய உண்மையிலேயே மின்சாரப் பற்றாக்குறைப் பிரச்சினை கிராமங்களில் மிகவும் அதிகமாக இருக்கிறது. விவசாயம் எதுவும் செய்ய இயலாத சூழ்நிலை இருக்கிறது. கிராமங்களில் மிகப் பெரிய குறையாக இது நிலவுகிறது. எனவே ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் காலையில் முதலமைச்சர் அவர்கள் என்னைக் கேட்கிறார்கள். நான் மின்சார வாரியத்தில் இருக்கிற (Member Distribution) அவர்களோடும், (Member Generation) அவர்களோடும் தொடர்புகொண்டு, தினந்தோறும் இதைப்பற்றி விசாரணை செய்து வருகிறேன். அவர்கள், இன்று காலையில் கூட எனக்குத் தெரிவித்த தகவல், தமிழ்நாட்டில் விவசாயிகள் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். கூடுதலாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். முன்பு இருந்ததைப்போல நிலைமை இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை மறுபடியும் அவர்களோடு தொடர்பு கொண்டு கேட்டு, இப்படிப்பட்ட குறைபாடு இருக்குமானால் அது நிவர்த்தி செய்யப்படும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் அழுத்த மின்சாரத்திற்கு 30 சதவீத வெட்டு அறிவித்ததன் காரணமாக, ஏராளமாக மின்சாரம் கிடைத்திருப்பதை வைத்து, பகலில் 4 மணி நேரம், இரவில் 8 மணி நேரம் மின்சாரம் வழங்குகிறார்கள். ஆனால் எல்லா விவசாயிகளும் ஒரே நேரத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதால் அந்த மோட்டார்களில் பழுது ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே பகல் நேரமும் எடுத்துக்கொள்ளலாம் அல்லது 4 மணி நேரம், 8 மணி நேரம் என்கின்ற கணக்கை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்று விவசாயிகளுக்கும் ஒரு உத்தரவிடுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயுள்ள அனைத்து விவசாயிகளும் ஒரே நேரத்திலே மின்சாரத்தைப் பயன்படுத்துவதில்லை. பகலிலே, 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 4 மணி நேரம் ஒவ்வொரு பகுதிக்கும் ஒதுக்கப்படுகிறது. இரவிலே 8 மணி நேரம் தமிழகத்திலேயுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் இரவு நேரங்களிலே தொழிற்சாலைகள் இயங்குவதில்லை. எனவே, இரவு நேரத்திலே மின்சாரம் நமக்கு மிச்சமாக இருக்கிறது. பகல் நேரத்திலே விளக்குகள் எரிகின்ற காரணத்தினாலேயும், வீடுகளிலே மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினாலேயும் பகல் நேரத்திலதான் நமக்கு மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. எனவேதான் மின்சார வாரியம் இப்படிப்பட்ட முறையிலே விநியோகிப்பது என்று முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 284. திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**284—**

## அரசு பொது மருத்துவமனை தொடங்குதல்

***8017—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியத்திற்குட்பட்ட தரகம்பட்டியில் புதிய அரசு பொது மருத்துவமனை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், தரகம்பட்டியில் அரசு மருத்துவமனை தொடங்கும் திட்டம் ஏதும் தற்பொழுது இல்லை.

**திரு. ச. நாகரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட, கடவூர் பகுதி

[1998 ஏப்ரல் 22

மிகவும் பின்தங்கிய பகுதி. நடுத்தர மக்கள் வாழுகின்ற அந்தப் பகுதியில் மக்கள் மிகவும் வேதனையான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியினுடைய மக்கள் தொகை கிட்டத்தட்ட 1 இலட்சம் வரை இருக்கிறது. இப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 60 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. கரூர் அல்லது குளித்தலை அல்லது மணப்பாறைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அவசர நேரத்திலே உயிர்ச்சேதம்கூட ஆகியிருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவற்றைத் தவிர்க்கும் வகையிலே சிறப்பு அடிப்படையிலே தரகம்பட்டியை மையமாக வைத்து அந்தப் பகுதியிலே ஒரு பொது மருத்துவமனை அமைக்கின்ற திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரகம்பட்டியினுடைய மக்கள் தொகை 2461. அந்தத் தரகம்பட்டியைச் சுற்றி இப்போது குளித்தலை, மணப்பாறை ஆகிய ஊர்களிலே அரசு மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. கடந்த ஆண்டு கிருஷ்ணராயபுரத்திலே ஒரு புதிய வட்ட மருத்துவமனை இந்த அரசாங்கத்தாலே உருவாக்கப்பட்டு அது சிறப்பாக நடைபெற்று வருகிறது. எனவே, தரகம்பட்டியில் புதிதாக மருத்துவமனை தொடங்கக்கூடிய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 285. திரு. கோ. சண்முகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**285—**

### வீடுகளுக்குப் பட்டா வழங்குதல்

***8742—திரு. கோ. சண்முகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 22]

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கலைஞர் நகர், பெரியார் நகர், அண்ணா நகர், சந்திரன் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கலைஞர் நகர், அண்ணா நகர் மற்றும் பெரியார் நகர் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 286, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**286—**

### நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல்

***2478—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலேயுள்ள குடிநீர்த் தேக்கத் தொட்டிகளிலே நூற்றுக்கு 75 சதவீதம் பழமையான காரணத்தினாலே பழுதுபட்டிருக்கின்றன. பல இடங்களிலே மின்

[1998 ஏப்ரல் 22

மோட்டார்கள் சரிவர இயங்குவதில்லை. வடக்குப் பாணத்திலே மின் மோட்டார் சரியாக இயங்குவதில்லை. பெரிய கருக்கை, தெற்குப் பாணம் போன்ற ஊர்களிலே நீர்த்தேக்கத் தொட்டிகள் முழுமையாகப் பழுதடைந்துள்ளன. ஆகவே, அவற்றையெல்லாம் சரிசெய்து தரவும், புதுக்குடி வடக்கு, இருமுடிக்குறிச்சி ஆதிதிராவிடர் காலனி, விண்ணங்குறிச்சி ஆதிதிராவிடர் காலனி, மாவணம் ஆகிய கிராமங்களில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் இருக்கின்ற காரணத்தினாலே புதிதாக நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரவும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை மற்றும் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியது. செந்துறை மற்றும் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியங்களின் மொத்தக் குடியிருப்புகளின் எண்ணிக்கை 330. 1-4-1997 அன்றைய நிலவரப்படி முழுமையான குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் 109. பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் 221. இந்தக் குடியிருப்புகளில் 1997-98 ஆம் நிதியாண்டில் 21 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிட்டு, 19 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு முழு அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் மேலும் 35 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. மீதியுள்ள 127 பகுதி அளவு குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அனைத்துக் குடியிருப்புகளுக்கும் முழு அளவு குடிநீர் வசதி தர முடியும்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 287. டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 22]

**287—**

## சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள்

***(689)—டாக்டர் வே. ஆல்பன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியிலுள்ள சுகாதாரச் சீர்கேட்டைப் போக்கி சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி பேரூராட்சியில், கூடுதலாக 8 தினக்கூலிப் பணியாளர்கள் 1-4-1997 முதல் நியமனம் செய்யப்பட்டு குப்பைகள் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்படுகின்றன. மேலும் கடற்கரைப் பகுதியில் பொதுக் கழிப்பிடமும், கட்டணக் கழிப்பிடமும் அமைக்க ஆரம்பகட்ட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் வே. ஆல்பன், இருக்கையில் இல்லை. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி பேரூராட்சியில், அந்தப் பகுதியைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு தற்போது சில துப்புரவுப் பணியாளர்களை அனுப்பி வைத்திருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். அதைவிட முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இந்தப் பகுதியைச் சுத்தம் செய்வதிலே தண்ணீர்ப் பற்றாக்குறையும், பாதுகாக்கப்பட்ட குடிநீர்ப் பற்றாக்குறையும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. அந்தக் கோவிலினுடைய கடைசி, அதாவது அதனுடைய இறுதி முனைப் பகுதியிலே வருகின்ற அந்தப் பகுதி பூராவையும் இருவேளை சுத்தம் செய்தால் மட்டும்தான் நல்லமுறையில் தூய்மையாக வைத்துக்கொள்ள முடியும். அந்தச் சூழ்நிலை இங்கே உருவாக்கப்படவில்லை. ஆகவே இருக்கின்ற அதிகாரிகளைக் கொஞ்சம் முடுக்கிவிட்டு, சுற்றுலாப் பயணிகளுக்குக் குறை இல்லாத அளவில்

அதைத் தூய்மைப் பகுதியாக வைத்துக்கொள்ள அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி அமைந்த பிறகு, நேரில் நானும் ஒருமுறை அங்கே சென்று, அதைப் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சருடைய உத்தரவுப்படி நல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக 18 நிரந்தரத் துப்புரவுப் பணியாளர்களும், ஒரு தினக்கூலித் துப்புரவுப் பணியாளரும் தற்சமயம் பணிபுரிந்து வருகின்றனர்; ஏற்கெனவே இருந்த எண்ணிக்கை இல்லை. கூடுதலாக 8 துணைப் பணியாளர்கள் சுகாதாரப் பணியில் ஈடுபட்டும் வருகின்றனர். அந்த எல்லையைத் தாண்டி, இதை ஒரு சிறப்புக் கவனமாக எடுத்துக்கொண்டு 8 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, குப்பைகளைச் சேமித்து வைத்ததால் அதை உடனுக்குடன் எடுக்க முடியாத சூழ்நிலை இருந்தது. அதைப் போக்கிட மினி லாரி, 'ஸ்வராஜ் மஸ்டா' நவம்பர் 1996-ல் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் அது சரியில்லாத காரணத்தால், மீண்டும் மினி லாரி செல்ல முடியாத இடங்களில் 'Power' மூலம் குப்பைக் கூளங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, பொதுச் சுகாதாரம் ஓரளவு நல்லமுறையில் தற்சமயம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதோடுகூட யாத்திரிகர்கள் அதிகமாக வருவதால், கடற்கரைப் பகுதிகளைக் கழிப்பிடமாகப் பயன்படுத்துவதைத் தடுத்திடும் வகையில் - எல்லா வகையிலும் எதைச் செய்தாலும் இந்தத் துர்நாற்றத்தை சகிக்க முடியாத நிலையை நானே பார்த்தேன். அதற்குப் பிறகுதான் - அந்த இடங்களில் 13,08,000 செலவில் ஒரு கழிப்பிடமும், 8, 9, 10 ஆகிய வார்டுகளில் 7,20,000 செலவில் பொதுக் கழிப்பிடங்களும், கடற்கரைச் சாலையில் 3,50,000 செலவில் கட்டணக் கழிப்பிடமும் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. விரைவில் அது நிறைவேறினால சுகாதாரம் ஓரளவு மேம்படும். அதோடுகூட, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் பற்றிய பிரச்சினை பற்றித் தனியாக அவர் என் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதற்கும் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 288, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.





**288—**

### விவசாயக் கல்லூரி, தோட்டக்கலைப் பண்ணை அமைத்தல்

***5958—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூரில் விவசாயக் கல்லூரி மற்றும் தோட்டக்கலைப் பண்ணை ஆகியவை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சுடலைமுத்து, இருக்கையில் இல்லை.

வினா எண் 289, திரு. செங்கை சிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**289—**

### கடல்நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துதல்

***11337—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல்நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல்நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் முறையை 'மெக்சிகோ' நாட்டில் கண்டுபிடித்து, வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள். அதற்கேற்றவாறு பயிர்களைப் பயிர் செய்கிறார்கள். 26-4-1997 அன்று சென்னையில் நடைபெற்ற விஞ்ஞானிகள் கருத்தரங்கில்கூட, இந்த முயற்சியை மேற்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே தற்போது நீர் ஆதாரம் குறைந்துகொண்டு வருகிற இந்தச் சூழ்நிலையில், அமைச்சரவர்கள் - இந்த அரசு - குறைந்தபட்சம் இப்படிப்பட்ட ஆய்வுகளுக்கு இது உகந்தது. இப்படிச் செய்யலாம் என்று விஞ்ஞானிகள் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஆய்வு செய்து, இதை மறுபரிசீலனை செய்து, இந்தக் குறைந்தபட்ச முயற்சிகளையாவது அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் இப்போது கசிவு நீர்க்குட்டைகள் அமைத்து, தண்ணீரைத் தேக்கி வைப்பதன் மூலம் நிலத்தடி நீர் கிடைக்கும் என்ற அந்த அடிப்படையில் இப்போது கசிவு நீர்க்குட்டைகள் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோல் தண்ணீர் வீணாக ஓடுவதைத் தேக்குவதன் மூலம், நீர் ஆதாரத்தைப் பெருக்க முடியும் என்பதால், தடுப்பு அணைகள் - செக் டாம்ஸ் - கட்டப்படுகின்றன. இந்த அடிப்படையில்தான் தற்போது தமிழகத்திலே நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 290. திரு. து. செல்வராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 22]

**290—**

## உடுமலை நகரில் புறவழிச் சாலை அமைத்தல்

***3979—திரு. து. செல்வராஜ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகரில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலை நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 291. திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**291—**

## பாலமும் தடுப்புச் சுவரும் அமைத்தல்

***7358—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி, ஏரல்-சுப்பிரமணியபுரம் சாலையிலுள்ள சிறுத்தொண்டநல்லூர் பாலம் மிகவும் வலுவற்ற நிலையிலும், குறுகியதாகவும் உள்ளதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாலமும் தடுப்புச் சுவரும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியில உள்ள ஏரல்-சுப்பிரமணியபுரம் சாலையில் உள்ள சிறுத்தொண்டநல்லூர் பாலம் மிகவும் வலுவற்ற நிலையிலும் குறுகியதாகவும் உள்ளதை அரசு அறியும்.

(ஆ) அரசின் நிதி வளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இப்பணியை வரும் ஆண்டுகளில் நெடுஞ்சாலைத் துறையில் பகுதி-2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவைகுண்டம் தொகுதியிலுள்ள சிறுத்தொண்டநல்லூர் பாலத்தைக் கட்டித் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பாலத்தையொட்டி, குறுகலான வளைவு இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதன் அருகிலேயே ஒரு கழிவு நீர் வடிகால் இருக்கிறது. பேருந்துகள் எல்லாம் அந்த வடிகாலை நோக்கிச் செல்லும்போது அங்கே குறுகிய வளைவு இருக்கின்ற காரணத்தாலும், தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தாலும், விபத்திலே சிக்கிக் கொள்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பாலத்தையொட்டி சுமார் 50 மீட்டர் தூரத்திற்கு தடுப்புச் சுவரை அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் இருக்கும் இடம் ஒரு கால்வாயைக் கடந்து செல்கின்ற இடமாகும். கால்வாயின் அகலம் 12 மீட்டராகும். இப்பாலம் ஒரு வழிப் பாதை இருக்கிறது என்பதை ஏற்கெனவே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். இப்பாலத்தைத் திரும்பக் கட்டவும், தடுப்புச் சுவர் கட்டவும், தோராயமாக 35 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அரசின் நிதிநிலை அனுமதிக்கிறபோது குறிப்பாக, அடுத்த ஆண்டு இத்திட்டத்தை, பகுதி-2 திட்டத்திலே எடுத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது, இந்தத் தடுப்புச் சுவர் கட்டுவது, அல்லது கழிவு நீர் செல்வது, கால்வாயில் நீர் செல்வது போன்ற அத்தனை பிரச்சினைகளும்





கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 292. திரு. கோ. தளபதி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**292—**

**மலைப்பாதை, மின் வசதி ஏற்படுத்துதல்**

***6487—திரு. கோ. தளபதி:**

**திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வத்திராயிருப்பு சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோயிலுக்குச் செல்ல மலைப்பாதையும், மின் வசதியும் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம் சதுரகிரி மலையில் அமைந்துள்ள சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோயிலுக்கு வத்திராயிருப்பு வழியாகச் செல்லும் மலைப்பாதையை குதிரைப் பாதையாக அமைத்திடவும், இம்மலைப்பாதையில் மின் விளக்குகள் அமைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதுரகிரி மலையில் உள்ள அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோயிலுக்கு ஒவ்வொரு அமாவாசைக்கும் தென்பகுதியிலுள்ள மக்கள் இலட்சக்கணக்கான அளவிலே மலையிலே ஏறி இறங்கி வருகிறார்கள். அந்த மலைப்பாதையில் ஏறி இறங்குவது என்பது

மிகவும் சிரமமாக இருக்கிறது. நான்கூட ஒரு தடவை ஏறி இறங்கியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒருமுறை வந்து பார்த்தால், அதனுடைய சிரமம் தெரியும். எனவே, இந்த ஆண்டு அந்த மலைப்பாதையை அமைத்திடவும், மின் வசதியை ஏற்படுத்தித் தரவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிவாரத்திலிருந்து அந்த மலை உச்சியில் இருக்கிற கோயில் வரைக்கும் 9 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. எனவே, இதைச் சீர் செய்வதற்கு ரூ.25 இலட்சம் தேவைப்படுகிறது. ஏற்கெனவே நம்முடைய கோயில்களினுடைய மொத்த நிதி வரவே ரூ.6.77 இலட்சம்தான். எனவே கோயில்களினுடைய வேறு வகையான வருவாயிலிருந்து அல்லது வேறு துறைகளிலிருந்துதான் மாற்றம் செய்து இந்தத் திருப்பணியைச் செய்யவேண்டியுள்ளது. அதனால்தான் காலத் தாழ்வு ஏற்படுகிறது. என்றாலும் நல்ல நோக்கத்தோடு சொல்லப்படுகிற இந்தப் பாதை உறுதியாக அமைத்துத் தரப்படும். அதே நேரத்தில் மின் விளக்குகள் போடுவதற்கு மதிப்பீடுகளைத் தயார் செய்யச் சொல்லியிருக்கிறோம். அது உறுதியாக வெகு விரைவில் அமைத்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாணிப்பாடியிலிருந்து வத்திராயிருப்பு சுந்தரமகாலிங்கசுவாமி கோயிலுக்குப் போவதற்கு படிக்கட்டுகள் வேண்டுமென்பது பக்தர்களுடைய நீண்டநாள் கோரிக்கை. இதற்கு முன்னாலே கேட்கப்பட்ட கேள்விக்கு சட்டசபையில் பதில் சொல்லும்போது 'பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது' என்று சொன்னார்கள். ஆனால் இப்போது ரூ.25 இலட்சம் எஸ்டிமேட் போட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது குதிரை வழிப் பாதையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் இப்போது பக்தர்கள் போகும்போது வயதானவர்கள் - 50 வயதிற்கு மேல் இருக்கிறவர்கள், அந்த சதுரகிரிக் கோயிலுக்குப் போக நினைக்கும்போது நடக்கமுடியாமல் தொட்டில் கட்டித் தூக்கிக்கொண்டு





போகிறார்கள். அதற்கு ரூ.300/- வரைக்கும் செலவாகிறது. இரண்டு ஆட்கள் தூக்கிக்கொண்டு போகிறார்கள். ஆகவே, நீங்கள் மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருச்செந்தூர் கோயில், பழனி கோயில் இப்படி வருமானமுள்ள கோயில்களிலிருந்து ரூபாயை 'டைவர்ஸ்' பண்ணி (சிரிப்பு) நீங்கள் அந்தப் படிக்கட்டுகள் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அவையெல்லாம் வருமானமுள்ள கோயில்கள். எனவே நீங்கள் படிக்கட்டுகள் அமைப்பதற்கும் இந்த மாதிரி ஆகாய இரயில் விடுவதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'டைவர்ட்' பண்ணியா, 'டைவர்ஸ்' பண்ணியா? எனக்குக் காது கேட்கவில்லை. அதனால்தான் உங்களைக் கேட்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** வருமானமுள்ள கோயில்களிலிருந்து ரூபாயை 'டைவர்ஸ்' பண்ணி (பலத்த சிரிப்பு) வருமானமுள்ள கோயில்களிலிருந்து ரூபாயை மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத்தான் தமிழிலேயே சொல்லிவிட்டால் பிரச்சினை வராது. அதனால்தான் 'டைவர்ஸ்'-க்கும், 'டைவர்ஷன்'-க்கும் வேறுபாடு தெரியாமல் போய்விட்டது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து முற்றிலும் ஏற்கத் தகுந்தது. ஏற்கெனவே இது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்வது போல் 9 கிலோமீட்டர் படிக்கட்டுகள் அமைப்பதற்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவாகும். எனவே, இது ஒன்றும் நடைமுறைச் சாத்தியமாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால், ஒரு குதிரைப் பாதையாக அனைவரும் நடந்து செல்லக்கூடிய பாதையாக மட்டும்தான் அதை உருவாக்கமுடியும். அதற்கே 9 கிலோமீட்டர் என்பது அதிக தூரம்தான். அவர் பெரிய கோயில்களிலிருந்து வருமானத்தை எடுத்து இதைச் செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார். அதைப்போல பல பணிகள் பெரிய கோயில்களின் வருமானத்திலிருந்து செய்யப்படுகின்றன என்ற அடிப்படையில்தான் இதற்கும் நிதி ஒதுக்கவேண்டும். என்றாலும்கூட ரூ.300 கொடுத்துத் தூக்கிக் கொண்டு போகிற அளவிற்கு இருக்கிற நிலைமையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பது எனக்குத் தெரியவில்லை.

ஏற்கமுடியாது. ஏனென்று கேட்டால் குதிரைப் பாதையாகப் போட்டால்கூட அதே நிலைதான் தொடரும். அவர்கள் 50 வயதானவர்கள். ஆகவே தூக்கிச்செல்வது என்பது தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும். எனவே, படிக்கட்டு அமைத்தால்கூட அவர்கள் அதிலே நடந்துதான் போகவேண்டும். இன்னும் சொல்லப்போனால் குதிரைப் பாதையிலாவது நடந்து போகலாம். படிக்கட்டு அமைத்தால் இன்னும் இடர்பாடுகள் இருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட நிலையில் உறுதியாக மின் வசதிகளைச் செய்வதற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்படும். அதே நேரத்தில் நீங்கள் சொல்வது போல் பிற கோயில்களின் திருப்பணியிலிருந்து கொஞ்சம் தொகையை மாற்றித் தந்து, இதற்காக ஆவனசெய்யப்படும் என்று இந்தத் துறை தெரிவித்திருக்கிறது. அது உறுதி செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 293, திரு ஜே. எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**293—**

### நியாயமான வாடகை நிர்ணயம் செய்தல்

***8817—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோயில்களுக்குச் சொந்தமான கடைகள் மற்றும் வீடுகளுக்குக் குறைந்த வாடகை வசூலிக்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) கோயில்களின் வருமானத்தைப் பெருக்கும் வகையில், அவற்றின் கடைகள் மற்றும் வீடுகளுக்கு நியாயமான வாடகையை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) அறியும்.

(ஆ) கோயில்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் வகையில் அவற்றின் கடைகள் மற்றும் வீடுகளுக்கு நியாயமான வாடகையை நிர்ணயிக்க நியாய வாடகை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டு தற்காலச் சந்தை மதிப்புப்படி வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 294, திரு. ஏ.எம். ராமசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**294—**

### தொழில் பயிற்சிப் பள்ளி அமைத்தல்

***7699—திரு. ஏ.எம். ராமசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியாரோ அல்லது தொண்டு நிறுவனங்களோ, மகளிர் தொழிற் பயிற்சிப் பள்ளி/தொழிற் பயிற்சிப் பள்ளி அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு அரசு, புறம்போக்கு நிலம் அளித்து அதனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய விதிமுறைகளின்படி, தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க முன்வரும் தனியார் அல்லது தொண்டு நிறுவனங்கள் அவர்களாகவே நிலம் மற்றும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொள்கின்றனர். எனவே இதற்காக அரசு புறம்போக்கு நிலம் அளிக்கும் வாய்ப்பில்லை.

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஏழை எளிய பெண்கள் பயிற்சிப் பள்ளியில் படிப்பதற்கு வசதி இல்லாத நிலையில் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவிட நம்முடைய அரசே ஒரு பயிற்சிப் பள்ளியை நடத்துவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிலங்களை இதுபோன்ற பயிற்சி நிலையம் அமைப்பதற்காக இலவசமாகத் தருவதில்லை. தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க எவ்வளவு நிலம் வேண்டும் என்பதைப்பற்றி National Council for Vocational Training தேசிய வாழ்வியல் பயிற்சிக்குழு சில நார்ம்ஸ், சில வரைமுறைகளைச் செய்து இருக்கிறது. அந்த வரைமுறைகளின்படி தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க சென்னை மாநகரிலே பயிற்சியாளர்கள் விடுதி, பணியாளர்கள் தங்குமிடம் நீங்கலாக 5 ஏக்கர் நிலம், இதர இடங்களில் 10 ஏக்கர் நிலம் என்றிருக்கிறது. ஆக, புறம்போக்கு நிலத்தை இலவசமாகக் கொடுப்பது என்பது சாத்தியம் இல்லை.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 295, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்

**295—**

## கிளைச் சிறைச்சாலையை மீண்டும் இயக்குதல்

***11390—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில், இயங்காமல் உள்ள கிளைச் சிறைச்சாலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் இயங்காமல் உள்ள கிளைச் சிறைச்சாலையை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு எதும் இல்லை.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு, வட்டத் தலைநகரமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே வருகின்ற, திருவையாறு குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை பெறுகின்ற கைதிகள், கடந்த காலங்களில் திருவையாறிலே



1998 ஏப்ரல் 22]

கிளைச் சிறைச்சாலையிலே வைக்கப்பட்டார்கள். ஓர் அதிகாரி சோதனையிட வந்தபோது, சிறைச்சாலையிலே ஆட்கள் இல்லை என்று அதை நிறுத்தி இருக்கிறார்கள். இப்போது நடைமுறையில், திருவையாறில் தண்டனை வழங்கப்படுகின்ற கைதிகள், தஞ்சாவூர் கிளைச் சிறையில் இடம் இல்லாத காரணத்தால் திருச்சிக்கு அனுப்பப்படுகிறார்கள். எனவே, அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து ஏற்கெனவே இயங்கி வந்த கிளைச் சிறைச்சாலையை மீண்டும் இயக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் இயங்கி வந்த கிளைச் சிறைச்சாலை 1987ஆம் ஆண்டு மூடப்பட்டது. அந்தச் சிறைச்சாலையைச் சீரமைப்பதற்காகவும், விரிவுபடுத்துவதற்காகவும் தேவையான இடவசதி அந்தச் சிறைச்சாலையிலே இல்லை. அதனாலேதான் அது மூடப்பட்டது. எனவே, இன்றையதினம் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்ற குற்றம் சாட்டப்பட்டவர்கள் தஞ்சாவூர் சிறையிலும், அல்லது திருச்சி சிறையிலும் வைக்கப்படுகிறார்கள். எனவே, இந்த வசதியே போதுமானது என்று அரசு கருதுகிறது. புதிதாகக் கிளைச் சிறைச்சாலை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 296, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**296—**

## பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீடுகள்

***2784—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கும் கிராமப்புற வீட்டுவசதி வாரியம் மூலமாகக் குறைந்த செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளதற்கேற்ப ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீடு கட்டுவதற்கு உதவும் வண்ணம் ஊரக வீட்டுவசதிக் கழகம் ஒன்றைத் தொடங்க அரசாணை நிலை எண் 133, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 20-3-1997-ல் ஆணை வெளியிடப்பட்டு, பணி நடைபெறுகிறது.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20-3-1997-க்குப் பிறகு அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். அதற்குப் பிறகு எந்தெந்தப் பகுதிகளிலே வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அது எப்படித் துவங்கப்படும். ஒவ்வொரு வட்டார அளவிலேயா அல்லது தாலுக்கா அளவிலேயா, எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக வேளச்சேரி, மாதவரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலே பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 297, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில். மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

297—

### நீலகிரித் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

***11641—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நீலகிரித் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?



1998 ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் ஏற்காட்டில் நீலகிரித் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை. தனியார் எவரேனும் மேற்படி தொழிற்சாலை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு அத்தொழிற்சாலை அமைக்க இத்துறை அனைத்து உதவிகளையும் வழங்கும்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஏற்காடு, மலைவாழ் மக்களும், ஆதிதிராவிட மக்களும் வாழும் ஒரு பிற்பட்ட பகுதியாகும். அங்கே 35,000 மக்கள் வாழ்கிறார்கள். 67 கிராமங்கள் உள்ளடங்கிய அந்தப் பகுதியிலே எவ்விதத் தொழிற்சாலையும் இல்லை. அங்கே மூலப்பொருட்கள் இலவசமாகக் கிடைக்கின்றன. அங்கே வேலை செய்யக்கூடியவர்கள் அத்தனைபேரும் காப்பித் தோட்டங்களிலே கூலி வேலை செய்கிறவர்களாகவும், மரம் வெட்டுகிறவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகவே, அங்கு ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம். தமிழக முதல்வர் அவர்கள், ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஒரு தொழிற்சாலையைத் தொடங்கலாம் என்ற ஒரு திட்டத்தினை அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை மூலமாக இல்லாவிட்டாலும், கதர்த் துறை மூலமாகவாவது ஒரு நீலகிரித் தைலத் தொழிற்சாலை அதாவது தேனி வளர்ப்போர் சங்கம் இருப்பதைப் போன்று அங்கே பழரசத் தொழிற்சாலையும், நீலகிரித் தைலம் தொழிற்சாலையும் அமைக்க ஏற்பாடு செய்தால், அங்கேயுள்ள மலைவாழ் மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்பதை அரசே. . .

. . .

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவை எழுதிவைத்து நீண்ட சொற்பொழிவு மாதிரி படிக்கிறீர்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறு தொழில் துறை மூலமாக ஆரம்பிக்க இயலாது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்.

ஆகவே, அவர் தனிக் கேள்வி எழுப்பினால் உரிய துறை அதுபற்றிப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரித் தைலம் தயாரிக்கப்படுகிற கற்பூர மரங்கள் நீலகிரியிலே மிகப்பெருமளவில் இருக்கின்றன. பல்வேறு தைலங்கள் அங்கே தயாரித்துக்கொண்டு வருகிறார்கள். மிக அதிகமான விலைக்குப் போகின்ற அந்த நீலகிரித் தைலத்தைத் தயாரிக்க அங்கே அரசு மூலமாக ஒரு தொழிற்சாலையை அமைத்துத்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மூல பதிலிலே தனியார் யாரும் ஆரம்பிக்க முன் வந்தால் அரசு அத்தனை உதவிகளும் அளிக்கும் என்று தெரிவித்திருக்கிறேன். ஏற்கெனவே நீலகிரி மாவட்டத்திலே தனியார்கள் 24 பேர்கள் ஆரம்பித்து நீலகிரித் தைலம் தயாரித்து விற்பனை செய்து வருகிறார்கள். ஆகவே, தேவைப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 298, திரு. மு. அப்பாவு. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**298—**

**பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபம்**

***12746—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபம் கட்ட அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



தங்கள் அனுமதியோடு திருத்திய பதிலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 19-4-1998 அன்று நாகர்கோயிலில் நடைபெற்ற பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் நினைவு மண்டபத் திறப்பு விழாவில் பேசும்போது, பெருந்தலைவர் காமராஜரின் அஸ்தி கரைக்கப்பட்ட கன்னியாகுமரி கடற்கரையில் பெருந்தலைவர் காமராஜருக்கு நினைவு மண்டபம் கட்டப்படும் என அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க 20-4-1998 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தொடர்பு கொண்டு காமராஜர் அஸ்தி கரைத்த இடத்தில் காமராஜருக்கு நினைவு மண்டபம் கட்டுவதற்கு ஏற்றவகையில் இடத்தின் வரைபடம் மற்றும் விரிவான விவரங்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையைப் பெற்றபின் கட்டடக்கலை வல்லுநரின் வரைபடம் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையைப் பெற்று சிறந்த முறையில் விரைவில் கன்னியாகுமரியில் காமராஜருக்கு நினைவு மண்டபம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975-லிருந்து வைத்த கோரிக்கையை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 19-4-1998 அன்று நாகர்கோயிலிலே அரசு விழாவிலே பேசும்போது பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அஸ்தி கரைக்கப்பட்ட அதே இடத்தில் கன்னியாகுமரியில் மணி மண்டபம் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த மணி மண்டபத்தை மிக விரைவிலேயே கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணா சமாதி ஓராண்டு காலத்திற்குள் மிக அருமையாகக் கட்டி முடிக்கப்பட்டது போன்று, ஓராண்டு காலத்திற்குள் மிக அருமையான ஒரு மணி மண்டபத்தை கலை நுணுக்கத்துடன் மிகத் திறமையான வல்லுநர்களைக் கொண்டு கட்டித்தர வேண்டும் என்று உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 299. திரு. ஜி. பழனிசாமி மற்றும் திரு. மீ. அ. வைத்தியலிங்கம். மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 22

299—

## பட்டதாரி ஆசிரியர்களை நிரந்தரம் செய்தல்

***4426—திரு. ஜி. பழனிசாமி :**

**திரு. மீ.அ. வைதியலிங்கம் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத் துறையில் 1986 முதல் 1990 வரை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை, அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆணை வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இயலாது.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒப்பந்த முறையிலே நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள்தான் இன்றைக்கு நலத் துறைப் பள்ளிகள் தனியார்ப் பள்ளிகளோடு போட்டிபோட்டு விழுக்காடுகள் பெற்று வெற்றி பெறுகிற அளவிற்கு உழைத்து இருக்கிற காரணத்தால் மூப்பு அடிப்படையில் நியமிக்கும்போதாவது அவர்களுக்கு முன்னுரிமை தர இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையில பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் வெற்றிகள் பல பெற்று விருதுகள் பெறுகிறார்கள் என்பது உண்மை. ஆனால் இவர்கள் 1986-லிருந்து 1996 வரை 10 ஆண்டுகளாக பணிவரன்முறை செய்யப்படாமல் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். கழக ஆட்சி பொறுப்பேற்ற உடனே வந்து எங்களிடம் முறையிட்டார்கள்.



1998 ஏப்ரல் 22]

10 ஆண்டுகளாக நாங்கள் பணிவரன்முறை செய்யப்படாமல் இருக்கிறோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் எடுத்துக்கூறி, அவர்களுக்கு 1986-லிருந்து 1990 வரை அவர்கள் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய காரணத்தினாலும், 1990 லிருந்து 1996 வரை அவர்கள் தொடர்ந்து பணியாற்றிய காரணத்தினாலும் அவர்களுக்கு, 191 ஆசிரியர்களுக்கு இந்தத் துறையின் சார்பாக பணிவரன்முறை செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 300, திரு. அ. அசோகன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்

300—

## திருவாரூரை சுற்றுலாத் தலமாக்குதல்

***4015—திரு. அ. அசோகன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் நகரைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலம் என்று அறிவிப்பதில்லை. ஆனால் சுற்றுலா இடங்களுக்கு வருகை தரும் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளான மின் வசதிகள், சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், கழிப்பிட வசதிகள் போன்ற வசதிகளை அரசு ஏற்படுத்தித் தருகிறது. திருவாரூர் நகரில் அமைந்துள்ள கமலாலயத் திருக்குளத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 20-4-1997 முதல் சுற்றுலாப் பயணிகள் சுற்றிவர படகு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 10-15

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் கமலாலயத் திருக்குளத்தின் மையப் பகுதியில் உள்ள நாகநாதர் ஆலயத்திற்குத் தினமும் நூற்றுக்கணக்கான பெண்கள் வந்து செல்கிறார்கள். அதைவிட சுற்றுலாப் பயணிகள் அங்கு படகுச் சவாரி செய்வதால் படகுச் சவாரிக்கு 5 ரூபாய் வசூலிக்கப்படுவதாகப் பொதுமக்கள் புகார் கூறுகிறார்கள். திருவாரூர் வந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் அதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். அந்தப் படகுச் சவாரிக்கு வசூலிக்கப்படும் கட்டணம் குறைக்கப்படுமா என்பதோடு இன்றைக்கு திருவாரூர் மாவட்டத்திற்கு அருகில் இருக்கிற புகழ்பெற்ற ஆலங்குடி ராகு பகவான் ஆலயம், அதேபோல் திருக்கடவூர் சிவன் ஸ்தலம், அருகில் இருக்கிற வேளாங்கண்ணி, நாகூர், போன்றவைகளுக்கு மையப் பகுதியாக இருக்கிற திருவாரூரில் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் மூலமாகத் தங்கும் விடுதி கட்டப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குளத்தில் விடப்பட்டிருக்கின்ற படகு வசதிக்கு மாண்புமிகு உறுப்பினர் காட்டும் ஆர்வத்தையும், பொதுமக்களின் ஆர்வத்தையும்; சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்தையும் கருத்தில் கொண்டு 20-4-1998 முதல் 5 ரூபாய் என்று இருந்த கட்டணம் 3 ரூபாய் என்று குறைத்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், வருங்காலத்தில் இந்த அரசு, சுற்றுலாத் துறையின் சார்பாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாகத் தங்கும் விடுதிகளைத் திருவாரூரில் கட்டுவதற்கான முயற்சிகளை நிதிநிலையைப் பொறுத்து மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]



# (3) விதி 111-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

**15-3-1997 ஆம் தேதியன்று மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது தெரிவித்த விவரங்களில் திருத்தம் செய்து வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 111-ன்கீழ் அறிக்கை அளித்தல். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை ஒன்றை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

15-3-1997 அன்று சட்டமன்றப் பேரவையில் 1997-98 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண்கள் 20 மற்றும் 53-ன் மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது மக்கள் நலன் காக்க, மழை வளத்திற்கு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம் என்ற இந்தத் திட்டம், இந்த நிதி ஆண்டில் நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளான ஜூன் திங்கள் 3 ஆம் நாள் முதல் தொடங்கப்படும் என்றும் தமிழகத்தில் உள்ள 384 ஊராட்சி ஒன்றியங்களில் 75 ஒன்றியங்களைத் தேர்வு செய்து இந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 4.69 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும் என்றும் தெரிவிக்கும் நோக்கோடு சில கருத்துக்களைத் தெரிவித்தேன். இது சரியான தகவல் அல்ல. இதன் சரியான விவரம் பின்வருமாறு: இந்த உரையில் ரூ. 4.69 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும் என்பதற்குப் பதிலாக ரூபாய் 4.69 இலட்சம் செலவில் தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, ரூபாய் 4.69 இலட்சம் செலவில் தொடங்கப்படும் என்பதற்குப் பதிலாக ரூ. 4.69 இலட்சம் மரக் கன்றுகள் நடப்படும் என்று எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே, 15-3-1997 அன்று நான் பேரவையில் நிகழ்த்திய உரையில் மேற்கண்டவாறு திருத்தம் செய்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 22

## 4. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக்குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே. ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்றொன்றாவது முதல் தொண்ணூற்றைந்தாவது வரையிலான 5 அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1998 ஏப்ரல் 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. தகவல் கோரல்

### மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகளை ஒருநாள் முன்னதாக உறுப்பினர்களுக்கு அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பொதுப் பணித் துறை பற்றிய மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வருகிறது. இதைப்பற்றிய கொள்கை விளக்கப் புத்தகங்கள் எங்களுடைய பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு இரவு 12 மணிக்குத்தான் வந்தன. இது ஒரு பெரிய துறை. இந்தத் துறையைப் பற்றி நாங்கள் நிறைய விஷயங்களை அதில் படித்துத் தெரிந்து அதைப்பற்றிச் சட்டமன்றத்திலே பேச வேண்டிய காரணத்தினால், எங்களால் அதைச் சரியாகப் படிக்க முடியவில்லை. அதுவும் 12 மணிக்கு வந்ததற்குப் பிறகு, ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்கள் தூங்கி விட்ட காரணத்தால் காலையில்தான் அதைப் படிக்கிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் இனி வருங்காலங்களில் இந்தக் கொள்கை விளக்கப் புத்தகங்களை ஒரு நாள் முன்னதாக உறுப்பினர்களுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இரவில்தானே கொடுத்தார்கள்.

[1998 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவரோடு பேசாதீர்கள் நீங்கள் கேட்டு விட்டீர்கள். நான் பதில் சொல்கிறேன். அவர் உங்கள் நண்பர். நீங்கள் தனியாகப் பேசிக் கொள்ளுங்கள். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் சொன்னது நியாயமான கோரிக்கை. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

24 மணி நேரத்திற்கு முன்பாவது அந்தந்தத் துறையின் மானியக் கோரிக்கைக்கு உண்டான கொள்கை விளக்கக் குறிப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இதை மாண்புமிகு அமைச்சர்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மேலே என்ன?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திங்கட்கிழமை வருகின்ற மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகளை நாங்களெல்லாம் வெள்ளிக்கிழமை ஊருக்குச் சென்று விடுகிறோம், எனவே — — வெள்ளிக் கிழமையே கொடுப்பதற்குப் பேரவைத் தலைவரவர்கள் உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் நியாயமான கோரிக்கைகள். ஏற்கப்படுகின்றன.

**திரு. இரா. தாமரைக்கனி:** காலையிலே 7 மணிக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதைத்தான் நான் ஏற்றுக் கொண்டேன் அல்லவா? அது தப்பு என்று சொல்லியாகிவிட்டது. உங்கள் உறுப்பினர் சொன்னது இராத்திரி 12 மணி என்று சொன்னார். நீங்கள் காலையிலே 7 மணி என்கிறீர்கள். அது எதுவாக இருந்தாலும் தப்பு. இனிமேல் அப்படிச் செய்யக்கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** நடவடிக்கை எடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவரவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், நாம் அடிக்கடி அறையிலே பேசிக் கொள்வோம், அறைக்கு வாருங்கள்.



1998 ஏப்ரல் 22]

## 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### கோரிக்கை எண் 35–பாசனம்

### கோரிக்கை எண் 36–பொதுப்பணிகள் கட்டடங்கள்

### கோரிக்கை எண் 54–பாசனம் குறித்த மூலதனச் செலவு

### கோரிக்கை எண் 55–பொதுப்பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

### கோரிக்கை எண் 35–பாசனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 35. பாசனம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 347,30,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 340, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆலங்காயம், வேலூர், காட்பாடி, குடியாத்தம், அணைக்கட்டு, திருப்பத்தூர் ஒன்றியங்களில் பல செக்-டேம்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.347,30,41,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 214, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "பரம்பிக்குளம் ஆழியாறு பாசன வாய்க்கால் தண்ணீரைத் திருப்பூர் பகுதிக்கு விட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 298, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி வட்டாரத்தில், மானாவாரி சாகுபடிக்கு நீர்ப்பாசனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.347,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 265 திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியில் நிலக்கரி எடுக்கும் இடத்தில் கிடைக்கும் தண்ணீரை, ஆண்டிமடம் மற்றும் செந்துறை பகுதிகளிலுள்ள நிலங்கள் பயன் பெறும் வகையில் கால்வாய் வெட்டி பாசன வசதியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.347,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3932, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசிபுரம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், அரியாக்கவுண்டன்பட்டி, ஒசக்கரையான் ஊற்று, தொப்பப்பட்டி ஆகிய



ஏரிகளில் தூர் எடுத்து ஆழப்படுத்தி கரைகளை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.347,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 333, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் அனைத்து ஏரிகளிலும் தூர் வாரி சுத்தப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.347,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1628, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், காவேரிபுரம் ஊராட்சி கோவிந்தபாடிக்கு மேற்கில் மொட்டாச்சாமாத்து பள்ளத்தில் அணை ஒன்றைக் கட்டி பாசன வசதியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.347.30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1835, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY**: Hon'ble Speaker Sir, "to discuss the need to construct a cross way near Gobasamudiram in South Penner in Shoolagir block in Hosur taluk" I move—

[Thiru B. Venkatasamy] [1998 ஏப்ரல் 22

"That the allocation of Rs. 347,30,41,000 under Demand No.35-Irrigation, be reduced by Rs. 100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2273, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முல்லையாற்றின் குறுக்கே பல்லிக்கூட்டம் அணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3286, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நீரை புவனகிரி தொகுதி, கத்தாழை ஏரியில் திருப்பிவிட்டு அப்பகுதி விளைநிலங்களின் பாசனத்திற்கு வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2539, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை கிழையூர் ஒன்றியம், கீரனேர் ஏரியில் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2064, திரு. ப. கோவிந்தன்.



1998 ஏப்ரல் 22]

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதி. தாரமங்கலம் ஏரி, துட்டம்பட்டி ஏரி எலவம்பட்டி ஏரி, அமாகுந்தி ஏரி, காமனேரி, குழந்தான்பட்டி ஏரி, ஆகிய ஏரிகளில், விவசாயிகளின் நலன் கருதி, தூர் எடுத்து ஆழப்படுத்தி வாய்க்கால்களைச் செப்பனிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2562, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி. மீனாட்சிபுரம் ஏரியில் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 529, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் உள்ள வடிகால் வாய்க்கால் கால்வாய்கள் முழுமையும் இந்த ஆண்டு சீர்செய்து கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2589, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்ற ஆண்டு பாசனமின்றி பிரச்சினைக்குள்ளான

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட திருமேனி வாய்க்கால், பாளையூர் வாய்க்கால்களை இவ்வாண்டு தூர் வாரிச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3580, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டைத் தொகுதி, மட்டப்பலகைப் பொதுப் பணித் துறை கண்மாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் உடனடியாக அகற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 626, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon'ble Speaker Sir, "to discuss the need to deepen Pallipattu, Ayyaneri and Agraharam Tanks in Pallipattu Constituency" I move—

"That the allocation of Rs. 347,30,41,000/- under Demand No.35 - Irrigation be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3469, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், கோரவயல்காடு" தெற்குக் கட்டுக்கரை ஊராட்சிக் குளத்தை ஆழப்படுத்தி படித்துறை அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 900, திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மங்கலூர் தொகுதியில் டி.வி. புத்தூர் கிராமத்தில் உள்ள சுமார் 500 ஏக்கர் பாசனம் அளிக்கக்கூடிய ஏரியைத் தூர் எடுத்து மதகுகள் சரியான முறையில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3608, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 347,30,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**கோரிக்கை எண் 36 - பொதுப்பணிகள்-கட்டடங்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36, பொதுப் பணிகள்-கட்டடங்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 66,99,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[1998 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2655, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 'ப' பிளாக் கட்ட வேண்டியதின் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 613, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1701, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 904, திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மங்களூர் தொகுதி தொழுவனூர் ஏரியில் தற்போது எந்த மாதமும் தண்ணீரும் இல்லை என்பதால் இப் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடத்தை உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2866, திரு. ஜி.கே. மணி.



1998 ஏப்ரல் 22]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் "பென்னாகரம் தொகுதி, பென்னாகரத்தில் பொதுப் பணித் துறை மூலம் பயணியர் விடுதி ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3128, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2074, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பொட்டனேரி குள்ளமுடையனூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்து கொடுப்பதுடன் காம்பவுண்டும் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ப. கோவிந்தன்] [1998 ஏப்ரல் 22

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2544, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளிக் கட்டடத்தின் முதல் மாடி இடிந்துவிடும் அபாயத்தில் உள்ளதால் அதை இடித்துப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3292, திரு. அ.வ. அப்துல்நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு மற்றும் புவனகிரி பயணியர் விடுதிகள் சீரமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3934, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசிபுரம் தொகுதியில் ஜேடர்பாளையம், நாமகிரிப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் கழிவறைகள் மற்றும் சைக்கிள் ஸ்டேண்ட் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1998 ஏப்ரல் 22] [திரு. பி. ஆர். சுந்தரம்]

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1048, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அத்திக்கடவு திட்டத்தை இந்த ஆண்டே திட்ட மதிப்பீடு செய்து உடன் வேலை துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3790, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் சட்டமன்ற தொகுதி, சுவாமிமலை பேரூராட்சி பயணியர் விடுதிக்குக் கட்டடம் ஒன்று கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2587, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூத்தாநல்லூர் மருத்துவமனைக்குப் புதிய கூடுதல் கட்டடம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3475, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் பயணியர் விடுதிக் கட்டடத்தைப் பழுதுபார்க்கவும், கூடுதலாகக் கட்டடங்கள் கட்டவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,99,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 625, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon'ble Speaker Sir, "to discuss the need to construct taluk Head Quarters Buildings at Pallipattu and an inspection bungalow at Podhattoorpet" I move—

"That the allocation of Rs. 66,99,61,000/- under Demand No. 36 - Public Works - Buildings be reduced by Rs. 100/-".

**கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54, பாசனம் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 262,33,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 604, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1648, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீர் வீணாகக் கடலில் கலப்பதில் ஒரு பகுதியைத் தமிழகத்தின் பாசனத் தேவைக்காக உபயோகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 262,33,45,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2398, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3483, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் காலியாக உள்ள பணியிடங்களில் பாசன உதவியாளர் பணியிடங்களை உடனே நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 262,33,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3356, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏரி பாசன வாய்க்கால்களைச் சீரமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 262,33,45,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2114, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதி சரபங்கா ஆற்றிலிருந்து வெளியே போகும் உபரி நீரை தொச விளக்குக் கிராமம் அம்மன் கோயில் அருகில் தடுப்பு அணை கட்டி பாசனத்திற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 262,33,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 55..........

**திரு. ஐ. கணேசன்:** என்னுடைய வெட்டுத் தீர்மானம் எடுக்கப்படவில்லை. வெட்டுத் தீர்மானம் புத்தகத்தில் உள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி மொழியுங்கள். தலைபோகிற காரியம் மாதிரி எழுந்து நின்று கலாட்டா செய்து கொண்டிருக்கிறீர்களே? வெட்டுத் தீர்மானம் எண் 3684, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி மேட்டூர் கிழக்குக்கரை கால்வாய் பாசனத்தை விரிவுபடுத்தி, ஒரு கிளை வாய்க்கால் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 262,33,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

## கோரிக்கை எண் 55—பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 55, பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 162,87,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 3549, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 162,87,49,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1330, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், காமலபுரத்தில் சரபங்கா ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய நீர்த் தேக்கம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 162,87,49,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2807, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், தர்மபுரியில் புதிய பொதுப்பணி ஆய்வு மாளிகை (பயணியர் விடுதி) ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 162,87,49,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3481, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, களத்தூர் ஊராட்சி, பழைய நகரம் குமரப்பன் குளத்தை ஆழப்படுத்தி தடுப்புச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 162,87,49,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3691, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுகா, அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 162,87,49,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 615, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN :** Hon. Speaker Sir, "to discuss the need to construct school building for high school at Nochilli in Pallipattu Taluk" move.

'That the allocation of Rs. 162,87,49,000 undeer Demand No. 55—Capital outlay on public works-Buildings be reduced by Rs. 100'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப் பணிகள்-கட்டடங்கள், பாசனம் குறித்த மூலதனச் செலவு, பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டப்பேரவைப் பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையிலே அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

---

@343 முதல் 553 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகின்றது. [1998 ஏப்ரல் 22
மாண்புமிகு உறுப்பினர்கள் 16 பேர் பேச விருப்பம் 16
தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே எந்த உறுப்பினரும் 8 மணித்
துளிகளுக்கு மேல் பேசக்கூடாது என்று கண்டிப்பாக என்னுடைய
கருத்தைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை
அவர்களை, தொடங்கி வைக்குமாறு அழைக்கின்றேன்.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு
வாய்ப்பு அளித்ததற்காகத் தங்களுக்கு என் நன்றியை முதற்கண்
தெரிவித்துக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)**

இங்கே அளிக்கப்பட்டிருக்கிற நேரம் குறைவாக இருக்கிற
காரணத்தால், ஆரம்பத்திலேயே எனது தொகுதிப் பிரச்சினைக்கு நான்
வந்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருமையான,
சிறப்பான திட்டங்களையெல்லாம், நல்ல திட்டங்களையெல்லாம்
நிறைவேற்றித் தரவேண்டும் என்ற உணர்வோடு செயல்
பட்டிருந்தாலும்கூட, பல திட்டங்கள் காலதாமதப்பட்டுக் கொண்டு,
மக்களுக்கு அந்தத் திட்டங்கள் காலத்திலே போய்ச் சேராத நிலையில்
இன்றைக்கு மக்கள் மிகவும் குறைபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

எனது தொகுதியிலே கன்னடியன் கால்வாய் மிகுந்த
பிரச்சினைக்குள்ளாகி இருக்கின்றது. இன்றைக்குக்கூட மாற்றுக் கட்சியினர்
இதை அரசியலாக்கத் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள்
முகத்திலே கரியைப் பூசுகின்ற விதத்திலே செயல்பட்டு இதற்கு
நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்களிடமும், பல முறை சட்டமன்றத்திலேயும் குரல்
கொடுத்திருக்கிறேன். பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில்
அவற்றை வெகு விரைவிலே நிறைவேற்றிக் கொடுப்போமேயானால்,
மக்கள் இந்த அரசின் மீதும், சட்டமன்ற உறுப்பினர்கள் என்மீதும்
வைத்த மிகுந்த நம்பிக்கை வீண் போகாத அளவிற்கு நல்லதோர்
எண்ணம் உருவாகும் என்று சொன்னால் அதிலே எந்தவிதமான
ஐயமும் இல்லை. எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை
அமைச்சர் அவர்கள் கன்னடியன் கால்வாயை உடனடியாகப்
பராமரித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆறு



1998 ஏப்ரல் 22] [திரு. பா. வேல்துரை]

ஆண்டுகளாக அங்கேயிருக்கின்ற கடைக்கோடிக் குளங்களுக்குத்
தண்ணீர் செல்வதில்லை. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு
நன்றாகத் தெரியும். இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சுமார் 1½ கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். டெண்டரும்
விடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் டெண்டரில் இருக்கின்ற
கண்டிஷன் காரணமாக, உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற
முடியாத நிலை உள்ளது. அதனால் ஒப்பந்தக்காரர்களும் உடனடியாக
அந்த வேலையை ஆரம்பிக்க முடியாத நிலை இருக்கின்றது. இது உலக
வங்கி மூலமாக செயல்படுத்தப்படுகிற திட்டமாகும். இதுதான் சட்டம்;
இதுதான் விதி என்று இப்போது இருக்கின்ற விதியைச்
சொல்லிக்கொண்டே இருப்போமேயானால் நிச்சயமாக ஒரு
திட்டத்தையும் நல்லமுறையிலே, காலத்திலே நம்மால் நிறைவேற்ற
முடியாது. இந்தத் திட்டத்திற்கு தமிழ்நாட்டிலே ஒப்பந்தக்காரர்களே
இல்லை; அதற்குத் தகுதியுள்ள கான்ட்ராக்டர்கள் இல்லை.
தாமிரபரணி ஆற்றுப் பாசனத் திட்டத்திற்கு என்று டெண்டர் விட்டால்
எந்த டெண்டரும் முதல் முறையிலேயே ரெஸ்பான்ஸ் ஆவதில்லை;
ரெஸ்பான்ஸ் கிடைப்பதில்லை. எனவே இரண்டாவது, மூன்றாவது
டெண்டர் என்று கொடுக்க வேண்டிய ஒரு மோசமான நிலை
இருக்கிறது. எனவே, தமிழகத்திற்குப் பொருந்துகின்ற ஒரு சட்டத்தை
உருவாக்கி, அதுவும் அதுபற்றி உலக வங்கியோடு பேசி, இதுதான்
எங்கள் பகுதிக்குப் பொருந்தும் என்று சொல்லி ஒரு சட்டத்தை
ஏற்படுத்தினால்தான் நிச்சயமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற
முடியும். இல்லையென்றால் இந்த ஆட்சிக் காலத்திற்குள் எந்தத்
திட்டத்தையும் முழுமையாக மக்களுக்குக் கொடுக்க முடியாது என்பதை
இந்த நேரத்திலே உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியிலுள்ள கன்னடியன் கால்வாய்ப் பகுதியில் பிராங்கோ
குளத்திலே ஒரு கால்வாயிலே பை-பாஸ் சேனலை ஓமனநல்லூர்
குளத்திற்காக வெட்டினார்கள். அதுபற்றி முதல் பட்ஜெட்
கூட்டத்தொடரிலும் பேசினேன்; இரண்டாவது கூட்டத்தொடரிலேயும்
பேசினேன். இப்போதும் அதுபற்றிப் பேசுகின்ற நிலையிலே அந்த
வாய்க்கால் இருக்கின்றது. அந்தத் திட்டம் மூலம் கடந்த ஆட்சிக்
காலத்திலே முழு கொள்ளை அடித்து அந்தத் திட்டத்தையே
பாழ்படுத்திவிட்டுச் சென்றார்கள். எனவே அந்தத் திட்டத்தை மீண்டும்

தொடர்ந்து செயல்படுத்தி அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று நம்பியாறு கால்வாய், அதிலேயும் ஒரு By-pass channel இருக்கின்றது. அதையும் நீங்கள் உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெல்லை வந்தபோது, எங்கள் தொகுதிக்கு நேரடியாக வந்து அந்தக் கன்னடியன் அணையையும், வாய்க்காலையும் பார்வையிட்டு முழுமையாக சிமெண்ட் லைனிங் செய்து தருவேன் என்று வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், இந்த வருடக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே அந்த சிமெண்ட் லைனிங் செய்வது சம்பந்தமாக அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. திட்டமும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்தக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றித் தரவில்லை என்று சொன்னாலும் - அதற்கான மதிப்பீடு ரூபாய் 12½ கோடி செலவில் அனுப்பப்பட்டிருக்கிறது - அதிலே ரூபாய் 6 கோடியையாவது தந்து அந்த வாய்க்காலினுடைய பகுதிப் பணியையாவது நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

அதுபோன்று, கடனாநதி விரிவாக்கத் திட்டத்திற்கு 1882 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் இந்த ஆண்டு 25 இலட்சம் ரூபாய் செலவிடப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதையும் அதிகமாக ஒதுக்கி, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேலும், கடனாநதி பாசனத்திலுள்ள காங்கேயன் கால்வாய் மற்ற கால்வாய்களையெல்லாம் பராமரிப்பதற்கு 56.2 இலட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் அந்த 56 இலட்சத்திலே காங்கேயன் கால்வாய் உண்டா? இல்லையென்றால், அதையும் சேர்த்து, காங்கேயன் கால்வாய்ப் பராமரிப்பையும் நீங்கள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று, காங்கேயன் கால்வாயின் கடைகோடிக் குளம் மாறன் குளம் என்று ஒன்று இருக்கிறது. அதற்குத் தண்ணீர் செல்வதே கிடையாது. அந்த மாறன் குளத்திற்கு தனிக்கால் திட்டம் இருக்கிறது. அதற்கு அதிகமாக செலவாகாது. 10 இலட்சம் ரூபாய் வரை வரும். எனவே உடனடியாக அதை ஆய்வு செய்து அந்த மாறன் குளத்திற்கு



தனிக்கால் திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான விஷயம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதிக்கு ஒரு குளம் மட்டும் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு 10 இலட்சம் கொடுத்திருக்கிறீர்கள். எனது தொகுதியில் சுமார் 150 குளங்கள் இருக்கின்றன. ஒரு குளம் மட்டும் எடுத்துச் செய்தால் எப்படிப் போதும்? எந்தக் காலத்தில் நாம் மராமத்துப் பணியை முடிப்போம்? எனவே, கண்டிப்பாக குறைந்தபட்சம் 5 குளங்கள் எடுக்கவேண்டும். ஒரு குளத்திற்கு 5 இலட்சம் தந்தால் போதும். 25 இலட்சம் கொடுத்தால் 5 அல்லது 10 குளங்களை எடுத்துச் செய்கிறோம். எனவே, தேவைக்குத் தகுந்த மாதிரி குளங்களுடைய எண்ணிக்கையைச் சொல்லாமல், 25 இலட்சம், 30 இலட்சம் என்று ரூபாயைக் கொடுத்தால், நாங்கள் தேவைப்பட்ட குளங்களை அதிகமாக மராமத்துச் செய்ய வாய்ப்பாக இருக்கும்.

அதுபோன்று எனது தொகுதியில் எலுமிச்சையாறு திட்டத்தைப் பற்றிக் கேட்டிருந்தேன். நேற்றுக்கூட காலை பஸ்ஸில் வரவே முடியவில்லை. அதற்கு அமைச்சர் அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். கண்டிப்பாக மறுபரிசீலனை செய்து, எலுமிச்சையாறு திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தந்தால், மணிமுத்தாறு பிரதானக் கால்வாயினுடைய முதல் reach - குளங்களுக்கெல்லாம்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எலுமிச்சையாறு அணைக்கட்டு இல்லையென்று நான் சொல்லவில்லை. நீங்கள் கேட்ட கேள்வி, வண்டலாறு ஓடையையும் இணைத்து, கூடுகிற இடத்தில் அணை கட்ட முடியுமா என்று கேட்டிருந்தீர்கள். இரண்டையும் சேர்த்து கட்டப்பட மாட்டாது. கால்வாய், எலுமிச்சையாறு கிராஸ் செய்துதான் மணிமுத்தாறு பிரதானக் கால்வாய் போகிறது. எனவே, சோலையாறு, எலுமிச்சையாறு இவைகளை இணைத்து, பிறகு அதை மணிமுத்தாறு பிரதானக் கால்வாயில் விடுவதன் மூலம் fourth reach-க்கு தண்ணீர் போகும். அந்தத் திட்டம் இருக்கிறது. நீங்கள் கேட்டது, இரண்டையும் இணைக்க முடியுமா என்று இணைக்கமாட்டோம்.

[1998 ஏப்ரல் 22

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கேட்டதும் அந்த நோக்கத்தில்தான். ஆகவே, எலுமிச்சையாறு திட்டம் வேண்டும். அதன் மூலமாக பாசனம் பெறும் என்பதுதான். அதை நீங்கள் செய்து தருவீர்களானால், மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

அதுபோன்று, பச்சையாறு திட்டம், ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முன்பு இருந்தபோது அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் அடிக்கல் நாட்டினார்கள். இப்பொழுதும் நீங்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறீர்கள். அந்தத் திட்டத்தில் கட்டடங்கள் கட்டுவது, சாலைகள் போடுவது என்று இதற்கு மட்டும்தான் பணம் ஒதுக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு 15% செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிலே இருக்கிறது. அங்கு அணை கட்டுவதற்கான திட்டம் பற்றிக் குறிப்பிலே இல்லை. அணையை உடனடியாகக் கட்டவேண்டும். நமது ஆட்சிக் காலத்திலேயே - இந்த ஆட்சி நிரந்தரமாக இருக்கும் - அந்த அணையைக் கட்டி, திறப்பு விழா நடத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க முடியாது. இன்னும் சில நிமிடங்கள் கூட கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொடுமுடியாறு, அடவிநயினார் மற்றும் நம்பியாறு திட்டம் என்ற திட்டங்களெல்லாம் இன்னும் நடந்தபாடில்லை. கடந்த ஆட்சியிலே, கொள்ளையடிக்கப்பட்டு அப்படியே கிடக்கின்றது. நாம் அதைக் கண்டுபிடித்து பல நடவடிக்கைகளை எடுத்தாலும்கூட, திட்டத்தை நிறைவேற்றுகின்ற வேகத்தை நாம் காட்டவேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் 23-4-98 அன்று விவசாயப் போராட்டம் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. மணிமுத்தாறு அணையைக் குறைத்துவிடக் கூடாது. குறைத்தால், சாகுபடிக்கு நீங்கள் தண்ணீர் இறக்கிவிட்டீர்களானால், அது 40 அடி கால்வாய்க்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்திவிடும். எனவே, மணிமுத்தாறு தண்ணீரை நீங்கள் குறைக்கக் கூடாது என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 22] [திரு. பா. வேல்துரை]

அதுபோன்று, பொதுப்பணித் துறையிலேயே புல்டோசரை வைத்திருக்கவேண்டும். இதுபற்றி கடந்த பட்ஜெட்டிலேயே சொன்னேன். நமக்குத் தேவையான இயந்திரங்களைப் பொதுப்பணித் துறையிலேயே வைத்திருக்கவேண்டும். அதை விவசாயத் துறையில் கேட்டால், காலத்தில் நமக்கு கிடைக்காது. கண்டிப்பாக, அதை மறுபரிசீலனை செய்து பொதுப்பணித் துறையிலேயே புல்டோசர்களை வையுங்கள். மண் வேலை செய்யக்கூடிய இயந்திரங்களையெல்லாம் கனரக இயந்திரங்களையெல்லாம் கண்டிப்பாக பொதுப்பணித் துறையில் மொத்தமாக ஆர்டர் போட்டு வாங்கி வைக்கவேண்டும்.

அடுத்து, பணியாளர்கள் பற்றி. பொதுப்பணித் துறையிலே ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஆணை எண் 666, 304, 250 இவைகளின்படி 1500 ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டும். ஆனால், அந்தச் சம்பளம் வழங்கப்படவில்லையென்று சொல்கிறார்கள். அதேபோன்று, ஓய்வுபெற்ற பணியிடங்கள் நிறையக் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களையும் உடனடியாக நிரப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஆய்வாளர்களாகப் பணிபுரிகின்றவர்களில் நிறையப்பேர் டிப்ளமோ படித்திருக்கிறார்கள்; என்ஜினியரிங் பட்டப் படிப்பு படித்திருக்கிறார்கள். அவர்களுக்குரிய பதவி உயர்வு கொடுத்து, இளநிலைப் பொறியாளர்களாக அவர்களது தரத்தை உயர்த்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10.40

அதேபோன்று, இன்னொன்றை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆட்சிக் கலைப்பு, ஆட்சிக் கலைப்பு என்று சொல்கிறார்கள். இதனால், இன்றைக்கு மக்கள் மத்தியிலே ஒரு மாதிரியாகி, அவர்கள் wavering ஆகிவிட்டார்கள். அதேபோல அண்மையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வரவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கின்ற அதிகாரிகள் நிறையப்பேர் இருக்கிறார்கள். ஒரு கலைப்பு வந்துவிடும், அந்த அதிகாரிகளிடத்திலே, இந்த ஆட்சி போய்விடுமோ என்ற எண்ணம் ஏற்பட்டு, அவர்களிடத்திலே மெத்தனப் போக்கு ஏற்படுகிறது. இந்தச் சலசலப்புக்கு இடம் கொடுக்காமல், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இதற்கு நாமெல்லாம் ஒன்றாகக் கூடி, அனைவரும் கலந்து பேசி, கட்சிகளெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கலந்துபேசி, ஒரு பெரிய

திட்டத்தை வகுத்து, நல்லதொரு முடிவை எடுத்து, அதனை மக்களுக்கு அறிவிக்க வேண்டும்; அரசு ஊழியர்களுக்கும் அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்த உடன் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுடைய பணி முடிந்தது போன்று ஆகிவிடுகின்றது. மீதி 8 மாதங்கள், 10 மாதங்கள் சும்மாவேதான் இருக்கிறோம். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நல்ல பணிகளைக் கொடுங்கள். மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பணியே கிடையாது. சும்மாவே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு அலுவலகம் கிடையாது. டைப்பிஸ்ட் கிடையாது. எங்களுக்குச் சம்பளம்கூட தரவேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கு ஃபோன் கிடையாது. அதேபோன்று, கார் வசதி செய்து கொடுங்கள். உதவியாளர் கொடுங்கள். எங்களுக்குச் சம்பளமே தேவையில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** அதுகுறித்து அந்த மானியத்திலே பேசுங்கள். நீங்கள் பேசுவதற்காக அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சக்ரபாணி. (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 11 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நன்றி கூறி முடித்துவிடுகிறேன். எங்கள் தொகுதியின் சார்பாக நான் வைத்த பொதுப்பணித் துறை சார்ந்த காரியங்கள் அனைத்தையும் விரைந்து செயல்படுத்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** அடுத்து, திரு. ஆர். சக்ரபாணி.

***திரு. ஆர். சக்ரபாணி.** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன் இன்றைக்குப் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தி, அதன்



அடிப்படையில் விவசாயிகள் பங்கேற்க வகை செய்யப்பட்டுள்ளது. நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.1140 கோடிக்குமேல் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டத்தின்கீழ் வரும் ஆண்டில் ரூ.186 கோடிக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றை நான் இந்த நேரத்திலே வரவேற்கிறேன். இதுவரை 80 கோடி ரூபாயில் 43 பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், வரும் ஆண்டில் சுமார் 352 கோடி ரூபாயில் 152 பணிகள் தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதை நான் இந்த நேரத்திலே வரவேற்கிறேன். அதேபோல் 1998-99 ஆம் ஆண்டில் 60 மானாவாரி ஏரிகளைச் சீரமைக்க ரூ.12.89 கோடி ஒதுக்கியுள்ளதற்காக நான் பாராட்டுகிறேன் இதனால், இன்றைக்கு 1078 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும் என்பதற்காகவும் நான் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் ஜமீன் ஏரிகளைச் சீரமைக்க இன்றைக்கு ரூ.885.13 இலட்சம் ஒதுக்கியுள்ளதை நான் பாராட்டுகிறேன். அதேபோன்று, சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் கீழ் 550 எக்டேர் நிலப்பரப்பில் கூடுதல் பாசன வசதி செய்யும்பொருட்டு 1998-99 ஆம் ஆண்டில் ரூ.655.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளமைக்காக நான் பாராட்டுகிறேன்.

அதேபோல, தமிழக முதல்வர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பரிந்துரை செய்ததன் காரணமாக, சென்ற ஆண்டு 200 ஏரிகளில் தூர் வாருவதற்கு ரூ.20 கோடி ஒதுக்கியிருந்தார்கள். இதனால், ஒவ்வொரு தொகுதியிலும் கடந்த பல ஆண்டுகளாகத் தூர் எடுக்கப்படாத குளங்களெல்லாம் இன்றைக்குத் தூர் எடுக்கப்பட்டு, அதற்கு பொதுமக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இருப்பினும், வரும் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதிக்கு ஒரு குளம் என்பதை மாற்றி, நான்கு, ஐந்து குளங்களில் தூர் எடுக்கும் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பொதுப்பணித் துறை மூலமாகப் பள்ளிக் கட்டடங்கள், காவல் துறை அலுவலகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவை கட்டுவதற்கு அதிகமான நிதி ஒதுக்கியிருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். அதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல, ஒட்டன்சத்திரத்திலே பயணியர் விடுதி ஒன்றுமே இல்லை. யாராவது விருந்தாளி வந்துவிட்டால் அவர்கள் தங்குவதற்கு

[திரு. ஆர். சக்ரபாணி] [1998 ஏப்ரல் 22

வசதி இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் உபரி நிதியிலிருந்து பயணியர் விடுதியொன்று கட்டித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை நல்லதங்காள் அணைக்கட்டுத் திட்டம். அங்குள்ள தொப்பம்பட்டி ஒன்றியம் மிகவும் பரந்து விரிந்த ஒன்றியம். ஆனால், மிகவும் வறட்சியான பகுதி. அந்தத் திட்டத்தை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பகுதி-2 திட்டத்திலே சேர்த்து, பெரியார் மாவட்டத்திலே அமைப்பதாக அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் என்னுடைய கோரிக்கையும், எங்கள் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையுமான நல்லதங்காள் அணைக்கட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப்பகுதி, மிகவும் வறட்சியான பகுதி. அங்குள்ள மக்கள் மானாவாரி விவசாயத்தைத்தான் நம்பி வாழ்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள்...

(முற்பகல் 10-45

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. மு. பெ. சாமிநாதன்.

**திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நல்லதங்காள் அணைக்கட்டுத் திட்டம், ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில், பொன்னிவாடி கிராமத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது என்னுடைய தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கை. வறட்சிப் பகுதியான மூலனூர் ஒன்றியமும் அதன்மூலம் பயன்பெறுகிறது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் போகாத ஊருக்கு வழிகேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில உற்பத்தியாகி, சுமார் 50 கிலோ மீட்டர் தூரத்துக்குப் பாய்ந்து வருகிற ஒரு நதி; அது என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தது. வேறொரு மாவட்டத்திற்குக் கட்டுவதற்கு நான் எப்படி அனுமதி அளிக்க முடியும்? எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் மறுபரிசீலனை செய்து, அந்தத் திட்டத்தை



1998 ஏப்ரல் 22] [திரு. ஆர். சக்ரபாணி]

எனது தொகுதியிலே நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். 1994-ஆம் ஆண்டு, இந்தத் திட்டம் 12 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. இது அமைச்சருக்கும் தெரியும். அதேபோல், என்னுடைய மாவட்ட அமைச்சர், அண்ணன் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்களும், பல இடங்களிலே தெரிவித்திருக்கிறார். இந்தத் திட்டத்தை நான் கண்டிப்பாக, முதலமைச்சரிடமும், அதேபோல், பொதுப் பணித் துறை அமைச்சரிடமும் போராடி, பெற்றுத் தருவேன் என்று சொல்லியிருக்கிற காரணத்தினால்தான், என்னுடைய தொகுதியிலே உற்பத்தியாகி, 50 கிலோ மீட்டர் தூரம் என்னுடைய தொகுதியிலே வருகிற காரணத்தினால்தான், அந்தத் திட்டத்தை உரிமையோடு நாங்கள் கேட்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நங்காஞ்சி நீர்த்தேக்கத் திட்டம், 1989-90 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு, நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து தொடங்கிவைத்த அந்தத் திட்டம், 20 கோடியே 70 இலட்சம் ரூபாயிலே தொடங்கிவைத்த அந்தத் திட்டத்தின் வேலைகள், கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், பல அல்லலுக்கும் ஊழலுக்கும் உட்பட்டு, ஆமை வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்திற்கு மறுபடியும் 37.80 இலட்சம் தேவைப்படுகிறது என்று Revised Estimate கூறுகிறது. எனவே, அந்த நிதியை ஒதுக்கி, விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையின்பேரில், பல குளங்கள் அமைப்பதற்கான திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தமிழக அரசு பரிசீலனை செய்துள்ளது. கொள்ளப்பட்டி குளம், வெரியப்பூர் ஊராட்சியில் ஒரு குளம், ஜோஹிப்பட்டியில் ஒரு குளம், ஜவ்வாதுபட்டியில் ஒரு குளம், புலியூர் நத்தத்தில் ஒரு குளம், ஜவாடிப்பட்டியிலே ஒரு குளம், சத்திரப்பட்டியிலே ஒரு குளம் இப்படிப் பல குளங்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்து, இன்றைக்கு அவை அரசின் பரிசீலனையில் உள்ளன. இந்தக் குளங்களையெல்லாம், இந்த ஆண்டே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சக்கரபாணி] [1998 ஏப்ரல் 22

அதேபோல், எனது தொகுதியிலுள்ள பெருமாள் குளம் என்பது, ஆக்கிரமிப்பு அதிகமாக உள்ள குளம். 100 ஏக்கர் பரப்பளவுள்ள அந்தப் பெருமாள் குளத்திலே, 60 ஏக்கரில் இன்றைக்கு ஆக்கிரமிப்பு இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றி, வருமாண்டில், அந்தக் குளத்தைத் தூர் எடுத்துத் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதனை நான் பரிந்துரை செய்துள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய மாவட்டத்திலே பெரிய குளம், சடையகுளம். இதுவும் கடந்த முறை சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்யப்பட்டு, அந்தக் குளம் தூர் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதன் வாய்க்கால்கள் தூர் எடுக்கப்பட வேண்டும். எனவே, அதன் வாய்க்கால்களையும் தூர் எடுக்க, நிதி ஒதுக்கி, அவற்றைத் தூர் எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பழனிக்கருகிலுள்ள கீரனூர் பொதுப் பணித் துறை குளம், வடபருத்தியர் குளம், சத்திரப்பட்டி கரிசல்குளம், வெள்ளியன் வலசு குளம், வெரியப்பூர் செங்குளம், ஜவ்வாதுபட்டி பெரியகுளம் போன்ற குளங்களில் எல்லாம் தூர் எடுத்து, அதேபோல் வாய்க்கால்களையும் சீரமைத்துத் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியிலே அமைந்துள்ள பரப்பலாறு அணை, 92 அடி கொள்ளளவு கொண்ட அணை. இன்றைக்கு வண்டல் மண் 40 அடி வரை மூடிவிட்டதால், அதன் கொள்ளளவு 50 அடிதான் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பரப்பலாறு அணையிலுள்ள வண்டல் மண்ணைத் தூர் எடுத்து — ஏற்கெனவே, அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்: வருவாய்த் துறைச் செயலாளர், பொதுப்பணித் துறைச் செயலாளர் மற்றும் வனத் துறைச் செயலாளர் ஆகிய 3 பேரையும் அழைத்து, அது மலைப் பகுதியில் அமைந்திருப்பதால், அந்தப் பகுதியிலிருந்து வண்டல் மண்ணை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள்; எனவே, தூர் எடுத்து — தேவையான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஒட்டன்சத்திரம் நகர், வளர்ந்து வருகிற நகரம். அங்கு குடிநீர்ப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது. மாண்புமிகு



1998 ஏப்ரல் 22] [திரு. ஆர். சக்கரபாணி]

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அங்கே வந்து ஆய்வு செய்து வந்திருக்கிறார். எனவே, ஒட்டன்சத்திரத்திற்கு, காவிரி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டே செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

(முற்பகல் 10-50

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம் குறித்த மூலதனச் செலவுகள் மானியக் கோரிக்கையிலே சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள மற்ற பிரச்சினைகளைப் பற்றிச் சொல்வதற்குப் போதுமான நேரம் இல்லை. குறிப்பாக, கோதையாறு திட்டத்தின்கீழ் வரக்கூடிய சில சிறிய திட்டங்களை நீங்கள் அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள். அதிலே, பேச்சிப்பாறை முக்கியமான பகுதியாகும். அந்தப் பேச்சிப்பாறையில் உள்ள லீக்கேஜை அடைப்பதற்காக 95 இலட்ச ரூபாய் செலவு செய்யப்போவதாகச் சொல்லி சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அங்கே 25 சதவிகிதப் பணிகள் முடிந்துள்ளதாக இந்தக் குறிப்பிலே உள்ளது. ஆனால், அங்கேயிருக்கிற அதிகாரிகள் அதிலிருந்து 35 இலட்ச ரூபாயை பெருஞ்சாணி அணைக்கு அதனுடைய சீரமைப்பிற்காக மாற்றியிருப்பதாகத் தகவல்களை சொல்லியிருக்கிறார்கள். எது சரி என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், பேச்சிப்பாறை அணையை நாம் பார்க்கும்போது 100 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது. எனவே, அதனுடைய பின்பகுதியிலே ஒரு சார் அணையைக் கட்டுகின்ற ஒரு திட்டத்தை மேற்கொள்ளாமல் அந்தப் பேச்சிப்பாறை அணையை இனிப் பாதுகாக்கமுடியாது என்ற ஒரு நிலை அப்பகுதியிலே உருவாகியுள்ளது.

ஏற்கனவே, அதிலுள்ள ஒழுக்கை அடைப்பதற்காக சிமெண்ட் பால் பூசுகின்ற ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். அது எந்த அளவுக்குச் சீராக நடந்திருக்கிறது என்பதைச் சரியாகக் கண்டறிய வேண்டும். குலசேகரத்தில் உள்ள இரண்டு அதிகாரிகள்தான் அதை மேற்பார்வை செய்கிறார்கள். தண்ணீர் இருக்கும் நேரத்தில் சிமெண்ட் பால் பூசும் பணியைச் செய்ய முடியாது. தண்ணீரை, இப்போதுதான், கடந்த வாரத்தில் திறந்துவிட்டார்கள். அதை ஆரம்பித்த உடனேயே

விவசாயிகள் தண்ணீரைத் திறக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். நேரம், காலம் பார்த்துத் தகுந்த நேரத்தில்தான் அந்தப் பணியைச் செய்ய வேண்டும். அந்தப் பணியைச் சோதிக்கும் அளவில் விஜிலென்ஸ் துறையினைப் போட்டால் நாம் செலவிடுகின்ற பணம் முழுமையாக மக்களுக்குச் செலவிடப்படுகின்றதா என்பதைக் கண்டறிய உதவியாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

இரண்டாவது, 1980 ஆம் ஆண்டிலிருந்து 3 கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். அங்கே வீணாகப் போய் கடலிலே கலக்கிற ஆறுகளைத் தேக்க சில அணைகளைக் கட்டுவது. அதிலே ஒன்று. நம்முடைய பல்லிக்கூட்ட அணை அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகுமா என்றால் இல்லை. என்னுடைய தொகுதியில் ஆரம்பித்து அடுத்த தொகுதியான நம்முடைய டாக்டர் வே. ஆல்பன் அவர்களுடைய தொகுதியின் வழியாகச் செல்கிறபோது ஒரு கிராமத்தில் கடந்த மழையினால் 24 இடங்களில் உடைப்பு ஏற்பட்டது. மழைக் காலத்தில் வரக்கூடிய தண்ணீரைத் தேக்குவதற்கு ஒரு சின்ன நீர்த்தேக்கத்தைக் கட்டினால் போதுமானது. அதில் ஒரு கால்வாய் கட்டும் அளவிற்குக்கூட பணி இருக்காது. அந்தப் பல்லிக்கூட்ட அணைக்கட்டுத் திட்டத்தோடு இந்தப் பிரச்சினையையும் சேர்த்துக் கொள்வது......

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், இடையிலே நான் குறுக்கிட்டதற்கு மன்னிக்க வேண்டும். பல்லிக்கூட்ட அணையைக் கட்டுவதற்கு அதிகமாகச் செலவு ஆகாது. அதைக் கட்ட 12 கோடி ரூபாய்தான் ஆகும். அதனால், அதற்கு ஒரு மாற்றுத் திட்டம் எப்படிப் போட்டிருக்கிறோம் என்று கேட்டால், அந்தத் தண்ணீரை கண்டன்துறை கால்வாயில் விட்டுத் தேக்கி, அறுவாமனை, வெள்ளோடு பகுதிகளுக்குத் தண்ணீரைத் திருப்பி விடுவதற்கு 1 கோடி ரூபாய் செலவில் திட்டம் தீட்டி அந்தத் திட்டத்தில் அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு முனைந்திருக்கிறது அப்படி ஒரு மாற்று வழி செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. அதை அந்தத் திட்டத்திலே எடுத்துக்கொண்டாக வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இரண்டாவதாக, நீண்டகாலமாக இருக்கக்கூடிய கோரிக்கை என்பது



பத்மநாபபுரம் தொகுதியிலே வருகிற ஒரு பெரிய நீர்த்தேக்கத்தினுடைய பணி. மாம்பழத்துறு. நீண்ட காலம் என்றால், 1980 ஆம் ஆண்டிலிருந்து எந்த எம்.எல்.ஏ. வந்தாலும் அந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆற்றிலிருந்து வீணாக வரக்கூடிய — அது வள்ளியாறாக இருந்தாலும் சரி, அதற்கடுத்து வரக்கூடிய பழையாறு ஆனாலும் சரி — அதிலிருந்து வரக்கூடிய தண்ணீரை நாம் lift irregation-க்கு பயன்படுத்த முடியுமா என்று ஆராய வேண்டும். இல்லை என்று சொன்னால் check dam கட்டி எந்த அளவுக்கு அந்தத் தண்ணீரைப் பாதுகாக்க முடியும் என்று பார்க்க வேண்டும். அதிலே, ஒரு பெரிய திட்டம் ஏற்கெனவே இருந்தது. தாமிரபரணி ஆற்றிலே விளாத்துறை lift irrigation பணி பல்வேறு காரணங்களினால் நின்று போய்விட்டது. மின்சாரம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் நின்றுபோய்விட்டது. எனவே, அந்த இயந்திரத்தைப் பயன்படுத்திச் செய்ய வேண்டும் என்று கேட்டோம். அதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அதுபோல, கோதையாறினுடைய கால்வாய் ஆனாலும் சரி, பேச்சிப்பாறையிலிருந்து வருகிற காலவாய் ஆனாலும் சரி, பட்டணங்கால்வாய்கள் ஆனாலும் சரி, எந்தக் கால்வாய்கள் ஆனாலும் சரி அவற்றைச் செப்பனிட வேண்டும். அந்தப் பணிகளை ஆரம்பிக்கின்றபோது அடித்தளத்திலே கான்கிரிட் போடுவது. தேவைப்படுகின்ற இடங்களில் பக்கச் சுவர் கட்டுவது போன்றவற்றைச் செய்ய வேண்டும். அந்தக் கால்வாயினுடைய எந்த மதகுகளைப் பார்த்தாலும் அவை பயனற்ற நிலையிலே உள்ளன. எனவே, அடித்தளத்தில் கான்கிரிட் போடுவது. மதகுகளைச் சீரமைப்பது போன்றவை அன்றாடத் தேவைகளாக மாறியுள்ளன. இதெல்லாம் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் திட்டம் அல்ல. இந்தக் கால்வாய்களைப் பாதுகாக்கின்ற பணியாளர்களில் ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டால், உடனே, அடுத்த ஆளைப் போடுவதில்லை. போதுமான ஊழியர்களை நியமனம் செய்ய வேண்டும். அது ஒரு பெரிய சிக்கலை உருவாக்கி வருகிறது. இத்தனை கிலோ மீட்டர்கள் நான் போய்ப் பார்க்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. அதனுடைய விளைவு என்னவென்றால் அந்தக் கால்வாய்களின் ஓரங்களில் இருக்கின்ற மரங்கள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான மரங்கள் வெட்டப்படுகின்றன. விளவங்கோடு தாலுகாவில் ஒரு தாசில்தார் இருந்தார். அவர் ஒரு வருடத்திற்குள்ளாக அந்தக் கால்வாயின்

ஓரங்களில் புறம்போக்கு நிலங்களில் இருந்த மரங்களை எல்லாம் வெட்டியதோடு அவர் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி இருக்கிறார். 5 வருடத்திற்கு முன்பு இருந்த மரங்கள் இப்போது அங்கே இருக்கின்றனவா என்று கேட்டால், எண்ணிப் பார்த்தால் அப்படி மரங்களே இல்லை என்ற பட்டியலைத்தான் தருவார்கள். அந்த வகையில் முறைகேடுகளும், ஊழலும் பெருகி வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அடுத்து, பட்டணங்கால்வாய் மற்றும் கோதையாறு கால்வாயினுடைய பெரும்பகுதி கல்குளம் தாலுகாவினுடைய, விளவங்கோடு தாலுகாவினுடைய பகுதிகளிலே வருகின்றன. ஆனால் அதிகாரிகள் முழுவதும் குலசேகரத்திலே இருக்கிறார்கள். குழித்துறை பகுதியிலே அலுவலகம் இருக்கிறது. இதர அதிகாரிகளும் அங்கே இருக்கிறார்கள். எனவே, குலசேகரத்திலே இருக்கின்ற அதிகாரிகளை குழித்துறை பகுதிக்கு மாற்றுவது அத்தியாவசியத் தேவை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியிலே ஓர் ஆறு இருக்கிறது. அதாவது நெய்யாறு அணைக்கு தண்ணீர் போகின்ற ஆறாகும். களியல் கிராமத்திலே இருந்து வரும் அந்த ஆற்றுக்கு கருப்பை ஆறு என்று பெயர். நம்முடைய பட்டியலிலே அது இடம் பெறாது. அந்த ஆற்றிலிருந்து ஒரு துளித் தண்ணீர் கூட எங்களுடைய பகுதிக்கு வருவதில்லை. அதன் வழியாக நெய்யாறு அணைக்குத் தண்ணீர் செல்வதன் காரணமாகத்தான், அதை Compensate செய்வதற்காகத்தான் இடதுகரைக் கால்வாயில் கொஞ்சம் தண்ணீர் விடப்படுகிறது. ஆனால், அதைப் பயன்படுத்துவதிலே இருக்கக்கூடிய சிக்கலைப் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். எனவே, இந்தக் காலகட்டத்திலே இடதுகரைக் கால்வாயைச் சீரமைக்கும் பணியை ஆரம்பிக்க வேண்டும். எந்த நேரத்தில் இந்தப் பணியை ஆரம்பிப்பது என்பது குறித்து ஆராய்ந்து தகுதியான நேரத்தைக் கண்டுபிடித்து ஆரம்பிப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுதிக்கு ஒரு குளம் என்ற திட்டம் மேற்கொள்ளப்படுகிறது நான் அதிகாரிகளை அழைத்து, அவர்களோடு சென்று, பாலக்குளம் என்ற ஒரு குளத்தை, சென்ற ஆண்டு



தேர்வுசெய்தோம். கிட்டத்தட்ட 8½ இலட்ச ரூபாய்க்கு மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டன. ஆனால், இன்றுவரை அந்த வேலை ஆரம்பிக்கப்படவில்லை. அடுத்துப் பட்டியலை கேட்டார்கள் குளத்தூர் கிராமத்தில் இருக்கின்ற தாமரைக்குளம் என்ற குளத்தைத் தேர்வு செய்து கொடுத்தேன். அந்த வேலையை இந்த ஆண்டு எப்போது ஆரம்பிப்பார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, ஒரு தொகுதிக்கு ஒரு குளம் என்று சொல்லுகிறபோது, ஒரு வேலையை முடித்துவிட்டு, அடுத்த வேலையைச் செய்வதற்கு பொதுப் பணித் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள், ஊழியர்கள் சரியான கவனம் செலுத்தி, குறிப்பிட்ட காலத்திலே வேலைகளை முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். அடுத்து, நம்முடைய பொதுப் பணித் துறை அதிகாரிகள் நாகர்கோவில் மையத்தில் இருக்கிறார்கள். அவர்களை எந்த நேரத்திலும் பார்க்க முடிவதில்லை. காலை 7 மணிக்குத் தொலைபேசியில் அழைத்தால் அவர் அடுத்த ஊருக்குப் போயிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். எந்த ஊருக்குப் போயிருக்கிறார் என்பதைச் சொல்ல மறுக்கிறார்கள். 'கேம்ப்' போயிருக்கிறார் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி அலுவலகத்தில் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஒரு மாத காலம் தொடர்ந்து தொடர்பு கொண்டாலும் எந்த அதிகாரியும் சுலபத்தில் கிடைப்பதில்லை. இந்நிலையில், நாம் நிர்வகிக்கின்ற வேலைகளை, அரசு முதலீடு செய்கின்ற கோடிக்கணக்கான பணத்தைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட கால கட்டத்திலே செய்து முடிக்க முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களின் கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஏனென்றால், எந்த அதிகாரியைக் கேட்டாலும் அவர் 'கேம்ப்' சென்றிருக்கிறார் என்றுதான் சொல்கிறார்கள். இந்நிலையில் எங்கிருந்து நாம் அவர்களைப் போய்ச் சந்திப்பது என்பது தெரியவில்லை. காரை எடுத்துக்கொண்டு என்னால் ஓட முடியாது. பேருந்தில் சென்றுதான் பார்க்க முடியும். அவர்களுடைய அலுவலகத்திற்குச் சென்றுதான் பார்க்கவும் முடியும். இந்தத் துறையானாலும், எந்தத் துறையாக இருந்தாலும் தொகுதிகளுக்காக இந்த அரசு மதிப்பீடு செய்து, செலவழிப்பதற்காக ஒதுக்கீடு செய்யும் கோடிக்கணக்கான ரூபாயை முறையாகப் பயன்படுத்தி குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட வேலையைச் செய்து முடித்தால் பிரச்சினை வராது. எனவே, அரசின் உயர்மட்ட, கீழ்மட்ட அதிகாரிகளும்,

ஊழியர்களும் முயற்சித்தால் மட்டும்தான், ஈடுபாடு கொண்டால மட்டும்தான் அரசு எடுக்கின்ற முடிவுகளை, அரசு செய்கின்ற பணிகளை விரைந்து செய்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். இதை அரசு அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் பாலக்குளம், தாமரைக்குளம் ஆகிய குளங்களை விரைந்து சீரமைக்க வேண்டுகிறேன். இந்தக் குளங்கள் செப்பனிடுவதைப் பொறுத்தவரையில் இன்னொரு பிரிவு இருக்கிறது. அது என்ன பிரிவு என்று எனக்குத் தெரியாது. நான் ஒரு ஊருக்குப்போய்ப் பார்த்தேன். அங்கே ஒரு குளத்தில் வேலை நடந்து கொண்டிருந்தது. யார் அந்த வேலையைச் செய்கிறார்கள் என்று கேட்டால், அங்கு பணியாற்றுபவர்கள் அதுபற்றி எங்களுக்குத் தெரியாது என்று சொல்கிறார்கள். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மதிப்பீட்டில் அந்த வேலை செய்யப்படுகிறது. நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துக் கேட்டேன். அதை நாங்கள் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஒரு மாதம் தாண்டிய பிறகு, அங்கே செல்கிறபோது, தண்ணீர் வருகிறது. ஆனால், தண்ணீர் எல்லாம் வெளியே போய் விடுகிறது. அதனை என்னவென்று கேட்டால், லீக்கேஜ் என்று சொல்கிறார்கள். ஒரு மாதம் முன்பாகத்தான் வேலை செய்தார்கள். ஒரு இலட்சம் ரூபாய் சொச்சம் செலவு செய்தும் லீக் ஆகிறது. பிறகு, அதற்கு மீண்டும் ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்து ஏனோ தானோ என்று வேலை செய்கிறார்கள். ஒரு தொகுதியிலே வேலை நடைபெறுகிறது என்றால், குறைந்தபட்சம் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய தகவலுக்காகக்கூட சொல்லக்கூடிய மரியாதையே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசு தருகின்ற பணத்தை முறையாக, சரியாக மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிலே செய்வதற்கு அதிகாரிகளை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

(பிற்பகல் 11-00)

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்): மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குளங்களிலே தூர் வாருவது இன்னும் முடியவில்லை



என்கிறார். குளங்களில் வேலையை ஆரம்பிக்க நாம் போனவுடன் பல இடங்களில் மழை பெய்து தண்ணீர் வந்து விட்டது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கவில்லையென்று சொன்னார்கள். நான் இதுவரையிலே கிட்டத்தட்ட நான்கு கடிதங்களை எழுதியிருக்கிறேன். உங்களைக் கேட்டுத்தான் எந்தக் குளமும் எடுக்க வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறேன். நீங்கள் எல்லாம் போய்ப் பார்த்து அங்கே என்ன நடக்கிறது என்று பாருங்கள் என்று கேட்டு எழுதியிருக்கிறேன். அதற்குப் பிறகுகூட வேலை நடக்கிறதா இல்லையா என்று தெரிவியுங்கள் என்று கேட்டு எழுதியிருக்கிறேன். ஆனால், இது குறித்து எத்தனை பேர் தெரிவித்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அது நன்றாக இருக்காது. நீங்கள் எனக்குத் தெரிவித்தீர்கள். நன்றி. சொக்கர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். ஆனால், பல உறுப்பினர்களுக்கு நம்முடைய தொகுதியிலே வேலை நடக்கிறதே, போய்ப் பார்த்துவிட்டு வந்து சொல்ல வேண்டும் என்ற எண்ணமேயில்லை.

அடுத்தது, அதிகாரிகளைப் பற்றிச் சொன்னார். அதிகாரிகள் இருந்து எம்.எல்.ஏ.க்களுக்கு பதில் சொல்ல வேண்டும். அதிலே மாறுபட்ட கருத்துக் கிடையாது. ஆனால், எப்போது பார்த்தாலும், அதிகாரிகள் கேம்ப், கேம்ப் என்று சொல்கிறார்களே என்று கேட்டால், நிறைய வேலைகள் நடக்கின்றன. சரி, அப்படியே பார்த்தாலும், காலையிலே போன் பண்ணினேன் அப்பவும் இருக்கிறார், மத்தியானத்திலே போன் பண்ணினேன் அப்பவும் இருக்கிறார் என்றாலும், இவரெல்லாம் எங்கே போய் ஃபீல்டில் போய்ப் பார்ப்பார்கள் என்று இரண்டு வகையிலும் சொல்லலாம். ஆகவே, சென்ற ஆண்டு வேலை நடைபெறாத குளம், இந்த ஆண்டு எடுக்கப்பட்டிருந்தால் அந்தக் குளத்திற்கும் சேர்த்து வேலைகள் நடைபெறும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியத்தில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், சில சந்தர்ப்பங்களில் மழை பொய்த்துவிடக் கூடிய காரணத்தினால்தான் தண்ணீர்ப் பஞ்சம் வருகிறது. 10-10-1992 மற்றும் 13-12-1992 ஆகிய இரண்டு நாட்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில்

[திரு. சி. வேலாயுதன்] [1998 ஏப்ரல் 22

மிகப்பெரிய அளவிற்கு மழை பெய்ததன் காரணமாக அடைந்த சேதத்தை இதுவரை அந்த மாவட்டம் கண்டது கிடையாது. அதன் காரணமாக, சில மாதங்களுக்குப் பிறகு பெருஞ்சாணி அணையில் சேர்ந்த மண்ணை எடுப்பதற்கு பொதுப் பணித் துறையினுடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆர்வம் கொண்டு அதைக் குத்தகைக்கு விட்டு சுமார் ஆயிரம் லாரிகள் அளவிற்கு மண் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதனால் கட்டடத் தொழிலாளர்கள், லாரியில் வேலை செய்யக்கூடியவர்கள் இன்னும் அதுபோல கூலி ஆட்கள் ஆகிய ஏராளமானவர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. இதனால் பொதுமக்களுக்கும் சந்தோஷமான சூழ்நிலை ஏற்பட்டு, அதே நேரத்தில் அணையின் கொள்ளளவும் அதிகம் அடைந்திருக்கிறது.

ஆனால், பேச்சிப்பாறை அணையைப் பொறுத்தவரையில் இதுவரை தூர் எடுக்கக்கூடிய பணி நடக்கவில்லை. என்ன காரணம் என்று கேட்டால், பொதுப் பணித் துறைக்கும் மற்றும் வனத் துறை ரப்பர் போர்டுக்கும் பிரச்சினை என்கிறார்கள். இரு துறைகளுமே அரசாங்கத்தினுடைய துறை எனவே, இதில் அரசாங்கம் தலையிட்டு பேச்சு வார்த்தை மூலம் பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவை அதிகப்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தண்ணீர்ப் பிரச்சினை இருக்காது. இது ஒன்று

இன்னொன்று, ஒன்று இந்த ரப்பர் கழகம் வருமானத்தை எடுத்துக் கொள்வதற்கு பொதுப் பணித் துறை அனுமதிக்க வேண்டும் அல்லது பொதுப் பணித் துறை அதனுடைய வருமானத்தை எடுத்துக் கொள்வதற்கு ரப்பர் கழகம் அனுமதிக்க வேண்டும். எனவே, ஏதாவது திட்டம் வைத்து பேச்சிப்பாறை அணையை ஆழப்படுத்தி கன்னியாகுமரி மாவட்டத்தைக் காப்பாற்ற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பெரும் மழைக் காலங்களில் ஏராளமான தண்ணீர் கடலுக்குச் சென்று வீணாகிவிடுகின்றது. பெரியவர் திரு. [illegible] அவர்கள் சொன்னதுபோல, பல இடங்களில் Check dam போட்டால், மழை இல்லாத காலங்களில் கன்று, மாடுகளைக் கழுவுவதற்கும் அதுபோல அந்த இடங்களில் நிலத்தடி நீரும் கிடைத்து, அது பயனாக அமையும். ஆரம்பக் காலத்திலிருந்தே இதை நான் மூன்றாவது முறையாகப் பேசுகின்றேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில்,



1998 ஏப்ரல் 22] [திரு. சி. வேலாயுதன்]

இரணியேல் என்று சொல்லக்கூடிய இடம் இருக்கிறது. பல கோடி ரூபாய் தேவையில்லை. சில கோடி பணத்தைச் செலவு செய்தால் போதுமானது. அங்கு ஏராளமான இடம் இருக்கிறது. அங்கு ஒரு Check dam கட்டினால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதனை ஓர் ஏரியைப் பயன்படுத்துவதைப்போலப் பயன்படுத்துவார்கள். பல கிலோமீட்டர் தூரத்திற்கு நிலத்தடி நீர் கிடைக்கும். கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். அந்தப் பகுதி பாலத்தோடு சேர்ந்து வருகிறது. ஏகப்பட்ட இடம் இருக்கின்றது. எனவே, அரசாங்கம் இதனைக் கவனத்தில் கொண்டு இரணியேலில் ஒரு Check dam கட்டி அதன் மூலம் பொது மக்கள் பயன்பெற ஆவன செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-05)

இன்னொன்று, ஆக்கிரமிப்புகள். இப்போது அங்கே தண்ணீர்ப் பஞ்சம் வந்துவிட்டது என்று சொன்னால், அதற்குக் காரணம் எங்கு பார்த்தாலும் ஆக்கிரமிப்பு. ஆக்கிரமிப்பு இரண்டு வகைப்படும். ஒன்று ஆயக்கட்டு உள்ள குளங்கள், இன்னொன்று, ஆயக்கட்டு இல்லாத குளங்கள். ஆயக்கட்டு இல்லாத குளங்கள் என்று சொன்னால், பாசனத்திற்கான நீர் பாய்வதற்கு நிலம் இருக்காது. தண்ணீரைக் கொண்டு செல்ல மடை வசதி இருக்காது கால்வாய் வசதி இருக்காது. இப்படிப்பட்ட இடங்களில் சில விவசாயிகள் ஆங்காங்கே ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால், பெரிய அளவுக்குப் பாதிப்பு இல்லை. ஆனால், ஆயக்கட்டு உள்ள குளங்கள், என்றால் அந்தக் குளத்திற்கு ஏராளமான மடைகள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் அந்தக் குளத்தை நம்பி இருக்கின்றது. அப்படிப்பட்ட குளங்களில்கூட சில நிலச்சுவான்தார்கள் ஆக்கிரமிப்புச் செய்து பல ஆண்டுகளாகத் தங்கள் கைவசம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்ற வேண்டுமென்று நாங்கள் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசி வருகிறோம். ஒவ்வொரு மாதமும் கடைசி நாள் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான நிகழ்ச்சி என்று தாலுகா அலுவலகத்தில் எங்களைக் கூப்பிட்டு அனுப்புகிறார்கள். அப்போது நாங்கள் அங்கு சென்று இன்னின்ன குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று பட்டியல் போட்டுக்கொடுத்தால், அந்த அதிகாரிகள் அங்கே சென்று

பார்க்கும்போது, ஆக்கிரமிப்புச் செய்திருக்கக்கூடிய நிலச்சுவான்தாரர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கி விடுகிறார்கள். அதிகாரிகள், உடனே ஸ்டே இருக்கிறது என்று சொல்லி அதன் பக்கத்திலேயே போவதில்லை. அரசாங்கத்திற்குச் சொந்தமான, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளத்திற்கு எப்படி அவர்கள் ஸ்டே வாங்க முடியும்? அதற்கு அரசாங்கம் ஒரு நிவர்த்தி காணவேண்டும். வருவாய்த் துறை அதிகாரிகளை வைத்து, அவர்களுடைய பட்டா நிலத்தை அளந்துவிட்டு, மீதம் இருக்கக்கூடிய புறம்போக்கு நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அரசாங்கம் அகற்றித்தான் ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். எனவே, ஸ்டே வாங்கிவிட்டார்கள் என்று சொல்லி, அதனால் அதிகாரிகள் அங்கே செல்ல முடியவில்லை என்று ஒதுங்கிக் கொள்ளக்கூடிய நிலைமையை மாற்றியாக வேண்டும். அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளம். அதில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித்தான் தீருவோம் என்ற நிலைக்கு ஏதாவது ஒரு சட்ட வழியோ அல்லது நிவர்த்தியோ காணாமல் இருந்தால், நாளடைவில் இருக்கக்கூடிய ஆயக்கட்டுக் குளங்கள் எல்லாம் பயன் இல்லாமல் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது, பெரும்பாலான குளங்களினுடைய பகுதி அளவு அல்லது மூன்றில் ஒரு பங்குதான் பயன்பாட்டில் உள்ளது. எனவே, ஸ்டே வாங்கி ஆக்கிரமிப்புகளை அகற்ற முடியாத நிலைமை இருப்பதைக் கட்டாயமாக மாற்றியாக வேண்டும். அரசுக்குச் சொந்தமான குளம் என்பதில் உறுதியாக இருந்து, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் சில இடங்களில் அதிகாரிகளே அவர்களிடம், நீங்கள் ஸ்டே வாங்கிக் கொள்ளுங்கள், நாங்கள் ஒதுங்கிக்கொண்டு விடுகிறோம் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இதையும் அரசாங்கம் கவனித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு விஷயம் 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழையின் போது பி.பி. சேனல் 19-வது கிலோமீட்டரில் பெரிய உடைப்பு ஒன்று ஏற்பட்டது. இதை நான் இந்தச் சட்டமன்றத்தில் நான்கு தடவை பேசியிருக்கிறேன். அடுத்த தடவை கண்டிப்பாகச் செய்துவிடுவார்கள். நபார்டு மூலம் பணம் வருகிறது. அந்தச் சேனலைச் செப்பனிடும்போது,



இந்த உடைப்பையும் சேர்த்துச் செப்பனிட்டு விடுவார்கள் என்றெல்லாம் அதிகாரிகள் ஒவ்வொரு தடவையும் சொல்கிறார்கள். ஆனால், 1992-லிருந்து அந்த உடைப்பு சரி செய்யப்படவில்லை. விவசாயிகள் ஒவ்வொரு தடவையும் பயிர் செய்யும்போது, அங்கு பக்கத்தில் இருக்கிற இன்னொருவருடைய நிலத்தில் கொடிக்கால் வெட்டி தண்ணீரைக் கொண்டு செல்கிறார்கள். ஆனால், அது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. மேலும், வெட்டப்பட்ட கொடிக்காலும் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு பாதிக்கப்படுகிறது. பாசேரி, தோட்டியோடு, சுங்கான்கடை, வீராணி போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான நிலங்கள் இந்த பி.பி. சேனல்-அதாவது பத்மநாபபுரம் புத்தன் சேனலின் 19-வது கிலோமீட்டரில் உடைப்பு ஏற்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ளன. இதை நான்காவது தடவையாக நான் பேசுகின்றேன். எனவே, கருணைகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதிகாரிகள் இதைக் கவனத்தில் கொண்டு, பி.பி. சேனலில் உள்ள அந்த உடைப்பைச் சரி செய்து, இந்தத் தடவை விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய அளவுக்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேஜையடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நான்கு தடவை இதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் பத்மநாபபுரம் புத்தன் சேனலுக்கு 2 கோடி ரூபாய், அதனுடைய பிராஞ்சுகளுக்கு ஒரு கோடியே முப்பத்து மூன்று இலட்சம் ரூபாய், பி.பி. சேனலினுடைய Tank Rehabilitation-க்கு 38½ இலட்சம் ரூபாய், கிட்டத்தட்ட மூன்று கோடியே அறுபத்தெட்டரை இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே பெரிய துரதிருஷ்டம் என்னவென்றால், உங்களுடைய ஊரில் வேலை செய்வதற்கு ஒப்பந்தக்காரர்களே வருவதில்லை. நான்கு தடவை, ஐந்து தடவை டெண்டர்போட்டு, யாரும் வராததால், கடைசியாக அந்த மூன்று வேலைகளுக்கும் re-tender போட்டிருக்கிறோம். எனவே, இந்த மாதம் வரும் என்று கருதுகிறேன். நீங்கள் சொன்னதை இந்த அரசு செவிமடுத்திருக்கிறது. ஆனால், வேலை செய்ய உங்கள் ஊரில் ஒப்பந்தக்காரர்கள் முன் வரவில்லை; அவ்வளவுதான். இது உலக வங்கியினுடைய திட்டம்; நல்ல ரேட்.

முற்பகல் 11-10

**திரு. சி. வேலாயுதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டில், மாம்பழத்தாறு அணை கட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அன்றையதினம், இதே அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு, மாம்பழத்தாறு அணைகட்ட வேண்டுமென்று முடிவு செய்தது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டு, பூர்வாங்க வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஏதோ குறுக்கிட்டு, பலரும் பல வகைகளில் சொல்கிறார்கள். சில ஆக்கிரமிப்புகள், சில செல்வந்தர்களுடைய நிலம் அதில் மூழ்கிப்போகும். எனவே, அணை கட்ட வேண்டாமென்று குறுக்கிடுகிறார்கள் என்றெல்லாம் காரணம் சொல்கிறார்கள். எதுவாக இருந்தாலும் 1991 ஆம் ஆண்டு இதே தி.மு.க. அரசு, நம்முடைய கலைஞர் அரசு மாம்பழத்தாறு அணை கட்டுவதற்கு அறிவிப்பு அறிவிக்கக்கூடிய நிலையில் இருந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாக அரசு கலைக்கப்பட்ட காரணத்தால் அறிவிப்பு வரவில்லை. தயவு செய்து, இந்தத் தடவை மாம்பழத்தாறு அணையைக் கட்டுவதற்கு உண்டான ஏற்பாட்டை நிச்சயமாக இந்த அரசு செய்துதர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லி அமையலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. யாரோ செல்வந்தர்களின் நிலம் இருக்கிற காரணத்தாலே நாங்கள் மாம்பழத்தாறு அணையைக் கட்டாமல் விட்டுவிட்டோம் என்று அல்ல. இதிலே benefit to cost ratio குறைவாக இருக்கிறது. இருந்தாலும், இதிலே வனத்துறைக்குட்பட்ட நிலங்கள் நிறைய இருக்கின்றன. 140 ஏக்கருக்கு மேல் வனத்துறையின் நிலங்களை எடுக்க வேண்டியிருக்கிறது. அதிலே பெரிய பிரச்சினைகள் வருகின்றன. இதனால், இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்றால், முதலிலே வனத் துறை நிலங்களை எடுக்காமல் எந்த எந்த அணைகளைக் கட்ட முடியுமோ அவற்றை எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவது என்று தீர்மானித்திருக்கிறது. எனவே, இப்படி நிலங்களை எடுப்பதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுவதால், இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள முடியவில்லையே தவிர, வேறு காரணம் இல்லை. மாம்பழத்தாறு அணையைக் கட்ட வேண்டுமென்று இந்த அரசுக்கு முனைப்பான எண்ணம் உண்டு.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன், நீங்கள் அதிகமான நேரம் எடுத்துக் கொண்டீர்கள். சீக்கிரம் பேசி உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் உள்ள குளம் - என்னுடைய ஊரிலுள்ள குளத்திற்கு தண்ணீர் பாயக்கூடிய சேனல்,- அதுபோல இன்னும் ஆண்டாறு குளம், குதிரை வெந்தான் குளம், கறுப்புக் கோட்டுக்குளம் போன்ற குளங்களுக்குத் தண்ணீர் பாயக்கூடிய வாய்க்கால்கள் தண்ணீர்ச் செழிப்பின் காரணமாக, விவசாயிகள் அந்த வாய்க்கால்களைக் கவனிக்காமல் விட்டதன் காரணமாக, பக்கத்தில் இருக்கக்கூடிய 12 விவசாயிகள் அந்த வாய்க்கால்களை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். நான் அதிகாரிகளைப் பார்த்து, அந்த வாய்க்கால்களை வெட்ட வேண்டுமென்று கேட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்ததற்குப் பிறகு காவல் துறை ஆய்வாளர் ஒருவரின் நிலம் அங்கே உள்ளதால், அவர் ஸ்டே வாங்கிவிட்டார் என்று சொல்லி அந்தப் பணியை அப்படியே போட்டுவிட்டார்கள். இவ்வளவுக்கும் நான் முனைப்போடு நடவடிக்கை எடுத்தேன்; எங்களுக்கு, எங்கள் ஊருக்கு பயன்படக்கூடிய வகையில் இருக்கும் என்றெல்லாம் அதிகாரிகளிடத்திலே சொல்லி நடவடிக்கை எடுத்த பிறகும்கூட, இந்த அளவுக்கு அதிகாரிகள் செய்து விட்டார்கள். காரணம் என்ன, அதிகாரிகள் ஏதாவது தடை ஆணை வந்துவிட்டால், அதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் அல்லது இதில் தனக்கு ஏதாவது இலாபம் கிடைக்குமா என்று நினைக்கிறார்கள். இதை உறுதியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டத்திலுள்ள இரண்டு பெரிய ஆறுகள். ஒன்று பெரியாறு. பெயரே பெரியாறு. மற்றொன்று தாமிரபாணி ஆறு. இந்த ஆறுகளுடைய கரைகளில் வாழக்கூடிய மக்கள், ஒவ்வொரு முறையும் மழைக் காலங்களில் கஷ்டப்படுகிறார்கள். வீட்டை விட்டே ஓடுகிறார்கள். ஒரு தடவை ஒரு பாறை உருண்டு வந்து விழுந்த காரணத்தாலே 7 பேர் இறந்துவிட்டார்கள். இதற்குக் காரணம் என்ன, பக்கத்தில் இருக்கக்கூடிய பொதுமக்கள் சேனலை முழுக்க முழுக்க ஆக்கிரமித்திருப்பதுதான். கிட்டத்தட்ட சேனல் இப்போது பாதிதான் உள்ளது. எனவே, இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றக்கூடிய விஷயங்களில் அரசாங்கம், நாட்டின் நலன் கருதி, வருங்காலத்தில் நிலத்தடி நீர்ச்

செழிப்பு கருதி, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர்; வாழிய பாரத மணித் திருநாடு; வந்தே மாதரம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. கோதண்டம்.

முற்பகல் 11-15

**திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெறுக் கொண்டிருக்கின்ற பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில செம்பரம்பாக்கம் ஏரியைச் சீரமைப்பது பற்றிச் சில கோரிக்கைகளை முன் வைக்க விரும்புகிறேன். அந்த ஏரியில நீர் கொள்ளளவு 3,120 மில்லியன் கன அடியாகும். அதன் நீர்மட்ட உயரமோ 22 அடி ஆகும். கரையின் நீளம் 8,800 மீட்டர் ஆகும். கரையின் மேல் பகுதி 5 மீட்டர் அகலம் ஆகும். ஏரியின் பரப்பளவு 19,059 ஏக்கர் ஆகும். அந்த ஏரியில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால், சென்னை மாநகரம் பெருமளவு பாதிக்கப்படுவதை சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், அடையார் மக்கள் பாதிக்கப்படுவதைப் பார்த்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டு இருக்கின்றார்கள். அங்கு மக்கள் படுகின்ற வேதனையைப் பார்க்க நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரை, உடனடியாக செம்பரம்பாக்கம் ஏரிக்குச் செல்ல வேண்டும்; அந்த ஏரியின் நிலைமையை நேரில் பார்க்க வேண்டும் என்று அவர்களை அனுப்பி வைத்தார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரும் வந்து அந்த ஏரியை பார்வையிட்டார்கள். அப்போது அந்த ஏரியின் நிலைமை, 8 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியே இருந்தது. ஆனால், ஏரிக்கு வரத்தோ 8 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவின்பேரில் அதில எப்படியாவது ஆயிரம் கன அடி தண்ணீரைக் குறைக்க முடியுமா என்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் மூலமாக அதிகாரிகளைக் கேட்க, அதிகாரிகள் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள், அதில் ஒரு கன அடி தண்ணீர்கூடக் குறைக்க முடியாது; காரணம் இந்த ஏரியை எங்களால் காப்பாற்ற முடியாது என்ற நிலையை எடுத்துக் கூறினார்கள். அமைச்சரும் அங்கு வருகை தந்த அந்த



நேரத்தில் சுமார் 10 அல்லது 20 மீட்டர் அளவுக்குக் கரை உடையும் நிலை ஏற்பட்டது. நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் உடனடியாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, 2 லட்ச ரூபாய்க்கு மேல் செலவிட்டு அதை 3 நாட்களுக்குள் சரி செய்தார்கள். எனவே நான் தயவுசெய்து பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம்—அந்த செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் வெளியேறும் இடத்தில் இருந்து, கோட்டூர்புரம், அடையாறு வரையுள்ள அந்த ஆற்றை அகலப்படுத்தினால், அந்தத் தண்ணீரால் கோட்டூர்புரம், அடையாறு பகுதிகளில் வெள்ளப் பெருக்கு இருக்காது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, செம்பரம்பாக்கம் ஏரிக்குப் பொதுப் பணித் துறை அதிகாரிகள் செல்ல வேண்டுமென்றால் குன்றத்தூரிலிருந்து சுமார் 1 கி.மீ. செல்ல வேண்டும். அந்தச் சாலை மிகவும் பழுதடைந்து இருக்கின்றது. வெள்ளக் காலங்களில் அவசரமாக அங்கே செல்ல வேண்டுமென்றால், அந்தச் சாலை சரியில்லாத காரணத்தால், அதிகாரிகள் அங்கு வரத் தாமதம் ஏற்படுகின்றது. எனவே, உடனடியாக தயவுசெய்து அந்தச் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த படப்பை அருகில் அம்மணம்பாக்கம் என்ற ஓர் ஓடை உள்ளது. அந்த ஓடையில் 1984 ஆம் ஆண்டு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் 10 லட்ச ரூபாய் செலவில் ஓர் அணையைக் கட்டி இருக்கின்றார்கள். அணை கட்டினார்களே தவிர, அந்த அணைக்கு உண்டான மதகையோ அல்லது கால்வாயையோ அமைத்துத் தரவில்லை. நம்முடைய அரசு 1989-ல் பொறுப்பேற்றது; அப்போது 1990-91 ஆம் ஆண்டில் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர்—அப்போதும் இப்போதைய நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்தான்; அவரிடம் கோரிக்கை வைத்தபோது, அவர் உடனடியாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அதிகாரிகளும் நேரடியாக வந்து பார்த்து, அந்த அணையிலிருந்து வெளியேறுகின்ற நீரை படப்பை ஏரியில் விட்டு, பின்னர் படப்பை ஏரியிலிருந்து மணிமங்கலம் ஏரிக்கு விடுவதற்கு வழிவகை செய்தார்கள். ஆனால், அதற்குள் நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டது; அதனால் அந்த வேலை நிறுத்தப்பட்டது. ஆகவே, தயவுசெய்து அமைச்சர்

அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த ஆண்டுத் திட்டத்திலாவது அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் என்னுடைய திருப்பெரும்புதூர் தொகுதியில் பொதுப் பணித் துறை மூலமாகச் சீர் செய்யப்பட வேண்டிய ஏரிகள் பல இருக்கின்றன. திருப்பெரும்புதூர் ஏரி 1,353 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாசனம் செய்யக்கூடியது. அதை நல்ல முறையில் ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் வடக்குப்பட்டு ஏரி 1,030 ஏக்கர் பாயக்கூடியது. அதையும் சீர்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சோமங்கலம் ஏரி 786 ஏக்கர் பாயக்கூடிய ஏரி. அதையும் சீர்படுத்தித் தர வேண்டும். பிள்ளைப்பாக்கம் ஏரி 1,066 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி தருகிறது. அதையும் சீர் படுத்த வேண்டும். என்னுடைய தொகுதியில் 118 ஏரிகள் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்த ஏரிகள் மூலம் 27,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தயவு செய்து அந்த ஏரிகள் எல்லாவற்றையும் சீர்படுத்தித் தர வேண்டுமென்று நான் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையை ஒட்டியுள்ள போரூர் அருகில் உள்ள இடமான ஏரி, சைதாப்பேட்டை தாலுக்காவுக்குச் சொந்தமா, திருப்பெரும்புதூர் தாலுக்காவுக்குச் சொந்தமா என்று தெரியவில்லை. காரணம், அங்கேயிருந்து தண்ணீரை எடுத்துக்கொண்டு போய் சென்னையின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள். மீதியுள்ள இடங்களில் கடந்தகால ஆட்சியில் சுமார் 3,000 பேர் ஆக்கிரமிப்புச் செய்து இருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி அந்த ஏரியை ஆழப்படுத்தி சென்னை மாநகருக்குக் குடிநீர் எடுத்துவர வேண்டுமென்று நான் கோரி, விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு பொதுப் பணித் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் இருக்கிற ஏரிகள், கால்வாய்கள் ஆகியவற்றை



எல்லாம் தூர் எடுத்து செம்மைப் படுத்துவதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதற்காக நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் இப்போது அதிகமாகத் தண்ணீர்ப் பஞ்சம் இருப்பதால், நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், தாமிரபரணி ஆறு, புத்தன்தருவை மற்றும் வைரவன்தருவை போன்ற இடங்களையெல்லாம் சுற்றிச் சுற்றிப் பார்த்து வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொல்லி, எங்களுக்கு அந்தத் திட்டத்தைப் பெற்றுத் தந்தார்கள். அந்தத் திட்டம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்னும் கொஞ்சம் துரிதப்படுத்தி, திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இந்த ஆண்டு மணிமுத்தாறு அணையில் 118 கன அடி தண்ணீர் வந்தும் கூட, 3-வது ரீச், 4-வது ரீச்சுக்கு சரிவரத் தண்ணீர் வந்துசேரவில்லை. காரணம், வரத்துக் கால்வாய்கள் தூர்ந்துவிட்டன. அந்தக் கால்வாய்களையெல்லாம் சீர் செய்து தர வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மருதூர் மேலக்காலில் இருந்து வருகிற அதனுடைய கால்வாய்கள் எல்லாம் வழியில் தூர்ந்துபோய் இருப்பதால், ஏறத்தாழ 25 பாசனக் குளங்களுக்குத் தண்ணீர் வந்துசேரவில்லை. மடைகள் எல்லாம் பழுதடைந்து இருக்கின்றன. குளங்களில் மந்தாரைச் செடிகள் வளர்ந்து தண்ணீர் தேங்காமல் இருப்பதால், பயிர் விளைச்சலுக்குப் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. இதையெல்லாம் கவனித்து, சரி செய்து தர வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடம்பாகுளத்தில் 10 மடைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் உடைந்திருக்கின்றன. அவைகளைச் சீர் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, தென்கரை பெரியகுளத்திலும் பராமரிப்புப் பணிகள் செய்து, அந்தக் குளத்தையும் சீர் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முந்தைய ஆட்சியில் கடையமேனாடை முதல் புன்னையூர் வரைக்கும் ஒரு கால்வாய் வெட்டுவதாகச் சொல்லி அதைச் சீரழித்து இருக்கிறார்கள்.

அந்தத் திட்டத்தை இப்போது நமது அரசு எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். தயவுகூர்ந்து அந்தத் திட்டத்தை, அந்தக் கால்வாய்

அமைக்கும் வேலையை விரைந்து முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, தாமிரபரணி ஆற்றிலிருந்து வீணாகப் போகின்ற தண்ணீரைத் தேக்கி அங்கே ஓர் அணையை கட்டி, தொகுதி நோக்கியிருக்கின்ற வறண்ட பகுதிகளான சாத்தான்குளம், நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய 3 தொகுதிகளுக்கும் அந்தத் தண்ணீரை விட்டால் வறண்டு இருக்கின்ற அந்த 3 தொகுதிகளும் நன்கு பயனடையும் என்று நான் தாழ்மையோடு சொல்லிக்கொள்கின்றேன். ஆகவே, என்னுடைய தொகுதி போன்ற பஞ்சத்தில் . . . . . . (குறுக்கீடு)

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு பெரிய தத்துவம் மாதிரி திருப்பித்திருப்பி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிற்குக் கீழே பெருமழை பொழிந்தால் தாமிரபரணி ஆற்றிலே வெள்ளம் பெருக்கெடுத்துவந்து ஸ்ரீவைகுண்டம் அணையைத் தாண்டி கடலுக்குப் போகும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக்குக் கீழே கடலுக்கு இடையிலே எங்கேயாவது ஓர் அணை கட்டி தண்ணீரைத் திருப்ப முடியுமா என்பதை எங்களுடைய பொறியாளர்கள் அவர்களுக்குத் தெரிந்த வித்தைகளை எல்லாம் காட்டிப் பார்த்தார்கள். ஆனால் லெவல் சரியாக வரவில்லை. சாதாரணமாக கேமராவிலே, சினிமாவிலே பார்க்கும்போது ஒன்று தெரியும், கண்ணுக்கு நேராகப் பார்த்தால் மற்றொன்று தெரியும். அதைத்தான் Naked eyes, Camera eyes என்பார்கள். அப்படி நாம் நேராகப் பார்க்கும்போது அங்கே ஓர் அணை கட்டினால் பரவாயில்லை என்று தோன்றும். ஆனால் பொறியியல் வல்லுநர்கள் பார்த்தால் சரியான லெவல் இருக்கிறதா, சரியாகத் தண்ணீர் போகுமா என்பதெல்லாம் பார்ப்பார்கள். எனவேதான் மேற்கொண்டு எங்கேயாவது, ரெட்டைத் திருப்பதிக்குக் குறுக்கேகூட கட்டலாமா என்று நான் அங்கே போய் வந்தபிறகு பார்த்தோம். ஆனால் இல்லை. ஆகையினாலே என்ன செய்தாலும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிற்கு மேலேதான் செய்ய முடியுமே தவிர ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிற்குக் கீழே செய்ய முடியாது.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. ஆனால் அவர்கள் சொல்வதைப்போல



திருநெல்வேலிக்கு மேற்கே பத்தமடைக்குப் பக்கத்திலே தண்ணீரைத் திருப்பி விடுவதற்கு வாய்ப்புகள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை அதைச் சீர்தூக்கிப் பார்த்து, முடிந்தால், அதைச் செய்து (மணியடிக்கப்பெற்றது) அந்த வறண்ட பகுதிகளான நாங்குநேரி, சாத்தான்குளம், ராதாபுரம் பகுதிகளுக்கு தண்ணீரைக் கொண்டு சேர்த்தால் அங்கிருக்கின்ற மக்களுக்கு அது பெரும் வாய்ப்பாக இருக்குமென்று சொல்லி, எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. இராஜரெட்டி.

***THIRU S. RAJAREDDY:** Hon. Deputy Speaker Sir, I would like to thank you for giving me an opportunity to speak on the Demands for Grants relating to Irrigation and Buildings.

In the Policy Note, it has been pointed out that since the surface water potential is almost fully utilised, there is hardly any scope for any new major or medium Irrigation Project in the State. In order to increase the area under cultivation, the Government has to depend on (a) diversion of surface water to Tamil Nadu from neighbouring States like Andhra Pradesh and West flowing rivers of Kerala; (b) conserving the available water by modernising the existing canal systems and by avoiding wast- age; (c) by increasing efficiency of the tank irrigation and (d) by tapping the ground water resources.

The National Water Development Agency and the State Government is pursuing the matter with Kerala for diversion of Pamba and Achankoil rivers. It is very essential and it should be pursued speedily and imple- mented.

Cauvery Delta System is 2000 years old and over the years, the rivers drains and the canals have been silted up because of floods. Rs.10 crores was sanctioned in 1997 and another Rs.20 crores was sanctioned in this year's Budget for desilting the drains and canals. But further allotment is needed for desilting these canals and drains.

There are nearly 40,000 tanks situated throughout the State and except the tanks linked to irrigation canals, others have been silted up. These tanks are major irrigation sources for the rural areas. These tanks should be desilted and restored to their former capacity not only to increase the area under cultivation and production but it is major source for the ground water because ground water will get re-charged only these tanks are desilted.

In our Dharmapuri District, Thally constituency is the only constituency which has no medium or minor irrigation project and only two streams are flowing, viz., Santhana Muthu and Dhoddahalla. Since 1952, this question has been raised by different Members in the Assembly.

Our Hon'ble Minister Thiru Mullai Vendhan has assured during the inauguration of Anna Marumalarchi Thittam in Anjetti that Dhoddalla Dam will be taken up during this Budget. But there is no mention of this in this Policy Note. There is a scheme for Santhana Muthu Nadhi. People are expecting that this has to be taken up, called Upper Chinnar. Survey has been conducted during the British period. But no mention has been made in this Report.

முற்பகல் 11-30

**Hon'ble Thiru DURAIMURUGAN:** Dhoddahalla river is a tributary of Cauvery. Cauvery dispute is in the Tribunal. There is a problem between Karnataka and Tamil Nadu. That is why we have not taken up this scheme. Otherwise, we will take up Dhoddahalla Dam Scheme also.

**Thiru S. RAJAREDDY:** In Thally constituency, there are many irrigation tanks which have been silted up. Only one irrigation tank has been taken up for desilting and the work has not yet been started because the contractor who has taken up the tender, is not ready to take up the work. Further, I request the Hon'ble Minister to see that atleast 10 more irrigation tanks are desilted because that is the only source of irrigation in my Constitutency.



Regarding, Cauvery Water Disputes Tribunal, the State Government should put pressure on the Central Government to implement the interim award.

Under Ganga-Cauvery linkage scheme, there is a proposal to link Mahanadhi, Krishna and Cauvery rivers. Steps should be taken up with National Water Development Agency at the Centre in this regard.

Further, the encroachments in the canals should be evicted and the desilting in the Cauvery canal is necessary. Destroyal of Neyveli Kattamanakku is very much appreciated and this has to be speeded up. In order to increase the water efficiency in Tamil Nadu, the State Government has to depend on minor irrigation and for this, check dams have to be built so that water can be re-charged and the ground water potential can be increased.

Thank you for giving me this opportunity.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. பாலசுப்பிரமணியன்.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொள்வதற்கு எனக்கு அனுமதி தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1967 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான், இந்தியாவிலேயே பொதுப் பணித் துறை தனிச் சிறப்புப் பெற்றது என்பதை நான் கூறிக்கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அவரைப் போன்று பணியாற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆண்டு ஏரி, குளங்களில் தூர் எடுக்கப்பட்டதால், வெள்ளம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. முதலிலே நான் அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆட்சியிலே எந்தவிதமான சீரமைப்புப் பணிகளும் நடைபெறவில்லை. மக்களை மறந்தவர்கள் இன்று மக்களுக்காக வாதாடுவதாகக் கூறுவது ஏமாற்று வேலையாகும் என்பதைக்

கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு குளங்கள், ஏரிகள், வடிகால் வாய்க்கால்களை எல்லாம் தூர் எடுப்பதற்கு 20 கோடி ரூபாய் அனுமதி வழங்கியதற்கு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவிலே இந்த ஆண்டு ஒரு தனியார் கல்லூரி அமைப்பதற்கு அனுமதி கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-35

பட்டுக்கோட்டை தொகுதியைப் பொறுத்தளவிலே, தொழிற்சாலையே இல்லை என்ற நிலையில், வரும் ஆண்டுகளிலே பட்டுக்கோட்டையில், தென்னை மற்றும் கரும்பு ஆகியவற்றை மூலப் பொருளாகக் கொண்ட ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தர நான் அன்புடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம் போன்ற நகரங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியின் கடைமடைப் பாசனப் பகுதிக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஏனாதி பம்பிங் ஸ்கீம்-ஐ இந்த ஆண்டு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வளர்ந்துவரும் பட்டுக்கோட்டைக்குப் புறவழிச் சாலை ஒன்றை அமைத்துத்தர மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், பட்டுக்கோட்டை தொகுதி அதிராம்பட்டினம் பயணிகள் தங்கும்விடுதி இடிந்துவிட்ட நிலையில் இருக்கிறது. எனவே, புதிய பயணிகள் விடுதியை இந்த ஆண்டு கட்டித்தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பட்டுக்கோட்டை தொகுதியில், அதிராம்பட்டினம், மதுக்கூர் போன்ற ஊர்களில், காவல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. எனவே, கட்டட வசதி செய்து தர மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வளர்ந்துவரும் பட்டுக்கோட்டையில் தாலுக்கா அளவிலே காவல்நிலையம் ஒன்றை இந்த ஆண்டு அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பட்டுக்கோட்டை தொகுதியில் நாட்டுச்சாலை என்ற கிராமத்தில் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வரும் கால்நடை மருந்தகம் அமைத்துத் தரும்படி மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டையில் பிறந்த மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரம் அவர்களுடைய மணி மண்டபம் கட்டுவதற்காக நிலங்கள் எல்லாம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன. நமது அரசு மணி மண்டபம் கட்டுவதற்குண்டான பணியினைத் தொடங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் 40 அடிக்குக் கீழே சென்று விட்டதால், ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் திறந்தவெளிக் கிணறு அமைப்பதைவிட ஆழ்குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துத் தரும்படி மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப்பணிக்கு தனது வாழ்நாளை அர்ப்பணித்த, ஒப்பற்ற தமிழினத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை மட்டும் கூறிக் கொள்ள விழைகிறேன். 'நீரின்றி அமையாது உலகு' என்று சொல்வார்கள். அதைப்போல, இந்த உலகத்தில் உள்ள மனிதன்

வாழ்வதாக இருந்தாலும் சரி, மிருகங்களாக, பறவைகளாக, மற்றும் தாவரங்களாக இருந்தாலும் சரி, எல்லா உயிர்களும் வாழ்வதற்கும், வளர்வதற்கும் நீர் அவசியமாகிறது. அதைத்தான், 'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும்' என்று ஆன்றோர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே ஒரு நாடு, ஒரு அரசு சிறப்பாக அமைய வேண்டும் என்று சொன்னால், நீர் ஆதாரத்தைப் பொறுத்துத்தான் அமையும். ஆகவே, அந்த வகையிலே, இவ்வளவு முக்கியமான துறைக்கு நம்முடைய அரசாங்கமானது, இந்த ஆண்டு நிதிநிலையைப் பார்க்கின்றபோது, ஒதுக்கி இருக்கின்ற தொகை என்பது பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறைக்கு இன்னும் நிதியைக் கூடுதலாக வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, எத்தனையோ திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்குப் பிறகு நீர் ஆதாரத்தைப் பெறுவதற்காக, பாசனத் திட்டங்கள் பெரிய அளவிலே உருவாக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால், இல்லை என்றுதான் சொல்ல முடியும். ஆகவே, அந்த வகையிலே, இந்தப் பாசனத்திற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, நீர் ஆதார மேம்பாட்டிற்காக, நீண்டகாலங்களுக்கு முன்பு, 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. சென்னை, மதுரை, பொள்ளாச்சி, திருச்சிராப்பள்ளி போன்ற 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றது. நான் கடந்த காலங்களிலே, பலமுறை இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறேன். இந்த நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக நிர்வாக வசதிக்காக, 4 மண்டலங்கள் என்று தற்போது இருப்பது போதாது. இன்னும் கூடுதலாக ஒரு மண்டலத்தை உருவாக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதிலும் காவிரி பாயக்கூடிய பகுதியான தருமபுரி, சேலம், பெரியார் ஆகிய இந்த மாவட்டங்களோடு, வேலூர் மாவட்டத்தை உள்ளாக்கிய ஒரு மண்டலத்தை உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.



காரணம், இன்றைய நிலையிலே இந்திய நாட்டிலே, குறிப்பாகத் தமிழ்நாட்டிலே வறட்சி அடிக்கடி வந்து போகிறது. ஆகவே இந்த வறட்சியைச் சமாளிக்கக் கூடிய வகையில் வட இந்திய நதிகளில் நீர் வரத்து அதிகமாக இருக்கிறது. ஆனால் கடலில் வீணாகக் கலக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட வட இந்திய நதிகளான கங்கை, மகாநதி போன்றவற்றை எல்லாம் தென்னிந்திய நதிகளோடு, அதிலும் குறிப்பாக, காவிரி நதியோடு இணைக்கும் திட்டத்தை மத்திய அரசுக்குத் தமிழக அரசு வற்புறுத்தியாக வேண்டும். இதற்கு நிதியாதாரங்கள் இல்லையென்று சொன்னாலும்கூட, மத்திய அரசு நிதி ஒதுக்க வேண்டும். இதனால் பயன்பெறக்கூடிய மாநில அரசுகள் எல்லாம் நிதி ஒதுக்க வேண்டும். அதே நேரத்தில் அந்தந்த மாநிலங்களிலே இருக்கக்கூடிய தொண்டு நிறுவனங்கள் நிதிகளை அள்ளி வழங்கத் தயாராக இருக்கிறார்கள். குறிப்பாக விவசாயிகள், கல்லூரி, பள்ளி மாணவர்கள் எல்லாம்கூட ஒரு மாத காலத்திற்கு இலவசமாக வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால், தொண்டு மனப்பான்மையோடு அவர்கள் அங்கே பணியாற்றுவதற்கு நிச்சயமாகத் தயங்க மாட்டார்கள். ஆகவே அந்த வகையில் இந்த கங்கை-காவிரியை இணைப்பதற்கு நம்முடைய தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை என்பது தமிழகத்தினுடைய உயிர்நாடிப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இங்கே கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், கர்நாடக முதலமைச்சரிலேயிருந்து சாதாரண ஒரு விவசாயக்கூலி வரையிலே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகள், அங்கே இருக்கக்கூடிய அரசு அதிகாரிகள் எல்லாம்கூட ஒருமித்த கருத்தோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். நான் யாரையும் குறை சொல்வதற்காகச் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. இருந்தாலும்கூட, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கட்சி வேறுபாடுகளை வைத்துக்கொண்டு, இதிலே ஒருமித்த குரலாக நாம் வாதிடவில்லை என்பது மிகுந்த வேதனையாக இருக்கிறது. ஆகவே காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு என்பதை ஒருமித்த குரலோடு நாம் பெறுவதற்கு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதே நேரத்திலே என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே திட்டம் தயாரிக்கப்பட்டு, இன்றைய தினம் வரையில் இருக்கக்கூடியது மத்தனப்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம். நீண்டநாட்களாகக் கோரி வந்தும்கூட, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக்கொண்டு அறிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்று அறிவிப்பார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே பெரிய அணை என்ற வகையில் பாசனத் திட்டங்களே கிடையாது. சிறு விவசாயிகள் வாழக் கூடிய பகுதி. ஆகவே தயவு கூர்ந்து இந்த மத்தனப்பள்ளம் அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தருமபுரியை அடுத்து பாப்பாரப்பட்டி. பாப்பாரப்பட்டியைச் சுற்றியிலும் 16 ஏரிகள் இருக்கின்றன. இந்த 16 ஏரிகளும் எவ்வளவு மழை பெய்தாலும்கூட நிரம்புவதே கிடையாது. அதனுடைய வரத்துக் கால்வாய்கள் எல்லாம் வேறு அணை - பஞ்சப்பள்ளி அணை வாய்க்காலிலே சென்றுவிட்ட காரணத்தினாலே அந்த வட்டாரம் எல்லாம் மழைக்காலங்களிலேகூட வறண்டு கிடக்கிற நிலை இருக்கிறது. ஆகவே தயவுசெய்து இந்தப் பஞ்சப்பள்ளி அணை வாய்க்காலைப் பாப்பாரப்பட்டி அணையோடு 3 கிலோமீட்டர் தூரம் இணைத்துவிட்டோம் என்று சொன்னால், அந்த 16 ஏரிகளுக்கும் நீர் வரத்து அதிகரிக்கும். உபரி நீர் கூட அங்கே வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அந்த பாப்பாரப்பட்டி வாய்க்காலை இணைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இந்தத் துறையைத் தன்னுடைய விரல்நுனியிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய காட்டாறுகளாக இருந்தாலும், சிற்றாறுகளாக இருந்தாலும், அவற்றையெல்லாம்கூட அறிந்து வைத்திருக்கக் கூடிய அவர், கடந்த ஆண்டு ஏரிகளைத் தூர்வாரும் பணிகளைச் செவ்வனே செய்தார்கள். இங்கே ஒரு தொகுதிக்கு ஒரு ஏரி என்று சொல்வதைவிட ரூ. 25 லட்சம் என்று ஒரு தொகுதிக்கு





ஒதுக்கிவிட்டால் 5 ஏரிகள், 2 ஏரிகள் என்று எத்தனை ஏரிகள் வேண்டுமானாலும் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். ஆகவே அதையும் ஒதுக்கிச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல். ஒகேனக்கல் ஒரு சுற்றுலா மையம். அந்தச் சுற்றுலா மையத்திலே பயணிகள் அல்லது விருந்தினர்கள் எல்லாம் வந்து தங்குகின்ற பொதுப் பணித் துறையின் மூலமாக விருந்தினர் மாளிகை ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பென்னாகரம் தொகுதியில் சின்னச் சின்ன ஏரிகள் இருக்கின்றன. அவையெல்லாம் எப்போதோ கட்டப்பட்ட ஏரிகள். இன்றைக்கு மூடிக்கிடக்கக் கூடிய நிலையில் இருக்கின்றன. அதையெல்லாம் தூர் வாருவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மேட்டூர் அணை ஒரு பிரசித்தி பெற்ற அணை. அங்கே வலதுகரைக் கால்வாய், இடதுகரைக் கால்வாய் என்று இரண்டு கால்வாய்கள். இந்த இரண்டு கால்வாய்களுக்கும் 30', 40' என்று உயரமாக இருந்தாலும் கூட, நீர் இருக்கின்ற காலத்திலேகூட, அணையைத் திறந்துவிடுவார்கள். இப்போது ஒரு மாதகாலத்திற்கு மேலாக திறந்துவிடப் படாமல் சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் இருக்கக் கூடிய விவசாயிகள் எல்லாம் பெரிதும் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அந்தக் கால்வாய்க்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதியில் அணைக்கட்டுத் திட்டம் ஒன்று நீண்டநாட்களாக நிலுவையில் இருக்கிறது. அது தோணிமடுவு அணைக்கட்டுத் திட்டம். கொளத்தூரை அடுத்து இருக்கக்கூடிய ஆலமரத்துப்பட்டி ஊராட்சியில் சாம்பார் பள்ளம் என்று ஒரு சின்ன ஏரி கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு டெண்டர் வரையிலே வந்து நிலுவையாக இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே ஆசாரிகிணற்றுப்பள்ளம் என்று ஒரு ஏரி கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு அங்கே டெண்டர்

எல்லாம் கூட விடப்பட்டு, அது நிலுவையிலே இருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், அங்கே இரண்டு விவசாயிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த ஏரியை மேலே கட்டினால் தங்களுடைய நிலம் பாசனம் பெறும் என்று சொல்லி அங்கே தடுத்து வைத்திருக்கிறார்கள். அங்கே மேலே கட்டினால் அது வனஇலாக்காவிற்குச் சொந்தமான நிலமாகிவிடுகிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியோடு கட்டாய ஆர்ஜிதம் செய்து நடப்பாண்டில் அந்த ஏரியைக் கட்டித் தருமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுப்பணித் துறையில் ஒரு பெரிய திட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அந்த அளவு எதிர்பார்த்த அளவு திட்டம் இல்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கேரளாவில் வீணாகச் செல்கின்ற கீரியாற்றுத் தண்ணீரை தெற்கே வறட்சிப் பகுதியாக இருக்கின்ற நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், காமராஜர் மாவட்டம், வ.உ.சி. மாவட்டம் போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு, இந்தத் தண்ணீரைக் கொண்டு வரும்போது, நிலத்தடி நீர், குறிப்பாக, குடிநீர் கிடைப்பதற்கு ஏதுவாக அமையும். ஆனால், முந்தைய பட்ஜெட் தொடரில் அமைச்சர் அவர்கள், கேரளாவிற்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தினோம் என்று சொன்னார்கள். அந்தப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்துவிட்டதா? இல்லை அதைக் கைவிட்டுவிட்டார்களா என்பது பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. மேலும் எங்களுடைய சங்கரநயினார்கோவில் தொகுதியில் வைப்பாறு திட்டத்தில் சங்கரநயினார்கோவில் மூலம் அருகில் உள்ள பெரிய குளங்கள் எல்லாம் பராமரிப்பிற்கு வரும்போது, விருதுநகர் வட்டமாக, காமராஜர் மாவட்டத்தைப் பிரித்து, அங்குள்ள பொறியாளர்கள்



மூலமாகப் பணி செய்வதற்குப் பெரும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். காரணம், கடும் மழை பெய்ததினால் குளங்களில் எல்லாம் உடைப்பு ஏற்பட்டு, அதற்குண்டான அதிகாரிகள் நேரிடையாக வந்து பார்வையிடுவதற்கும், அந்த உடைப்புகளை அடைப்பதற்கும் முறையாக வருவதற்கில்லாமல் மிகுந்த சிரமத்திற்குள்ளானார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மேல்மனையனூர் ஒன்றியத்தில் வல்ராம்புரம் பெரிய கண்மாய், சுச்சந்தா பெரிய குளம், ஆண்டார் குளம், வெள்ளாளன் குளம், வேப்பங்குளம், நெடுங்குளம், கொட்டைக்குளம், களப்பா குளம், இலவாங்குளம், கள்ளத்திக்குளம், மடிப்பங்குளம், இருமங்குளம் போன்ற கிராமங்களில் மழைக் காலத்தில் அதிகமாக உடைப்பு ஏற்பட்டு அந்த உடைப்புகளை எல்லாம் அந்தப் பகுதியிலேயுள்ள விவசாயிகள் பனைமரங்கள், வாழை மரங்கள், மணல் சாக்குகளைப் போட்டு, அடைத்திருக்கிறார்கள். அந்த உடைப்புகள் எல்லாம் விவசாயிகள் அடைத்த நிலைமையிலேதான் இருந்து வருகின்றன. இனி வரும் காலங்களில் மழை பெய்தால், அந்தப் பகுதி வழியாகத் தண்ணீர் முழுவதும் செல்லக்கூடிய அபாய நிலைதான் இருந்து வருகிறது. நாங்கள் எல்லாம் அதிகாரிகளிடத்தில் சென்று அந்த உடைப்புகளை முறையாகச் செப்பனிட வேண்டும், மதகுகளில் பலகை இல்லாமல் வெறும் உடைப்பு பழுதுநீக்கம் செய்யாமல் இருந்து வருகிறது என்று கேட்டால், அதற்கு அவர்கள் எங்களுக்கு நிதியில்லை, நிதி வந்தால் செய்வோம் என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறார்கள். எங்களுடைய நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை அவர்கள் சொன்னதுபோல், அதிகாரிகளுக்கு எந்த வேலையுமே பொதுப் பணித் துறையைப் பொறுத்த அளவிலே இல்லை. கேட்டால் சட்டமன்ற உறுப்பினருடைய நிதிக்கு எங்களுடைய பணத்தையெல்லாம் கொடுத்துவிடுகிறார்கள் என்கிறார்கள். எனவே, எங்களுடைய தொகுதியில் உடைப்பு ஏற்பட்ட கண்மாய்களில், பெரும்பாலான கண்மாய்களில் கூடுதலாகச் சிறப்பு நிதியொதுக்கி, அந்த உடைப்பு ஏற்பட்ட பகுதிகளைச் சீர் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் கருப்பாநதித் தண்ணீரை முறையாக சேந்தமங்கலம், வீரசிகாமணி, குலசேகரமங்கலம் போன்ற கிராமங்களுக்குக் கொண்டு வருவதற்கு பாப்பாங் கால்வாய் என்று

கிட்டத்தட்ட 16 மடைகள் இருக்கின்றன. கடையநல்லூர் தொகுதியில் அந்தக் கால்வாய்களைச் சீர்செய்துவிட்டார்கள். என்னுடைய தொகுதியில் மட்டும் சீர்செய்யாமல், அந்தக் கால்வாய்களில் எல்லாம் முட்புதர்களும், செடிகளும் முளைத்து தண்ணீர் வர முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. காரணம், நான் எதிர்க் கட்சி என்று கருத்தை நினைத்து, சீர் செய்யாமல் இருக்கிறார்களா என்ற சந்தேகம் இருப்பதால், எங்கள் பகுதியிலே உள்ள விவசாயிகள் மிகுந்த அச்சத்தோடு இருந்து வருகிறார்கள். எனவே இந்த ஆண்டாவது அந்த கருப்பா நதித் தண்ணீர் முறையாக அனைத்துப் பகுதிகளுக்கும் வருவதற்கு அந்தக் கால்வாய்களைச் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல எங்களுடைய தொகுதியில உள்ள அந்த வைப்பாறு திட்டத்தை முறையாகத் திருநெல்வேலி வட்டத்திற்கு மாற்ற வேண்டும். அந்தத் துறை அதிகாரிகள் முறையாக, நேரடியாக வந்து நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு நீங்கள் கண்டிப்பாக மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை. சந்திரசேகரன்.

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, பாசனம் மற்றும் கட்டடங்கள் மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும் இந்த மாமன்றத்திற்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் பணியில் மகத்தான பணியாற்றும் துறைகளில் பொதுப் பணித் துறை பெரும் பங்காற்றுகிறது. போற்றுதற்குரிய அண்ணா அவர்கள் தலைமையில அமைந்த அரசில் இன்றைய முதல்வர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராகப் பணியாற்றிய காலம் பொதுப் பணித் துறைக்கு ஒரு பொற்காலம். முதல்வர் வழியில் அவரின் தம்பியாக சிறப்பாக நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தனிச் சிறப்பை இந்தத் துறையில ஏற்படுத்தி வருகிறார்கள். காவிரி பிரச்சினையில் இதுவரையில் தமிழக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சிறப்பாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1924 ஆம் ஆண்டு நம்முடைய



தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே பிறந்தார். அந்த ஆண்டுதான் காவிரிப் பிரச்சினைக்காக ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு. இந்த இரண்டும் ஒரே ஆண்டில் வருகின்ற காரணத்தினால் தஞ்சை மண்ணில் பிறந்த நம்முடைய முதல்வர் அவர்கள் காவிரிப் பிரச்சினையில், பிறந்த காலந்தொட்டு அந்தப் பிரச்சினையோடு ஒன்றி அவருடைய காலத்தில் நடுவர் மன்றத்தைப் பெற்றுத் தந்திருக்கின்றார்கள். மிக விரைவான முறையில் நீதிமன்றத்தின் மூலம் ஒரு நல்ல தீர்வினைப் பெற்றுத் தருவார்கள் என்று தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அது நடைபெறும். அதனால்தான் சோதனையிலும், வாழ்விலும், தாழ்விலும் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மக்கள் நம்முடைய முதல்வரோடு என்றைக்கும் இருக்கிறார்கள். காவிரிப் பகுதியில், தஞ்சையில், குறிப்பாக, பல வாய்க்கால்களுக்குக் குடிமராமத்துப் பணி கடந்த காலத்தில் நிறைவேற்றாமல் பாழ்பட்டுக் கிடந்ததை தமிழக முதல்வர் அவர்கள் சுற்றுப் பயணம் வருகின்ற காலக்கட்டத்தில் உணர்ந்து, கடந்த ஆண்டு 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். மிகச்சிறப்பாக பொதுப் பணித் துறையின் மூலம் அந்த வாய்க்கால்கள் எல்லாம் தூர் வாரப்பட்டன. அதை முதல்வர் அவர்கள் நேரடியாகப் பார்த்து அதற்கு மேலும் நிதி ஒதுக்குகின்ற வகையில் இந்த ஆண்டு 20 கோடி ரூபாயைத் தந்திருக்கின்றார்கள். இன்றையதினம் 50 நாட்களுக்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. இந்தக் குறுகிய காலத்திற்குள் இந்த நிதியினைக் கொண்டு பல்வேறு பகுதிகளில் அந்தத் துறையினர் திட்டமிட்டபடி மிகச் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும். அதற்குரிய காலகட்டம் போதாது என்று கருதுகிறேன். எனவே, திறக்க இருக்கின்ற மேட்டூர் நீர்த்தேக்கத்தை சில நாட்கள் தள்ளித் திறப்பதற்கு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு வாய்க்காலை எடுத்துக்கொண்டால் வாய்க்கால் தலைப்பிலிருந்து கடைமடைப் பகுதி வரையில், கடைசி வரையில் வெட்ட வேண்டும் என்று இந்தத் துறையினுடைய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன். மிக மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற வேளையில் இன்றைக்கு

தஞ்சை மாவட்டத்தில் பாசனத்திற்குச் சம்பந்தம் இல்லாத சில நபர்கள், எங்கள் ஊர் வழியாக அந்த வாய்க்கால் வெட்டப்படுகிறது, நாங்கள் வெட்டவேண்டும் என்று வெட்டுகின்ற நபர்களைத் தூக்குகின்ற நடைமுறைப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அதைத் தடுக்கின்ற அளவில் பொதுப் பணித் துறையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து காவல் துறையினர் ஒத்துழைப்போடு மிக விரைவாக வாய்க்கால் பணியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திய திட்டம் போடப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினரால் பலமுறை வலியுறுத்தப்பட்டு, இன்றையதினம் திருவோணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பலமுறை இந்த மாமன்றத்தில் பேசப்பட்டு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவிக்கப்பட்டு, தஞ்சை மாவட்டம், செங்கிப்பட்டி அருகே அமைய இருக்கின்ற மிகச் சிறப்பான முதலைமுத்துவாரி நீர்த்தேக்கத் திட்டத்திற்கு 973 இலட்சம் ரூபாயை ஆக அனுமதித்திருக்கின்ற ஒரு மகிழ்ச்சியான செய்திக்கு தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த பல கிராமங்கள் அந்த நீர்த்தேக்கத்தினால் நிச்சயமாகப் பயன்பெறுகின்ற ஒரு நிலை உருவாகி இருக்கிறது. முதலைமுத்துவாரித் திட்டம் அமைய இருக்கின்ற காரணத்தினால் தஞ்சை போன்ற பெரிய நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குகின்ற அளவுக்கு நிலத்தடி நீர் பெறுகின்ற ஒரு வாய்ப்பு உருவாகும். அந்தப் பகுதியில் வெள்ளக்காலங்களில் வீணாகின்ற நீர் தேக்கப்படுவதால், அந்தத் திட்டம் எதிர்காலத்தில் மிகச் சிறப்பான ஒரு நிலையை தஞ்சை மாவட்டத்திலும், குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்திலும் நிச்சயமாக உருவாக்கும். எனவே அந்தத் திட்டத்திற்கு அனுமதி தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எங்கள் மாவட்ட மக்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 11-55

அடுத்து, திருவையாறு தொகுதியில், குறிப்பாக, மற்ற தொகுதிகளில் இல்லாத அளவுக்கு 6 பிரிவுகள் இருக்கின்றன. காவிரி டிவிஷன், வெண்ணாறு டிவிஷன், ஆர்.சி. டிவிஷன், அக்னியாறு டிவிஷன், கல்லணைக் கால்வாய் டிவிஷன் இப்படிப் பல பிரிவுகள் ஒரே தொகுதியில் இருக்கின்றன. பல வாய்க்கால்கள், பல ஏரிகள் அந்தத் தொகுதியில் இருக்கின்றன. திருச்சி ஆற்று பாதுகாப்புக் கோட்டத்தின் கீழ் வாழவந்தான்கோட்டை ஏரியிலும் பொய்யக்குடி ஏரியிலும் இரண்டு மாற்று வழி வாய்க்கால்களுக்குக் கடந்த 1990 ஆம் ஆண்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்தார்கள். அந்தத் திட்டம் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. மிக விரைவாக அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நிறைவேற்றுகின்றபோது செங்கிப்பட்டி, பூதலூர் போன்ற பகுதியிலுள்ள ஏராளமான ஏரிகள் பாசன வசதி பெறவும், நல்ல சிறப்பான உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலும் அந்தத் திட்டம் அமையும் என்று எடுத்துக்கூறி திருவையாறு தொகுதியில் உள்ள ஆர்.சி. டிவிஷனுக்கு உட்பட்ட 50 ஏரிகளும், கல்லணைக் கால்வாய் பாசனம் பெறுகின்ற ஏரிகள் ஐந்தும், உய்யக்கொண்டான் விஸ்தரிப்புப் பாசனம் பெறுகின்ற ஏரிகள் 12-ம், பட்டுக்கோட்டை அக்னியாறு பிரிவில் பாசனம் பெறும் 20 ஏரிகளும், **Minor Irrigation tanks** – சிறு நீர்ப்பாசனக் குளங்கள் 32-ம் பட்டியலில் இல்லாத குளங்கள் **Non-system tanks** 10-ம் வெண்ணாறு பிரிவில் அல்லூர் ஆசக்குடி ஏரி, கழுகுமங்கலம் ஏரி, கண்டமங்கலம் ஏரி, வேலங்குடி ஏரி இப்படி 133 ஏரிகளும் இருக்கின்றன. இந்த ஏரிகளை எல்லாம் மேம்படுத்துகின்ற வகையில் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஆண்டுக்கு ஒரு ஏரி, இரண்டு ஏரி என்று எடுக்கிறார்கள். திருவையாறு தொகுதியில் மட்டும் 133 ஏரிகள் இருக்கின்றன. சிறப்புக் கவனம் செலுத்தி அவைகளை எல்லாம் வெட்டித் தர வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

[திரு. துரை. சந்திரசேகரன்] [1998 ஏப்ரல் 22

கட்டளை வாய்க்காலிலிருந்து புதிய வாய்க்கால் ஒன்று அமைத்து பூதலூர் ஒன்றியத்திலுள்ள புதுக்குடி, பாளையப்பட்டி தெற்கு, பாளையப்பட்டி வடக்கு, ஆச்சம்பட்டி, செங்கிப்பட்டி ஊராட்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுடைய பல கிராமங்கள் பாசன வசதி பெற இந்த வாய்க்கால்களை வெட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மழைக் காலங்களில் ஏற்படுகின்ற நீர்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். டேவிட் செல்வின்

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் வாழ்வினை உய்விக்க வந்த உதயசூரியனாய், நல்லதொரு நிதிநிலை அறிக்கையைத் தந்து நாடு போற்றும் நல்லாட்சி நடத்தி வரும் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களுடைய வழியில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அதை நான் மனதார வரவேற்கிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் வாயிலாக எங்கள் மாவட்டத்திற்குப் பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். கருமேனியாற்றிலிருந்து வைரவன்தருவை வரையிலும், ஏற்கெனவே உள்ள உவதூர் ஓடையை மேம்படுத்தி புத்தன்தருவை வரையிலும் இணைப்புக் கால்வாய் அமைத்து சடையனேரி கால்வாய்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். விளாத்திகுளம் வட்டத்தின் பல கிராமங்களுக்குப் பயன்தரக் கூடிய வகையில் இருக்கன்குடி நீர்த் தேக்கத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். இதுபோன்ற பல நல்ல திட்டங்களைத் தந்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழினத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய நதி நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் N.W.M.P. திட்டத்தின் கீழ் பேநர் புறவழிக் கால்வாய் பணிகளை விரைந்து முடிக்கத் தேவையான நிதியை ஒதுக்கியிருக்கிறீர்கள். மருதூர் கீழக்காலில்



1998 ஏப்ரல் 22] [திரு. எஸ். டேவிட் செல்வின்]

சிவகளை, பெருங்குளம் குளத்திற்குத் தண்ணீர் வருவதில் ஏற்படுகின்ற சிக்கலை நீக்குவதற்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். துரதிருஷ்டமாக இடையில் வந்த ஆட்சியில் அந்தப் பணிகள் எல்லாம் பாதியில் அப்படியே நின்று போய்விட்டன. அந்தப் பணிகளையும் நிறைவேற்ற அதற்கான நிதியை தற்போது நீங்கள் ஒதுக்கியிருந்தாலும், அந்த N.W.M.P. திட்டத்தில் மற்றொரு பணியான ஸ்ரீவைகுண்டம் ஆலங்கால் எனப்படுகின்ற வடிகாலின் வேலைகளும் பாதியில் நின்று போயிருக்கின்றன. அந்தத் திட்டமும் இந்த W.R.C.P.-யில் சேர்க்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய W.R.C.P. திட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் ஆலங்கால் பணிகளையும் சேர்த்திட வேண்டும். மருதூர் கீழக்காலுக்கு என்று இருக்கக்கூடிய ஒரே வடிகால் ஸ்ரீவைகுண்டம் ஆலங்கால் என்பது தங்களுக்குத் தெரியும். எனவே, அந்தப் பணிகளை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மருதூர் அணையை புனரமைப்பதற்கு, கால்வாயைச் சீர் செய்வதற்குப் பல்வேறு திட்டங்களைத் தந்து இருக்கிறீர்கள். அதே நேரத்தில் ஸ்ரீவைகுண்டம் வடகாலிலும், வயக்காட்டு மருதூர் கீழக்காலிலும் இருக்கின்ற வடிகால்களைப் பார்த்தால் வயலிலிருந்து நீர் வடிவதற்கு வழியில்லாத வகையில் எல்லா வடிகால்களும் தூர்ந்து போயிருக்கின்றன. கண்மாய்களைச் சீரமைப்பதற்கு ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு குளத்தை நீங்கள் நவீனப்படுத்தி தந்திருக்கின்றீர்கள். அதேநேரத்தில் பாசனக் குளங்களை நவீனப்படுத்துவதற்கு அதனைத் தூர் வாருவதற்கு நீங்கள் இந்த முறை அதற்கான நிதியை ஒதுக்கி ஆண்டுக்கு ஒரு பாசனக் குளத்தைத் தூர் வார்வதற்காவது தாங்கள் வழி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இந்தக் குளத்தை என்றைக்கு வெட்டினார்களோ அன்றைக்குத் தூர் வாரியதற்குப் பிறகு இதுவரையிலும் அந்தக் குளத்தின் வேலைகளெல்லாம் நடைபெற்றிருக்குமா என்பது சந்தேகம்தான்.

நண்பகல் 12.00

தலைவர் கலைஞர் அவர்களையும், உங்களையும்தான் விவசாயப் பெருமக்கள் நம்பியிருக்கின்றார்கள். வேறு யாரும் இதனைச் செய்து

[திரு. எஸ். டேவிட் செல்வின்] [1998 ஏப்ரல் 22

முடிக்க முடியாது. கலைஞருடைய ஆட்சியில் இந்தப் பணிகள் நடைபெறவில்லை என்று சொன்னால், பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இருக்கின்ற இந்தக் காலக் கட்டத்திலே இந்தப் பணிகள் நிறைவேறவில்லை என்றால் என்றைக்கும் நடக்காது என்று விவசாயிகள் தெள்ளத் தெளிவாக நம்புகிறார்கள். எனவே, பாசனக் குளங்களையும் நீங்கள் சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஸ்ரீவைகுண்டம் வடகாலிலே உள்ள வடிகால்கள் ஆறுமுகமங்கலம் அருகில் உள்ள வடிகால், முக்காணி வடிகால், இடையர்காடு, வாழைவெட்டி வடிகால், பேய்க்குளம் பகுதியிலுள்ள வடிகால், சேர்வைக்காரன் மடம் கூட்டாம்புளி பகுதி மக்களுக்குப் பயன்படக்கூடிய மாதகிரி ஓடை வடிகால், இதுபோன்ற வடிகால்கள் எல்லாம் இன்றைக்குச் செடி கொடிகளோடு நாணல் காடாக, காட்டாமணக்கு போன்ற செடிகள் அடர்ந்து காடு போலக் காட்சியளிக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் எப்படித் தூர்வாருவதற்கு என்று நிதியை ஒதுக்கி அந்த விவசாயிகளுக்கு அந்தப் பணிகளைச் செய்து கொடுத்தீர்களோ, அதுபோல இந்தத் தாமிரபரணி பாசனத்திற்கும் நீங்கள் கால்வாய்களைத் தூர்வாருவதற்கு நிதி ஒதுக்கி, இந்த நடப்பாண்டிலேயே செய்துதர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தாமிரபரணி ஆற்றினுடைய ஒட்டுமொத்த வடிகாலே புன்னக்காயல் பழைய காயல் பகுதியில் இருக்கக்கூடிய வடிகால்தான். அதுவும் மீனவர்களுக்கு இன்றைக்கு முகத்துவாரமாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த முகத்துவாரம் தூர்ந்து, மண் மேடாக இருக்கின்ற காரணத்தால்தான், 1992 ஆம் ஆண்டுகூட ஒரு பெரும் புயல், மழை வந்தபொழுது பெரிய விபத்து ஏற்பட்டு ஆத்தூர், உமரிக்காடு போன்ற பகுதிகளில் கரைகள் உடைக்கப்பட்டன. தண்ணீர் கடலுக்குள் செல்வதற்கு வழி இல்லை. அந்த அளவிற்கு மண் மேடாக இருக்கிறது. ஆகவே, தாமிரபரணியினுடைய வடிகால் புன்னக்காயல் முகத்துவாரத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆண்டுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, அந்த வடிகாலை அவ்வப்பொழுது சரி செய்துதர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 22] [திரு. எஸ். டேவிட் செல்வின்]

இந்த வடிகாலைச் சரி செய்தால் இன்றைக்கு கரை பலவீனமாகவுள்ள உமரிக்காடு, வாழவல்லான் போன்ற பகுதிகளில் உடைப்பு ஏற்படாமல் இருப்பதற்கு மிகவும் பாதுகாவலாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கிராமங்களிலுள்ள கரைகளையும் நீங்கள் பலப்படுத்தித்தர வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வரப்பு உயர நீர் உயரும். வரப்புகளையும், கரைகளையும் வலுப்படுத்துவதற்கு, பலப்படுத்துவதற்குத் தாங்கள் பல திட்டங்களைத் தந்திருக்கிறீர்கள். அதுபோல, இன்றைக்குக் கழிவுநீர் வடிகால்களையும் நீங்கள் சீரமைத்துத்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொண்டு, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக்குக் கீழே புதிதாக அணை கட்டுவதற்குச் சரியான வாய்ப்பு இல்லை என்று தெரிவித்திருக்கின்றீர்கள். அந்த அணையினை மங்கலக்குறிச்சி பக்கத்தில் கட்டினால் ஸ்ரீவைகுண்டம் வடகாலோடு இணைக்கலாம் என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றார்கள். அதையும் தாங்கள் ஆய்வு செய்து, அதற்கும் வழி இல்லை என்று சொன்னால்—வீணாகின்ற தண்ணீர், ஆண்டுக்கு 20 டி.எம்.சி. இருக்கும் என்று கணக்கிடுகிறார்கள்—அதனைச் சிவலப்பேரி பகுதியிலிருந்து திருப்பி வல்லநாடு பகுதியிலிருந்து பல்வேறு மானாவாரிக் குளங்கள் அதனைப் பயன்படுத்தக்கூடிய வகையில் நீங்கள் அதற்கு ஒரு தனித் திட்டத்தைத் தந்து, செயல்படுத்தித்தர வேண்டும். உங்களையும், தலைவர் கலைஞர் அவர்களையும்தான் விவசாயப் பெருமக்கள் நம்பியிருக்கின்றார்கள். ஏனென்று சொன்னால் கடந்த ஆட்சிக் காலத்திலே, தாமிரபரணியிலே 22 கோடிக்கும் மேற்பட்ட பணத்தை எந்தப் பணியுமே செய்யாமல் அப்படியே முழுங்கி விட்டார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய ஆட்சிதான், இன்றைக்கு இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களைத்தான், உங்களைத்தான் மக்கள் நம்பியிருக்கின்றார்கள். எனவே, பல்வேறு திட்டங்களை நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, கரைகள் மிகவும் பழுதுபட்டிருக்கக்கூடிய.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையில், புதுக்கோட்டை

மாவட்டத்தில் தொடர்ந்து 50 ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து நிறைவேற்றாமல் இருக்கிற சில திட்டங்களைச் சொன்னால் சரியாக இருக்குமென்று இந்தப் பேரவைக்கு வைக்கிறேன்.

காவிரியாற்றில் அதிகமாக வெள்ளப்பெருக்கு எடுக்கிறபொழுது அதைக் கொள்ளிடத்தில் திறந்து விடுவதால் அந்தத் தண்ணீர் வீணாகக் கடலை நோக்கிச் செல்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியான மாவட்டம் என்பது மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரியும். பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து, திட்டம் முறைப்படி செய்யாமல், சென்ற ஆண்டு திருமயம் சட்டமன்ற உறுப்பினரும், நானும் நம்முடைய முதலமைச்சரிடத்திலும், பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலும் கொடுத்த அந்த உரிய மனுமீது நடவடிக்கை எடுத்து, இப்பொழுது 125 கோடி ரூபாயக்குத் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலோ அல்லது மானியக் கோரிக்கையிலோ இந்தத் திட்டம் சேரும் என்று எதிர்பார்த்தேன். சேரவில்லை. ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், கடந்த 50 ஆண்டுக் காலமாக பல கட்டங்களில் போராடியும், சட்டமன்றத்தில் விவாதித்தும் நிறைவேறாமல் இருக்கின்ற இந்தத் திட்டத்தை அருள்கூர்ந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

அதேபோல, புதுக்கோட்டை மாவட்டம், கவிநாட்டு கண்மாய், ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள மிகப் பெரிய பொதுப்பணித் துறை குளம். இந்தக் குளத்தில் தண்ணீர் நிரம்பும்போது, புதுக்கோட்டை ஸ்டேட் மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து ஆலங்குடி பகுதிக்கு 10 ஊராட்சிகளுக்கு தண்ணீர் வரக்கூடிய கால்வாய்ச் சீரமைப்புப் பணி நடந்து. பிறகு தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேல் பூவரசுகுடி, வாண்டாக்கோட்டை, மேலப்பல்லம், வல்லத்திராகோட்டை, சுத்தகுறிச்சி, குளவாய்ப்பட்டி, பாளையூர், கீழையூர், எறிச்சி, இப்படிப்பட்ட 10 ஊராட்சிகளுக்கு இந்தக் கவிநாட்டுக் கண்மாயிலிருந்து தண்ணீர் வந்து பல்வேறுபட்ட குளங்கள் நிரம்பும். அந்தக் கால்வாய் முழுமையாக இன்றைக்கு நெய்வேலி காட்டாமணக்கு முளைத்து,





மணல் மேடிட்டு, நிரம்பி, அழிந்து போய் இருக்கிறது. ஆகவே, அந்த வாய்க்காலைச் சீரமைக்க பலமுறை இந்த மன்றத்திலே பேசியும் நிதி ஒதுக்கவில்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து தனிக்கவனம் செலுத்தி, அந்த வாய்க்காலைச் சீரமைத்துத்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, நம்முடைய கல்லணைக்கோட்டப் பிரிவில், ஆலங்குடி பிரிவுக்கு உட்பட்ட காவிரிநீர் பாயக்கூடிய பகுதிகள் சில இருக்கின்றன. உழவயல் சேனையிலிருந்து பிரிந்து திருவோணம் வரை செல்லக்கூடிய அந்த வாய்க்கால் 18 கிலோமீட்டர் தூரம். அங்கன்விடுதியில் பிரியும் ஓடப்பாவிடுதி வாய்க்கால் சுமார் 4 கிலோமீட்டர் சுத்தமாகவே தூர்வாரப்படாமல் இருக்கிறது. சென்ற ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்தப் பகுதியில் ஏதாவது வேலை எடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தும்கூட, அந்தப் பகுதிக்கு வேலை எடுக்கப்படவில்லை என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சரிடத்திலே சென்ற ஆண்டு கேட்டிருந்தேன். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 20 கோடி ரூபாய் நிதியிலிருந்து உழவயல் ஆற்றில் பிரிந்து செல்லக்கூடிய அந்த வாய்க்காலை முழுவதுமாக திருவோணம் வரையிலும் வெட்டி சீரமைத்துத்தர வேண்டும். அதில் இருக்கக்கூடிய குளங்கள் பல ஆண்டுகளாக கலுங்குமடை இல்லாமல் இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய 10 குளங்கள் கலுங்குமடை முழுவதுமாக இல்லாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருக்கையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப் போல செங்கமேடு-வெட்டிக்காடு பகுதியில் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். கடந்த 6, 7 ஆண்டுகளாக அந்த வாய்க்கால் முழுமையாகத் தூர்வாரப்படாமல் இருக்கிறது. இன்றைக்கு அதில் தண்ணீர் வராமல் அந்த மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த செங்கமேடு-வெட்டிக்காடு வாய்க்காலையும் முழுமையாக நீங்கள் தூர்வாரித்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், கறம்பக்குடி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய மாணியவயலில் Check dam கட்டக்கூடிய பணி முடியும் தருவாயில் இருக்கிறது. அதிலிருந்து அம்புக்கோயில், பிலாவிடுதி, நரங்கிபட்டி, கட்டுவான்பிரான் திருவோணம் போன்ற பகுதிகளுக்கும், அந்தப் பகுதிகளிலிருந்து வாய்க்கால் செல்கிறது. அந்த வாய்க்கால் முழுமையாக தூர்வாரப்படாமல் மிக மோசமான நிலையில் இருக்கிறது. அந்த வாய்க்காலை அருள்கூர்ந்து தூர்வாரித்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மாணியவயல் அணைக்கட்டிலிருந்து இரண்டாவது வாய்க்காலைப் பிரிக்கக்கூடிய அந்தத் திட்டத்திற்கு அதிகாரிகள் திட்ட மதிப்பீடு செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மாணியவயல் அணைக்கட்டிலிருந்து இரண்டாவது வாய்க்கால், புதிய வாய்க்கால் ஆரம்பிக்கக்கூடிய பணி கிட்டத்தட்ட 8 ஊராட்சிகளுக்கு பயன்தரக் கூடியது. அந்த வாய்க்கால் பல்லாவரம்பத்தை புதுப்பட்டி, இலைகடிவிடுதி, முள்ளங்குறிச்சி, பட்டத்திகாடு, கருக்கீழத்தெரு, நெடுவாசல் மேல்பாதி, கீழ்பாதி, குரும்பிவயல் (மணியடிக்கப்பெற்றது)—எட்டு நிமிடங்கள் என்று சொல்லிவிட்டு மூன்று நிமிடத்தில் மணி அடித்துவிட்டீர்களே—ஆக, இப்படிப்பட்ட பகுதிகளுக்கு அந்த வாய்க்கால் மூலம் தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதை நீங்கள் அருள்கூர்ந்து உருவாக்கித்தர வேண்டும்.

இன்னொன்று மிக முக்கியமான கோரிக்கை. இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தைப் படித்துப் பார்க்கிறபோது பல பகுதிகளில் சிறிய அணைகள் மற்றும் பெரிய அணைகளுக்கான திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில், திருமணஞ்சேரி அணைக்கட்டு 10, 15 ஆண்டு காலமாக வைக்கப்பட்ட கோரிக்கை. சுமார் 3 கோடி ரூபாய்க்குத் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து நிறைவேற்றப்படாமல் திருமணஞ்சேரியில் அணைக்கட்டுத் திட்டமும், அதேபோல் வெள்ளாற்றின் குறுக்கே இச்சுவடிப்பட்டியில் 35 இலட்சம் ரூபாய் செலவில் அணைகட்டும் திட்டமும்—கடந்த 10, 15 ஆண்டுகளாகக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது—தயார் செய்யப்பட்டு அரசிடம் தேங்கியிருக்கின்றன. ஆகவே, இந்த இரண்டு சிறிய அணைகளையும் வருகிற ஆண்டிலாவது நீங்கள் எடுத்து அந்தப் பகுதிக்கு அணைகளைக் கட்டித் தரும்படி பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-10

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். செங்கமாரி பெரியகுளம் என்னுடைய தொகுதியில் 900 ஏக்கர் பரப்பளவு உடைய மிகப்பெரிய குளமாகும். அதேபோல், கொத்தமங்கலம், கோடிக்குளம் ஆகியவை சுமார் 500 ஏக்கர் பரப்பளவுள்ள குளங்களாகும். இந்தக் குளங்கள் முழுமையாகத் தூர்வாரப்படாமல் கடந்த 10, 15 ஆண்டுகளாக மண்மேடிட்டு வந்திருக்கின்றன. இதை ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்திலாவது எடுத்து, அருள்கூர்ந்து இந்தக் குளங்களைச் சீரமைப்பதற்கு உரிய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், வில்லுனி ஆற்றின் குறுக்கே அணை கட்டியதனால் இன்றைக்கு அந்த ஆற்றிலேயிருந்து செல்லக்கூடிய வாய்க்கால்கள் மூலமாகச் செல்கின்ற தண்ணீர், குளமங்கலம் தெற்கு, பாண்டிகுடி, நெய்வத்தளி ஆகிய பகுதிகளில் உள்ள வாய்க்கால்களில் தூர்வாரப்படாமல் இருப்பதால், முழுமையாகச் செல்வதில்லை. ஆகவே அந்த வாய்க்கால்களையும் இந்த நிதியாண்டில் அருள்கூர்ந்து நீங்கள் தூர்வாரி சீர் செய்துதர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் (மணியடிக்கப்பெற்றது)—ஒரேயொரு நிமிடம்—கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகின்றேன். இந்தக் கல்லணைக்கோட்டப் பிரிவிலிருந்து புது ஆற்றில் பிரியக்கூடிய வாய்க்கால் சென்ற ஆண்டு வெட்டப்படவில்லை. இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். நான் தஞ்சையில இ.ஈ., அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். உங்களிடமும் எழுதித் தருகிறேன். எனவே, அருள்கூர்ந்து, இந்த ஆண்டு திருவோணம் வரையிலும் உள்ள அந்த 18 கிலோமீட்டர் தூரம் வாய்க்காலை முழுமையாகச் செப்பனிட்டுத் தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையின் கீழ் வரும் பாசனம் மற்றும் கட்டடங்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்காக முதலில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையைப் பொறுத்த அளவிலே நீர்ப்பாசனத் திட்டங்களைச் செம்மைப்படுத்துவதிலும், புதிய பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ் அமைந்திருக்கின்ற இந்த அரசு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்திலேயிருக்கின்ற அனைத்து நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றியும் மிகத் தெளிவாக, நேரடியாகச் சென்று ஆராய்ந்து அவற்றை மிகவும் திறமையாகவும் சிறப்பாகவும் செயல்படுத்துவதில் முனைந்து பணியாற்றிக்கொண்டு வருகின்றார்கள்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்த அளவிலே, என்னுடைய தொகுதியிலே நீண்டகாலமாக மக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு அணைக்கட்டு திட்டம் இருக்கங்குடி நீர்த்தேக்கத் திட்டமாகும். இந்த இருக்கங்குடி நீர்த்தேக்கத் திட்டம் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பேச்சளவிலே இருந்தாலும், இந்த அணைக்கட்டு கட்டுவதிலே, கண்மாய் நிரப்புவதற்கான வாய்க்கால்களைக் கட்டுவதற்கான இடங்களைக் குறிப்பிட்டு மேலேயே கால்வாய்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆனால் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் இந்த அணையைக் கட்டுவதற்காக, முறையாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அதற்கு உண்டான அனைத்துப் பூர்வாங்க வேலைகளும் செய்யப்பட்டு இப்போது நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருப்பதைக் கண்டு, அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பாசனக் கட்டமைப்புகளைத் தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் என்னுடைய தொகுதியிலே தென்பேனி கண்மாய் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகச் சிறப்பான முறையிலே அந்தப் பணி நிறைவேற்றப்பட்ட காரணத்தால் - கடந்த 10 ஆண்டுகளாக அந்தக் கண்மாய் மூலம் அந்தப் பகுதி விவசாயிகள் பலனடையாமல் இருந்தார்கள் - சென்ற ஆண்டிலிருந்து மிகவும் சிறப்பான வெள்ளாமை



அவர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் நல்ல பலனை அடைந்தார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆட்சிக்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-15

என்னுடைய தொகுதியை அடுத்த விருதுநகர் தொகுதியில் இருக்கின்ற கோல்வார்பட்டி நீர்த்தேக்கத்தின் புனரமைப்புத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. கடந்த 1989-91 ஆம் ஆண்டுகளில் கழக ஆட்சியில் கோல்வார்பட்டி கண்மாயிலிருந்து என்னுடைய தொகுதியை அடுத்த கிராமமாக இருக்கின்ற குண்டலகுத்தூர் கண்மாய்க்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. அது சம்பந்தமாக ஆவணங்களை வரவழைத்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்திருந்தார்கள். மீண்டும் அதனைப் பரிசீலனை செய்து, குண்டலகுத்தூர் கண்மாய்க்கு கோல்வார்பட்டி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதற்கான அனுமதியை அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு பொதுப்பணித் துறை கண்மாய் மட்டுமல்லாது, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற பல பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கண்மாய்கள் அதிக அளவிலே, 300, 400 ஏக்கர் பரப்பளவுள்ள ஆயக்கட்டுள்ள கண்மாய்கள் பஞ்சாயத்தைச் சார்ந்த கண்மாய்களாக இருக்கின்ற காரணத்தால் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கோசுகுண்டு கண்மாய் என்பது ஏறத்தாழ 400 ஏக்கர் ஆயக்கட்டுள்ள கண்மாய், அது பஞ்சாயத்துக் கண்மாயாக இருக்கின்ற காரணத்தால், அதிக நிதிச் செலவில் தூர் வார முடியாத நிலையிலே இருக்கிறது. அந்தக் கண்மாய்க்குத் தனிப்பட்ட முறையிலே அரசு நிதி ஒதுக்கீடு செய்து தூர்வார உதவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மேலும், விருத்தாசலம் தொகுதிக்கு உட்பட்ட டி.பவளங்குடி, காவலூர் ஆகிய கிராமங்களில் வெள்ளாற்றினால் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தால் பெரும் சேதம் ஏற்படுவதால், ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ச. புரட்சிமணி.

***திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் ஐரோப்பிய பொருளாதார அமைப்பினுடைய நிதியுதவியுடன் ஏரிகளைச் சீரமைப்பதற்கு 115 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள் பொதுப்பணித் துறையின் சார்பிலே ஏதாவது டிபன் தருகிறீர்களா என்று கேட்கிறார்கள். ஆம், பக்கத்திலே ஸ்வீட், காரம், காபி கிடைக்கிறது. போய்ச் சாப்பிடலாம்.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே வெலிங்டன் நீர்த்தேக்கம் உள்ளது. அதன் கொள்ளளவு 30 அடி ஆகும். இந்த நீர்த்தேக்கத்தின் மூலம் சுமார் 60 ஆயிரம் மக்கள் அங்கு பயிர் செய்து வருகிறார்கள். இந்த நீர்த்தேக்கத்தின் கரைப் பகுதி அண்மையில் பெய்த கடும் மழையின் காரணமாக அரிப்பு ஏற்பட்டு, சுமார் 10 அடி கீழே இறங்கியுள்ள நிலை உள்ளது. இந்தப் பாதிப்பை பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் வந்து நேரில் பார்த்துச் சென்றார்கள். அதுமட்டுமல்லாமல், இதை நான் பொதுப்பணித் துறை கமிஷனர் அவர்களிடம் நேரில் சென்று சொல்லி, ஒரு கடிதம்கூடக் கொடுத்தேன். இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. இந்தக் கரைகளைப் பலப்படுத்த வேண்டுமென்று, நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, இந்த வெலிங்டன் நீர்த்தேக்கத்தின் கிளை ஏரிகள் 28 உள்ளன. இந்த 28 கிளை ஏரிகளுக்கான நீர்வரத்து வாய்க்கால்கள் மிகவும் வலுவிழந்த நிலையில் உள்ளன. ஆதலால், இந்த 28 கிளை ஏரிகளையும் ஆழப்படுத்துவதுடன், கரைகளையும் பலப்படுத்தித்தரவேண்டுமாய் இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



பிற்பகல் 12-20

திட்டக்குடி என்ற நகருக்கு அருகில் கூத்தப்பன்குடிகாடு என்ற கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்திற்கு அருகில் வெள்ளாறு என்ற ஆறு ஓடிக் கொண்டிருக்கின்றது. அந்த ஆற்றிலே அதிகமாக வெள்ளம் வரும்போது கரைகளை அரிக்கும் சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, அக்கரைகளுக்கு அருகில் தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் நேரில் சந்தித்தும் கடிதம் மூலமும் தெரிவித்திருக்கின்றேன். பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் அவர்களும் நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆதலால், மிக விரைவில் தடுப்புச் சுவர் கட்டித்தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சிறுபாக்கம் என்ற ஒரு கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்திற்கு அருகில் சுண்ணாம்பு ஓடை என்ற ஓடை ஒன்றுள்ளது. அந்த சுண்ணாம்பு ஓடையில் மழை நேரத்தில் அதிகமாக நீர் செல்லும் ஒரு நிலை இருக்கிறது. இந்த நீர் அனைத்தும் யாருக்கும் பயனில்லாமல், அருகில் உள்ள ஆற்றில் சென்று கலக்கின்ற ஒரு நிலை உள்ளது. ஆதலால், சுண்ணாம்பு ஓடையின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி, வீணாக ஆற்றிற்குச் சென்று கடலிலே கலக்கும் நீரைச் சிறுபாக்கம் ஏரிக்கு வரச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதன் வாயிலாக சுமார் 30,000 மக்கள் பயன்பெறுவார்கள். இதன் மூலம் சிறுபாக்கம், மாங்குளம், ரெட்டாக்குறிச்சி, கீழ் ஓரத்தூர், அரசங்குடி ஆகிய கிராம மக்கள் பயன்பெறுவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, கொடுக்கூர், பெரம்பலூர் என்ற கிராமங்கள் இருக்கின்றன. இந்த கிராமங்களுக்கு மேமாத்தூர் அணையிலிருந்துதான் தண்ணீர் வரவேண்டும். இந்த அணைக்கட்டிலிருந்து வருகின்ற நீர்வரத்து வாய்க்கால்கள் அனைத்தும் சீர்கெட்ட நிலையில் உள்ளன. இந்த நிலையைப் போக்கி, அந்த நீர்வரத்து வாய்க்கால்களைச் சரிசெய்து, கொடுக்கூர்-பெரம்பலூர் ஏரிக்கு மேமாத்தூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சு. புரட்சிமணி] [1998 ஏப்ரல் 22

அதோடுமட்டுமல்லாமல் எங்கள் பகுதியிலே தொரவளூர் என்ற கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்திற்கு அருகில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலம் இருக்கின்றது. அந்த கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், விளையாட்டு மைதானம் அமைப்பதற்கும் இடம் தேவைப்படுவதால் அந்த இரண்டு ஏக்கர் நிலத்தை அந்தப் பள்ளிக்குக் கொடுப்பதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக நான் அவர்களை நேரில் சந்தித்துத் தெரிவித்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் தொகுதியில் பாளையம், கொரக்கை என்ற கிராமங்கள் உள்ளன. அங்கு ஓடை ஒன்று உள்ளது. அந்த ஓடையின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, புல்லூர் என்ற கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்திற்குச் செல்லும் வழியில் ஒரு பெரிய நீரோடை உள்ளது. அந்த ஓடையின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், புலிவலம் என்ற கிராமத்திலுள்ள ஓடையின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

கீழ் ஒரத்தூர் கிராமத்தில ஒரு தரைப் பாலம் உள்ளது. இந்தப் பாலமானது இன்றைக்கு உடைந்துபோன நிலையில் உள்ளது. ஆகவே, கீழ் ஒரத்தூர் கிராமத்தில உள்ள இந்தப் பாலத்தை, ஒரு பெரிய பாலமாகக் கட்டித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, கணபதிகுறிச்சி என்ற கிராமத்தில், ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதியில், வழியில ஒரு பெரிய வாய்க்கால் உள்ளது. இந்த வாய்க்காலைக் கடந்து செல்வதற்கு அவர்களுக்கு மிகவும் கஷ்டமான நிலை உள்ளது. தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாத ஒரு நிலை. ஆகவே, அந்தக் கிராமத்தில், ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.



1998 ஏப்ரல் 22]

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்குகொள்வதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு அளித்துள்ள கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே, சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனத் திட்டத்திற்காக, அரசு 11.90 கோடி ரூபாயை மானம்பார்த்தான் வாய்க்கால், பழைய முரட்டு வாய்க்கால், அரியகோஷ்டி வாய்க்கால், வெள்ளாறு இராஜன் வாய்க்கால் ஆகியவை பயன்பெறும் வகையில், அந்தப் பகுதி விவசாயிகள் எல்லாம் பெருமகிழ்ச்சி கொள்கின்ற வகையிலே ஒதுக்கீடு செய்து, அங்கே பணிகள் எல்லாம் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக, அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், எனது சொந்தப் பகுதியாக இருக்கக்கூடிய அணைக்கட்டுப் பகுதியைப் பற்றி இந்தக் கொள்கை விளக்கத்திலே, எந்த ஒரு சிறு குறிப்பும் இல்லாததை எண்ணும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. காவிரி டெல்டா பகுதி என்று சொல்லும்போது, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களை மட்டுமே கணக்கிலே எடுத்துக் கொண்டு, அந்தப் பகுதிக்கு மட்டுமே வருடா வருடம் ஒதுக்கீடுகளைச் செய்து, அந்தப் பகுதி வாய்க்கால்களை, ஆறுகளை எல்லாம் தூர்வாரி சுத்தம் செய்து தந்து, அந்தப் பகுதி விவசாய மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறீர்கள். அதேசமயம், நெல் கொள்முதல் என்று சொல்லும்போது, காவிரி டெல்டா பகுதிக்கு, எங்கள் பகுதியும் உட்பட்டது என்று சொல்லி, நேரடிக் கொள்முதல் திட்டத்திலே எங்கள் பகுதியையும் கொண்டு வருகிறீர்கள். ஆனால், மராமத்துப் பணி என்று சொல்லும்போது, எங்கள் பகுதியை விட்டுவிட்டு, அந்த மூன்று மாவட்டங்களை மட்டும் எடுத்துக் கொண்டு செய்து கொண்டிருக்கிறீர்கள். எனவே, அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து, எங்கள் பகுதியையும் காவிரி டெல்டா பகுதியில் சேர்த்து, காட்டுமன்னார்குடி மற்றும் சிதம்பரம் தாலுகாக்களிலுள்ள ஏரிகளையும், வடிகால் வாய்க்கால்களையும் அந்தத் திட்டத்திலே சேர்த்து, குறைந்தபட்சம் 10 கோடி ரூபாயாவது நிதி ஒதுக்கீடு செய்து, தூர்வாரி சுத்தம் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி, விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அ. வ. அப்துல் நாசர்] [1998 ஏப்ரல் 22

அதோடு, நம்முடைய ஆட்சி வந்த புதிதிலே, கொள்ளிடம் ஊற்று நீர் என்று சொல்லி, 'கான்சாஹிப்' வாய்க்கால் திட்டத்திற்காக ஒரு கோடியே 83 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, திட்டப் பணிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை, அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். இப்போதுதான் நில ஆர்ஜிதம் செய்வதற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். அந்தப் பணிகளை விரைவில் முடிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக என்னுடைய நன்றியையும், எனது தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்தத் திட்டப் பணிகள் தொடங்குவதற்கு முன்னால், இப்போது இருக்கக்கூடிய 'கான்சாஹிப்' வாய்க்கால் சுத்தமாகத் தூர்ந்து போயிருக்கிற காரணத்தினால், 'கான்சாஹிப்' வாய்க்காலைத் தூர் வாரி, சுத்தம் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

காசிமுத்தான் ஓடையிலே இருக்கக்கூடிய அம்புகுட்டியபாளையம் என்ற இடத்திலே கடல் நீர் உள்ளே புகாதவாறு ஒரு அணை கட்டப்பட்டுள்ளது. அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, கடைசி நேரத்திலே கட்டப்பட்டிருந்தாலும், இன்றுவரை அதற்கு ஷட்டர் பொருத்தப்படாமல் இருக்கிறது. இதன் காரணமாக, சுமார் 5 ஆயிரம் ஏக்கரிலே பயிரிடக்கூடிய விவசாயிகள் எல்லாம் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். அதற்கு இன்னும், தேக்கு மரத்தினால் ஷட்டர் போடுவதா, அல்லது இரும்புத் தகடுகளால் ஷட்டர் போடுவதா என்ற விவாதம் அதிகாரிகளிடத்திலே இருப்பதாக நான் அறிகிறேன். ஷட்டர் போடப்படாமல இரண்டு வருடங்களாக அப்படியே இருக்கிறது. ஆகவே, ஷட்டர் பொருத்தி, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அதேபோல, பண்டக்கொல்லையிலே இருக்கக்கூடிய 600 ஏக்கர் நிலங்களும் மேட்டு நிலங்களாக இருப்பதால் விவசாயக் காலங்களில் பயிர் செய்யமுடியாமல் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை இறைவைப் பாசனத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு பரவநாட்டிலிருந்து பம்ப்பிங் சிஸ்டம் மூலமாக அந்தப் பகுதிக்கு



1998 ஏப்ரல் 22] [திரு. அ. வ. அப்துல் நாசர்]

நிறைவேற்றித்தரவேண்டும். தண்ணீர் கொடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தரவேண்டும். அதன் வாயிலாக அங்கு தரிசாகக் கிடக்கின்ற 600 ஏக்கர் நிலங்களிலும் பயிர் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு வருவாய்த் துறையின்கீழ் உள்ள வாய்க்கால்களும், பொதுப் பணித் துறையின் கீழ் உள்ள வாய்க்கால்களும், என்னுடைய தொகுதியிலும் சரி, காட்டுமன்னார்குடி தாலுகாவிலும் சரி, எந்த இடத்திலும் தூர் வாரப்படாமலும், எந்தவிதமான மராமத்துப் பணிகள் செய்யப்படாமலும் இருக்கின்றன. எனவே அரசு இந்த ஆண்டாவது அவற்றையெல்லாம் தூர் வாரித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வருவாய்த் துறையின்கீழ் இருக்கக்கூடிய வாய்க்கால்களை பொதுப்பணித் துறையோடு இணைத்து பொதுப் பணித் துறையின் மூலமாக அந்த வாய்க்கால்களைத் தூர் வாரித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தில்லைநாயகபுரம் என்ற ஊரிலே இருக்கக்கூடிய ஐந்துகல் மதகு 400 வருட காலமாக இருக்கின்ற மதகு. அது இப்போது உடைந்துபோய்விட்டது. அதில் தற்சமயம் மணல் மூட்டைகளை அடுக்கி விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுத்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும் அது தற்காலிக நடவடிக்கையாகத்தான் இருக்குமேயொழிய, அதனால் கீழ் பகுதியிலே இருக்கக் கூடியவர்களிடம் இருந்து பிரச்சினைகள் வர வாய்ப்பு இருக்கிறது. எனவே அரசு உடனடியாக அதற்கு நிதியொதுக்கீடு செய்து, அந்த ஐந்துகல் மதகு அணையைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சேத்தியாத்தோப்பு, கிளாங்காடு பகுதியிலே இருக்கக்கூடிய கரை மிகவும் தாழ்ந்து போய் இருக்கிற காரணத்தினால் அதை உயர்த்தித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சாத்தனூர் அணைப் பகுதி மிகவும் சிறப்பான ஒரு சுற்றுலாத் தலமாக இருக்கிறது. அந்த அணையின் பக்கத்தில் இருக்கக்கூடிய பூங்காக்களை எல்லாம் சீரமைத்து மின் விளக்குகள், அலங்கார விளக்குகளை எல்லாம் நல்லமுறையிலே அமைத்துத்தந்து சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் மாற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே—கிட்டத்தட்ட 6 மின்தூக்கிகள் இருக்கின்றன—எப்போது பார்த்தாலும் அவற்றில் இயங்குவது இரண்டு மட்டும்தான். அதிலே 4-வது எண் கொண்ட மின்தூக்கியின் உள்ளே நாம் ஏறிவிட்டோம் என்றால் திரும்பி வெளியே வருவதற்கு அந்த லிஃப்ட் ஆப்பரேட்டர் நினைத்தால்கூட முடியாது போல இருக்கிறது. அது கடவுளுடைய சித்தத்தில் நடக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. எனவே அந்த லிஃப்ட்டுகளை எல்லாம் சீரமைத்துத் தந்து எங்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, வெள்ளியங்காடு வடிகால் ஓடை மிகவும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி வாய்க்கால் போலக் குறுகிவிட்ட காரணத்தால் அந்த ஆற்றில் வெள்ளம் வரும்போது, குமாராட்சி, திருநாரையூர் பகுதிகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிவிடுகின்றன. எனவே இயந்திரங்களைக் கொண்டு அந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, வேளாண்மைத் துறையில் கனரக இயந்திரங்கள் இருக்கின்ற காரணத்தினால் அவர்களிடமிருந்து அதைப் பெற்று, தூர் வாரும் பணியைச் செய்ய சிரமப்பட வேண்டியிருக்கிறது. எனவே பொதுப்பணித் துறையின் மூலம் அந்த இயந்திரங்கள் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும். அதாக நீங்கள் .....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்து கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு 10 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் தூர் வாருவதற்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில், இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தமைக்காக தஞ்சை மாவட்ட தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சென்ற ஆண்டு கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியிலே செய்ய வேண்டிய பணிக்கு மிகக் குறைந்த அளவிலே நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. எனவே அந்தக் கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியிலே வெள்ளக் காலங்களிலும், வறட்சிக் காலங்களிலும் அதிகப் பணிகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக அதிக நிதியொதுக்கீடு செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியாக இருக்கிற பேராவூரணி, சேதுபாவாசத்திரம் ஒன்றியங்களில் ஏறக்குறைய 375 பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான குளங்கள் உள்ளன. அந்த 375 பொதுப் பணித் துறை குளங்களிலும் ஏறக்குறைய எல்லாக் குளங்களிலேயும் நெய்வேலி காட்டாமணக்கு, முட்புதர்கள் இருப்பதால் அவை தூர்ந்த நிலையிலே இருக்கிற காரணத்தால் அங்கே இருக்கிற குளங்களிலே தண்ணீரைத் தேக்கி வைக்க முடியாமல் உள்ளது. அவற்றையெல்லாம் தூர்வாரித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற நிதியாண்டில் அந்த 375 குளங்களிலே கிட்டத்தட்ட 20 குளங்கள்தான் தூர் வாரப்பட்டிருக்கிறது. அவ்வாறு தூர்வாரப்பட்ட குளங்களால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் மிகவும் பயன் அடைந்திருக்கிறார்கள். எனவே வரவிருக்கின்ற ஆண்டுகளில் ஆண்டுக்கு 100 பொதுப்பணித் துறை பாசனக் குளங்களையாவது தூர்வாருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

D
V2ll,31'N98
N98·46·2

பிற்பகல் 12-35

பொதுப்பணித் துறை ஏரி மற்றும் குளங்களை புல்டோசர் கொண்டு தூர்வாரும்போது பலப்படுத்தப்படும் கரைகளை செங்கப்பிகள் கொண்டு பலப்படுத்தினால் எனது தொகுதியிலுள்ள குளங்களின் கரைகள் எல்லாம் எந்தவித பாதிப்பும் இல்லாமல் பல ஆண்டுகாலம் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைமடைப் பகுதியான கல்லணைக் கால்வாய்க் கோட்டத்திலுள்ள கிளை வாய்க்கால் பகுதிகளின் கடைசி வரை தண்ணீர் வீணாகாமல் செல்வதற்கு ஏற்றவகையில் சிமெண்ட் கான்கிரீட் கொண்டு வாய்க்கால்கள் அமைக்கப்பட்டால் நீண்ட நெடுங்காலம் எந்தவித சிரமமும் இன்றி தண்ணீர் சென்று, விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொ[illegible]

218458

[திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்] [1998 ஏப்ரல் 22

அடுத்து, காவிரி, கல்லணை கால்வாய்க் கோட்டத்தில் பாசன ஆய்வாளர்கள் மற்றும் கரைப் பாதுகாவலர் பணியிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவற்றை இந்த நிதி ஆண்டிலே நிரப்பி பொதுப்பணித் துறையில் ஏற்படும் தண்ணீர்த் திருட்டையும், பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான மரங்கள் திருட்டையும் தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பொதுப்பணித் துறையில் நீண்டகாலமாக தினக்கூலிகளாக இருப்பவர்களை நிரந்தரப் பணியாட்களாக நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் மகாராஜ சமுத்திரம் ஆற்றில் நீரேற்றுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பலமுறை இந்த மன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். வரவிருக்கின்ற ஆண்டிலே, அந்தப் பகுதியிலே நீரேற்றுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் முதல்சேரி, பள்ளிகொண்டான், தொக்காவிக்காடு போன்ற பகுதிகளிலே இருக்கின்ற ஏழை, எளிய விவசாயிகள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் கருணையோடு பரிசீலித்து மேற்படி திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, பல லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட எனது தொகுதியிலுள்ள அக்கினியாறு அணைக்கட்டு, பூனைக்குத்தியாறு அணைக்கட்டு, அடைக்கத்தேவன் அணைக்கட்டு, போன்ற பல்வேறு அணைக்கட்டுகளில் தற்போது மண் திட்டுகளும், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளும் ஆக்கிரமித்து இருக்கின்றன. எனவே, அந்த அணைக்கட்டுகளில் தண்ணீர் தேங்காமல் கடலுக்குச் சென்று விழுகின்றது. எனவே, அந்தப் பகுதிகளில் புல்டோசர் கொண்டு தூர்வாரி, ஏரிகளுக்குச் செல்லுகின்ற வாய்க்கால்களில் எல்லாம் தூர் வாருவோமானால் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகள் பயனடைகின்ற வகையிலே தண்ணீரை அதிக அளவில் தேக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 22] [திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்

அடுத்து, கல்லணைக் கால்வாய் கடைமடைப் பகுதியில் இருக்கின்ற சூரியநாராயணபுரத்தில் இருக்கிற திரு.வி.க. பாலம், புதுப்பட்டினம் வாய்க்கால், சேதுபாவாசத்திரம் வாய்க்கால், அனவேறு வாய்க்கால் ஆகிய மூன்றும் இணைகின்ற பாலமாகும். அந்தப் பாலம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. அது தற்போது இடிந்த நிலையில் இருக்கிறது. அதை இந்த நிதியாண்டில் கட்டித்தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியின் தலைமையிடமான பேராவூரணியில் பொதுபபணித் துறையின் சார்பாகப் பயணியர் விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், பொதுப்பணித் துறையில் உள்ள உபகோட்ட அலுவலகங்களில் உள்ள அலுவலர்களை பொதுமக்களும், எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளும் தொடர்பு கொள்வதற்கு ஏற்றவகையில் அந்த அலுவலகங்களிலே தொலைபேசி வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே உபகோட்ட அலுவலகங்களில் எல்லாம் தொலைபேசி வசதியை ஏற்படுத்தித் தாவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியிலுள்ள நெல்லியங்காடு—ஆதனூர் இடையே உள்ள அம்புலி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்து, அதிலே புது அணைக்கட்டு ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியோடு எனது தொகுதியின் சார்பாக ஒரு சில கோரிக்கைகளை முன் வைக்க விரும்புகிறேன்.

பேராவூரணியில் இருக்கின்ற காமராஜர் அரசு மருத்துவமனை போதிய கட்டட வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே அதற்குக் கூடுதலாக கட்டட வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணி, தாலுகாவினுடைய தலைநகரமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே இருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதி இல்லாமல் இருப்பதைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்] [1998 ஏப்ரல் 22

அடுத்து, 25 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட பெருமகளூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருமகளூர் பெரிய ஏரிக்குப் பாசனம் தந்துள்ள தெற்குவாத்தலைக்கு சிறிய அணைக்கட்டு ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 10 பிர்க்காக்களைக் கொண்ட பட்டுக்கோட்டை தாலுகாவை நிர்வாக வசதிக்காகப் பிரித்து, திருச்சிற்றம்பலத்தைத் தலைமை இடமாகக் கொண்ட தனி தாலுகா ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மன்றத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில் கட்டுமானப் பணிகளுக்கு மணல் கிடைக்காமல் சிரமப்படுவதைத் தவிர்க்கும் வகையில், அரசுக்கு வருவாய் வருகின்ற வகையில், காட்டாற்றின் மணலை ஏலம் விட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

பிற்பகல் 12-40

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயிண்ட் ஆப் ஆர்டரா?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிய பிறகுதானே கிளாரிபிகேஷன் கேட்பீர்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே 39 குட்டைகள் வேண்டுமென்று கேட்டேன். கிட்டத்தட்ட 29 குட்டைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பணிகள் எல்லாம் முடிந்திருக்கின்றன. அதற்காக நான் முதலிலே கலைஞர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, இப்போது பாம்பிக்குளம்-ஆழியாறு தண்ணீர் திருமூர்த்தி அணையிலிருந்து திறந்து விடப்பட்டிருக்கின்றது. அந்தத் தண்ணீரை மொத்தம் 135 நாட்களுக்கு விட வேண்டும். ஆனால் முதலில் 14 நாட்களுக்கு 7 நாட்கள் கொடுத்தார்கள். அதற்கு



1998 ஏப்ரல் 22] [திரு. ப. மோகன் கந்தசாமி]

பிறகு கொஞ்சம், கொஞ்சமாக 20 நாட்களுக்கு 7 நாட்கள் கொடுத்தார்கள். தற்போது.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக ஐந்தாவது பேச்சாளராகப் பேசவேண்டும் என்கிறீர்கள். இதுவா பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். சரி, சரி சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இப்போது 5 நாட்களுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். தேர்தல் சமயத்திலே விவசாயிகள் எல்லாம் கடுமையாகப் போராட்டம் செய்தார்கள். அப்போது சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி, அந்தக் காலத்தை நீட்டித்துத் தருவதாக நாங்கள் வாக்குறுதி கொடுத்தோம். எனவே, அங்கு கடுமையாக வறட்சி இருப்பதன் காரணமாக அந்தப் பகுதிக்கு மேலும் ஒரு மாத காலம் அந்தத் தண்ணீரைத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

• **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த விவாதத்திற்குப் பதில் அளித்து பேசுகின்ற வாய்ப்பை எனக்கு வழங்கிய என்னுடைய தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின்மீது இந்த ஆண்டு 17 உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். குறை சொன்னார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். செய்தவற்றிற்குப் பாராட்டுத் தெரிவித்து இருக்கிறார்கள். இன்னும் எப்படி செய்ய வேண்டும் என்பதற்கு அரிய பெரிய யோசனைகளை வழங்கி இருக்கிறார்கள். அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். பேச முடியாதவர்கள் வெட்டுத் தீர்மானத்தின் மூலம் தங்களுடைய கருத்துக்களை அதிகமாக வழங்கி இருக்கிறார்கள். எனவே, பேச முடியாதவர்கள் தந்திருக்கிற அந்தக் கோரிக்கைகளையும் அதே நேரத்தில் வெட்டுத் தீர்மானமாகவும் கொடுக்க முடியவில்லை. பேசவும்

முடியவில்லை என்கிற வகையில், இருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம்— பிரச்சினை என்னவென்று அவர்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும் எனவே, அவற்றையெல்லாம் எடுத்து வைத்து எதை, எதை எந்த எந்தக் காரியங்களை எவ்வெப்போது ஆற்ற முடியுமோ அதை அதை தப்பாமல் இந்த அரசு செய்யும் என்கிற வாக்குறுதியை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இங்கே பேசியவர்கள் இந்தத் துறையினுடைய செயல்பாட்டைப் பாராட்டி இருக்கிறீர்கள். ஆகவே, அந்தப் பாராட்டுக்கு என்னுடைய நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்வதோடு இந்த அளவிற்கு இந்தத் துறை பாராட்டைப் பெறுவதற்கு எங்களுக்கெல்லாம் அறிவுரை கூறி இன்று இந்தத் துறையை இயக்கி வைத்திருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், இந்தத் துறையிலே என்னோடு சேர்ந்து பணியாற்றியிருக்கின்ற துறையின் செயலாளர் முதல் சாதாரண லஸ்கர் வரையிலே இருக்கிற அத்தனைப் பேருக்கும் இந்தப் பெருமை, பாராட்டு போய்ச் சேரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னால் இந்தப் பொதுப் பணித் துறையானது பாழடைந்த அணைகள், சிதறிப் போன மதகுகள், உடைந்து போன கரைகள், தூர்ந்துபோன ஏரிகள் மற்றும் மறைந்துபோன கால்வாய்களாக மட்டுமே காட்சி அளித்துக் கொண்டிருந்தன. பொதுப் பணித் துறையினுடைய கட்டுமானங்கள் மட்டும் அப்படித் தெரியவில்லை, பொதுப் பணித் துறை நிர்வாகமே புதைந்து போய்க் கிடந்தது. அப்படிப் புதைந்து போய் இருந்த பொதுப் பணித் துறையை ஆழ்ந்து எடுத்து நிறுத்தி, வீழ்ந்த பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை வீறு கொண்டு கட்டி முடித்த வீரபாண்டிய கட்டபொம்மனைப் போல, மீண்டும் இந்தப் பொதுப் பணித் துறையை வீறு நடைபோட வைத்தவர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தத் துறைக்குப் பாராட்டுக் கிடைத்திருக்கிறது என்றால், அது அவர் எடுத்துக் கொண்ட முயற்சியால்தான். மாதம் இரண்டுமுறை Review Meeting என்ற பெயரில் எங்களை அழைத்து என்னென்ன திட்டங்கள் எடுக்கப்பட்டன. எவ்வளவு செலவு செய்யப்பட்டது, எவ்வளவு பாக்கியிருக்கிறது, ஏன் இதை விரைவுப்படுத்தவில்லை என்று கேள்வி கேட்டுக் கேட்டு, எங்களைத் தூண்டி விரைவுபடுத்தியதால்தான் இந்த இலாக்காவும் மற்றவைகளும் பாடுபட்டு இன்றைக்கு உங்களுடைய பாராட்டைப் பெற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



பிற்பகல் 12-45

இன்னும் சொல்லப்போனால், இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னால் ஒரு சப்பாணியைப் போல இருந்த இந்தப் பொதுப் பணித் துறையை இன்றைக்குச் சர்வதேச ஓட்டப்பந்தயத்திற்கு அழைத்துக் கொண்டு வந்திருப்பவர் நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள்தான், தமிழக முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

எப்பொழுதெல்லாம் கலைஞருடைய ஆட்சி தமிழகத்திலே நடைபெறுகிறதோ அப்பொழுதெல்லாம் பொதுப் பணித் துறைக்குப் பொற்காலம். பிறகு அவர்கள் இல்லாத நேரத்தில்—அதாவது, தமிழன் எப்பொழுது ஆள்கிறானோ அப்போதெல்லாம் தமிழகத்திற்குப் பொற்காலம், இல்லாவிட்டால்—இடையிலே களப்பிரர் ஆட்சி, கள்வர் ஆட்சி, ராஷ்டிரகூடர் ஆட்சி இருந்தன. இவையெல்லாம் இருண்ட காலம் என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் தெரிவிப்பார்கள்.

இந்தத் துறையைப்பற்றி சொல்வதற்கு நீண்ட நெடிய காலத்திற்கு முன்னால் போகமுடியவில்லை. 1989-லே கலைஞர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, பொதுப் பணித் துறையை என்னிடத்திலே கொடுத்திருந்தார்கள். அப்போதுதான் நீண்ட நெடுங்காலப் பிரச்சினையாக தீர்க்கப்படாமல் இருந்த காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, நடுவர் மன்றத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர். கலைஞருடைய ஆட்சியிலேதான் அது கொண்டு வரப்பட்டது. எனவே, அது ஒரு பொற்காலம்.

அதேபோன்று இந்தத் துறையிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த முறை ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 1983-ஆம் ஆண்டு தொடங்கி, பல்வேறு பிரச்சினைகளால் முடிவடையாமல் இழுத்துக் கொண்டிருந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப் பெருமுயற்சி எடுத்து, கொண்டு வந்தாலும், அதிலேயும் சில இடைஞ்சல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் போக்கி, இப்போது சென்னை மாநகருக்குக் குடி தண்ணீரைக் கொண்டுவந்து சேர்த்த பெருமையும் கலைஞருடைய இந்த ஆட்சிக்கேதான் உரியது. அதுவும் இந்தப் பொற்காலத்திலேதான் நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கிருஷ்ணா தண்ணீர் வரவே வராது என்றும், வருமா என்றும், பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தார்கள். இன்றைக்குப் பத்திரிகைகளே 'தயாராகிவிட்டன கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு ஜுலையிலே பழுதில்லாமல் வரும்' என்று பத்திரிகைகள் எழுதுகிற அளவுக்கு இந்தத் துறை பணியாற்றியிருக்கிறது என்றால், அதற்கான ஊக்கத்தைக் கொடுத்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள்தான்.

அதேபோன்று, பொதுப் பணித் துறையிலே ஆண்டாண்டு காலமாக ஆட்களை வைத்துத்தான் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். ஆறுகளையும், ஏரிகளையும் என்றைக்கோ மற்றவர்கள் கட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். அவற்றைத் தூர்வாருகிறபோது, அந்த வேலைகளை எல்லாம் இயந்திரங்களின் மூலம் செய்ய முடியும்; அதுவும் ஒழுங்காகச் செய்யமுடியும். ஊழல் இல்லாமல் செய்யமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவரும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வளவுக்கும் மேலாக இந்தத் துறை 1996-லே ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வந்ததோடு மட்டுமல்ல, நான் பெருமையோடு, என் நெஞ்சு நிறைவோடு எண்ணுகிறேன். என்னுடைய வாழ்நாள் பலனையே அடைந்து விட்டதைப்போல, ஒரு பொறுப்பை என்னிடத்திலே கலைஞர் அவர்கள் கொடுத்தார்கள். அந்தப் பொறுப்பை நிறைவேற்றிய அன்றைக்கு நான் அண்ணா சமாதி முன்னால் நின்று கண்ணீர் சிந்தினேன். அது நண்பர்களுக்கெல்லாம் தெரியும். காரணம், யாருடைய பெயரைக் கேட்டு அரசியலுக்கு வந்தேனோ, யாருடைய பெயரால், யாருடைய பேச்சால் இழுக்கப்பட்டு இந்த இயக்கத்திலே சேர்ந்தேனோ, அந்த அண்ணன் தூங்குகிற இடத்தில் ஆண்டாண்டு காலமாக நின்று நிலைக்கக்கூடிய, எழிலோவியமாக அழகுபடுத்துகின்ற ஒரு காரியத்தை நடத்து என்று என் தலைவர் ஆணையிட்டதை நான் நிறைவேற்றி (மேசையைத் தட்டும் ஒலி) உள்நாட்டிலே இருக்கிறவர்களும், வெளிநாட்டிலே இருக்கிறவர்களும் பாராட்டக்கூடிய அளவுக்கு அண்ணா சமாதியினுடைய முகப்பை அமைத்துக் காட்டினேனே, அது நான் பெற்ற பேறு. வாழ்க்கையிலே இதற்கு மேலே எந்தவிதமான விருதும், பாரத ரத்னா, கொடுத்தால்கூட, அது எனக்குத் தேவையில்லை. காரணம், அண்ணனுக்கு கட்டிய சமாதியை அழகுபடுத்துகிற வேலையைக் கொடுத்தாரே கலைஞர், அதுபோதும். அழகுபடுத்திக்



கட்டியது நான்தான், ஆனால், ஒவ்வொரு அங்குலமும், ஒவ்வொரு செங்கல்லும் எப்படி அமைய வேண்டும் என்பதை, நித்தம் நித்தம் எனக்கு ஆலோசனையாக வழங்கியவர் நம்முடைய கலைஞர் அவர்கள்தான்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, அண்ணா சமாதியை மிகச் சிறந்த முறையிலே செப்பனிட்டிருப்பதாகக் கூறினார்கள். அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால், அந்த அண்ணா சமாதியின் முகப்பிலே உங்களுடைய கட்சியின் சின்னமான உதயசூரியனை வைத்து ஆர்ச்சாக வரைந்திருக்கிறீர்களே, அதைத்தான் நாங்கள் தவறு என்று சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் பேசட்டும். (குறுக்கீடு) Point of order இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பி. ஆர். சுந்தரம், உங்களை நான் உட்காருங்கள் என்று சொல்லிவிட்டால் நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே வராது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். அதையும் மீறி நீங்கள் பேசினால் உங்களை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை வரும். உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உணர்வைத் தெரிவித்தேன்; அவர் காழ்ப்பைத் தெரிவித்திருக்கிறார். பரவாயில்லை. அருள்கூர்ந்து நண்பர், முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். சமாதியின் முகப்பு எப்படியிருக்கிறது என்று பார்வையிட்ட பிறகு சொல்லியிருந்தால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பேன்.

அடுத்து, கலைஞருடைய ஆட்சிக்காலம் பொற்காலம் இந்த மாநிலத்திலே, என்று சொன்னதற்கு இன்னொரு காரணம், வேறு எந்த மாநிலத்திலும், அல்லது வேறு எந்தக் காலத்திலும் நடக்க முடியாத, நினைத்துக்கூடப் பார்க்க முடியாத, கற்பனைக் கதைகளில்கூட எழுத முடியாத அற்புதமானக் காரியங்கள் இப்போது, இந்தப் பொதுப் பணித் துறையில் நடந்து கொண்டிருக்கின்றன.

இங்கேகூட நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். உறுப்பினர் திரு. கருப்பசாமி என்று கருதுகிறேன், திட்டங்களையே காணோம் உங்களிடத்திலே என்று சொன்னார்கள். கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே திட்டங்களுக்கா குறை. இராஜாதோப்பு கானாறு அணை, மோர்தனா அணை, செண்பகத்தோப்பு அணை, ஆண்டியப்பனூர் ஓடை அணை, வரட்டாறு - வள்ளி மதுரை அணை, மலட்டாறு-பத்தலப்பள்ளி அணை, குப்பநத்தம் அணை, அடவிநயினார் கோயில் அணை, கொடுமுடியாறு அணை, நம்பியாறு அணை, பொய்கையாறு அணை, இருக்கன்குடி அணை, சண்முகா நதி அணை, சோத்துப்பாறை அணை, வடக்குப் பச்சையாறு அணை, நங்கஞ்சியாறு அணை என்று 16 திட்டங்கள். இப்போது அதன் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எவ்வளவு மதிப்பீட்டில் 427 கோடி ரூபாய் மதிப்பீட்டில். 16 திட்டங்கள் 427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்கு வேலைகள் தமிழ்நாட்டில் ஒரே நேரத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு பெரிய தொகையில், 16 இடங்களில் ஒரே நேரத்தில் வேலைகள் நடக்கின்றன. இதுபோல வேறு ஒரு மாநிலத்தை உங்களால் சுட்டிக்காட்ட முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், இதிலே பல திட்டங்கள் உள்ளன. பெரிய திட்டங்களை உங்கள் ஆட்சியில் கொண்டு வந்தீர்களா? இரண்டே இரண்டு திட்டங்கள் கொண்டு வந்தீர்கள். அதில் ஒன்று மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தொகுதியில் இது வருகிறது. அதற்கு இப்போது கலைஞர் அவர்கள் 16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நீங்கள் ஒரு ரூபாய்கூட ஒதுக்கவில்லை. 1991-ல் ஆட்சிக்கு வந்த உடன் இந்தத் திட்டத்தை அறிவித்தீர்கள். 1991 முதல் 1 ரூபாய் கூட ஒதுக்கவில்லை. இப்போது 16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்டிருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்டது இருக்கன்குடி அணைத் திட்டம். வைப்பாறு ஆற்றின் இடையிலே கட்டுவது. இந்த அணையை எங்கே கட்டுவது, எங்கே அமைப்பது, என்ன லெவலில் அமைப்பது, மண் அணை எவ்வளவு தூரம் என்று எல்லாம் கணக்கே எடுக்காமல் கால்வாய்களை வெட்டுவதற்கு மட்டும் கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் ஒதுக்கி, 'வெட்டி' விட்டார்கள் முந்தைய ஆட்சியில். கால்வாய்





வெட்டியதே கிடையாது. அதற்கும், இப்போது திட்டம் அறிவித்தாகிவிட்டது, மக்களுக்கு திட்டத்தின் பயன் சேர வேண்டுமே என்பதற்காக, இருக்கன்குடி திட்டத்திற்காக 28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்த முதல்வர்தான் இங்கே அமர்ந்திருக்கிற கலைஞர் என்பதை அருள்கூர்ந்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாங்கள் 1989-லே ஆட்சிக்கு வந்தவுடனே, பொய்கையாறு, நம்பியாறு, அடவிநயினார் கோயில், நங்கஞ்சியாறு, இராஜாதோப்பு கானாறு, மோர்தனா போன்ற அணைத் திட்டங்களை அறிவித்தோம். இந்த முறை ஆட்சிக்கு வந்தபிறகு, வடக்குப் பச்சையாறு அணைத் திட்டம், செண்பகத்தோப்பு அணைத் திட்டம், பத்தலப்பள்ளி அணைத் திட்டம், வரட்டாறு அணைத் திட்டம், குப்பநத்தம் அணைத் திட்டம் போன்ற திட்டங்களைத் தொடங்கியிருக்கிறோம். இப்படி 16 புதிய அணைக்கட்டுத் திட்டங்கள் மட்டுமல்ல, ஏற்கெனவே உள்ள அணைகளைப் பலப்படுத்த வேண்டிய திட்டங்களும் நிறைவேற்றப்பட இருக்கின்றன. என்னென்ன திட்டங்கள்? வெலிங்டன் அணை, கோமுகி அணை, சாத்தனூர் அணை, வீடுர் அணை, மணிமுக்தா நதி அணை, பெரியாறு அணை, பேச்சிப்பாறை அணை, மணிமுத்தாறு அணை, பெருஞ்சாணி அணை, குண்டேரிபள்ளம் அணை, சோலையாறு அணை, சித்தமல்லி அணை, பொன்னியாறு அணை, உப்பாறு அணை என்ற 14 அணைக்கட்டுகளைப் பலப்படுத்தப்படுகின்ற காரியம் நடைபெறுகிறது. 16 அணைகள் கட்டுமானம், Constructions. மற்றொன்று ஏற்கெனவே உள்ள அணைகளைப் பலப்படுத்துதல். 14 அணைகளைப் பலப்படுத்துவதற்கு 55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஒரே நேரத்தில் பணி நடந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று, கால்வாய்களைத் தூர் எடுக்கும் பணி, கால்வாய்களைப் புனரமைக்கும் பணி, கரைகளைப் பூசுதல், கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் மதகு அடைப்புகளை மாற்றியமைக்கும் பணி செய்தல் போன்ற பணிகளுக்கு 341 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 17 இடங்களில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் காவிரிப்பாக்கம் வாய்க்கால், இராகவ ஐயங்கார் வாய்க்கால், இப்படிப் பல்வேறு இடங்களில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படிப் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன.

பிற்பகல் 12-55

அடுத்து தூர்வாரி, வாய்க்கால்களை மேம்படுத்தி, கரைகளை வலுப்படுத்தி, மதகுகளை மாற்றி அமைப்பதற்கான திட்டங்களுக்கு. இந்த ஆண்டு 25 கோடி ரூபாய். காவிரி கழிமுகப் பகுதியில் நவீனக் கருவிகளைப் பயன்படுத்தி தூர்வாரும் பணிக்கு இந்த ஆண்டு 23 கோடி ரூபாய்; சென்ற ஆண்டு 12 கோடி ரூபாய். இவ்வளவும் கலைஞருடைய ஆட்சியிலேதான். அதுமட்டுமல்லாமல், சென்ற ஆண்டு இதே இலாக்கா வேகமாகப் பணியாற்ற வேண்டும் என்பதற்காக 10 கோடி செலவில் 227 ஜீப்புகள் வாங்கி வழங்கப்பட்டு இருக்கின்றன. 12 கோடி ரூபாய் மதிப்பில் 600 கம்ப்யூட்டர்கள் வாங்கி வழங்கப்பட்டு இருக்கின்றன. 7½ கோடி ரூபாய்க்கு பல்வேறு திட்டங்களைச் செய்து இருக்கிறோம். 49 கோடி ரூபாய் செலவில் வேலைகளைச் செய்து இருக்கிறோம்., பொதுப் பணித் துறையிலே அணைகளைக் கட்டுவது, அணைகளைப் பழுது பார்ப்பது, கால்வாய்களைப் பலப்படுத்துவது, நவீனப்படுத்துவது, தூர்வாருவது, குளங்களை ஆழப்படுத்துவது, ஏரிகளைச் செப்பனிடுவது என்று ஒரே நேரத்திலே இந்த மாநிலத்தில் கிட்டத்தட்ட 1700 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) புதைந்து போய் இருந்த இலாக்காவை எடுத்து புத்துயிர் ஊட்டி, அதைக் கொண்டுவந்து நிறுத்திய பெருமை நம்முடைய தலைவர் கலைஞருக்கு உண்டு. இதைப் பொற்காலம் என்று சொல்லாமல் வேறு எப்படி என்னை அழைக்கச் சொல்லுகிறீர்கள்?

அதுமட்டுமா? உறுப்பினர்கள் அனைவரும், நண்பர்கள் பலரும் இங்கே கேட்டார்கள். இன்னும் நான் சொல்கிறேன். திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் சானக்கினியாநல்லூர் கிராமத்தில் உள்ளடங்கிய சிறுவயல் உப்பாறு ஓடை கட்டுவதற்கு 4 கோடியே 18 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில், கடனா நதியை உருவாக்குகிற திட்டத்திற்கு ரூபாய் 18 கோடியே 82 இலட்சம். திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி கிராமத்திலே நாய் ஓடை குறுக்கே ஒரு புதிய குளம் அமைக்க மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி கேட்டுக்கொண்டார்: அதற்கு ரூபாய் 350 இலட்சம். திண்டுக்கல் மாவட்டம் வெள்ளோடு கிராமத்தில் கீழக்கோட்டை கிராமம் திராட்சை ஓடை அருகே ஆனைவிழுந்தான் ஓடை கட்டுவதற்காக ரூபாய் 226 இலட்சம். ஈரோடு



மாவட்டம் தாராபுரத்திலே பொன்னிவாடி கிராமத்திலே ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க 31 கோடி ரூபாய். திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், கல்லணை கிராமத்திற்கு அருகே ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டுவதற்கு ரூபாய் 120 இலட்சம். விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், சாஸ்தா கோயில் அருகே நகரி ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க ரூபாய் 7 கோடியே 97 இலட்சம். இவை Minor irrigation-இல் எல்லாம் எத்தனைக் காலமாக கேட்டுக் கொண்டிருந்தவை? இன்னும் பல திட்டங்கள் இருக்கின்றன; அவற்றை நான் சொல்லவில்லை. அதாவது மைனர் இரிகேஷனில் பல திட்டங்கள் இருக்கின்றன; 19 திட்டங்கள் இருக்கின்றன; இவையெல்லாம் எத்தனை ஆண்டுக் காலமாக இருந்தன? சாஸ்தாகோயில் திட்டம் கேட்டு கேட்டு அலுத்துப்போன திட்டமல்லவா?

இவை எல்லாம் செய்தீர்களே, எங்களுக்கு என்ன என்று அம்மையார் அவர்கள் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு பார்க்கிறார்கள்; இந்தப் பக்கத்திலே நம்முடைய லத்தீப் பாய் அவர்கள், நான் கடைசியாக கேட்டேன் என்றார். கேட்டதைப்பெற, தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும், அதற்கு கலைஞர் இடத்திலா மதிப்பு இல்லாமல் இருக்கும்? மதிக்கிறேன். கேளுங்கள்; வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டத்தில் வெள்ளக்கால் கானாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்று சுமார் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கி இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். போதுமா பாய்? (சிரிப்பு) இந்தத் திட்டத்திற்காக இந்த ஆண்டு ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. அடுத்து, சிறுமலை அருகே நீர்த்தேக்கத் திட்டம். திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டம், இராஜதானி கோட்டை கிராமத்தின் அருகே சிறுமலை அருவியின் குறுக்கே சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்பு அனுமதி வழங்கி இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. நம்முடைய கலைஞர் அவர்கள் குளித்தலை தொகுதியிலே நின்றபோதிலிருந்து இருக்கிற ஒரு பிரச்சினை. அன்றைக்கு வென்று வந்தார்; இன்றைக்கு அந்தக் கடமையைச் செய்கிறார். குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளி அணை, உப்பிடமங்கலம்,

வளையல்காரன்புதூர்; வீரராக்கியம் ஆகிய ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்கு ஒரு தனித் திட்டம்; குடகனாறு நீர்த்தேக்கத்தின் வலது கால்வாயின் மதகிலிருந்து 26. 56 கி.மீ. தூரம் வரையில் கால்வாய் சீரமைப்பதுடன், 53.5115 கி.மீ. தூரத்திற்குக் கால்வாயைச் செம்மைப்படுத்தி பழைய கட்டுமானங்களைப் புதுப்பித்துச் சீரமைத்து நீர் கொண்டு செல்லும் வகையில் தகுதி ஆக்குவதன்மூலம் வெள்ளி அணை, உப்பிட மங்கலம், வளையல்காரன்புதூர், வீரராக்கியம் ஆகிய ஏரிகள் பயன்படும். இதற்கு மதிப்பீடு 1 கோடி ரூபாய்.

பிற்பகல் 1-00

கடலூர் மாவட்டம், சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் உள்ள கண்மாய்கள், கால்வாய்கள், வடிகால்களைத் தூர் வாரி மேம்படுத்துதல். மாண்புமிகு உறுப்பினர்கள், தஞ்சைக்குச் செய்கிறீர்களே, எங்களுக்குச் செய்யவில்லையே என்று கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. பன்னீர் செல்வம் அவர்களும், உறுப்பினர் திரு. அழகிரி அவர்களும் இதுகுறித்து என்னிடம் நிறையப் பேசியிருக்கிறார்கள். தலைவர் அவர்களிடத்திலேயும் கேட்டிருக்கிறார்கள். தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில், நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டுவந்த காவிரிப் பாசன வாய்க்காலில் தூர்வாரும் பணி, 1997-98-ஆம் ஆண்டில் ரூ.10 கோடிக்கும் அதிகமான செலவில் சிறந்தமுறையில் செயலாக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில், இப்பணிக்காக 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம், சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் உள்ள முக்கியமான பெரிய ஏரிகளான வாலாஜா ஏரி, பெருமாள் ஏரி, பொன்னேரி, நடுக்குறவனாறு, வெளியங்கால் ஓடை, பாசிமுத்தனோடை மற்றும் சிறுசிறு வாய்க்கால்கள், கண்மாய்கள் எல்லாம் தூர்வாரும் பணிக்காக, பொதுப் பணித் துறை மதிப்பீடு தயாரித்துள்ளது. இப்பணிக்கென்று ஏற்கெனவே அனுமதித்த ரூ. 20 கோடியுடன், கூடுதலாக ரூ. 3 கோடியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். ஆக மொத்தம் 23 கோடி ரூபாய நிதியும் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் ஆகிய இந்த நான்கு மாவட்டங்களில், காவிரி பாசனப் பகுதிகளின் கால்வாய்கள், கண்மாய்கள் ஆகியவற்றைத் தூர் வாருவதற்குப் பயன்படுத்தப்படும்.





அடுத்து, சென்னை மாநகரின் வெள்ளக்கட்டுப்பாடுத் திட்டங்கள், சென்னை மாநகரில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற்காக, பெருமளவில் ஒருங்கிணைந்த திட்டங்கள் பலவற்றைச் செய்ய ரூ. 300 கோடியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள். இதில் கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் முதலிய நகரின் நீர்வழிகளைத் தூர்வாருதல், கூவம், அடையாறு ஆகிய ஆறுகளின் கரைகளைப் பலப்படுத்துதல், கரைகளின் அருகிலே தடுப்புச் சுவர்கள் கட்டுதல், மேலும் சென்னையில் பெருவெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளாகும் தணிகாசலம் நகர், மணலி போன்ற இடங்களுக்கு வெள்ள நிவாரணம் அளித்தல் போன்ற பெரும் பணிகள் அடங்கும். மேலும் நகரில் பெருநீர் வடிகால்களுக்கு வந்துசேரும் மாநகர வடிகால் வாய்க்கால்களைப் புதுப்பித்தல், தேவைப்படும் புதிய வடிகால் வாய்க்கால்களை அமைத்தல் போன்ற பணிகளும் இதில் அடங்கும்.

இப்போது நான் குறிப்பிட்ட இந்தத் திட்டங்களில் இதுவரை ஓட்டேரி நல்லா, மத்திய பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றில் தூர் வாரும் பணிகள் செய்து முடிக்கப்படும் நிலையில் உள்ளன. இதன் தொடர்ச்சியாக வட சென்னைப் பகுதியில் உள்ள வடக்கு பக்கிங்காம் கால்வாய் தூர்வாரும் பணிக்கு ரூ.5.72 கோடி, தென் சென்னைப் பகுதியில் மறைமலையடிகள் ஆற்றுப் பாலத்திற்கு மேற்கே அடையாறு, ஆற்றின் இடது கரையில் ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்குத் தடுப்புச் சுவர் கட்டுதலுக்கு ரூ. 4.7 கோடி, மற்றும் தணிகாசலம் நகருக்கு வெள்ள நிவாரணத்திற்கு ரூ. 18 கோடி ஆகிய பணிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தாம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வைதியலிங்கம் அவர்களும், தென் சென்னை பாராளுமன்ற உறுப்பினர் நண்பர் டி.ஆர். பாலு அவர்களும் இதுகுறித்து, திரும்பத் திரும்ப அரசிடம் கேட்டு, முதல்வர் அவர்களிடத்திலேயும் பல மனுக்களைக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் இங்கே இருந்தால் மகிழ்ச்சியடைவார்கள். மழைக்காலங்களில் அடையாற்றில் மிகுதியான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, கரையோரப் பகுதிகள் மூழ்கும் நிலை ஏற்பட்டு, பெருத்த நட்டத்தை மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம், படப்பை, கூடுவாஞ்சேரி, மண்மங்கலம், சோமங்கலம் ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் பெருக்கெடுத்து வரும் வெள்ளம், திருநீர்மலை என்கிற இடத்தில் அடையாற்றில் கலப்பதால்

மட்டுமல்லாமல், மழைக்காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வரும் உபரி நீரும் அதே திருநீர்மலையிலேயே அடையாற்றில் கலப்பதாலும்தான். இப்படி வரும் பெருவெள்ளம் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது. எனவே, அடையாற்றில் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளத்தைத் தவிர்க்கவும், வீணாக அந்த நீர் கடலில் கலப்பதைத் தடுத்துத் தேக்கி வைப்பதற்கும், அதன்மூலம் மக்களுக்குக் குடிநீருக்காகப் பயன்படுத்தும் நோக்கத்தில் நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதன்மூலம் நிலத்தடி நீர் குறையும் காலங்களில் கடல் நீர் நிலப் பகுதிக்குள் நுழைந்து குடிநீரை உப்பு நீராக மாற்றுவதையும் தடுக்க முடியும். மேலும் வளர்ந்து வரும் சென்னை மாநகரின் விரிவாக்கத்திற்கும், பெருகிவரும் தொழிற்சாலைகளுக்கும் இந்த நீர் எதிர்காலத்தில் பயன்படும். எனவே, திருநீர்மலையில், அடையாற்றின் குறுக்கே பல நோக்கு கொண்ட ஒரு நீர்த்தேக்கம் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இது குறித்து, விரிவான ஆய்வை, பொதுப் பணித் துறை உடனடியாக மேற்கொள்ளும். இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற, பலமுறை இதுபோன்ற மழைக்காலங்களிலும் மற்ற மற்ற நாட்களிலும், இந்தப் பகுதிகளுக்கெல்லாம் என்னைப் பலமுறை நேரில் அழைத்துச் சென்று, இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று வற்புறுத்தியவர், இப்பேரவையின் உறுப்பினர், சென்னை மாநகரத்தின் மேயர் மு.க. ஸ்டாலின் அவர்கள்தான் என்றும், அவருக்கு இத்திட்டத்தில் பெரிய அளவில் பெருமையும் உண்டு என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

குளங்களில் தூர்வாருதல், குளங்களின் புனரமைப்புக்காகப் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 1997-98 ஆம் ஆண்டு சிறப்புப் பணியாக எடுத்துக் கொள்ளப்பட்ட 200 குளங்களில் தூர் வாரும் பணிக்கு பொது மக்களிடம் நல்ல வரவேற்புள்ளது. சென்ற ஆண்டில் 200 குளங்களில் தூர்வாரும் பணி முடிக்க 19 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டில் பருவ மழையின் தீவிரத்தால் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குளங்களில் நீர்வரத்து கணிசமாக இருந்ததனால் இப்பணிக்கு ரூபாய் 991 இலட்சங்கள் மட்டுமே சென்ற நிதியாண்டில் செலவிட முடிந்தது.



மீதியுள்ள பணிகள் நடப்பு நிதியாண்டில் செய்து முடிக்கப்படவுள்ளன. செய்து முடிக்கப்படவேண்டிய தூர்வாரும் பணிக்கு இவ்வாண்டில் 10 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள இந்தத் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில் கூடுதலாக 200 குளங்களை எடுத்துக்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் இசைவினை அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்கென ரூபாய் 500 இலட்சங்கள் கூடுதலாக இவ்வாண்டே அனுமதித்துள்ளார்கள். ஆகவே, இந்த நிதியாண்டில் மொத்தம் ரூபாய் 1591 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்ட 200 குளங்களுடன் மேலும் 200 கண்மாய்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு மொத்தம் 400 கண்மாய்க்களைத் தூர்வார இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

காவிரி ஆறு, குளித்தலை பாலம் பகுதியில் மணல் மேடுகளையும், நெய்வேலி காட்டாமணக்கு மற்றும் புதர்களையும் அகற்றி ஆற்றினைச் சீர்படுத்துதல். காவிரி ஆற்றின் நடுவிலும் ஓரங்களிலும் புதர்களும் மணல் மேடிட்டும், செடிகொடிகள் அடர்ந்தும் பல இடங்களில் தீவுகள் போல இருப்பதால் அவை நீரோட்டத்திற்குப் பெருந்தடையாக இருப்பதோடு, வெள்ளக் காலங்களில் விரைந்தோடி வரும் நீர் தடைபட்டு வெள்ளப்பகுதிகளில் ஓடி கரைகளை அரித்து எடுத்துச் சேதம் ஏற்படுத்துகிறது. இதனால் ஆற்றின் அளவும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, புதர் அதிகமாக மண்டிக் கிடக்கும் இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, காவிரி ஆற்றின் குறுக்கே குளித்தலைக்கு அருகே கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு மேற்புறம் 5 கிலோ மீட்டர் தூரமும் கீழ்புறம் 5 கிலோ மீட்டர் தூரமும் மொத்தம் 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மண் திட்டுக்களையும், செடி கொடிகளையும் அகற்ற ரூபாய் 50 இலட்சம் இவ்வாண்டு நிதியொதுக்கம் செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது இசைவினை அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, காந்தி மண்டபம் பகுதியை அழகுபடுத்தும் திட்டம்: சென்னை மாநகரத்தில், கிண்டி பகுதியில் அமைந்துள்ள தேசத் தந்தை காந்தியடிகள், மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரின் நினைவிடங்களில் முகப்பு வாயில்கள் அமைக்கவும், மின் அலங்கார விளக்குகள் பொருத்தவும், புல் வெளியைப் பேணி பாதுகாக்கவும் சுற்றுப்புறச்சூழலை எழிலோடு வைக்கவும் உடனடியாக

[திரு. துரைமுருகன்] [1998 ஏப்ரல் 22

பொதுப் பணித் துறையினர் பணியைத் தொடங்க இருக்கிறார்கள் அதற்கான நிதியை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிறப்பு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் அணைப் பகுதிகளிலுள்ள பூங்காக்களையும் மற்றும் புல்வெளி அமைப்புகளையும் நவீனப்படுத்துதல். தற்போது தமிழ்நாட்டில் 22 அணைப் பகுதிகளில் பூங்கா மற்றும் புல்வெளி அமைப்புகளைப் பராமரிக்க ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி அணைப் பகுதிப் பயனீட்டிற்கே செலவாகிறது. அணைப் பகுதிகளில் தற்போதுள்ள அமைப்புகளை நவீனப்படுத்தினால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் அதன்மூலம் அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தவும் வாய்ப்புள்ளது. 1998-99ஆம் ஆண்டு கீழ்வரும் 11 அணைப் பகுதிகளிலுள்ள பூங்காக்களை ரூ. 3 கோடி செலவில் நவீனப்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது இசைவினை அளித்திருக்கிறார்கள். (1) மேட்டூர் (2) கிருஷ்ணகிரி (3) சாத்தனூர் (4) அமராவதி (5) வைகை (6) ஆளியாறு (7) பவானிசாகர் (8) மணிமுத்தாறு (9) வீடுர் (10) கோமுகி (11) முக்கொம்பு. மேலும் அணைக்கட்டுப் பகுதிகளில் உள்ள பூங்காக்களிலும், புல்வெளி அமைப்புகளிலும் தற்போதைய நுழைவுக் கட்டணத்தை மாற்றியமைத்து அரசின் வருமானத்தை அதிகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, பாசன உதவியாளர்கள் பற்றிப் பேசினார்கள். பொதுப் பணித் துறையில் பாசனத் திட்டத்தின்கீழ் 10 கிலோ மீட்டர் நீள பாசனக் கால்வாய்கள் அல்லது 2500 ஏக்கர் ஆயக்கட்டுப் பரப்பிற்கு அணையிலிருந்து திறந்துவிடப்படும் நீரைச் சரியான முறையில் பகிர்ந்தளிப்பதும் மற்றும் அணைகள், வாய்க்கால்களைச் சீரான முறையில் பராமரிப்பதும் பாசன உதவியாளர்களின் பணிகளாகும். இப்பணிகளைக் கவனிக்கும் பொருட்டு தமிழ்நாடு முழுவதும் 2530 பாசன உதவியாளர்கள் பதவியிடங்கள் நிரந்தரமான அடிப்படையில் ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பதவிகளில் சுமார் 1089 பதவிகள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளன. நாட்டின் அடிப்படை வசதியான தண்ணீர், உணவு, மின்சாரம் போன்றவற்றின் உற்பத்தித் திறனுக்காகவும், விவசாயிகளின் தேவைகளுக்காகவும், காலியாகவுள்ள 1089 பாசன உதவியாளர்கள் பதவிகளில்



1998 ஏப்ரல் 22] [திரு. துரைமுருகன்]

1997-98 ஆம் ஆண்டில் 500 பாசன உதவியாளர்கள் பதவிகளை நிரந்தர அடிப்படையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வாயிலாக உடனடியாகப் பணியமர்வு செய்துகொள்ள அரசு முடிவு எடுத்திருக்கிறது.

பிற்பகல் 1-10

அடுத்து, கிருஷ்ணகிரி மற்றும் சாத்தனூர் அணைக்கட்டுகளில், அணைப் பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதி பராமரிப்புக்கான மின் பயனீட்டுக் கட்டணம் வர்த்தக ரீதியில் மொத்த பயனீட்டு அளவிற்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆனால் குடியிருப்போர் இத்துறையில் வீட்டு வசதிக்கான பயனீட்டு அளவு அதற்குரிய வீதத்தில் பெரும் பகுதி வீட்டு உபயோகத்திற்காகவே செலவிடப்படுகிறது. தற்போதுள்ள மின் விநியோக அமைப்பு. அணைப் பகுதி மற்றும் குடியிருப்புப்பகுதி விநியோகத்தைப் பிரிக்கும் வகையில் இல்லை. எனவே இவ்வமைப்பை ஒருமுறை மட்டும் முதலீடு செய்து மாற்றியமைப்பதால் மின் வாரியத்திற்கு மின் கட்டணம் செலுத்தும் வகையான செலவினம் அரசுக்கு மிகக் குறையும். பரிட்சார்த்தமாக கிருஷ்ணகிரி மற்றும் சாத்தனூர் மின் அமைப்பு விநியோக முறையை மாற்றி அமைக்க 22 இலட்சங்களை ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவினை அளித்துள்ளார்கள்.

அடுத்து, இப்போது மாண்புமிகு உறுப்பினர் வேல்துரை அவர்கள்கூடச் சொன்னார்கள். மணிமுத்தாறிலே என்ன பிரச்சினை என்றால், மணிமுத்தாறு கால்வாயிலே தண்ணீரைத் திறந்து விட்டால்தான், அதைப் பலப்படுத்துகிற ஒரு காரியம் நடக்கும். ஆனால் அதற்காக நாம் இப்போது கார் பருவத்திற்குத் தண்ணீரைத் திறந்து விடுகிறோம். ஆனால் அதேநேரத்திலே மணிமுத்தாறு பகுதியிலே உள்ளேயிருக்கிற மற்றவர்களுக்கு, தண்ணீர் குறைந்துவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள். சமீபத்திலேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் வேல்துரை அவர்களும், ஆவுடையப்பன் அவர்களும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். மணிமுத்தாறு அணை தாமிரபரணி பாசன வசதியை உறுதிப்படுத்தும் வகையில் கட்டப்பட்டது. மணிமுத்தாறு அணை கட்டப்படுவதால் பாதிக்கப்படும் பெருங்கால் பாசன வசதிக்காக ஜூன் மாதம் 1-ஆம் தேதி முதல் மார்ச் 31-ஆம் தேதி வரை நீர் வசதி செய்யுமாறு மணிமுத்தாறு அணை கட்டும்போதே விதிகள் செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் மணிமுத்தாறு அணை, மராமத்துச்

செய்யப்பட வேண்டியிருப்பதால் நீர்மட்டத்தைக் குறைக்க வேண்டியுள்ளது. எனவே இவ்வாறு நீர்மட்டத்தைக் குறைப்பதால் கிடைக்கக்கூடிய தண்ணீரை அரசு. 12-1-1996 நாளிட்ட ஜி.ஓ.வின் அடிப்படையில் பழந்தொழில் சாகுபடி உபயோகத்திற்கு தனி அரசாணை மூலம் வழங்கப்படுகிறது. பெருங்கால் பாசனம், பழந்தொழில் சாகுபடிக்கு உரிமையில்லாமல் இருந்தாலும், மணிமுத்தாறு அணையை மராமத்துச் செய்வதால் திறந்து விடும் தண்ணீரைப் பெருங்கால் பாசனத்திற்குத் திறப்பதை மே 1-ம் தேதியே திறந்துவிட வேண்டுமென்று, அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆவுடையப்பன், சேரன் மகாதேவி சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்துரை இவர்கள் வைத்த கோரிக்கைகளை ஏற்று, ஒரு விதிவிலக்காக மணிமுத்தாறு அணை மராமத்துக்காகத் திறந்து விடும் நீரில் ஒரு பகுதியை பெருங்கால் பாசனத்திற்கு மே 1-ம் தேதி முதல் கார் பாசனத்திற்காகத் திறந்துவிட இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இப்படித் திறப்பதை வருகிற ஆண்டுகளில் ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சட்டமன்ற உறுப்பினர்களையும் பொது மக்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. மதுரை, வண்டியூர் கண்மாய் மேம்பாடு. கடைசியாக, வண்டியூர் கண்மாய், மதுரை நகரில் சிவகங்கை பிரதானச் சாலைக்கு அருகில் உள்ளது. 2.5 கிலோ மீட்டர் நீளக் கரை கொண்ட இக்கண்மாயின் கொள்ளளவான 108 மில்லியன் கன அடி மூலம் 964 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கிறது. இதற்கு நீர் ஆதாரம் பெரியாறு பிரதானக் கால்வாய் ஆகும். இதன் பாசனப் பரப்பாகிய 964 ஏக்கரில் சுமார் 370 ஏக்கர் பரப்பில் குடியிருப்புகள் கட்டப்பட்டு நகர்ப்புறமாக மாறிவிட்டது. இந்த ஏரி மதுரை நகரிலே இருப்பதால், வெள்ளக் காலங்களில் உடைப்பு ஏற்பட்டு அருகிலுள்ள குடியிருப்புகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே இந்த ஏரியின் கரைகளைச் பலப்படுத்தி, தூர்வாரி, ஆழப்படுத்தி, மராமத்து செய்து, மதுரை மக்களுக்கு ஒரு பொழுதுபோக்கு இடமாக மாற்ற சுமார் 5 கோடி ரூபாய் செலவில் பூங்கா மற்றும் படகுத் துறை வசதி செய்ய திட்டமிடப்பட்டு, அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு பெரிய காரியத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்த



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும். மாண்புமிகு அமைச்சர் செல்வராசு அவர்களுக்கும் இந்தப் பெருமை சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதற்கு இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், இவ்வளவு பெரிய திட்டங்கள், அதற்கு அடுத்தடுத்த திட்டங்கள் இவ்வளவையும் செய்து கொண்டிருக்கிற இந்த ஆட்சி பொற்கால ஆட்சி. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பல கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். திரு. கருப்பையா அவர்கள் கீரியாற்றுத் திட்டத்தை ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்டார்கள். அது ஒரு பெரிய கதை. கீரியாற்றுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று, இன்று அல்ல, 100 வருடங்களுக்கு முன்னாலே 'மெக்டான்' என்ற ஒரு இன்ஜினியர் அம்பாசமுத்திரத்திற்கு வந்து பார்த்து விட்டு, இது பெரியாறின் துணை நதியாக இருக்கிறது, Tunnel மூலமாகத்தான் அமைக்க வேண்டுமென்று கூறியதுடன் 'It is not possible and feasible' என்று சொல்லி, கை கழுவிவிட்டுப் போய் விட்டார். ஆகவே கீரியாற்றுத் திட்டம் என்பது பழங்கதையாய், பொய்யாய் போன ஒன்று, இனி வராது. அதனால் அதுபற்றிப் பிரச்சினை இல்லை. ஆகையால் கீரியாற்றுப் பிரச்சினை போகட்டும், மீதியிருக்கிற பிரச்சினைகளையாவது தீர்க்கலாம். இங்கே எல்லோரும் கேட்டார்கள். கேரளாவுக்குப் போனார்கள், பேசினார்கள், அது வெற்றியா, தோல்வியா என்று. எதிலே வெற்றி? எதிலே தோல்வி? பேச்சுவார்த்தை நடத்துகிறோம். (குறுக்கீடு). பெரியாறு அணையைப் பற்றி குறிப்பிடுகிறீர்களா?

பிற்பகல் 1-15

நான் ஒரேவொரு கருத்தை இந்த அவையிலே சொல்கிறேன். பெரியாறு அணையினுடைய ஒப்பந்தம் 1886-லே ஏற்பட்டது. இந்த அணையைச் சுற்றி 8 ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. 999 வருடம் நமக்குச் சொந்தம். உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். 8 ஆயிரம் ஏக்கர் அணையைச் சுற்றி இருக்கிறது இந்த அணையில் 152 அடிக்கு தண்ணீரை நிறுத்திக் கொண்டு இருந்தோம். 1989-லே Central Water Commission என்று ஒன்று வந்தது. அதனுடைய தலைவர் தாமஸ். வந்தவர் இங்கே வரவில்லை. நேராக கேரளாவிற்குப் போனார். அப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதலமைச்சர். அங்கே வாருங்கள் என்று கூப்பிட்டார்கள். இவர்கள் அங்கே போனார்கள். உங்கள் அணை

சரியில்லை என்று சொல்கிறார்கள், ஆகையினாலே இந்த அணையைப் பலப்படுத்துங்கள் என்றார்கள். ஒத்துக்கொண்டோம் என்று சொன்னார்கள். உடனே என்ன செய்தார்கள் (குறுக்கீடு) I am Sorry, 1979. இவ்வளவு பேர்கள் பேசாமல் இருந்தார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் ஒரு எழுத்துப் பிழை சொன்னாலும், அதைக் கண்டுபிடிக்கிறார்கள். அதுதான் முதல்வர் பார்த்துக் கொள்ளுங்கள், அவரிடம் நாங்கள் எப்படி வேலை செய்கிறோம் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) என்ன ஆயிற்று என்று கேட்டால் 3 வகையான ரிப்பேர் பண்ணவேண்டும், அதாவது Emergency Measure, Long Term Measure and Medium Measure என்று போட்டு, அதிலே கேப் போடுவது போன்ற 3 வகையான ரிப்பேர் பண்ணவேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார்கள். அப்போது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், முதலிலே நீங்கள் எமர்ஜென்சிமெஷராக ஆர்சிசி. கேப் போட்டு ரெகுலர் பண்ணிவிட்டால் - அதுவரையிலும் நீங்கள் 136 அடி வரையிலும் நிறுத்தவேண்டும். எமர்ஜென்சி மெஷர் முடிந்த பிறகு 145 அடியிலே நிறுத்தவேண்டும், மீடியம் மெஷர் முடிந்தவுடனே 152 அடிக்குப் போகலாம் என்று சொன்னார்கள். இப்போது நாம் எல்லா வேலைகளையும் செய்துவிட்டோம்.

இப்படிச் செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று 1986-லே மறுபடியும் கூப்பிட்டார்கள். நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும், கூப்பிட்டவுடன், இது போதாது, 'Baby dam' என்று ஒன்று இருக்கிறது, அதையும் நீங்கள் பலப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இதை முதலிலே சொன்னீர்களா 1979-லே, என்று கேட்டதற்கு ஆமாம் இப்போது 1986-லே சொல்கிறோம், இந்த Baby dam-ஐப் பலப்படுத்துங்கள் என்றார்கள். சரி, வேறு என்ன செய்யவேண்டும் என்றபோது இன்னும் 3 வென்ட் - ஏற்கெனவே 10 வென்ட் இருக்கிறது. இன்னும் 3 வென்ட்-வைத்து, அது குதிக்கிற இடத்திலே எல்லாம் நன்றாகச் செய்யுங்கள் என்று சொன்னார்கள். அதற்கும் இவர்கள் அன்றைக்கு ஒத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். அப்போதே என்ன கேட்டிருக்கவேண்டும்? 1979-லேயிருந்து 1986-க்குப் போவதற்கு முன்னாலேயே எமர்ஜென்சி மெஷர் ஓர்க் முடிந்து போய் விட்டது, அப்போதே 136-லேயிருந்து 145-க்கு அலவ் செய்தால்தான். அடுத்து பேபி டாமிற்குக் கையெழுத்து போடுவேன், அகிரிமெண்ட்டுக்கு வருவேன் என்று சொல்லியிருக்கவேண்டும். ஆனால், அன்றைக்கு அடிமை முறிச்சீட்டு மாதிரி ஒத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். விளைவு



என்ன? இன்றைக்குக் கொண்டுபோய் நிறுத்திவிட்டார்கள். சரி, முடிந்துவிட்டது.

இப்போது அதையும் ஒத்துக்கொண்டு, 3 வென்ட் தண்ணீர் போவதற்கு - ஏற்கனவே 10 வென்ட் இருக்கிறது, இன்னமும் 3 வென்ட் - கட்டு என்றார்கள். கட்டிவிட்டு, இதிலேயிருக்கிற பிரச்சினையை இந்த அவைக்குச் சொல்கிறேன். தண்ணீர் கோடிக்குப்போகும் போது குதிக்கும்; குதிக்கும்போது கீழே போய் அரித்துவிடும் பூமியை அதற்குக் கீழே பெரிய கான்கிரிட் போட்டுக் கட்ட வேண்டும். அதற்குப் பெயர் 'ஏப்ரன்' என்று சொல்வார்கள். அல்லது Technical word என்று சொன்னால் Cascade type energy Dissipating arrangements என்று சொல்வார்கள். அப்படிக் கட்டும்போது, இந்தப் பக்கம் சுவர் இருக்கும். இந்தச் சுவரிலே தண்ணீர் படும். ஆகையினாலே அதற்கு ஒரு Retaining wall கட்டவேண்டும். இந்த இரண்டு வேலையையும் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அதற்கும் நாம் ஒத்துக்கொண்டோம்; அதாவது தமிழக அரசு ஒத்துக்கொண்ட பிறகு, கல் உடைக்க வேண்டும் பாருங்கள். நமக்கு 8 ஆயிரம் ஏக்கர் சொந்தமாயிற்றே. அங்கே இருக்கிற கல்லை உடைப்பதற்குப் போனோம். அதை உடைப்பதற்கு ஒரு டெண்டர் விட்டோம். எங்களைப் பார்த்து என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்களே, அவர்களுக்குச் சொல்கிறேன். டெண்டர் விட்டார்கள். இந்தத் திட்டத்தை நீங்கள் இப்படிச் செய்யவேண்டும் என்பதற்கு ஒத்துக்கொண்டு, டெண்டர் விட்டார்கள். 2-1-1995-லே டெண்டர் விட்டார்கள். ஒரு ஆளைக் கூப்பிட்டு இந்தமாதிரி கல்லை உடைத்துக் கட்டு என்று சொன்னார்கள் 2-1-1995-லே. அந்த டெண்டரை என்றைக்கு ஏற்றுக் கொள்கிறார்கள் கவர்ன்மென்ட் என்றால், 21-7-1995 இல். 'பிட்' ஓப்பனிங் என்றைக்கு? The date of opening the bid அதாவது டெண்டர் உடைத்தது 2-1-1995-லே The Government of Tamil Nadu accepted the tender on 21-7-1995 ஒரு டெண்டரை ஒத்துக்கொள்வதில் - ஏன் என்றால், அவ்வளவு வேகம் பாருங்கள். இந்த டெண்டரை ஒத்துக்கொள்வதிலே - அவ்வளவு வேகம். ஆனால் திடீரென்று என்ன செய்துவிட்டார்கள் என்றால், 9-8-1995-லே அவர்களிடம் சைட்டை கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு முடிந்தது. 21-11-1995-லே Assistant Wildlife Preservation Officer என்று ஒருவர் வருகிறார். வந்து 'Stop இந்த குவாரியை எடுக்காதே' என்று

சொல்லிவிட்டார்கள். ஞாபகம் வைத்து எழுதி வைத்துக்கொள்ளுங்கள். 22-11-1995 அன்று ஓர்க்கை Stop பண்ணிவிட்டார்கள். அதற்குப் பிறகு நான் ஒன்று சொல்கிறேன். 11-வது மாதம் 1995-ஆம் வருடம், ஸ்டாப் செய்தானே, ஏன் எங்கள் குவாரியை Stop பண்ணினாய், அது என்னிடத்திலேதான் இருக்கிறது. அலவ் பண்ணு என்று, கடந்த கால ஆட்சியில் ஒரு அமைச்சர் கேரள அமைச்சரைப் பார்த்துக் கேட்டதுண்டா? ஒரு கடிதம் எழுதியதுண்டா? மத்திய சர்க்காரிடத்திலே தெரிவித்தது உண்டா? இதுகுறித்து இந்த அவையிலே பேசியது உண்டா? அவர்கள் எத்தனையோ மாதங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. அடுத்து நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே கிட்டத்தட்ட 10,11 மாதங்கள் பேசாமல் இருந்து, நாங்கள் வந்ததற்குப் பிறகு கலைஞர் என்னை பொதுப் பணித் துறை அமைச்சராகப் போட்ட உடனே கேட்கிறேன், என்னவாயிற்று, Work Stop ஆகிப் போய்விட்டதே என்று. சார் 10, 15 மாதங்கள் ஆயிற்று என்றார்கள். உடனே 1-10-1996-ல் The PWD Minister sent a Fax Message to the Hon.Minister for Forest, Kerala Government. நான் இங்கே வந்தவுடனே ரிலீஸ் பண்ணுங்கள்; குவாரி எல்லாம் மடக்காதீர்கள் என்று சொல்லி நாங்கள் ஒரு ஃபேக்ஸ் கொடுத்துவிட்டோம். ஃபேக்ஸ் கொடுத்துவிட்டு, இங்கேயே உட்காரவில்லை. அடுத்து பாருங்கள்., 1-10-1996-ல் ஃபேக்ஸ் கொடுக்கிறேன். 12-11-1996-ல், The Hon. Minister for Irrigation, Tamil Nadu inspected the Periyar Dam site and given instructions to resume the work by bringing materials from outside the forest area.

பிற்பகல் 1-20

நானே நேரில் போய்ப் பார்த்தேன். எடுக்கமுடியவில்லை என்றாலும் பரவாயில்லை. இங்கே எடுத்துக் கொடுப்பதற்கு குவாரிக்கு எவ்வளவு பணம் போட்டிருக்கிறோம். இந்தக் குவாரியில் கல் இங்கே உடைக்க வேண்டாம் நீ கோம்பேயிலே எடுத்துக்கொண்டு வா, நாங்கள் அதற்கு Pay பண்ணுகிறோம் என்று சொல்லி வேலையை நிறுத்தக்கூடாது என்பதற்காக அதே இடத்தில் ஆர்டர் போட்டிருக்கிறேன். சரி போட்டுவிட்டோம் என்று நாங்கள் வந்துவிடவில்லை. உடனே என்ன செய்தோம்? 28-11-1996-ல் மினிஸ்டர் லெவலில் இங்கே அழைத்துப் பேசுகிறோம். அன்றைக்கு இந்தக் கதையெல்லாம் சொல்லி எல்லாவற்றையும் அவரிடம் சொல்லி அனுப்புகிறோம். அதற்குப் பிறகு



என்ன செய்கிறோம்? 8-1-1997-ல் மறுபடியும் ஓர்க் ஆரம்பித்து விட்டோம். 24-2-1997-ல் நானே நேரடியாகப் போய்--மறுபடியும் இந்தத் தகராறு ஹைக்கோர்ட்டு வரையிலும். வந்துவிட்டது. நானே போய்—கேரள முதலமைச்சர், கேரளத்தினுடைய இரிகேஷன் மினிஸ்டர் எல்லோரையும் திருவனந்தபுரத்திலே சந்திக்கச் சொன்னேன். அதற்குப் பிறகு நான் வந்து கலைஞரிடம் சொன்னேன். சொன்னவுடனே 23-8-1997-லே, The Hon. Chief Minister of Tamil Nadu has addressed the Hon. Chief Minister of Kerala to instruct the Forest Department not to obstruct the quarrying and strengthening work in Periyar Dam. குவாரிப் பணியைச் நிறுத்தாதே என்று ஒரு லெட்டர் எழுதினார். மறுபடியும் கேரள அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதச் சொன்னார் கலைஞர். ஏற்கெனவே 15-2-1997-ல் கேரள முதலமைச்சருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். 7-3-1997-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களே கேரள அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்.

ஆக ஒரு குவாரியை நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னதற்கு மட்டும் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் எத்தனை கடிதங்கள், எத்தனை இடங்களுக்குப் போய் இருக்கிறது? ஆனால் அத்தனை காலம் நிறுத்தினார்களே, 10, 11 மாத காலத்திலே ஒரு மந்திரி ஒரு லெட்டர் எழுதியது உண்டா? 152 அடி என்று நிறுத்தியதற்கு இந்த அரசாங்கத்திற்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்டார்களே, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்களே, You have no moral right to ask that question உங்களுக்கு எங்களைக் கேட்பதற்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் இந்த அரசு நடவடிக்கை. எடுத்திருக்கிறது. ஆனால் மக்களை ஏமாற்றுவதா? இன்னொன்றையும்கூடச் சொன்னார்கள். இங்கே எல்லோரும் திடீரென்று சொன்னார்கள். இப்போது தேசிய கொள்கை ஒன்று வகுத்துவிட்டோம்.—எல்லோருக்கும் சர்வரோக நிவாரணி என்று எங்கள் கிராமத்திலே சொல்வார்கள். உடம்பில் ஏற்படுகிற செம்மேகம், கருமேகம், குட்டை, குறுந்தை, வெள்ளை, மூலச்சூடு, வாதம், கண் எரிச்சல், கண்மந்தல், துர்நீர் வியாதிகள், பாதம் வெடித்துப்போதல், மூட்டுக்கு மூட்டு வலித்தல், தலைசுற்றல், மண்டைசுற்றல், கர்ப்பத்திலே ஏற்பட்ட சூடு அத்தனை வலிகளும் போய்விடும்., காலையிலும், சூரிய அஸ்தமனத்திலும் சாப்பிட்டு, இரண்டு வேளை அதைச் சாப்பிட்டால், சுட்ட புளி சுட்ட வெங்காயம் இல்லாமல் இருந்தால் வியாதி சொஸ்த்தம் என்று

சொல்வார்கள். (சிரிப்பு) எதைக் கேட்டாலும் சரி ஒரே அடி-- பெரியார் அணை, நாங்கள் அதற்கு தேசிய நீர்க் கொள்கை வகுத்துவிட்டோம், காவிரி, தேசிய நீர்க் கொள்கை வகுத்துவிட்டோம். எல்லாவற்றுக்கும் தேசிய நீர்க் கொள்கை வகுத்துவிட்டோம். தேசிய நீர்க் கொள்கை என்ற ஒனறு இருக்கிறது. அதை ஒன்றும் வகுக்கத் தேவையில்லை. ஏற்கெனவே பார்லிமெண்டில் ஒரு ரெசல்யூஷன் போட்டு தேசிய நீர்க் கொள்கை ஒன்று வகுக்கவேண்டுமென்பதற்காக National Water Resources Council என்ற ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்குப் பிரதம மந்திரிதான் தலைவர். எல்லா முதலமைச்சர்களும் அதிலே மெம்பர்ஸ். ஒரு குழு போட்டு National Water Resources Council ஆரம்பித்ததன் நோக்கம் என்னவென்றால் ஒரு தேசிய நீர்க் கொள்கையை வகுக்கவேண்டும். நீராதரத்தை நாம் எப்படி சிக்கனமாகப் பயன்படுத்துவது கிரவுண்ட் வாட்டரை எப்படிப் பயன்படுத்துவது என்று நாட்டிற்கென்று ஒரு தேசிய நீர்க் கொள்கை உண்டு. அதேமாதிரி தமிழ்நாட்டிற்கு என்று தமிழ்நாட்டினுடைய நீர்க் கொள்கை என்ற ஒன்று உண்டு. அதைப் புத்தகமாக நாம் போட்டிருக்கிறோம். ஒவ்வொரு மாநிலத்திலேயும் போட்டிருக்கிறார்கள். அந்தத் தேசியக் கொள்கையிலே என்னென்ன கொள்கையை வகுப்பது என்பதற்காக அந்தக் கவுன்சில், ஒரு பணிக் குழு, Working group போட்டார்கள். அந்த குரூப்பிலே தமிழ்நாட்டு முதலமைச்சரும் உறுப்பினர், கர்நாடக முதலமைச்சரும் உறுப்பினர். அப்போது கர்நாடக முதலமைச்சர் ஹெக்டே அவர்கள் என்ன செய்தார்? இந்தப் பணிக் குழுவிலே, கொள்கை வகுப்பதிலே inter state dispute வருகிற ஒரு 10 அம்சங்கள் பொருந்திய ஒரு கோரிக்கையைக் கொடுத்து, அதை விவாதிக்கவேண்டுமென்று சொன்னார். அந்த Working Committee என்ன சொல்கிறது என்றால், இது கொள்கை வகுக்கிற இடம். நீங்கள் கொடுப்பதிலே Conterverssy வருகிறது. எனவே நாங்கள் இந்தக் கோரிக்கையை எடுத்துக்கொள்ள மாட்டோம் என்று சொல்லிவிட்டு, அந்த 10 அம்ச கோரிக்கையைத் தள்ளிவிட்டு அவர்கள் கொள்கையை வகுத்துக் கொடுத்து விட்டார்கள். அவர்கள் விடவில்லை.

பிற்பகல் 1-25

அடுத்து என்ன நடக்கிறது என்று கேட்டால் ராஜீவ் காந்தி 9-9-1987-ல் வருகிறார். அவர் பிரைம் மினிஸ்டராக வந்தவுடனே அந்த National Water Resources Council-க்கு தலைமை தாங்கினார். அந்த



இடத்திலேயும் கொண்டு போய் திரு. ஹெக்டே அதைக் கொடுத்தார். இதை நீங்கள் விவாதிக்க வேண்டுமென்று சொன்னபோது ராஜீவ் காந்தி அழகாகச் சொன்னார்.

"Several tribunals set up under the Interstate Water Disputes Act have already given the awards which constituted case laws and he would be inclined to go by the consensus of the Working Group which had not included policy guidelines for Water allocations in the Inter-State rivers among the States, in the Draft National Water Policy."

ஏற்கெனவே, பல ட்ரிபியூனல்கள் அமைத்து அந்த ட்ரிபியூனல்கள் தன்னுடைய தீர்ப்பைக் கொடுத்து, அந்தத் தீர்ப்புகள் எல்லாம் இப்போது சட்டமாக ஆக்கப்பட்டிருக்கின்றன; எனவே, இந்தக் கொள்கையைக் கொண்டு வந்து இதிலே சேர்க்க வேண்டாம் என்று ராஜீவ் காந்தி தள்ளிவிட்டார். இதற்கிடையிலே வாட்டர் போர்டு என்று ஒன்று அமைத்தார்கள். அது எதற்கு என்று கேட்டோம். இந்த தேசியக் கொள்கையைக் கண்காணிப்பதற்கு என்று சொன்னார்கள். அந்த போர்டு என்ன செய்கிறது என்று கேட்டால், சரியாக பேசி, கடைசியில் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். வாட்டர் போர்ட் என்ன சொல்லியது என்றால் "National Water Guideline for allocation of Inter-State river waters"— என்று ஒரு 'தியரி' கொண்டு வந்துவிட்டார்கள். அதை அப்பொழுதே எதிர்த்தோம் நாம். உடனே நரசிம்மராவ் ஆட்சி வந்தது. அப்போது தேவகௌடா, சீப் மினிஸ்டர் கர்நாடகத்திலே. அவர் இந்த நேஷனல் கைடுலைன்ஸ் எல்லாம் வேண்டாம். இதை விட்டுவிட்டு நான் ஸ்டிராங்-ஆகக் கொடுக்கிறேன் என்று தனிப் புத்தகமே அடித்துக் கொண்டு வந்தார். நாம் ஒத்துக்கொள்ளவில்லை வந்து விட்டோம். அது முடிந்து போயிற்று. அதற்குப் பிறகு, இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இப்போது ஒரு புது உலகத்தை இப்போதுக் கொண்டு வருகிறார்கள். யாரை ஏமாற்ற என்று தெரியவில்லை. நேஷனல் வாட்டர் பாலிசி. Effective and prompt settlement of water disputes and time bound implementation. வாட்டர் பாலிசி எதற்கு என்றால், வாட்டர் டிஸ்பியூட்டை தீர்ப்பதற்கு. Effective, prompt and time bound settlement. இதை எஃபெக்டிவ்வாக எப்படித் தீர்க்க முடியும் என்பதற்கு நம்முடைய வக்கீல் அவர்கள் இந்த Inter-State Water Disputes Act மூலமாகத்தான் தீர்க்க முடியும் என்று சொல்கிறார். ஆகையினாலேதான் இந்தத் திட்டத்திலே என்ன

சொல்லப்பட்டிருக்கிறது என்று கேட்டால் தென் மாநில நீர் தாவா சட்டம் என்று ஒன்று உண்டு. அதிலே ஒன்று எஃபெக்டிவ்வாக வேகமாக செய்ய வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும். செக்ஷன் 3 பிரகாரம் ஒரு மாநிலம் போய் சென்டிரல் கவர்ன்மெண்ட்டுக்கு மனு கொடுத்து, எப்படியாவது இந்தப் பிரச்சினையை தீர்த்து வை என்று சொன்னால் அவர்கள் ஒரு டிரிபியூனல் போட வேண்டும். அந்த டிரிபியூனலை எவ்வளவு காலத்திற்குப் போட வேண்டும் என்று கிடையாது. ரொம்ப நாளைக்குக்கூட போடாமலேயே தள்ளிக் கொண்டு போகலாம். அதற்குத்தான் சர்க்காரியா கமிஷன் ஒரு ரெக்கமண்டேஷன் செய்தது. அந்த ரெக்கமண்டேஷன் என்ன என்றால் மனு கொடுத்த ஒரு வருடத்திற்குள்ளே அதைச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். நம்முடைய முதல்வர் கலைஞர் முதலமைச்சராக வந்த பிறகுதான் இண்டர் ஸ்டேட் சிப் மினிஸ்டர்ஸ் கான்பிரன்ஸிலே போய் உட்கார்ந்து இந்த சர்க்காரியா கமிஷன் பிரகாரம் ஒரு மாநிலம் தன்னுடைய குறையைச் சொல்லி அது தகராறை தீர்த்து வை என்று மத்திய அரசுக்கு ஒரு மனு செய்தால் ஒரு வருட காலத்திற்குள்ளாக அதற்கு ஒரு டிரிபியூனல் போட்டு விசாரிக்க வேண்டுமென்ற சர்க்காரியா கமிஷனுடைய ஒரு ரெக்கமண்டேஷனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பேசியவர் நம்முடைய முதல்வர் அவர்கள்தான். அதனுடைய விளைவு என்னவென்றால், அதற்கு ஒத்துக் கொண்டார்கள். அது சரி என்று ஒத்துக்கொண்டு டிரிபியூனல் போட்டுவிட்டார்கள். அதை எவ்வளவு நாளைக்கு எடுக்கிறது என்றால் அதற்கு கலைஞர் அவர்கள்தான் அந்தக் கூட்டத்திலே சொன்னார்கள், 3 வருடத்திற்குள்ளே தீர்ப்பு கொடுக்க வேண்டும், இல்லை என்று சொன்னால், மேற்கொண்டு போனால் போகட்டும் என்று 2 வருடம் கொடுக்கலாம் என்று. மூன்றாவது என்ன சொல்கிறார்? நடுவர் மன்றம் கொடுக்கிற அந்தத் தீர்ப்புக்கு Legal Validity The Inter State water Disputes Act, 1950, Section-B-ல் "The Inter State Water Disputes Act, 1950 should be amended so that a Tribunal's award has the same force and sanction behind it as an order or decree of the Supreme Court to make a Tribunal's award really binding." என்று உச்சநீதிமன்றத்திற்கு இருக்கிற அதிகாரம் டிரிபியூனலுக்கு வர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையினாலே இதிலே என்ன சொல்லியிருக்க வேண்டும். Prompt and effective implementation என்று



சொல்லக்கூடாது. இப்போது இந்த ஒரு தேசிய நேஷனல் அஜெண்டா போட்டதற்கு என்ன சொல்லியிருக்க வேண்டும் என்று கேட்டால், இதெல்லாம் எங்களுக்கு வேண்டாம். காவிரி நடுவர் மன்றம் கொடுத்த தீர்ப்பை அமல்படுத்துவதற்கு மத்திய அரசாங்கம் ஒரு ஸ்கீம் போட்டு இருக்கிறது. அந்த ஸ்கீமை நீங்கள் நோட்டிஃபை செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டும். அதைக் கேட்டிருந்தால் உங்களை நான் பாராட்டுவேன். அதைப்பற்றி ஒன்றுமே கிடையாது. அதுதான் சுப்ரீம் கோர்ட்டிலே நாம் போட்டிருக்கிறோம். என்ன சொல்கிறோம்? ஒரு நடுவர் மன்றம், இடைக்கால தீர்ப்பானாலும், அது இறுதிக்கால தீர்ப்பானாலும், அது கடைசித் தீர்ப்பானாலும் அது சட்டப்பூர்வமானது. அந்த ஆணையை நிறைவேற்றுவதைப் பற்றிய பொறுப்பு மத்திய அரசிற்கு உண்டு. மத்திய அரசு அதை எப்படியும் நிறைவேற்றலாம். இண்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் ஆக்ட்டிலே 6-ஏ இல் மாற்றலாம். அப்படி என்றால் என்ன செய்ய வேண்டும்? அதற்கு சில நியதிகள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையினால் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து நாம் ஸ்கீமை மேற்கொண்டு கேட்டோம். அதைக் கேட்டதற்கு அப்புறம்தான் 1992-லே போட்ட கேஸை நாம் இன்னும் மறுபடியும் ஸ்பீட்அப் செய்து இப்போது நாம் வந்ததற்குப் பிறகுதான் அதை ஒத்துக்கொண்டு மத்திய அரசு Cauvery Valley Authority-ஐ போட்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டால் நோட்டிஃபை செய்ய வேண்டும் அதைச் செய்வதற்குக் கேட்டு இருந்தீர்கள் என்றால் பாராட்டுவேன். நாங்கள் தேசிய கொள்கையைக் கொண்டுவரப் போகிறோம். தேசிய நீர்வளக் கொள்கையைக் கொண்டுவரப் போகிறோம். தேசிய நீர்வளக் கொள்கையைக் கொண்டுவரப் போகிறோம் என்றால் ஏற்கெனவே 3 தேசிய நீர்வளக் கொள்கைகள் உண்டு. Already there is an existing one. 1986-லே ஒரு தேசிய நீர்வளக் கொள்கை வந்துவிட்டது. நம்முடைய மாநிலத்திலே ஒரு நீர்வளக் கொள்கை இருக்கிறது. இடையிலே அவர்கள்

போட்டார்கள். கர்நாடகாவைச் சேர்த்துப் போட்ட கைடுலைன் நேஷனல் பாலிசி, அது உண்டு. அதுவா, இதுவா என்று தெரியாமல் மங்கிணிக்கு மங்கிணி கிங்கிணி கெட்ட கதையாய் கெட்டு போய் இரண்டையும் விட்ட நிலைமையிலே ஒன்றைக் கொண்டு வந்து விட்டுவிட்டு, இங்கே வந்து, எங்களை, என்ன செய்தீர்கள் என்று கேட்கிறீர்களே, கேட்பதற்கு முன்னே யோசித்துப் பார்க்க வேண்டாமா? இப்படி எத்தனையோ பிரச்சினைகள். ஆனால் ஒன்றை மட்டும் நான் தெளிவாகத் தெரிவித்து என்னுடைய உரையை நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

இன்னும் பல கருத்துக்கள் இருந்தாலும் அப்போதைக்கப்போது நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தெரிவித்த கருத்துக்கு எல்லாம் நான் அப்போதைக்கப்போது பதில் சொல்லியிருக்கிறேன். மீண்டும் பேசுவதற்கு வாய்ப்புகள் இருக்கும். நம்முடைய சொக்கர் அவர்கள், எந்தப் பிரச்சினை எங்கு இருந்தாலும், பம்பா அச்சன்கோயில் ரிவர் என்னவாயிற்று என்று கேட்டார். எனக்கு அதிலே விருப்பம்தான். பக்கத்தில் இருக்கிற லட்சுமணன் அவர்கள் பாண்டியாறு புன்னம்புழா இல்லை என்கிறார். அதுவும் எனக்கு விருப்பம்தான். இதுகுறித்து இருமுறை கலைஞர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இன்றைக்குக்கூட வேறு ஒரு நிலைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆகையினால் நாங்கள் திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். கேரள அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் பேச்சுவார்த்தைக்கே வர மறுக்கிறார். காரணம் எங்களுக்கு இன்னும் வெம்பக்கோட்டைப் பகுதியிலே இந்தத் தண்ணீர் போதுமா போதாதா என்பதை நாங்களே அளவு செய்ய முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆனால் ஒன்று. நம்முடைய சொக்கருக்கு அதில் இருக்கிற ஆர்வம் புரிகிறது. ஒரு நாள், இன்று இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் சொக்கர் அவர்களே கலைஞருடைய ஆட்சிதான் பம்பா அச்சன்கோயில் ரிவரையும் இந்த மாநிலத்திலே நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி) பாண்டியாறு புன்னம்புழா வருவதானாலும் அது அவருடைய காலத்தில்தான் வருமே தவிர மீண்டும் ஒரு இருண்ட காலம் வந்து அந்த இருண்ட காலத்திலே ஒளி தோன்றிவிடும் என்று மட்டும் நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம் என்று கூறி, வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். உங்கள் கோரிக்கை ஒவ்வொன்றையும் நான் அறிவேன். எனவே என்னிடத்திலே நம்பிக்கை வையுங்கள்.



சிவபுண்ணியம் கேட்டார். நான் காலையிலே சீஃப் என்ஜினியரிடம் கொடுத்துவிட்டேன். எனவே உங்களது பிரச்சினை இல்லை என்பதை நான் எடுத்துக் கூறுகிறேன். (குறுக்கீடுகள்) ஜம்பு ஏரிதானே அது கிடைக்கும். உங்களுக்கு மத்தலம் ஏரிதானே, கிடைக்கும். மாம்பழம் ஏரிதானே கிடைக்கும். சடையனேரிதானே கிடைக்கும். கோவலாப்பெட்டி முடிந்து போயிற்று. பி.டி. ராஜன் கால்வாய், ஒத்துக்கொண்டாகி விட்டது. உட்காருங்கள். உள்ளாறு திட்டம்தானே, கலைஞர் அடுத்த ஆண்டு கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். இதோடு என் உரையை நிறைவு செய்கிறேன் நன்றி வணக்கம்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் முதலிலே. நான் விளக்கம் கேட்க அனுமதித்தால் 10 பேர் கேட்கத் தயாராக இருக்கிறார்கள். நான் அறையிலிருந்து இந்த விவாதத்தைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். ஒவ்வோர் உறுப்பினரும் பேசும்போதும் மாண்புமிகு அமைச்சர் உடனே எழுந்து நின்று விளக்கம் சொல்லிக்கொண்டு இருந்தார். இப்போது 10 பேருக்கு நான் அனுமதி எப்படி கொடுக்க முடியும்.? நீங்கள் ஒரு நிமிஷம்தான் கேட்கிறீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் கால்வாயைப் பற்றி நாளைக்கு வெண்திரையில் காண்க என்று சொன்னார். இன்றைக்கு வெண்திரையில் காணோமே?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் கால்வாயைப் பற்றி என்னவென்று கேட்டார். நேற்றுதான் சொன்னேன். மற்றதை வெண்திரையில் காண்க என்பதுபோல் மானியத்திலே பாருங்கள் என்று சொன்னேன். சென்சாரிலே வெட்டி விட்டார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 35—பாசனம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35—பாசனம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.



**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை. திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்

அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பாசனம் பற்றிய 35ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.347,30,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



**(ஆ) கோரிக்கை எண் 36 - பொதுப் பணிகள்-கட்டடங்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36 – பொதுப்பணிகள் – கட்டடங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை. திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ. வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்:

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



"பொதுப் பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 66,99,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 54- பாசனம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54- பாசனம் குறித்த மூலதனச் செலவு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை. திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 262,33,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஈ) கோரிக்கை எண் 55—பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 55—பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் இஎஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இஎஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.162,87,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை 23-4-1998 காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1998 ஏப்ரல் 22

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

130. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 11-11-1997 ஆம் நாளிட்ட 265 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

131. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 19-11-1997 ஆம் நாளிட்ட 276 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

132. ஜெர்மனி தூதர் மற்றும் சிங்கப்பூர் தூதர் ஆகியோர் தங்கும் விடுதிகளுக்கு செலுத்த வேண்டிய ஆடம்பர வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 25-4-1997 ஆம் நாளிட்ட 132 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் மற்றும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரிவிதித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

133. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 4-6-1997 ஆம் நாளிட்ட II (2)/வ.வ.அ.நி. /1275/97 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 22-9-1997 ஆம் நாளிட்ட 25528/இ2/97-1; வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் கடிதத்தில வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் மற்றும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி விதித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



1998 ஏப்ரல் 22]

134. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 18-8-1997 ஆம் நாளிட்ட 255 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

105. பாசனம் மற்றும் கட்டடங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99(தமிழ், ஆங்கிலம்).

106. பொதுப்பணித் துறையின் கட்டடப் பணிகள் பற்றிய ஆய்வுரை, 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

107. பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம் 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

108. பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு—அரசு நலத்திட்டங்கள், அரசு நடைமுறை பற்றிய விவரங்களின் மக்கள் சாசனம், 1998 (தமிழ், ஆங்கிலம்)

109. பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரங்கள் அமைப்பின் மக்கள் சாசனம், 1998, (தமிழ், ஆங்கிலம்)

110. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை.1997-98

111. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை.1997-98

112. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. 1997-98.

113. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை, 1997-98.

114. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. 1997-98.

# இணைப்பு

*[239 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]*

**கோரிக்கை எண் 35—பாசனம்**

**கோரிக்கை எண் 36—பொதுப்பணிகள் - கட்டடங்கள்**

**கொள்கை விளக்கக் குறிப்பு—1998-99**

## நீரும் நிலனும்

*"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்;*
*உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;*
*நீரும் நிலனும் புணரியோர், ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;*
*வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்*
*வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்*
*இறைவன் தாட்குஉத வாதே; அதனால்,*
*அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே*
*நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்*
*தட்டோர் அம்ம, இவண்தட் டோரே;*
*தள்ளா தோர் இவண் தள்ளா தோரே"*

[வலிமிக்க வேந்தனே! நீ மறுமை இன்பத்தை விரும்பினாலும், உலகு முழுவதையும் வெல்ல வேண்டுமென நினைத்தாலும், நிலைபெற்ற புகழை விரும்பினாலும், அதற்குச் செய்ய வேண்டுவன யாவை எனக் கேட்பாயாக; நீர்மை இன்றி வாழாது உடல். அவ்வுடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவரும் ஆவர். உணவால் உளதாவதுதான் மனித உடல். உணவோ நிலத்தின் விளைவும், நீரும் ஆகும். நீரையும் நிலத்தையும் ஒருங்குகூட்டி வேளாண்மைக்கு உதவுக. அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர். புன்செய் நிலம் இடமகன்றும் விளையுள் பெருக்காமையினால் பயன் அற்றதாகும். எனவே, செழியனே! இதனை நீ எண்ணுக. நீர் தடிந்து குளம்தொட்டு நின் நாடு எங்கணும் வளம் பெருக்குவாயாக. இது செய்தோர் மூவகை இன்பமும் பெற்றுப் புகழடைவர்; அல்லாதோர் புகழ் பெறாது மடிவர் எனவும் உணர்வாயாக!]

*குடபுலவியனார்*

[illegible]

[1998 ஏப்ரல் 22

**1.0 முன்னுரை:**

பழமையும் பெருமையும் வாய்ந்த பொதுப்பணித் துறையின் "பாசனம் மற்றும் கட்டடங்கள்" மீதான கோரிக்கையை இம்மாமன்றத்தின் முன் வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுப்பணித் துறையானது, பெரியதும், நடுத்தரமானதும், சிறிய அளவிலானதுமான பாசனத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கும் அதனை பராமரிப்பதற்கும் மாநில அரசுத் துறைகளுக்கும் அரசின் இதர முகமைகளுக்கான கட்டடங்களை கட்டிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. நீர்த் தேவையைக் கோரும் எல்லா பகுதியினரும் பயன்பெறும் வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கீடு செய்து அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதே பொதுப் பணித்துறையின் நீர் வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களை சிறந்த தொழில்நுட்ப உதவியின் துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும், கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

**2.0 பாசனம் - நிறுவன அமைப்பு**

நீர்வளத்தொகுப்புத் திட்டத்தை செயலாக்குவதில் முதற்படியாகவும் அதனைத் திறம்படச் செயலாக்குவதன் பொருட்டும், தனித்தன்மையுடன் செயல் புரியவும் பொதுப்பணித்துறையை நீர்வள ஆதார அமைப்பு எனவும், கட்டடங்கள் அமைப்பு எனவும் 1995 டிசம்பர் முதல் பிரிக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நீர் பங்கீட்டு நிர்வாகம், நீர்வள ஆதார அமைப்பின் கீழ் வடிநிலவாரியாகப் பிரித்து பரவலாக்கப்பட்டு முறையே சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி, மதுரை, என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராக கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார்.



1998 ஏப்ரல் 22]

ஒவ்வொரு மண்டலத்தின் கீழ் வரும் வடிநிலங்கள், கிளை நதிகள், துணைக் கிளை நதிகள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நீர்வள ஆதார அமைப்பானது கீழே குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது.

**1. முதன்மைத்தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை**

நீர்வள ஆதார அமைப்பின் தலைவராகவும் கொள்கை முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளவரும் ஆவார். நீர்வள ஆதார அமைப்பின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பு வகிக்கிறார். திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பவர், வரவு-செலவுத் திட்டத்தை நிர்வகிக்கும் அதிகாரி.

**2. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை**

திட்டங்களின் ஆயத்த அறிக்கை மற்றும் முடிவான சாத்திய அறிக்கை தயாரித்தல், திட்டங்களில் சுற்றுப்புற சூழலினால் ஏற்படும் விளைவுகளை கணக்கிடு செய்தல் ஆகிய பணிகளைச் செய்தல்.

**3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு ஆராய்ச்சி, மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை**

வடிவமைப்புகளின் தரங்களை இன்றைய சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் உயர்த்துதல், நடைபெற்றுவரும் திட்டங்களுக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரித்தல், மேலும் ஐரோப்பிய குழுமத்தின் உதவியுடன் நடைபெறும் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தை செயலாக்குதலுக்கு பொறுப்பு வகித்தல்.

**4. தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை**

நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்வழங்கு அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான கொள்கைகளை வகுத்தல், நீர்வளத் தொகுப்பு திட்டத்தின்கீழ் விவசாயிகள் அமைப்பு மற்றும் அதன் பங்கு இவற்றை வகுத்தல், பாசன முறை மேம்பாடுகளில் விவசாயிகளின் பங்கேற்பு இவைகளுக்கு பொறுப்பு வகித்தல்.

**5. தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நிலமேற்பரப்பு நீர் ஆதார விவர மையம் சென்னை**

மேற்பரப்பு, நிலத்தடி நீர் மற்றும் வானிலை விவரங்கள் ஆகியவற்றைச் சேகரித்து, சரிபார்த்து, பராமரித்து, வெளியிடுதல், உலக வங்கி உதவியுடன் கூடிய நீரியல் திட்டத்தை செயலாக்கும் பொறுப்பு வகித்தல்.

**6. தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை**

சென்னை மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின் கீழ்வரும் அனைத்துப் பாசனத் திட்டங்களை செயலாக்குதல், பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

**7. தலைமைப்பொறியாளர், திருச்சி மண்டலம், திருச்சி**

திருச்சி மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின் கீழ்வரும் அனைத்து பாசனத் திட்டங்களை செயலாக்குதல், பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

**8. தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், பொள்ளாச்சி**

பொள்ளாச்சி மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின் கீழ்வரும் அனைத்து பாசனத் திட்டங்களைச் செயலாக்குதல், பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

**9. தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை**

மதுரை மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின் கீழ்வரும் அனைத்து பாசனத் திட்டங்களை செயலாக்குதல், பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

**10. இயக்குநர், நீர் ஆய்வு நிறுவனம், சென்னை**

மாநிலத்தில் உள்ள அனைத்து வடிநிலங்களுக்கும் நீர்வரத்து கணக்கீடு செய்தல், தமிழ்நாடு நீர்வளக் கொள்கை சம்மந்தப்பட்ட விவரங்களுக்கு பொறுப்பு அலுவலர், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள நீர்வள ஆதார கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவையின் அங்கத்தினர் - செயலர் பொறுப்பு வகிக்கிறார்.



**11. இயக்குநர், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சி**

நீர்வள ஆதார அமைப்பின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து அலுவலர்களுக்கும், வேளாண் பெருமக்களுக்கும் பயிற்சி அளித்தல்.

**3.0 பாசன நிலை**

புவியியல் அடிப்படையில் 130 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பளவு கொண்டுள்ள தமிழ்நாடு, இந்திய மாநிலங்களில் 11-ம்இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு சுமார் 60 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் சுமார் 30 இலட்சம் எக்டேர் பரப்பானது அதாவது 50 விழுக்காடு கீழே குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதியைப் பெறுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | கால்வாய்கள் | 9.50 இலட்சம் எக்டேர் |
| 2. | ஏரிகள் | 9.00 இலட்சம் எக்டேர் |
| 3. | கிணறுகள்,<br>குழாய் கிணறுகள் | 11.50 இலட்சம் எக்டேர். |

**4.0 தமிழ்நாட்டில் பாசன மேம்பாடு**

4.1 தமிழ்நாட்டில் பெரியதும் மற்றும் நடுத்தரமான நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப்பரப்பானது 15.00 இலட்சம் எக்டேர் என தேசிய வேளாண்மைக் குழு 1976 ஆம் ஆண்டில் மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்ட துவக்கத்தில் 23 பெரியதும் மற்றும் நடுத்தர திட்டங்களின் மூலம் 11.00 இலட்சம் எக்டேர் பகுதிகளுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டது. ஒன்பதாவது திட்டக் காலத்தில் 1997-98 முடிய பாசனம் பெறும் பகுதி 14.76 இலட்சம் எக்டேராக உயர்ந்தது.

1998-99 ஆம் ஆண்டில் 1620 எக்டேர் கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 22

**4.2.0 அண்டை மாநில வடிநிலப்பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் திருப்பி விடுதல்.**

4.2.1. தமிழ்நாடு, அநேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்திவிட்டது. ஆனால் அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரப்பிரதேசம், ஆகியவை நல்ல நீர் வளம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதிகளில் உள்ள மிகை நீரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரை தமிழ்நாட்டுக்கு திருப்பிவிடுவதற்கு மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள அமைப்பினை தமிழ்நாடு அணுகியுள்ளது.

4.2.2. தேசிய நீர்வள அமைப்பானது, இந்திய தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்கிறது. மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறட்சியான பகுதிகள் பயன்பெறும் வகையில் கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் மிகுதியான நீரைத் திருப்புதலும் இதில் அடங்கும். இவ்வரசு இதுபற்றி கேரள அரசுடனும் மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

4.2.3. மஹாநதி - கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணாறு - பாலாறு - காவேரி - வைகை இணைப்புகளில் மிகுதியான நீரைத் திருப்புதல் குறித்தும் தேசிய நீர்வள அமைப்பின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அத்திட்டங்களின் சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கையும் தயாரிக்கப்படுகிறது.

4.2.4 இதனையன்றி பாண்டியாறு - புன்னம்புழா ஆறுகளில் பாசனம் மற்றும் நீர் மின் உற்பத்தி தேவைக்கான திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் முழு மூச்சாக தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

**4.3 பாசன நீர் பயன்பாட்டில் சிக்கனம்**

4.3.1 மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அனேகமாக முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் பெரியதும், நடுத்தரப் பாசன திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாகவே உள்ளது. இந்தச் சூழலில், தற்போதைய கால்வாய் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம் நீர் வீணாகாமல்



1998 ஏப்ரல் 22]

தடுப்பதுடன் நீரை சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இம்முயற்சியால் சேமிக்கப்படும் நீரைக் கொண்டுதான் புதிய பகுதிகளில் பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாக் சாகுபடி செய்யவும் இயலும்.

4.3.2. இந்நோக்கத்துடனே பெரியாறு - வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தும் பணி உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதே போல் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், உலக வங்கி உதவியுடன் சாத்தனூர், கோதையார், தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி பழைய கால்வாய்கள், சேத்தியாத்தோப்பு, மருதாநதி போன்றவற்றுடன் இதர பாசனப் பரப்பு அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்த பாசன கட்டுமானங்களை புனரமைத்தும், நவீனப்படுத்தியும், நீர் விநியோக அளவை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வகையிலும் ஆயக்கட்டு முழுமைக்கும் சரிசமமாக பாசன நீர் வழங்கும் முறையைப் பின்பற்றியும் உற்பத்தியளவையும் பண்ணை வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தைப் போலவே பொறியியல் சிறப்பியல்புகளும் வேறுபல சிறப்பியல்புகளும் கூடுதலாக உள்ள தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டமானது 1995-96 முதல் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5.0 நடைபெற்றுவரும் பாசனத் திட்டங்கள்**

பெரியதும் நடுத்தரமானதும் ஆகிய பாசன திட்டங்களுக்கு 1997-98 ஆம் ஆண்டில் ரூ.330.42 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் 173.02 கோடி தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டத்திற்கு அடங்கும். 1998-99 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டத்திற்கு ரூ.185.84 கோடி உட்பட ஒதுக்கப்பட்ட நிதியளவு ரூ.326.42 கோடி ஆகும்.

**6.0 பெரிய நீர்பாசனத் திட்டங்கள்**

தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர் அனேகமாக முற்றிலும் பயன்படுத்திவிட்ட நிலையில், பெரிய நீர்பாசனத் திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

[1998 ஏப்ரல் 22

**7.0 நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள்**

1997-98 ஆம் ஆண்டு தொடக்கத்தில் பின்வரும் நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வந்தன.

நடுத்தர பாசனத் திட்டங்கள்

1. பெரியாறு அணையை வலுப்படுத்துதல் (பீர்மேடு, கேரள மாநிலம்)

2. நங்கஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்)

3. இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

சிறுபாசனத் திட்டங்கள் (2000 எக்டேருக்கு குறைவான பாசன நிலங்களுக்கு பாசனமளிக்கும் நீர்த் தேக்கங்கள், அணைக்கட்டுகள் கட்டுதல்)

4. பொய்கையாறு நீர்த்தேக்கம் (கன்னியாகுமரி) (நீ.ஆ.ஓ.தி.)

5. நம்பியாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி) (நீ.ஆ.ஓ.தி.)

6. இராஜாத்தோப்புகானாறு நீர்த்தேக்கம் (வேலூர்) (நீ.ஆ.ஓ.தி.)

7. கவுண்டின்யாநதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (வேலூர்) (நீ.ஆ.ஓ.தி)

8. அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம் (திருநெல்வேலி) (நீ.ஆ.ஓ.தி.)

9. அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் (விருதுநகர்) (நீ.ஆ.ஓ.தி.)

10. வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி) (நீ.ஆ.ஓ.தி.)

11. கொடுமுடியாறு திட்டம் (திருநெல்வேலி) (நீ.ஆ.ஓ.தி.)

12. வராகநதி சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (மதுரை) (நீ.ஆ.ஓ.தி.)

13. சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி)

14. மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம்) (நீ.ஆ.ஓ.தி.)

15. கொள்ளிடம் ஆற்றின் ஊற்று நீரை கான்சாகிப் கால்வாய்க்குத் திருப்பி விடுதல் (கடலூர்)



1998 ஏப்ரல் 22]

16. 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல் (மதுரை).

17. ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர்)

18. செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை)

19. வறட்டாறு - குப்பத்து ஓடை நீர்த்தேக்கம் (திருநெல்வேலி)

**8.0 நடைபெற்றுவரும் நடுத்தரப் பாசனத் திட்டப் பணிகளின் முன்னேற்றம்**

**8.1 பெரியாறு அணையை வலுப்படுத்துதல்**

தேக்கடிக்கு அருகில் உள்ள பெரியாறு அணை, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 57870 எக்டேர் நிலங்களுக்கு பாசன நீர் அளிக்கும் முக்கியமான பாசன ஆதாரமாகும்.

திருவாங்கூர் மகாராஜா, இந்தியாவில் மாநிலங்களுக்கான மாண்புமிகு செயலர் இவர்களுக்கிடையே 1886 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 999 ஆண்டுகளுக்கான குத்தகை ஒப்பந்தத்தின்படி 152 அடி அளவுக்கு நீரைத் தேக்கக் கூடிய வகையில் பெரியாறு அணை 1887-1895 ஆம் ஆண்டுகளுக்கிடையில் கட்டி முடிக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டில் அணையின் பலம் மற்றும் பாதுகாப்பு குறித்த கவலை எழுந்த போது இது குறித்து தேசிய நீர் குழுமத்தின் கருத்து மற்றும் ஆலோசனை கேட்கப்பட்டது. தேசிய நீர் குழுமம் இரு மாநில அதிகாரிகளுடன் கூட்டாகப் பேச்சு வார்த்தை நடத்தியபின், பின்வரும் தீர்வு நடவடிக்கைகளுக்கு யோசனை தெரிவித்தது.

**1. உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை**

(i) அணையின் தலைப்பகுதியில் கற்காரை இட்டு தலைப்பகுதியை 6 அடி அகலப்படுத்துதல்.

(ii) கூடுதல் நீர்ப்போக்கிகள் அமைத்தல்.

**2. நடுத்தர காலப் பணிகள்**

மிக உயர்தரமுள்ள இரும்பு கம்பிகளை அணையின் தலைப்பகுதியிலிருந்து கடைக்கால் பகுதி வரை செலுத்தி பாறையுடன் சேர்த்துப் பொருத்துதல்.

[1998 ஏப்ரல் 22

3. நீண்ட காலப் பணிகள்

அணையின் பின்புறத்தில் கற்காரை இட்டு வலுப்படுத்துதல்.

4. நிவர்த்திப் பணிகளை செயல்படுத்த ஏதுவாக தற்காலிகமாக நீர்த்தேக்கத்தின் நீர்போக்கி கதவுகளை முழுமையாக உயர்த்தி நீர்மட்டத்தை 136 அடியில் நிறுத்தி வைத்தல்.

தொடர்ந்து சிற்றணையையும் வலுப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டது.

அணையின் உடனடிப் பணிகளும் நடுத்தர காலப் பணிகளும் செய்யப்பட்ட பின்பு 145 அடி உயரம் வரை தண்ணீரைத் தேக்கவும் அணைத்து வலுப்படுத்தும். பணிகள் முடிவுற்றப்பின் முழு அளவான 152 அடி உயரத்திற்கு தண்ணீரைத் தேக்கவும் இயலும்.

இனம் 1(ii) ல் குறிப்பிட்டுள்ள கூடுதல் நீர்ப்போக்கிகளின் கீழ் நீர் வேகக்கட்டுப்பாட்டு கட்டுமான பணிகளைத் தவிர இனம் 1 லிருந்து 4 வரை அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. மேற்குறிப்பிட்ட நீர்வேகக்கட்டுப்பாட்டு கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சிற்றணை வலுப்படுத்தும் திட்டத்திற்கான கருத்துரு கேரள அரசின் ஒப்பிசைவுக்காக அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கேரள அரசின் பாசனத் துறை அமைச்சருடன் பெரியாறு சிற்றணை வலுப்படுத்தும் திட்டத்திற்கான ஒப்பிசைவு மற்றும் பெரியாறு அணையில் ஆரம்பத்தில் 145 அடி வரை நீரினைத் தேக்கி பிறகு அனைத்துப் பணிகள் முடிவுற்றதும் 152 அடி வரை நீரைத் தேக்குவதற்கான இசைவு சம்மந்தமாக கலந்தாலோசனை செய்தார். இதுபற்றிய ஒரு முடிவான ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். இதற்கு ஒரு நல்ல முடிவினை எடுக்கும் பொருட்டு தமது அளவில் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான நாள் குறிக்குமாறு கேரள முதலமைச்சருக்கு 1998-ல் தமிழ்நாடு முதலமைச்சர் நேர்முக கடிதங்கள் எழுதியுள்ளார்.



1998 ஏப்ரல் 22]

**8.2 நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இடையன்கோட்டை கிராமத்தினருகில் அமராவதியாற்றின் கிளையாறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே இந்நீர்தேக்கம் ரூ.2070 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டத்திலுள்ள இடையன்கோட்டை, வளயபட்டி சின்னக்காமாபட்டி கிராமங்களிலும் மற்றும் கரூர் மாவட்டம் கரூர் வட்டத்திலுள்ள சேந்தமங்கலம் கிராமத்திலும் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும் 2530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் தானியங்கி நீர்வழிந்தோடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண் அணை அமைக்கும் பணியும் முக்கிய கால்வாய் வெட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளது. பகிர்மானக் கால்வாய் வெட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மொத்தத்தில் சுமார் 75 விழுக்காடு வேலைகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.3780 இலட்சத்திற்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**8.3 இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாறு ஆற்றின் குறுக்கே ரூ.2870 லட்சம் மதிப்பீட்டில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தூத்துக்குடி, மாவட்டம் விளாத்திக்குளம் வட்டத்தில் இராஜாபட்டி, மாரர்பட்டி, சக்கிலிப்பட்டி, தப்பாத்து, கீழநாட்டுகுறிச்சி, மேலகரண்டை, செங்கோட்டை, கீழ்கரண்டை, வடமலபுரம், வெளவால் தொட்டி, வேதப்பட்டி ஆகிய கிராமங்களில் மொத்த 3705 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்கு பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் கிடைக்க வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தில் கால்வாய் வெட்டும்பணி 70 விழுக்காடு முடிவடைந்துள்ளது. நீர்வழிந்தோடி கட்டும் பணி 1998-99 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

[1998 ஏப்ரல் 22

### 8.4 பொய்கையாறு நீர்த்தேக்கம் (கன்னியாகுமரி மாவட்டம்)

இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் ஆரல்வாய்மொழி கிராமத்தின் அருகே பொய்கையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது.

மண் அணை அமைப்பதில் நிலுவையிலுள்ள பணிகள், குறுக்கு கட்டுமானப் பணிகள் உட்பட பிரதான கால்வாய், உபரி நீர்க் கால்வாய், இணைப்புக் கால்வாய் ஆகியன வெட்டும் பணிகள், சாலை அமைத்தல், சுற்றுச்சுவர் கட்டுவது போன்ற பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.946.36 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்திட்டத்தினால் தோவாளை வட்டத்தில் செண்பகராமன்புதூர், ஆரம்போலி கிராமங்களிலும் இராதாபுரம் வட்டத்தில் பழவூர் கிராமத்திலும் மொத்தமாக பிசாணம் பருவத்தில் 202 எக்டேர் புதிய புன்செய் பாசன வசதியும், 183 எக்டேர் நிலம் பாசன உறுதியும், 57 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் ,மண் அணை அமைக்கும் பணி (ஆற்றுப்பகுதி தவிர), உபரி நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, உபரி நீர்ப்பாதையில் மட்டம் தாழ்த்தும் மதகுகளில், முதல் நான்கு பணிகள் முடிந்துவிட்டன. புதிய பிரதான கால்வாய் வெட்டுதல் மற்றும் கற்காரை பூசுதல், குறுக்குக் கட்டுமானப்பணிகள் ஆகியவை நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 8.5. நம்பியாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த இராதாபுரம் வட்டத்தில் நம்பியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால், இராதாபுரம் வட்டத்தில் கோட்டை கருங்குளம், உருமாங்குளம், இராமநாதபுரம், கரை சிட்டிப்புதூர், கஸ்தூரி ரங்காபுரம், குமாரபுரம், முத்துமோதுமொழி மற்றும் திசையன்விளை கிராமங்களில் மொத்தமாக 152 எக்டேர் புதிய புன்செய் நிலத்திற்கு பாசன வசதியும், 185 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும், 369 எக்டேர் நிலத்திற்கு பாசன உறுதியும் கிடைக்கும்.



1998 ஏப்ரல் 22]

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி, வலதுபுற பிரதான கால்வாய் தலை மதகு கட்டும் பணி, வலதுபுற பிரதான கால்வாய் பணி ஆகியவை முடிவடைந்தது. இடதுபுற பிரதான கால்வாய் வெட்டும் பணி மற்றும் மணல் போக்கியுடன் கூடிய தடையில்லா உபரி நீர்போக்கி கட்டும் பணிகள் நீ.ஆ.தொ. திட்டத்தின்கீழ் துவங்கப்பட்டுள்ளன.

### 8.6. இராஜாதோப்புகானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த குடியாத்தம் வட்டத்தில் செஞ்சி கிராமத்திற்கு அருகில் இராஜாதோப்புகானாறு ஆற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைந்துள்ளது.

நிலுவையிலுள்ள அணை கட்டும் பணி, லத்தேரி, விளுந்தக்கால், ஒளியாத்தூர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் இணைப்புக் கால்வாய் மற்றும் கால்வாயில் 500 மீட்டர் நீளத்திற்கு கற்காரை பூசுதல், குறுக்கு வடிகால் பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.266.89 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வேலூர், மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் செஞ்சி, லத்தேரி, விளுந்தக்கால், ஒளியாத்தூர் மற்றும் சேனூர் கிராமங்களில் மொத்தம் 202 எக்டேர் நிலப் பரப்பிற்கு பாசன உறுதியும், 17 எக்டேர் விடுபட்ட நிலப்பரப்பிற்கு பாசன வசதியும் ஏற்படும்.

இத்திட்டத்தில் மண் அணை, உபரி நீர் போக்கி, உபரி நீர்ப்பாதை, கால்வாய் மதகு ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கைப்பிடிச்சுவர், மண் அணை மீது சாலை அமைத்தல் ஆகிய பணிகள் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன.

### 8.7 கவுண்டின்யாநதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த குடியாத்தம் வட்டத்தில் மோர்தானா கிராமத்திற்கு அருகே கவுண்டின்யா நதியின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

[1998 ஏப்ரல் 22

நீர்த்தேக்கம் கட்டுதல், ஜிட்டப்பள்ளியில் ஒரு எடுப்பு அணை (பிக் அப் அணை) கட்டுதல், எடுப்பு அணையிலிருந்து ஒரு பொது கால்வாய் செறுவாஞ்சியிலிருந்து களிஞ்சூர் வரை இடது புற பிரதான கால்வாய், மேலும் செறுவாஞ்சியிலிருந்து பாலார் வெளிப்போக்கி மற்றும் பாலார் குறுக்கிலிருந்து செதுப்பேரி வரை கால்வாய் வெட்டுதல், மோர்தானாவிலிருந்து சயனகுண்டா வரை அணுகு சாலை அமைத்தல் ஆகிய பணிகள் நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின்கீழ் ரூ. 2847.90 இலட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது. அதற்கான ஒப்பந்தம் முடிவடைந்துள்ளது.

இத்திட்டத்தினால் 1152 எக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி அளிப்பதுடன் குடியாத்தம், வேலூர், வாணியம்பாடி வட்டங்களில் 2585 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 285 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் ஏற்படும்.

**8.8. அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலுள்ள மேக்கரை கிராமத்தில் அனுமாநதி ஆற்றின் குறுக்கே இந்நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

கற்கட்டு அணை கால்வாய் பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 6089.97 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தினால் செங்கோட்டை மற்றும் தென்காசி வட்டங்களில் வடகரை கீழ் பிடாகை, வடகரை மேல் பிடாகை, பன்மொழி, அச்சன் புதூர், நெடுவாயல், கொடிக்குறிச்சி, நைனார் அகரம், கிழங்காடு மற்றும் ஆயக்குடி கிராமங்களில் 1,562 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசன வசதியும், 616 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் 93 எக்டேர் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் ஏற்படும்.

இத்திட்டத்தின்கீழ் கற்கட்டு அணை, கால்வாய் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன.



1998 ஏப்ரல் 22]

**8.9. அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டுதல் (விருதுநகர் மாவட்டம்)**

இத்திட்டம் விருதுநகர் மாவட்டம், அத்திக்குளம் கிராமத்தின் அருகிலுள்ள கிருதமால் ஆற்றின் குறுக்கே நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின் கீழ் ரூ.347.09 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு அணை கட்டி இடது, வலது புற கால்வாய்கள் வெட்டும் திட்டமாகும்.

இத்திட்டம் திருச்சுழி வட்டத்தில் இருஞ்சிறை, உலக்குடி மற்றும் ஆறு கண்மாய்கட்கு நீர் வழங்கி அதன் மூலம் அத்திக்குளம், மானூர், மறையூர், உலக்குடி, நரிக்குடி, இருஞ்சிறை, ஆதித்தனேந்தல் மற்றும் வரிசையூர் கிராமங்களில் 943 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும் 323 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்கும்.

இத்திட்டத்தில் இதுவரை ஆற்றின் இருபக்கமும் வெள்ளக்காப்புக் கரை அமைக்கும் பணி 1,400 மீட்டர் நீளத்திற்கு முடிவு பெற்றுள்ளது. இருஞ்சிறை வரத்து வாய்க்காலுக்கு மேம்பாட்டு பணிகள் முடிவுற்றது. அணைக்கட்டு கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

**8.10. வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)**

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்திலுள்ள மஞ்சுவிளை கிராமம் அருகே பச்சையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பது ஆகும்.

திருப்பு, மதகு, நீர் ஊட்டுக் கால்வாய், மண் அணை, தடையில்லா நீர் வழிந்தோடி, உபரி நீர் பாதை கால்வாய் மதகு, ஆற்றை கடக்கும் ஏற்பாடு உட்பட இணைப்புக் கால்வாய் இவைகளுடன் நாங்குனேரிகால், சிவலப்பேரிகால், பத்மனேரிகால், தேவனேரி கால்வாய் இவைகளை செப்பனிட்டு சீரமைத்தல், மடத்து அணைக்கட்டு காலிலிருந்து இணைப்புக் கால்வாய் அமைத்தல், தேவநல்லூருக்கு கீழே ஒரு புறவழி கால்வாய் வெட்டுதல், இணைப்புச் சாலை அமைத்தல் மற்றும் கட்டடங்கள் கட்டும் பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 3,061.28 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத் திட்டத்தினால் நாங்குனேரி வட்டத்தில் உள்ள களக்காடு, நாங்குனேரி, உள்ளாங்குளம், இல்லான்குளம் மற்றும் பறப்பாடி

[1998 ஏப்ரல் 22

கிராமங்களில் 574 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசனமும், 464 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் மற்றும் 45 கண்மாய்களின் கீழ் உள்ள 760 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு போகமே விளையும் 1,568 எக்டேர் நிலங்களுக்கு இரண்டாவது போகமாக புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யவும் பாசன வசதி செய்யப்படும்.

மஞ்சுவிளை கிராமத்திலிருந்து வடக்கு பச்சையாறு அணைக்கட்டை இணைக்கும் இணைப்புச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதர ஆரம்பப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**8.11. கொடுமுடியாறு திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் திருக்குருங்குடி கிராமத்தில், கொடுமுடியாறும், கோம்பையாறும் கூடுமிடத்தில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

மண் அணை அமைத்தல், தடையில்லா நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, ஆற்று மதகு, உபரி நீர் பாதை, தாமரை அணைக்கட்டை மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள வீடுகளுக்கு மின் வசதி செய்தல், ஆணையடி கோவிலை இடப்பெயற்சி செய்தல் ஆகிய பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.2104.42 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தினால் இராதாபுரம், நாங்குநேரி வட்டங்களில் உள்ள மைலாடி, எருவாடி, நம்பித்தலைவன் பட்டியம், வடக்கு வள்ளியூர், தெற்கு வள்ளியூர், இராஜாக்கமங்கலம், அச்சம்புதூர், தளபதி சமுத்திரம், ஆனைக்குளம், தலைக்குளம், தெற்கு கள்ளிக்குளம், சண்முகரெங்காபுரம், கும்பிகுளம், ஆழங்கிணறுதிருமாலபுரம் மற்றும் இராதாபுரம் கிராமங்களில் 791 எக்டேர் நிலையான பாசன வசதியும், 779 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசனமும் 193 எக்டேர் ஒருபோக நிலங்களுக்கு இருபோக பாசன வசதியும் கிடைத்திட வழிசெய்யப்பட்டுள்ளது.

கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் ஏறக்குறைய முடிவடைந்துவிட்டன. நீர்த்தேக்க கட்டுமானப் பணிகள் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்காக வனத்துறைக்குச் சொந்தமான நிலங்களும், கணிசமான பட்டா நிலங்களும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் வேலைகள் முடிந்தபின்



1998 ஏப்ரல் 22]

நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் இப்பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**8.12 வராக நதி சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்)**

மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் வட்டத்திலுள்ள தென்கரை கிராமத்தின் அருகில் வராகநதியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

கற்கட்டு அணையில் நிலுவையில் உள்ள பணிகள், கால்வாய்கள், கண்ணி வாய்க்கால்கள், மற்றும் கட்டட பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.3042.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தினால் பெரியகுளம் வட்டத்தில் உள்ள தென்கரை மற்றும் தாமரை குளம் கிராமங்களில் 739 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசனமும், 27 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசனமும் 405 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் கற்கட்டு அணை கட்டும் பணியின் ஒரு பகுதி முடிவடைந்துள்ளது. கற்கட்டு அணையின் மீதமுள்ள பணிகளும் கால்வாய் பணிகளும் தற்போது துவங்கப்பட்டு உள்ளன.

**8.13 சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)**

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமத்தருகே சண்முகாநதியின் (வட்டாறு) குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு 1986 ஆம் ஆண்டு மே திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.695.00 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் மண் அணை, கற்கட்டு அணை - வழிந்தோடாத பிரிவு, தடையில்லா நீர் வழிந்தோடி, தலை மதகு மற்றும் கட்டமைப்புகளுடன் கூடிய கால்வாய்கள் அடங்கும்.

இத்திட்டத்தினால் கம்பம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி மற்றும் உத்தமபாளையம் வட்டத்திலுள்ள மல்லிங்கபுரம், சின்ன ஓவலாபுரம், எரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, அழகாபுரி, ஓடைப்பட்டி,

[1998 ஏப்ரல் 22

மற்றும் சீபாலகோட்டை கிராமங்களில் 664 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கப்படும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி 70 விழுக்காடும், கால்வாய் வெட்டும் பணி 80 விழுக்காடும், முடிவடைந்துள்ளது. ஆற்றுப்பகுதியில் கற்கட்டு அணை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**8.14. மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்பாடி கிராமம் அருகாமையில், கமுதி நீர் கட்டுப்பாடு மதகிற்கு கீழ்ப்புறமாகவும், கிருதுமால் மற்றும் பரளயாறுகள் மலட்டாறுடன் சங்கமிக்கும் இடத்திற்கு கீழ் மலட்டாற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்று அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு 1994 பிப்ரவரி திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ. 1540.00 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது. கற்கட்டு அணை, இரண்டு தலைமதகுகள், கட்டமைப்புகளுடன் கூடிய வலது மற்றும் இடது புற பிரதான கால்வாய்கள் இத்திட்டத்தின் முக்கிய அங்கங்களாகும்.

இத்திட்டத்தின் மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டத்திலுள்ள ஓ. கரிசல் குளம், வேப்பங்குளம் (கமுதி வட்டம்), பம்மனேந்தல், அரியமங்கலம், புன்னவாசல், வேப்பங்குளம் (கடலாடி வட்டம்) மீனன்குடி, ஓரிவாயல் மற்றும் கடுகு சந்தை கிராமங்களில் உள்ள 1758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் 54 கண்மாய்களின் கீழ் 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்க வகைசெய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஆரம்பப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**8.15 கொள்ளிடம் ஆற்றின் ஊற்று நீரை கான்சாகிப் கால்வாய்க்குத் திருப்பி விடுதல் (கடலூர் மாவட்டம்)**

கொள்ளிடம் ஆற்றில் கொரம்பு ஒன்று அமைத்து ஆற்றின் ஊற்று நீரை, கருப்பேரி கிராமத்திலிருந்து அமைக்கப்படும் கால்வாய் மூலம் கான்சாகிப் கால்வாய்க்கு திருப்பிவிட இத்திட்டம் வகை செய்கிறது.



1998 ஏப்ரல் 22]

அரசு 1995 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுக்கு ரூ.183.00 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் சிதம்பரம் வட்டத்தில் திருவாக்குளம், சித்தலப்பாடி, குமாரமங்கலம், கீழபரம்பை, மடுவாங்கரை, கணக்காரப்பட்டு, ராதா விளாகம், நக்கரமன்றங்குடி, உத்தமசூளமங்கலம், வாகப்பபத்தூர், குடிப்பள்ளம், பின்னத்தூர் (மேற்கு), பின்னத்தூர் (கிழக்கு), தில்லைவிடங்கன் (வடக்கு), தில்லைவிடங்கன் (தெற்கு), கிள்ளை (தெற்கு), கிள்ளை (வடக்கு), பிச்சாவரம், நஞ்சை மகதூர் வாழ்க்கை (மேற்கு), நஞ்சைமகதூர் வாழ்க்கை (கிழக்கு), புஞ்சை மகதூர் வாழ்க்கை, மனகபாடி, டிஎஸ்.பேட்டை, டி. பரங்கிப்பேட்டை ஆகிய கிராமங்களில் 3776 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காரர்களை நியமித்த போதிலும் நிலம் கையகப்படுத்துவதில் சில இடர்பாடுகள் இருப்பதால் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள முடியவில்லை. கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தனிப்பட்ட முறையில் நிலச்சொந்தக்காரர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார். பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**8.16. உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)**

வைகை அணையின் வழிந்தோடியிலிருந்து 2425 மீட்டர் தூரத்தில் வைகை அணையின் வலது கோடியில் ஒரு உயர் மட்ட கால்வாய் 27.20 கி.மீ நீளத்திற்கு அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. கற்காரை பூசப்படாத இக்கால்வாய் இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் வைகை அணை நிரம்பி வழியும்போது உபரி வெள்ள நீரை பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்க உள்ளது. இத்திட்டத்தில் மூன்று புதிய கண்மாய்கள் அமைப்பதும் அடங்கியுள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நஞ்சை நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கிறது. மேலும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள மூன்று கசிவு நீர்க்குட்டைகள், 29 கண்மாய்களின் கீழ் உள்ள நன்செய் நிலங்கள் 128 எக்டேர் விடுப்பட்ட நிலங்கள் பயனடையும். இவை தவிர புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் புதிய புஞ்சை நிலமும் பாசன வசதி பெறும்.

நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேறி வருகின்றன.

**8.17.** *ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)*

வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையில் குறுக்கே 112 மில்லியன் கன அடி கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு ஜனவரி-97 இல் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.1828 இலட்சங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் மற்றும் இருமாப்பட்டு கிராமங்களின் 810 எக்டேர் நிலம் நேரடியாக இருபோக புன்செய் சாகுபடியின்கீழ் வரும்.

நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேறி வருகின்றன.

**8.18.** *செண்பகத் தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)*

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் செண்பகத் தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு 1996-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.2133 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் போளூர் வட்டத்திலுள்ள வள்ளூர், கங்காரமந்தல், சாந்தவாசல், நாரமங்கலம், இலுப்பகுப்பம், பார்வதி சகரம், அலியாபாத், எந்துலம்பாடி கிராமங்களிலும் ஆரணி வட்டத்திலுள்ள குப்பம், காமடுக்கூர், ஆரணி, மாமண்டூர், கல்பூண்டி, முன்னிப்பட்டு, பையூர், கிராமங்களிலும், ஆற்காடு வட்டத்திலுள்ள வாழப்பந்தல்; மேல்புதுப்பாக்கம், மாம்பாக்கம், மேல்பலந்தை, அநூர் சுரையூர் மற்றும் பொன்னம்பலம் கிராமங்களிலும் செய்யாறு வட்டத்திலுள்ள திருமணி, முனுகப்பட்டு, மேல்புத்தூர் மற்றும் மேல்சேவுமங்களம் கிராமங்களிலும் வந்தவாசி வட்டத்திலும் அன்மருதை கிராமத்திலும் மொத்தம் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசனவசதியும் கிடைக்கும்.





இத்திட்டம் "நாபார்டு" (தேசிய விவசாயம் மற்றும் கிராம வளர்ச்சி வங்கி) கடன் . உதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்றவுடன் பணிகள் துவங்கப்படும்.

**8.19.** *வறட்டாறு - குப்பத்து ஓடை குறுக்கே நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)*

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்டாறு மற்றும் குப்பத்து ஓடை என்ற காட்டாறுகளின் குறுக்கே ரூ. 878 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க வகை செய்கிறது.

இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் தென்காசி வட்டத்தில் கிருஷ்ணாபுரம் மற்றும் சொக்கம்பட்டி கிராமங்கள் மற்றும் வி.கே.புதூர் வட்டத்தில் மடத்துப்பட்டி கிராமம் ஆகியவற்றில் 165 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும், 132 எக்டேர் நிலம் பாசன உறுதியும் பெறும். மேலும் நிலத்தடி நீர்ப் பெருக்கத்தால் 375 எக்டேர் நிலமும் பயனடையும்.

இத்திட்டத்தின் விரிவான ஆய்வுப் பணிக்கு (எடுத்துக்கொள்ள) பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே பணிமேற்கொள்ளுவதில் தாமதம் ஏற்படுகிறது.

**9.0 1997-98 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம்**

**9.1** *பத்தலப்பள்ளி-மலட்டாறு நீர்த் தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)*

அரசு 1997-ம் ஆண்டு நவம்பர் திங்களில் வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலபள்ளி கிராமம் அருகே மலட்டாற்றின் குறுக்கே ரூ.29.55 இலட்சம் செலவில் நீர்த்தேக்கம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

மண் அணை கற்கட்டு வெள்ளக்கால், ஆற்றுமதகு, "பிக்கப்" அணைக்கட்டு மற்றும் நீர்த்தணிவு அமைத்தல் இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வட்டத்தில் பாலூர், மச்சம்பட்டு, வசனம்பள்ளி, நரியம்பட்டு, ரெட்டிமான் குப்பம், சாரங்கல், கைலாசகிரி, ஆயுதம்பட்டு சாதம்பாக்கம், ராஜக்கல், ஆளிங்குப்பம், மால்முருங்கை, மேல்பட்டி, குளித்திகை, சின்னத் தொட்டாளம், உள்ளி, கோதகுப்பம், அரங்காநல்லூர், ஒகடசி மற்றும் சிட்லாத்தூர் கிராமங்களில் மொத்தம் 1064 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 61 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்கு பாசனமும் கிடைக்கப் பெறும். இத்திட்டத்தில் பேராணம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதியும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் காலப்போக்கில் மீண்டும் நல்ல நீரை வழங்க ஏற்றதாக மாறும்.

இத்திட்டத்திற்கு 42.09 எக்டேர் புன்செய் பட்டாநிலமும் 17.81 எக்டேர் வனத்துறை நிலமும் தேவைப்படுகிறது. வனத்துறை நிலங்களுக்கு பதிலாக இழப்பீடு நிலங்களைக் கண்டறியும் பணிகள் செய்யப்பட்டன. ஆரம்பப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**9.2. குப்பநத்தம் நீர்த் தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

அரசு 1996-ம் ஆண்டு ஜீன் திங்களில் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த் தேக்கம் ரூ.3546 இலட்சம் செலவில் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

மண் அணை, கற்கட்டு நீர் வழிந்தோடி, ஆற்று மதகு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தினால் 22 ஏரிகள், செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைக்கட்டுகள், மற்றும் இரண்டு நேரடி கால்வாய்களின் மூலம் செங்கம் வட்டத்தில் காயம்பட்டு, வளையம்பட்டு, தண்டப்பட்டு, கரையமங்கலம், வடங்குப்பம், மேல்வணக்கம்பாடி, மேல் புழுதியூர், பெரும்பட்டம், பக்கிரிபாளையம், துக்கப்பேட்டை, மேமலூர், காயம்பட்டு, கங்காரவரன், சென்ன சமுத்திரம், பொன்னேரி, சின்னசமுத்திரம், படியகரம், நரசிங்கநல்லூர், தொரப்பாடி, முன்னூர் மங்கலம், நாச்சிப்பட்டு, குஞ்சிலம், பெரியஏரி, உண்ணாமலைபுரம், புதுச்செங்கம், அண்வர்பாத், ஆலப்புதூர், தாமரைப்பாக்கம் மற்றும் அரிதாரை மங்கலம்



கிராமங்களிலும் திருவண்ணாமலை வட்டத்தில் முன்னூர் மங்கலம், சுரியாந்தல், ஆனந்தாள், மேல்புஞ்சை, வாசுதேவன் பட்டு மற்றும் கிழித்தூர் கிராமங்களிலும் போளூர் வட்டத்தில் கடலாடி குணத்தூர் கீழத்தூர் கிராமங்களிலும் மொத்தம் 2528 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசனமும் கிடைக்கப் பெறும்.

இத்திட்டத்திற்கு 176.33 எக்டேர் புன்செய் பட்டா நிலமும் 55.28 எக்டேர் புறம்போக்கு நிலமும், 44.17 தரிசு நிலமும் 13.14 எக்டேர் வனத் துறை நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. வனத் துறை நிலங்களுக்குப் பதிலாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டன. பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்கள் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

திட்டத்தின் ஆரம்பப் பணிகள் முன்னேறி வருகின்றன.

**9.3. வறட்டாறு - வள்ளிமதுரை நீர்த் தேக்கத் திட்டம் ( தர்மபுரி மாவட்டம்)**

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளிமதுரை கிராமம் அருகே வறட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

பாசனநீர் வாய்க்காலின் வழி ஓடும்போதும், கழனியில் பயன்படுத்தும் பொழுதும் வீணாவதை, கால்வாய் அமைப்பைப் புதுப்பித்தல் மூலமும், பாசன அமைப்பை நவீனப்படுத்துதல் மூலமும் குறைக்க இத்திட்டம் வகை செய்கிறது. இவ்வாறு சேமிக்கப்படும் பாசனநீர் பாசன வசதிகளை விரிவுபடுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டம் இரு நிலைகளில் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் முதல்நிலைப் பணிகள் ஜூலை 1977-இல் தொடங்கப்பட்டு ரூ. 46.40 கோடி செலவில் உலக வங்கியின் 23 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவியுடன் ஆகஸ்டு 1984-ல் முடிவுபெற்றது. இதனால் மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 10,305 எக்டேர் கூடுதல் நிலப்பரப்பு பாசன வசதி பெற்றுள்ளது.

[1998 ஏப்ரல் 22

திட்டத்தின் இரண்டாம் நிலைப்பணிகள் 35 மில்லியன் அமெரிக்க டாலர் (33.20 மில்லியன் எஸ்.டி.ஆர்.) உலக வங்கிக் கடனுதவியுடன் மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 8,539 எக்டேர் பாசன வசதி ஏற்படுத்துவதற்கு 1983 அக்டோபர் திங்கள் முதல், முதல்நிலைப் பணிகளுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது.

திட்டத்தின் இரண்டாம் நிலை பணிகளின் மறு மதிப்பீடு ரூ. 148 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய மொத்த செலவினம் ரூ. 136.14 கோடி.

பெரியாறு பிரதானக் கால்வாயில் வண்டல் படிவதைத் தடுக்கவும் பாசன அமைப்பின் நிலையைச் செம்மைப்படுத்தவும், வைகை அணைக்கு 1 கி.மீ. கீழேயுள்ள எடுப்பு (பிக் அப்) அணையையும், பேரணை அருகே பெரியாறு பிரதான வாய்க்காலையும் இணைப்பதற்கு இணைப்பு வாய்க்கால் அமைக்கும் பணி 1991 ஆம் ஆண்டு ரூ. 25 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி முடிவு பெற்று உபயோகத்தில் உள்ளது. உலகக் வங்கி கடனுதவி 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்துடன் முடிவுற்றது.

அக்டோபர் '93-க்குப் பின்னால் இணைப்புக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள் தொடரப்பட்டு இப்பொழுது முடிக்கப்பட்டுள்ளன.

திட்டப்பாசனப் பகுதியின் கடைகோடி பகுதியில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள திருப்பத்தூர் கண்மாய் மற்றும் அதன்கீழ் உள்ள 13 கண்மாய்கள், சிவகங்கை வட்டத்தில் உள்ள மறவமங்கலம் கண்மாய் மற்றும் அதன்கீழ் உள்ள 40 கண்மாய்களின் வேலைகள் 1997-98-ல் முடிவுற்றன. இவைகளின் மூலம் 2,183 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

இணைப்புக் கால்வாய் பகுதியில் மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 1,620 எக்டேர் கூடுதல் பாசனப் பரப்பிற்கு பாசன வசதி அளிக்க பங்கீடு அமைப்புகள் மற்றும் கடைகோடி கால்வாய்கள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பெரிய கண்மாய்கள் சீரமைப்புப் பணி, நேரடி வாய்க்கால்கள் பணி, குறுக்கு வடிகால் பணி, நீரளவை கருவி ஆகியவற்றைத் தமிழ்நாடு நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 22]

**14.0 சிறுபாசனம்**

**14.1 ஐரோப்பியக் குழும உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம் - முதல் கட்டம்**

இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் 200 எக்டேருக்குக் குறைவான பாசனப் பரப்புடைய 206 மானாவாரி ஏரிகள், ரூ. 52.44 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டன. இத்திட்டம் 1984 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தொடங்கப்பட்டு 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நிறைவுற்றது. இதன் மூலம் மொத்தம் 28,780 எக்டேர் நிலங்கள் பயன்பெற்றன.

இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| 1. காஞ்சிபுரம் | 2. திருவள்ளூர் |
| 3. வேலூர் | 4. திருவண்ணாமலை |
| 5. கடலூர் | 6. விழுப்புரம் |
| 7. புதுக்கோட்டை | 8. சிவகங்கை |
| 9. இராமநாதபுரம் | 10. விருதுநகர் |

**இரண்டாம் கட்டம்**

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 100 எக்டேர் முதல் 200 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய மானாவாரி ஏரிகளையும், 4 எக்டேர் முதல் 50 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய முன்னாள் சமீன் ஏரிகளையும் நவீனப்படுத்தும் திட்டம் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 115.00 கோடி ஆகும். இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| 1. காஞ்சிபுரம் | 2. திருவள்ளூர் |
| 3. வேலூர் | 4. திருவண்ணாமலை |
| 5. விழுப்புரம் | 6. திருச்சி |
| 7. பெரம்பலூர் | 8. கரூர் |
| 9. திண்டுக்கல் | 10. தேனி |

[1998 ஏப்ரல் 22

11. மதுரை 12. சிவகங்கை

13. இராமநாதபுரம் 14. விருதுநகர்

15. தூத்துக்குடி 16. திருநெல்வேலி

இத்திட்டத்தின்கீழ் 316 மானாவாரி ஏரிகளும், 80 முன்னாள் சமீன் ஏரிகளும் நவீனப்படுத்திட எடுத்துக்கொள்ளப்பட்டன. 1996-97 நிதி ஆண்டு வரை 207 மானாவாரி ஏரிகளிலும், 80 முன்னாள் சமீன் ஏரிகளிலும் வேலைகள் நிறைவுற்றன. இதன் மூலம் 5,008 எக்டேர் பாசனப் பரப்பு கூடுதல் பாசன வசதி பெறுவதுடன் 28,120 எக்டேர் பாசனப் பரப்புடைய நிலங்கள் பயனடைந்தன. மார்ச் 1997 வரை இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 98.39 கோடி ஆகும்.

1997-98 ஆம் ஆண்டு 49 மானாவாரி ஏரிகளில் பணிகள் முடிக்கப்படும். இதன் மூலம் 800 எக்டேர் பாசனப் பரப்பு கூடுதல் பாசன வசதி பெறுவதுடன் மொத்தம் 6,080 எக்டேர் பாசன நிலம் பயன்பெறும். இத்திட்டத்திற்கு 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 11.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மீதமுள்ள 60 ஏரிகளில் பணிகள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் வாயிலாக சுமார் 1,078 எக்டேர் பாசனப் பரப்புடைய நிலம் கூடுதல் பாசன வசதி பெறுவதுடன் மொத்தம் 7,130 எக்டேர் பாசன நிலம் பயன்பெறும். மேலும் இதற்காக நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 12.89 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் பாசனதாரர் சங்கங்களை ஈடுபடுத்துதல்

ஐரோப்பிய குழும உதவிபெறும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் அந்தந்த ஏரியின் பாசனதாரர் ஏரியின் நவீனப்படுத்தும் பணிகளில் ஈடுபட முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

பாசனதாரர் ஒவ்வொரு ஏரி ஆயக்கட்டுக்கும் பாசனதாரர் சங்கம் ஏற்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர். மேலும் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தில் பாசனதாரர் சங்கங்கள் ஏரியின் மேம்பாட்டுப் பணியை எடுத்துச் செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். இத்திட்டத்தின்கீழ் பாசனதாரர்



1998 ஏப்ரல் 22]

சங்கங்கள், பாசனதாரர் சங்கக் கட்டடம் சமுதாயக் கிணறு அமைத்தல் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி சீரமைக்கும் பணி ஆகியவைகளை செயற்படுத்திட, அவர்களையும் கலந்து திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதுநாள் வரை 11 ஏரிகளில் கட்டுமானப் பணிகள் பாசனதாரர் சங்கங்களால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பாசனதாரர் சங்கங்கள் ஏரிகளின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளல்

நவீனப்படுத்தும் பணிகள் முடிவடைந்த ஏரிகளின் பராமரிப்பில் ஈடுபட பாசனதாரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பாசனதாரர் சங்கம் ஏக்கருக்கு ரூ. 100 வீதம் வசூலித்து, பிறகு அவர்கள் திருச்சி பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் மூலம் அரசிடமிருந்து சம ஈட்டுத் தொகை பெறவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 23 பாசனதாரர் சங்கங்கள் அரசிடமிருந்து சமஈட்டுத் தொகை உதவியைப் பெற்றுள்ளன.

அரசு சாரா நிறுவனங்களின் முன்னோடி செயல்பாடு

இதில் ஒரு திட்டப்பகுதியாக அரசு சாரா நிறுவனங்கள் மூலம் பாசனதாரர்கள் சங்கங்களை ஈடுபடுத்தி, ஏரிகளை நவீனப்படுத்துதல் ஆகும். பாசனதாரர் சங்கம் இத்திட்டத்தினை எடுத்துச் செயல்படுத்தும்போது பணிகளின் மதிப்பில் 10 விழுக்காடு பணமாகவோ பொருட்களாகவோ அல்லது வேலை மூலமாகவோ பங்கேற்க வேண்டும்.

ஐரோப்பிய குழும ஒப்புதலுடன், இராமநாதபுரம் மாவட்டத்தில் வல்லாகுளம் தொடர் ஏரிகள் அரசு சாரா நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மாற்றுப்பயிர் செயல்முறை விளக்கப் பண்ணைகள்

அதிக வருவாய் ஈட்டும் பொருட்டு, ஏரியில் உள்ள நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி ஐரோப்பிய குழும நிதி உதவியுடன பயிர் மாற்று செயல்முறை விளக்கப் பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1996-97 முதல் வேளாண் துறையின் மூலம் இரண்டாவது கட்டத்தின் 36 ஏரிகளின் ஆயக்கட்டில் பயிர்விளக்கப் பண்ணைகள் அமைத்திடத் திட்டமிடப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஏரியின்

[1998 ஏப்ரல் 22

பாசனதாரர் இரண்டாம் போகத்தில் நீர் குறைவாகத் தேவைப்படும் பயிர்களாக பயறுவகை, பருத்தி, வேர்கடலை, பூச்செடிகள், காய்கறிகள் பயிரிடப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பாசனதாரர்களுக்குப் பயிற்சி

பாசனதாரர் கீழ்க்கண்ட பயிற்சிகளில் பங்கு கொண்டனர்

| | | |
|---|---|---|
| 1. | வேளாண் துறை மூலமாக | 18 பயிற்சி முகாம்கள் |
| 2. | கே.வி.கே. காந்தி கிராம் கிராமியப் பல்கலைக்கழகம் மூலமாக | 3 பயிற்சி முகாம்கள் |
| 3. | திருச்சி பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் மூலமாக | 32 பயிற்சி முகாம்கள் |

இந்தப் பயிற்சி முகாம்களில் சுமார் 2500 பாசனதாரர் பங்கு பெற்றனர். இப்பயிற்சியால் பாசனதாரர் ஏரி பராமரிப்பு, நீர் மேலாண்மை, மாற்றுப்பயிர் சாகுபடி, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு பற்றிய பயிற்சிகள் பெற்றனர். 1998-99-ல் இப்பயிற்சி திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஐரோப்பிய குழும ஒப்பந்தப்படி ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம் டிசம்பர் 1999-க்குள் முடிவடையும்.

அன்னியச் செலாவணி மதிப்பு மாற்றத்தினால் மேலும் 8 மானாவாரி ஏரிகள் மற்றும் 3 தொடர் ஏரிகள் (41 ஏரிகள் பஞ்சாயத்து ஏரிகளும் சேர்த்து) பாசனதாரர் சங்கங்கள் மூலம் எடுத்து, செயல்படுத்த ஐரோப்பிய குழுவிற்கு ரூ. 3.60 கோடிக்கு ஒரு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் 83 ஏரிகளில் குறிப்பு மாற்றுப்பயிர் செயல்விளக்கப் பண்ணைகள் அமைத்து பயிற்சி அளிக்கப்படும்.

**14.2.** வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதியுதவியுடன் ஏரிப்பாசனத் திட்டம்

40 எக்டேர் முதல் 400 எக்டேர் வரை ஆயக்கட்டுடைய 2400 மானாவாரி ஏரிகளை ரூ. 270 கோடி செலவில் புனரமைக்கும் திட்ட அறிக்கை ஒன்று மத்திய அரசுக்கு செப்டம்பர் 1994-ல் அனுப்பிவைக்கப்பட்டது. "ஜப்பான் ஓவர்சீஸ் எக்னாமிக் கோவாப்பரேசன்" நிதியிலிருந்து இத்திட்டத்திற்கு உதவிபெறும் பொருட்டு,



1998 ஏப்ரல் 22]

திட்டம் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற மைய அரசு கருத்துரையின் பேரில், விரிவாக ஆய்வு செய்ய ஆகஸ்டு 1996-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையில் "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாப்பரேஷன் ஏஜென்சி ஆய்வுக்குழு" (JICA) தளஆய்வு செய்து முடித்தது. வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி உண்மை நிலை அறியும் குழு ஒன்று சனவரி 1998 திங்களில் விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைப் பார்வையிட்டது. ஜப்பான் ஓவர்சீஸ் எக்னாமிக் கோவாப்பரேசன் ஏஜென்சியின் (JICA) இறுதித் திட்ட அறிக்கை மார்ச் 1998 கடைசி வாரத்தில் பெறப்பட்டது.

வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு உதவியை உடனே பெறும் பொருட்டு அரசால் ஏரிகளுக்குரிய மதிப்பீடுகளை முன்னதாகவே தயாரிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவை நீர்வள அமைப்பு பொ.ப.து. மூலம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

**14.3.** உலக வங்கி உதவியுடன் கிராம முன்னேற்றத்திற்காக சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டம்

இம்மாநிலத்தில் 39,202 ஏரிகள் உள்ளன. இந்தத் திட்டத்தில் சீர்செய்யவும், நவீனப்படுத்தவும் ஐரோப்பிய குழும நிதி உதவியில் எடுத்துக்கொள்ளப்படாத ஏரிகளை நன்கு ஆய்வு செய்து, அவற்றை மேம்படுத்துவதற்கான மாற்று வழிமுறைகளைக் கண்டறிய ஓர் உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பொ.ப.து. பஞ்சாயத்து ஒன்றியம் மற்றும் சமீன் ஆகிய 800 மழைநீர் பெறும் ஏரிகளைச் சீரமைக்க ரூ. 2570.00 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சிக்காக திட்ட அறிக்கை உலக வங்கி நிதி உதவி பெற பிப்ரவரி 1997-ல் மைய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இத்திட்டத்தில் ஏரிகளில் தூர் எடுத்தல், கரைகளை வலுப்படுத்துதல், கலிங்கல்கள், மதகுகளைப் புதுப்பித்தல் மற்றும் சீர் செய்தல், வரத்துக் கால்வாய்களைச் சீரமைத்தல், மற்றும் பாசனக் கால்வாய்களில் தேர்வு செய்யப்பட்ட பகுதியை அகவுறை செய்தல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்தினால் 1,07,500 எக்டேர் நிலம் கூடுதல் பாசனவசதி பெறுவதுடன் மொத்தம் 4,51,500 எக்டேர் நிலம் பாசன வசதி பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் மைய அரசு நீர்வள அமைச்சகத்தின் ஆய்வில் உள்ளது.

**14.4. மாநில ஏரிப்பாசனத் திட்டம்**

தமிழ்நாட்டில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 8939 ஏரிகளும், 9850 முன்னாள் சமீன் கண்மாய்களும் உள்ளன. ஏரிகளைத் தரப்படுத்தவும், நவீனப்படுத்தவும் மட்டுமே தமிழ்நாடு அரசு 1995-96-ல் இத்திட்டத்தினை அமல்படுத்தியது.

இத்திட்டம் இரு பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவு முன்னாள் சமீன் ஏரிகளைத் தரப்படுத்தி, மேம்படுத்துவது ஆகும். இரண்டாவது பிரிவு பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ள மற்ற ஏரிகளை தரப்படுத்துவதும், மேம்படுத்துவதும் ஆகும். அனைத்து முன்னாள் சமீன் ஏரிகளையும் தரப்படுத்திய பிறகு, மேற்கொண்டு பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கோ அல்லது பொதுப் பணித் துறைக்கோ பாசனப் பரப்பிற்கு தகுந்தாற்போல் ஒப்படைக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ், 97-98 ஆம் ஆண்டு முன்னாள் சமீன் ஏரிகளுக்காக ரூ. 480 இலட்சமும், பொதுப் பணித் துறை ஏரிகளுக்காக ரூ. 500 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 98-99 ஆம் ஆண்டு ரூ. 885.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14.5. சிறப்புச் சிறுபாசனத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் பாசன உறுதியளிக்கக் கூடியதும், கூடுதல் பாசனம் அளிக்கக் கூடியதுமான புது ஏரிகள் அமைத்தல், அணைக்கட்டு கட்டுதல், இணைப்புக் கால்வாய் வெட்டுதல், பழுதடைந்த ஏரிகளைப் புனரமைத்தல், குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் அடங்கும், தூர்வாரி புனரமைக்கும் திட்டங்களில் வண்டல் படிவினால் கொள்ளளவு குறைந்துபோன ஏரிகளைத் தூர்வாரியும், ஏரியின் எதிர்வாயில் உள்ள நிலம் ஏரித் தண்ணீரால் மூழ்காவண்ணம் நிலத்தைச் சீர்செய்யும் பணியும் அடங்கும்.

1997-98 ஆம் ஆண்டில் சிறப்புச சிறுபாசனத் திட்டம் மற்றும் தூர்வாரி புனரமைக்கும் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை முறையே ரூ. 492.57 இலட்சம் (345.40 லட்சம் மாநிலத் திட்ட ஒதுக்கீடு + 147.17 லட்சம் நபார்டு உதவி) ரூ. 8.95 இலட்சம் ஆகும். இதனால் 750 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1997-98-ல் இத்திட்டத்தின்கீழ் 47 பழைய பணிகள் செயலாக்கத்தில் இருந்தன. அரசு 97-98-ல் 12 புதிய பணிகளுக்கு மொத்தம் ரூ. 354.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்தது.

550 எக்டேர் நிலப்பரப்பில் கூடுதல் பாசன வசதி செய்யும் பொருட்டு, 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 655.03 இலட்சம் (507.86 இலட்சம் மாநிலத் திட்ட ஒதுக்கீடு மற்றும் 100 இலட்சம் நபார்டு உதவிச் சிறப்புச் சிறுபாசனத்திற்கும் ரூ. 147.17 இலட்சம் தூர்வாரி ஏரிகளைச் சீரமைக்கும் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14.6. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடி மக்களின் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை அளிப்பதற்காகவும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், நாமக்கல், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளை "பழங்குடியினர் பகுதியாக" தேர்ந்தெடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மலைப்பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1997-98 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 23.00 இலட்சம் ஆகும். இவ்வாண்டில் 7 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

1998-99 ஆம் ஆண்டில் இப்பணிக்கு ரூ. 12.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14.7. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் 100 சதவிகித நிதி உதவியுடன் காட்டோடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

உதகமண்டலத்தில் உள்ள ஏரியைத் தூர்வாரும் பொருட்டு ரூ. 196.52 இலட்சத்திற்கு தமிழக அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்த வேலை முடிக்கப்பட்டு விட்டது.

இத்திட்டத்திற்கான 1997-98 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 108.35 இலட்சம் ஆகும். நீலகிரி மாவட்டத்தில் 31 தடுப்பு அணைகளுக்கு (உதகமண்டலம் வட்டத்தில் 8, கூடலூர் வட்டத்தில் 6, கூனூர் வட்டத்தில் 9 மற்றும் கோத்தகிரி வட்டத்தில் 8) ரூ. 98.50 இலட்சம் 1997 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிகள் துவங்கப்பட்டு 1998-99 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**14.8. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

1986-87 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் 24 வட்டங்களைத் தெரிந்தெடுத்து மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு அணைகள் கட்டுதல், குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 1997-98 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 22.00 இலட்சம் ஆகும். 5 பணிகள் (கோவை மாவட்டத்தில் 2, திண்டுக்கல் மாவட்டத்தில் 2, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1) முன்னேற்றத்தில் உள்ளன.

1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 22.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15.0. பாசனக்கணிப்பு மற்றும் செயல் திட்டம் (பாசன வாரச் சந்தை)**

வேளாண் மக்களுக்கும், நீர்வள அமைப்பின் அலுவலர்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பையும், பிணைப்பையும் ஏற்படுத்தவும், பாசன ஏற்பாடுகளில் இணைந்து நிர்வகிப்பதற்கும் அரசு பாசனக் கணிப்பு மற்றும் செயல் திட்டம் (நீர்வாரச் சந்தை) திட்டத்தை அமல்படுத்தியது. இதன்படி,



1. பாசனக் கணிப்பு மற்றும் செயல்திட்டம் (நீர்வாரச் சந்தை) மழை நீரால் நிரம்பும் கண்மாய்கள் உள்பட எல்லா பாசன ஏற்பாடுகளிலும் தொடங்கப்படும்.

2. பாசன ஏற்பாட்டைக் கவனிக்கும் பிரிவு அலுவலர் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிற்பகல் 3.00 மணி அளவில் தனது பொறுப்பிலுள்ள பாசன ஏற்பாட்டை இயக்கவும், பராமரிக்கவும் உள்ள தனது பாசன அலுவலர்களுடன் அப்பகுதி வேளாண் மக்களைச் சந்திக்க தயாராக இருப்பார். இதன் பொருட்டு பிரிவு அலுவலகத்தில் ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டு, அக்கூட்டத்தின் தீர்மான முடிவுகள் அப்பதிவேட்டில் குறிக்கப்படும்.

3. அப்பிரிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பாசனப் பகுதிகளுக்கு நீர் வழங்கும் பாசன ஏற்பாடுகளில் பாசன நீர் இருப்பு விவரம் அறிவிப்புப் பலகையில் தெரிவிக்கப்படும்.

4. பிரிவு அலுவலர் வேளாண் மக்களுக்கு பாசன ஏற்பாடுகளின் வெவ்வேறு கிளைகளில் கடந்த வாரம் செய்யப்பட்ட நீர் நிர்வாகத்தைப் பற்றியும், அன்றைய தினத்தில் பாசன ஏற்பாட்டில் நீர் இருப்பு விவரத்தையும் விளக்கி வேளாண் பெருங்குடி மக்களின் கருத்தை நடப்பு வாரத்தில் அமல்படுத்துவதற்குக் கோருவார்.

5. பிரிவு அலுவலர் வேளாண் மக்களிடையே கலந்து ஆலோசித்து, அந்த வாரத்தில் செய்யப்பட வேண்டிய செயல் திட்டத்தைத் தயாரித்து அந்த இடத்திலேயே பாசன ஆய்வாளர்கள் மற்றும் பாசன உதவியாளர்களுக்குத் தேவையான உத்தரவுகளை வழங்குவார்.

6. பாசன வாரச் சந்தைத் திட்டம் 1998 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் செயலாக்கத்திற்கு வந்துள்ளது.

**16.0. வேளாண் பெருங்குடி மக்களுக்குப் பாசன மேலாண்மையில் பயிற்சியளித்தல்**

பாசனக் கட்டமைப்புகள் பராமரித்தல் மற்றும் பாசன நீர் மேலாண்மையில் வேளாண் பெருங்குடி மக்கள் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில், வேளாண் பெருங்குடி மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் பெரும் பணியில் திருச்சி மாவட்டம், துவாக்குடியில் உள்ள பாசன மேலாண்மை மற்றும் பயிற்சி நிலையம் ஈடுபடுத்தப்பட்டு 1997-

98 ஆம் ஆண்டில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் 551 வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்பட்டு, சுமார் 600 வேளாண் பொதுமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**17.0. மாவட்டந்தோறும் பாசனக் கருத்தரங்குகள் நடத்துதல்**

வேளாண் மக்களுடன் நல்ல தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளும் வகையிலும், பாசன வசதிகள் பற்றிய விவசாயிகளின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் வகையிலும் மாவட்ட அளவிலான நீர்பாசனக் கருத்தரங்குகள் 1997-98-ல் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கு பாசனம் மற்றும் நீர் விநியோகத்தில் அரசின் கொள்கைகளை வேளாண் குடிமக்கள் அறிய உதவுகிறது.

பாசனக் கருத்தரங்குகள் இவ்வாண்டிலும் (1998-99) மாவட்டங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**18.0. காவிரி டெல்டாப் பகுதிகளில் கனரக இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணி**

காவிரியாற்றின் டெல்டா பகுதியில் ஆறுகள், வடிகால்கள் மற்றும் வடிகால்களில் அவ்வப்போதிய வெள்ளநீர் வரத்து காரணமாக தூர் சேர்ந்துவிடுகிறது. மேலும் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளின் அபரிமிதமான வளர்ச்சியும் இந்நீர் ஆதாரங்களின் பாசன மேலாண்மையிலும், வெள்ளக் கட்டுப்பாட்டு பணிகளிலும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. இந்தத் தடங்கல்களினால் பாசன காலங்களில் கடைகோடி பகுதிக்குப் பாசனநீர் கிடைப்பதில் குறைவும், வெள்ளக் காலங்களில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிவிடும் நிலைமையும் இருந்து வருகிறது.

எனவே, ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை பொறியியல் துறையில் இருந்தும் மற்றும தனியார் நிறுவனங்களிடமிருந்தும் புல்டோசர்களை வாடகை அடிப்படையில் தருவித்து தூர்வார்வதும், காட்டாமணக்கு செடிகளை அகற்றுவதும் வாடிக்கையாக உள்ளது.

இவ்வாறான பணிகளுக்கு ஆண்டுதோறும் மராமத்து செலவுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகை போதுமானதாக இல்லை என்பதால்



1997-98 ஆம் ஆண்டிற்கு சிறப்பு ஒதுக்கீடு செய்ய அரசால் முடிவெடுக்கப்பட்டது.

1997-98 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில் உள்ள ஆறுகள், கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் ஏரிகளை தூர்வாரவும் அவற்றில் உள்ள நெய்வேலி காட்டாமணக்கு செடிகளை அகற்றவும் தமிழக அரசு ரூ. 10 கோடி நிதி ஒதுக்கி ஒப்புதல் அளித்தது. இதன்படி ஆற்றில் நீரடைப்பு காலத்தில் பாதிப்படைந்த பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து தூர்வாருதல் மற்றும் நெய்வேலி காட்டாமணக்கு செடிகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆறுகள் மற்றும் வடிகால்களில் 940 கி.மீ. நீளத்திற்கும் 'ஏ' மற்றும் 'பி' பிரிவு கால்வாய்களில் 1470 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் 74 ஏரிகளிலும் மேற்படி பணிகள் ரூ.12.75 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டது. இந்த தூர்வாரும் பணியானது ஆறுகள் மற்றும் கால்வாய்களின் திறனை குறிப்பிடத் தகுந்த அளவு உயர்த்தி உள்ளது. இது கடந்த வெள்ளப் பெருக்கு காலத்தில் பயிர் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்காமல் தடுத்து கடைகோடி நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க உதவியது.

பொது மக்களும், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் மேற்குறிப்பிட்ட தூர்வாரும் பணியினை வரும் ஆண்டிலும் தொடருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும் டிசம்பர் 97-ல் நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூரில் நடந்த நீர்பாசன கருத்தரங்கில் சென்ற ஆண்டைப் போலவே நடப்பு ஆண்டிலும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று ஒருமனதாக கோரியுள்ளனர்.

தூர்வாரும் பணி 1998 ஆம் ஆண்டிலும் நீர் அடைப்பு காலங்களில் தொடர்ந்து செய்யப்படும். இதற்காக 1998-99-ல் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19.0 200 கண்மாய்கள் தூர் வாருதல்.**

1997-98 ஆம் ஆண்டைய நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் 200 கண்மாய்கள் தூர்வாரி மேம்படுத்தப்படும் என்பதாக அறிவித்தார்கள்.

1997-98 ஆம் ஆண்டில் 200 கண்மாய்களைத் தூர்வாரும் பணிக்கென அரசு 1997 செப்டம்பர் மாதத்தில் ரூ.1991 கோடி அனுமதித்துள்ளது. தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு கண்மாய்களை கண்டறிய கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

1. பாசனப்பரப்பு 150 ஏக்கருக்கு குறையாமலும் 400 ஏக்கருக்கு மிகாமலும் உள்ள கண்மாய்கள்.

2. பொருத்தமான இயந்திரங்களைக் கொண்டே தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கு குறையாமலும் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

4. கண்மாய் கரை, மதகு, மறுகால் வலிமைப்படுத்தப்பட வேண்டும்.

5. மதகின் நீர் போக்கு மட்டத்திற்கே மதகின் அருகில் தூர் வாரப்பட வேண்டும்.

6. வெட்டி எடுக்கப்பட்ட மண் சாலை அமைக்கவும் மற்றும் கரை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட கண்மாய்களின் விவரம் இணைப்பு-II-ல் உள்ளது.

இந்த வருட வடகிழக்கு பருவமழையின் அளவு அதிகரித்ததை முன்னிட்டு இப்பணிகளின் முன்னேற்றம் முழுமை பெறவில்லை. 1998 ஆம் ஆண்டில் மார்ச் முடிய 189 கண்மாய்களில் ரூ.900.00 இலட்சத்திற்கு பணிகள் முடித்திட இயலும். இப்பணிகள் 98-99 ஆம் ஆண்டில் நிறைவு பெறும்.

**20.0 கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டம்**

1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் நாள் தமிழக அரசு ஆந்திரப்பிரதேச அரசிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வசதிக்காக கிருஷ்ணா ஆற்றிலிருந்து ஆண்டில் 8 மாத காலங்களில் 15 டி.எம்.சி. நீரில், வழியில் ஏற்படும் இழப்பான 3 டி.எம்.சி. போக 12 டி.எம்.சி. ஆந்திர அரசால் தமிழ்நாடு ஆந்திரா எல்லையில் வழங்கப்படும். தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட



பணிகள் "கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்" என்றும் ஆந்திரா எல்லைக்குட்பட்ட பணிகள் "தெலுங்கு கங்கை திட்டம்" என்றும் அழைக்கப்படுகின்றன.

கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டத்தில் தமிழ்நாடு எல்லையில் செய்யப்படும் பணிகளுக்காக அரசு முதன்முதலில் ஒப்பளித்த மதிப்பீட்டின் தொகை ரூ. 46.44 கோடியாகும். இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டின் தொகை ரூ. 196.04 கோடியாகும். (1996-97 ஆண்டைய விலைவாசிப் பட்டியலின்படி) பிப்ரவரி 1998 வரை ரூ.162.08 கோடி இத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

தெலுங்கு கங்கை திட்டப் பணிகளின் மதிப்பீடு ரூ.2190 கோடியாகும். அதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.521 கோடியாகும். இதில் செப்டம்பர் 97 வரை ரூ.512 கோடி ஆந்திர அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆந்திர எல்லையில் கடந்த 29-9-96 அன்று கிருஷ்ணா நதி தண்ணீர் வரப்பெற்றது. அதற்கான விழா தமிழ்நாடு அரசு ஆளுநர் முன்னிலையில் தமிழ்நாடு, ஆந்திர முதலமைச்சர்கள் மற்றும் மைய அமைச்சர்கள் கலந்துகொள்ள சிறப்பாக நடந்தேறியது.

இதனைத் தொடர்ந்து அக்டோபர் 96-இல் ஆந்திராவில் பெய்த கனமழையினால் ஏற்பட்ட புயல் வெள்ளப்பெருக்கில், ஆந்திரா எல்லைக்குட்பட்ட கண்டலேறு-பூண்டி கால்வாயில் பல பகுதிகளில் உடைப்புகள் ஏற்பட்டு கண்டலேறுவிலிருந்து நீர் வழங்குவது நிறுத்தப்பட்டது. அத்துடன், வெள்ளச் சேதங்களைக் கண்டறிந்து தக்க சீரமைப்பு பணிகளைப் பரிந்துரைக்க இருமாநிலப் பொறியாளர்களையும் உள்ளடக்கிய தொழில்நுட்ப வல்லுநர் குழுவொன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைப்படி, ஆந்திர அரசு தக்க நிதி ஒதுக்கீடு செய்து சீரமைப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டது.

கடந்த 26-6-97 முதல் மீண்டும் கிருஷ்ணா நீர் திறந்துவிடப்பட்டு 4-7-97 அன்று அது தமிழக எல்லையைக் கடந்தது. பின்னர் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்ததாலும், சென்னை நகரக் குடிநீர்த் தேக்கங்களுக்கு அவற்றின் சொந்த வடிநிலங்களிலிருந்தே மிக நல்ல நீர்வரத்து இருந்தமையாலும் கிருஷ்ணா நீர் பெறுவது 24-11-97 முதல் மீண்டும் நிறுத்தப்பட்டது. இதுவரை சென்னைக்கு 2.29 டி.எம்.சி. நீர் வரப்பெற்றுள்ளது.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டப் பணிகளைப் பொறுத்தவரை, கூவம் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வரும் குமிழ்ப்பாலம், பூண்டி நீரொழுங்கியின் அடைப்புகளை மாற்றியமைக்கும் பணி போன்ற எஞ்சிய பணிகள் நீங்கலாக அனைத்துப் பணிகளுமே முடிவடைந்துவிட்டன. எஞ்சிய பணிகள் நடந்து வருகின்றன.

**21.0 புதிய வீராணம் திட்டம் ஒரு குறிப்பு**

புதிய வீராணம் திட்டத்திற்கு முன்னர் சென்னைப் பெருநகருக்கு குடிநீர் வழங்கும் இரண்டாவது திட்டம் என்ற பெயரோடு ஆகஸ்டு 93-இல் ரூ.464 கோடிக்கு ஆட்சி ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன் மூலம் பெருநகருக்கு நாளொன்றுக்கு 190 மில்லியன் லிட்டர் நீர் வழங்க வழிவகை செய்யப்பட்டிருந்தது.

இத்திட்டத்தில் (1) கீழ்க் கொள்ளிடம் அணைக்கட்டிலிருந்து வீராணத்திற்கு நீர் கொணரும் வடவாறு கால்வாயை மேம்படுத்துதல் (2) வீராணம் ஏரியில் மேடுகளகற்றி, அதன் தற்போதைய கொள்ளளவான 935 மி.க. அடியை 1485 மி.க. அடி அளவுக்குக்கூட்ட ஏரி முழு நீர்மட்டத்தை இரண்டடி உயர்த்துதல் (3) வீராணம் ஏரியில் முன் கரைகளுக்கு வலுவூட்டி உயர்த்துதல் ஆகிய வீராணம் ஏரி தொடர்பான பணிகளுக்கு மட்டும் ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர் வடவாறு மற்றும் வீராணம் ஏரியின் கீழுள்ள ஆயக்கட்டுகளுக்கு பாசனமளிக்கும் கால்வாய்களைப் புதுப்பித்து மேம்படுத்தும் பணிகளையும் உள்ளடக்கி ஏப்ரல் 1996-இல் ரூ.110.95 கோடிக்கு புதிதாக ஆட்சி ஒப்புதல் வழங்கப்பட்டது. கால்வாய்களைப் புதுப்பிப்பதன் மூலம் வடவாற்றில் கீழுள்ள 11178 ஏக்கர் நிலங்களுக்கு வீராணம் ஏரியின் கீழுள்ள 44856 ஏக்கர் நிலங்களும் (ஆக மொத்தம் 56034 ஏக்கர்) தங்கு தடையற்ற சீரான பாசனம் பெற வாய்ப்புண்டு.

இத்திட்டம் முதலில் உலக வங்கி நிதியுதவியுடன் செயற்படுத்தப் படவிருந்தது. அண்மையில் வீராணத்திலிருந்து சென்னைக்கு நீர் கொண்டு வருவதற்கும் மிக அதிகமான செலவினைக் கருதியும் சென்னைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து ஆண்டுதோறும் 12 டி.எம்.சி. (1200 கோடி கனஅடி) நீர் வர இருப்பதை முன்னிட்டு, வீராணம் திட்டத்தின் பயனை கடலூர் மாவட்டத்தில் வீராணம் ஏரியினைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு மட்டுமே வழங்கும் வகையில் திட்டச் செயலுரு



மாற்றியமைக்கப்பட்டு, மாநில நிதியாதாரத்தின்கீழ் செயற்படுத்தவும் அரசு செப்டம்பர் 1998-ல் உத்தரவிட்டது.

21.80 கி.மீ. நீள வடவாறு கால்வாயை ரூ.21 கோடி மதிப்பீட்டில் பணியில் 5 பகுதிகளில் நான்கினுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு அவற்றிற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வடவாற்றில் நீர் அடைக்கப்பட்டபின் தற்போது சனவரி 1998-ல் வேலைகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கரையின் ஒரு பகுதியின் மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.3.93 கோடி மதிப்பிற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணி உடனே துவங்கப்பட உள்ளன. வீராணம் ஏரியின் பிரதான கரை மேம்பாட்டுப் பணிகள் ரூ.12.34 கோடி மதிப்பில் 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் எடுத்துக் கொள்ளப்படும்.

**22.0 மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு**

நிலநீர் வளத்தினை பல்வேறு வகைகளில் பெருக்குகின்ற மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது. பொதுப்பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் உள்ள மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்தின்கீழ் முறையான மற்றும் அறிவியல் பூர்வமான நிலநீர் ஆய்வு மற்றும் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் விரிவான விஞ்ஞான ரீதியான நிலநீர் ஆய்வினை மேற்கொண்டு தமிழ் நாட்டில் நிலநீர் வளத்தினை தொடர்ந்து கணித்து வருகின்றது. இவ்வகையில் ஜூலை 1997 வரை சுமார் 63 விழுக்காடு நிலநீர் வளம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்தினைக் குறிக்கோளாகக் கொண்டு பொதுப்பணித் துறையின்கீழ் இயங்கும் மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், நிலத்தடிநீர் வளங்களை அவ்வப்போது மதிப்பிடவும் பயன்படுத்தவும் நிலத்தடிநீர் நிர்வாகம் மற்றும் அதன் பெருக்கத்திற்குமான ஆய்வுப் பணிகளை முறையாகவும் அறிவியல் அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இத்துறையினால் நடத்தப்பட்டு வரும் பலவகைப்பட்ட பணிகள் உள்ளடக்கிய நிலநீர் ஆய்வு பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

[1998 ஏப்ரல் 22

1. தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுமார் 2267 பார்வைக் கிணறுகளில் (618 வறட்சிக் கிணறுகள் உட்பட) நீர்மட்டளவுகள் எடுக்கப்பட்டு நீர்மட்ட ஏற்ற இறக்கம் பற்றிய அறிக்கைகள் தயாரித்தல்.

2. தமிழகத்தில் நிலநீரின் நிலைமை மற்றும் அதன் தன்மைகளை (9000 நீர் மாதிரிகள்) கண்காணித்தல்.

3. தமிழகத்தில் மண்பரிமாணத்திற்கு ஏற்ப 15 இடங்களில் நிறுவப்பட்ட நீர்ப்பிரிமுகடுகளில் இருந்து நீரியல் மற்றும் வானிலை தொடர்பான விவரங்களைத் தொகுத்தல்.

4. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள 400 மழையளவு நிலையங்களில் இருந்து காலந்தோறும் மழையளவு விவரங்களைச் சேகரித்து மற்றும் மழை நீர் வரத்திற்கும் பூமியில் நீர் இழப்பிற்கும் உள்ள தொடர்பினை கண்டறிதல்.

5. தமிழகத்தின் நிலநீர் உபயோகம் மிக அதிக அளவில் கருமை மற்றும் சாம்பல் நிற ஒன்றியங்களில் தீவிர ஆய்வு (85 ஒன்றியங்கள்) மேற்கொண்டு நிலநீர் வளம் உள்ள பகுதிகளைக் கண்டறிதல்.

6. பொது மக்கள் அரசுத் துறைகள், மற்றும் அரசு நிறுவனங்களுக்கு கிணறுகள் தோண்டுவதற்கு இடங்கள் தேர்ந்தெடுப்பதற்கும் ஏற்கெனவே உள்ள கிணறுகள் ஆழப்படுத்துவதற்கும் ஆலோசனைகள் வழங்குதல்.

7. நிலவள வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மூலம் கடன் பெற்று கிணறு மற்றும் துளைக் கிணறு அமைக்கவும், மின் இணைப்பு பெறவும் சிறுபாசனத் திட்டங்கள் நிறைவேற்ற நிலநீர்ச் சான்று வழங்கல்.

8. வேளாண்மை நிலங்களில் உரமிடுதலால் நிலநீர் மாசுறுவதை (7 இடங்களில்) சிறப்பாய்வுகள் மூலம் அளவிடல் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளால் (22 மண்டலங்கள்) நிலநீர் மாசுறுவதை கண்காணித்து அதன் தன்மைகளை கண்டறிதல்.

9. கடலோரப் பகுதிகளில் உள்ள நீர் படிவங்களில் (250 கி.மீ. அளவிற்கு) கடல்நீர் ஊடுறுதலை கண்காணித்து கட்டுப்படுத்த சிறப்பாய்வுகள் ஆற்றுதல்.



1998 ஏப்ரல் 22]

10. நிலநீர் ஆய்விற்கான துளைக் கிணறுகள் (180 எண்கள்) துளையிடுதல் பணி.

11. தமிழகத்திலுள்ள சுமார் 17,000 கிராமங்களில் நிலநீர் வளத்தினை மறுமதிப்பீடு செய்தல் பணி தொடர் பணியாக செய்தல்.

12. துளை கிணறுகள் மூலம் கல்பாக்கம் அணுமின் திட்டத்திற்கு நாள் ஒன்றுக்கு 3 மில்லியன் காலன்கள் நிலநீர் வழங்குவதன் மூலம் ரூ.90 லட்சம் வருவாயாகப் பெறப்படுகிறது.

1998-99 ஆம் ஆண்டில் மேற்கண்ட பணிகளுக்காக ரூ.143 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

22.1 இத்துறையின் மூலம் கண்காணிக்கப்பட்டு வரும் பார்வை கிணறுகள், இம்மாநிலத்தில் கடந்த 25 வருடங்களாக நிலவும் நீர்மட்டத்தின் போக்கினை அறிய பெரிதும் உதவுகின்றன. சில பகுதிகளில் வேகமாக நீர்மட்டம் குறைந்து வருவதை காண முடிகிறது. உதாரணமாக, மேற்குறிப்பிட்டுள்ள நீர் மட்டம் குறைவாக உள்ள இடங்கள் கருமை நிறப்பகுதிகளில் காணப்படுவதை வரைபடமாக கீழே சேலம், கோவை மற்றும் வேலூர் மாவட்டத்திலிருந்து காட்டப்பட்டுள்ளன.

கிணறு எண் 53501 ஏ-ஒய் (இளம்பிள்ளை) வட்டாரம்: வீரபாண்டி - சேலம் (சாம்பல் - 1992)




படம்

[1998 ஏப்ரல் 22

கிணறு எண் 63321 (கரியனூர்) வட்டாரம் : அன்னூர் (கோயம்புத்தூர்) (கருமை - 1992)



படம்

கிணறு எண் 23018 (பக்ரிதாக்கா) வட்டாரம் - திருப்பத்தூர் (கருமை - 1992)



படம்

22.2 இத்துறை தொழிற்சாலை கழிவுகளால் நீரின் தன்மை மாசுறுவதை கண்காணித்து வருகின்றது. இவற்றில் சில இடங்களில்



1998 ஏப்ரல் 22]

நீரின் தன்மை மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் மாசு அடைந்துள்ளது. இதனை விவர வரைபடத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் மாறுபாடுடைய காரணிகளை வேலூர் மாவட்டத்திலுள்ள பேரணாம்பட்டு ஒன்றியத்தைச் சார்ந்த பார்வைக் கிணற்றிலிருந்து 1992 மற்றும் 1997 ஆம் ஆண்டினுடைய நிலவரங்கள் காட்டப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டில் தொழிற்சாலை கழிவுகளால் நீரின் தன்மை மாசுபடுவது பற்றிய விவரம்.



படம்

22.3 இத்துறை மிக முக்கிய இடங்களில் கடல்நீர் நிலநீர் தாங்கிகளில் உட்புகுதலை அறிய ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதில் மிஞ்சூரில் அமைந்துள்ள கிணற்று வயல்களில் நன்னீர் மற்றும் கடல்நீரின் இடைமுகப் பகுதிகள் கடலோரத்திலிருந்து 3.5 கி.மீ. தூரத்தில் இருப்பதாக 1972 ஆம் ஆண்டு அறியப்பட்டது. இந்த இடைமுகப்பகுதி 1997 ஆம் ஆண்டு 7.5 கி.மீ. தூரத்திற்கு அதிகரித்துள்ளது.

## 23.0 உலக வங்கி நிதியுதவியில் தமிழகத்தில் நீரியியல் திட்டம்

தமிழகம் உட்பட எட்டு மாநிலங்கள் மற்றும் ஐந்து அரசு நிறுவனங்களுக்கும் நீரியியல் திட்டம் செயல்படுத்த உலக வங்கி முன்வந்துள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள் இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பங்குபெறும் மாநிலங்களில் உள்ள நீரியியல் சுழற்சி சம்பந்தப்பட்ட, மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் தன்மை மற்றும் கொள்ளளவு விவரங்களையும் சேர்த்து விஞ்ஞானப் பூர்வமான

எல்லாவிதமான விவரக் குறிப்புகளையும் மேம்பாடு செய்ய உதவி செய்வதாகும்.

நீரியியல் திட்டத்தில் மேற்பரப்பு மற்றும் நிலநீர் பிரிவுகளின் கீழ், கீழ்க்கண்ட பணிகள் 1998-99 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

*நிலநீர் உறுப்புகள்*

1. கடினப் பாறைப் பகுதியில் மொத்தம் 669 துளைக் கிணறுகள் அமைக்கும் பணியில் 482 துளைக் கிணறுகள் பணி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 187 துளைக் கிணறு அமைக்கும் பணியினை • 1998-99 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. மணற்பாறை படிவப் பகுதியில் மொத்தம் 65 துளைக் கிணறுகள் அமைக்கும் பணியில் 22 துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 43 துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் 1998-99-ல் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. நிலநீர்மட்ட ஏற்ற தாழ்வினை கண்காணிக்க பணிமுடிவுற்ற துளைக் கிணறுகளில் 603 தானியங்கி நீர் அளவை கருவிகள் (எண்) பொருத்தும் பணி மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே வாங்கப்பட்ட 58 நீர் அளவை கருவிகளில் 20 எண்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் 150 கருவிகள் வாங்குவதற்கு உலக வங்கியின் ஒப்புதல் தேவைப்படுகிறது மற்றும் 50 கருவிகள் வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி அரசின் பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள 345 கருவிகள் வரும் நிதியாண்டில் (1998-99) வாங்கப்படும்.

2. சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள நிலநீர் வேதியியல் ஆய்வகங்களை மேம்படுத்தி, பொள்ளாச்சியில் புதிய வேதியியல் ஆய்வகம் ஒன்றை ஏற்படுத்துதல். திருச்சியில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மற்ற மூன்று இடங்களிலும் கட்டுமானப் பணி 1998-99 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

3. நான்கு வானிலை நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிட்டன. கருவிகள் பொருத்தும் பணிகள் 1998-99-ல் மேற்கொள்ளப்படும்.

*மேற்பரப்பு நீர் உறுப்புகள்*

1. 20 முழு வானிலை நிலையங்கள், 3 தானியங்கி வானிலை நிலையங்கள் மற்றும் 42 தானியங்கி அழைமானியங்கள்



அமைப்பதற்கானக் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிட்டன. தானியங்கி வானிலை நிலையம் மற்றும் தானியங்கி மழைமானிகளுக்கான கருவிகள் பொருத்தும் பணிகள் முடிவடைந்துவிட்டன. 20 முழு வானிலை நிலையங்களுக்கான கருவிகள் பொருத்தும் பணிகள் 1998-99-ல் மேற்கொள்ளப்படும்.

2. ஆற்றில் நீர்ப்போக்கின் அளவுகளை அளக்கும்பொருட்டு 1997-98-ல் 50 நீர்ப்போக்கு அளவை நிலையங்கள் மற்றும் 20 நீரளவை நிலையங்களில் கட்டுமானப் பணிகள் மற்றும் கருவிகள் பொருத்தும் பணிகளையும் சேர்த்து முடிக்கப்பட்டுவிட்டன.

3. 50 நீர் போக்கு அளவை நிலையங்களுக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் கருவிகள் பொருத்தும் பணிகளையும் சேர்த்து 1998-99-ல் மேற்கொள்ளப்படும்.

4. மேலும் விவரக் குறிப்புகளைச் சேகரித்தல் மற்றும் பாதுகாக்கும் பணிகளுக்கான கணிப்பொறிகளை கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்கள் அளவில் பொருத்தும் பணிகள் 1998-99-ல் மேற்கொள்ளப்படும்.

மேலும், வெவ்வேறு இடங்களில் கோட்டம், உபகோட்டம் மற்றும் விரிவு அலுவலகங்கள் போன்ற உள் அமைப்பு வசதிகளை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்கூறியவைகளல்லாமல், நீரியியல் மற்றும் வானியல் புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும் பரிமாற்றம் செய்யவும், 1.998-99 ஆம் ஆண்டில் ரூ.2.10 கோடி செலவில் ஒருங்கிணைந்த விவரக்குறிப்பு மையம் ஒன்று சென்னையில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய 1998-99-க்காகக் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள ரூ.12.12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 24.0 அணை பாதுகாப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம்

அணைகள் நாட்டின் செல்வங்கள், நாட்டின் முன்னேற்றத்திற்காக கட்டப்பட்டது. அணைகளின் பாதுகாப்பு நாட்டின் நலனிற்கும் முக்கியமானதாகும். மேற்கண்ட காரணங்களினால் அணை பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு திட்டம் ரூ.78.60 கோடி அளவில் உலக வங்கி உதவியுடன் 1991 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டது. ரூ.41.85

கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டம் கீழ்க்கண்ட 3 பகுதிகளைக் கொண்டது.

1. அணை பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்துதல்.
2. அணைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல்.
3. அணைகளைப் புனரமைத்தல்.

**24.1 அணை பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்துதல்**

உலக வங்கி பரிந்துரையின்படி இத்திட்டத்தை செயலாக்க 55 அலுவலர்கள் கொண்ட அணை பாதுகாப்பு இயக்கம் உருவாக்கப்பட்டது. "அணை பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்துதல்" என்னும் தலைப்பின்கீழ் ரூ.40 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டது. மேலும் கீழ்க்காணும் பணிகள் இத்திட்டத்தில் இடம் பெறும்.

• அ. கலந்தறிதல்

| வ. எண் | கலந்தறிதல் | அணைகளின் எண்ணிக்கை | முடிவுற்றவை | தயாரிப்பில் உள்ளவை |
|---|---|---|---|---|
| 1. | தற்போது இருக்கும் அணைகளுக்கு வரலாற்றுப் புத்தகங்கள் எழுதுதல். | 21 | 4 | 17 |
| 2. | கட்டப்பட்ட அணைகளுக்கு பூகோள வரைபடம் தயாரித்தல். | 57 | 13 | 44 |
| 3. | அணை உடைந்தால் அணையின் கீழ் ஏற்படக் கூடிய பின்விளைவுகளை அறிதல் | 12 | பணி செய்வதற்கான கருத்துரு மத்திய நீர்வளக் குழுமத்தின் ஆய்வில் உள்ளது. | |
| 4. | அணைகளின் வெட்டுத் தோற்றத்தின் அமைப்பினை எப்.இ.எப். முறையில் அறிதல் | 2 | 1998 ஏப்ரல் மாத இறுதிக்குள் அறிக்கை தயாரித்து முடிக்கப்படும் | |

ஆ. பயிற்சி

உள்நாட்டுப் பயிற்சிகளும் 1 அயல்நாட்டுப் பயிற்சியும் ரூ.15.87 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளன.



இ. அலுவலக தளவாடங்கள்

அணைகள் பாதுகாப்பு இயக்கத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த கீழ்க்காணும் தளவாடங்கள் வாங்கப்பட்டுள்ளன.

1. நகலெடுக்கும் கருவி.
2. வரைபடம் நகலெடுக்கும் கருவி
3. புத்தகம் தைக்கும் கருவி
4. ஒளி மற்றும் ஒலி கருவிகள்
5. 5 லாமினேசன் கருவி
6. தொலைநகல் அனுப்பும் கருவி
7. வரைபட உபகரணங்கள்

கம்ப்யூட்டர் மற்றும் நில அளவை உபகரணங்கள் வாங்கப்பட உள்ளன.

'அணை பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்துதல்' என்னும் தலைப்பின்கீழ் ரூ.448 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் பிப்ரவரி 1998 முடிய செலவான தொகை ரூ.265.49 இலட்சங்கள் ஆகும்.

**24.2 அணைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல்**

கீழ்க்கண்ட 24 அணைகளுக்கு அணுகு சாலை, கூடுதல் மின்வசதி மற்றும் அணை பாதுகாப்பு கருவிகள் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவையாவன:

1. பெரியாறு அணை
2. கொடகனாறு அணை
3. சாத்தனூர் அணை
4. பேச்சிப்பாறை அணை
5. மணிமுத்தாறு அணை
6. வீடூர் அணை
7. கோமுகி அணை

8. உப்பாறு அணை
9. பொன்னியாறு அணை
10. பரம்பிக்குளம் அணை
11. குண்டேரிப்பள்ளம் அணை
12. சித்தமல்லி அணை
13. வில்லிங்டன் அணை
14. மணிமுக்தாநதி அணை
15. சோலையாறு அணை
16. பெருஞ்சாணி அணை
17. மேட்டூர் அணை
18. கருப்பாநதி அணை
19. இராமாநதி அணை
20. பிளவுக்கல் - பெரியாறு அணை
21. பிளவுக்கல் - கோவிலாறு அணை
22. பூண்டி அணை
23. அமராவதி அணை
24. பவானிசாகர் அணை

ரூ.64.75 இலட்சம் செலவில் 17 அணைகளுக்கு அணுகுசாலை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.91.80 இலட்சம் செலவில் கூடுதல் மின்வசதி அமைக்கப்பட்டுள்ளது. ரூ.224.00 இலட்சம் செலவில் 19 எச்.எஃப். 64 வி.எச்.எஃப். மற்றும் 32 நடமாடும் வி.எச்.எஃப். தொலை தொடர்பு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. ரூ.170.00 இலட்சம் செலவில் மேட்டூர், சாத்தனூர் மற்றும் மணிமுத்தாறு அணைகளில் நிலநடுக்கத்தினை பதிவு செய்யும் கருவிகள் பொருத்தப்படவுள்ளன. மேலும் ரூ.60.00 இலட்சம் செலவில் தானியங்கி நீர்மட்ட அளவு பதிவு அளவைகள் மற்றும் கருவிகள் பொருத்தப்படவுள்ளன.



**24.3 அணைகளைப் புனரமைத்தல்**

மொத்தமுள்ள 57 அணைகளில் கீழ்க்கண்ட 14 அணைகளில் புனரமைப்பு திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவையாவன:

1. பெரியாறு அணை
2. மணிமுத்தாநதி அணை
3. சாத்தனூர் அணை
4. பேச்சிப்பாறை அணை
5. மணிமுத்தாறு அணை
6. வீடூர் அணை
7. கோமுகி அணை
8. உப்பாறு அணை
9. பொன்னியாறு அணை
10. குண்டேரிப்பள்ளம் அணை
11. சித்தமல்லி அணை
12. வில்லிங்டன் அணை
13. சோலையார் அணை
14. பெருஞ்சாணி அணை

இத்திட்டம் 30-9-97-ல் முடிவு பெற்றமையால் மறுஆய்வு செய்யப்பட்டு 2 ஆண்டுகளுக்கு 1. பெரியாறு 2. பேச்சிப்பாறை 3. மணிமுத்தாறு 4. கோமுகி ஆகிய 4 அணைகள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அணை பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகள் மொத்தம் உள்ள 24 அணைகளுக்கும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. மறுஆய்வு செய்யப்பட்டுள்ள, இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.25.51 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

14. அணைகளில் நடைபெற்றுவரும் வேலைகளின் தற்போதைய நிலை. [1998 ஏப்ரல் 22

| வ. எண். | அணையின் பெயர் பணி. | வேலையின் மதிப்பு ரூ. இலட்சங்கள். | தற்போதைய நிலை. |
|---|---|---|---|
| 1. | மணிமுத்தாறு | | |
| | (அ) அணையின் முன்பக்கம் ரசாயனப் பூச்சுப் பணி | 38.00 | மொத்தமுள்ள 3375 மீட்டரில் 1020 மீட்டர் இணைப்பில் சுரண்டும் வேலை முடிந்துவிட்டது. 4500 கிலோகிராம் கிரவுட்டிங் முடிந்து விட்டது. 30 சதவீத வேலை முடிவுற்றது. |
| 2. | பெரியாறு | | |
| | (அ) அணையின் பின்பக்கத்தில் வலுப்படுத்தும் கான்கிரீட் போடுதல் | 221.00 | 21-7-95-ல் முடிவடைந்தன. |
| | (ஆ) விசை குறைப்பு அமைப்பு கட்டுதல் | 382.00 | மொத்தமுள்ள 35,600 க.மீ.-ல் 25,000 க.மீ. மண் வேலை முடிந்தது. 15,000 க.மீ.-ல் 2000 க.மீ. கான்கிரீட் போடப்பட்டுள்ளது. 50% வேலை முடிந்துள்ளது. |
| | (இ) குட்டி அணை பலப்படுத்துதல் | 117.00 | ஒப்பந்தப்புள்ளிகள் அமைப்பதற்கு தேவையான ஆவணங்கள் உலக வங்கி ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
| 3. | கோமுகி | | |
| | (அ) அபாய தடுப்பு உடைப்பு பகுதி அமைத்தல் | 128.00 | முழு நீர்மட்ட அளவில் கான்கிரீட் தளம் மற்றும் பின்பக்க சுறசுவர் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளன. பின்பக்கம் கான்கிரீட் போடும் பணி நடைபெற்று வருகிறது. 90% பணிகள் முடிவடைந்துள்ளன. |





1998 ஏப்ரல் 22]

| வ. எண். | அணையின் பெயர் பணி. | வேலையின் மதிப்பு ரூ. இலட்சங்கள். | தற்போதைய நிலை. |
|---|---|---|---|
| | (ஆ) கூடுதல் நீர் வழிந்தோடிகள் அமைத்தல் | 190.00 | மண் தோண்டும் பணி முடிந்துள்ளது. பாறைகள் வெடி வைத்து உடைத்து எடுக்கும் பணி நடைபெற்று வருகின்றது. |
| | (இ) மேற்படி வழிந்தோடிகளுக்கு கதவுகள் அமைத்தல் | 87.00 | தொழிற்சாலையில் கதவுகள் தயாரிக்கும் பணி முடிந்துவிட்டது. பணித் தளத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் |
| | (ஈ) அலை மறுதலிப்பான் சுவர் கட்டும் பணி | 47.00 | 90% பணி முடிந்து விட்டது. |
| 4. | பேச்சிப்பாறை | | |
| | (அ) அணையின் முன் பக்கம் ரசாயனப் பூச்சுப் பணி | 82.00 | 7000 மீட்டரில் 1782 மீட்டர் இணைப்பு சுரண்டும் பணி முடிந்தது. 57,750 கி.கி.ல் 14,275 கி.கி. கிரவுட்டிங் முடிந்துவிட்டது. 25% பணி முடிந்துவிட்டது. |
| 5. | சாத்தனூர் | | |
| | (அ) கூடுதல் நீர் வழிந்தோடிகள் அமைத்தல் | 464.00 | அடித்தளத்திற்கு பாறைகள் வெடி வைத்து உடைத்து எடுக்கும் பணி மற்றும் தூண்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன. |
| | (ஆ) வழிந்தோடி கதவுகள் அமைத்தல் | 500.00 | மனு ஒப்பந்தப்புள்ளி அமைக்கப்பட்டுள்ளது. |
| | (இ) கைப்பிடிச்சுவர் | 120.00 | ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. |
| | (ஈ) அபாய தடுப்பு உடைப்பு பகுதி அமைத்தல் | 150.00 | ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. |

[1998 ஏப்ரல் 22

| வ. எண். | அணையின் பெயர் பணி. | வேலையின் மதிப்பு ரூ. இலட்சங்கள். | தற்போதைய நிலை. |
|---|---|---|---|
| 6. | வீடுர் | | |
| | (அ) கூடுதல் நீர் வழிந்தோடிகள் அமைத்தல் | 600.00 | ஒப்பந்தப்புள்ளி அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உலகவங்கி ஒப்புதலுக்குப்பின் வேலை தொடங்கப்படும் |
| | (ஆ) வழிந்தோடி கதவுகள் அமைத்தல் | 120.00 | ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன |
| | (இ) அபாய தடுப்பு உடைப்பு பகுதி அமைத்தல் | 42.00 | வேலைகள் முடிந்து விட்டன. |
| | கைப்பிடிச் சுவர் | 82.00 | 80% பணிகள் முடிந்து விட்டன. |
| 7. | வெலிங்டன் | | |
| | (அ) மண் அணை புனரமைப்பு | 120.00 | மறு வடிவமைப்பு செய்யப்பட உள்ளது. அணை பாதுகாப்பு பரிசீலனைக்குழு ஏப்ரல் 98ல் ஆய்வு செய்ய உள்ளது. தள ஆய்வுப்பணி நடைபெற்று வருகின்றது. |
| 8. | சோலை ஆறு | | |
| | (அ) அணையின் முன் பக்கம் ரசாயனப் பூச்சுப் பணி | 145.00 | 25% பணிகள் முடிந்து விட்டன. |
| 9. | பெருஞ்சாணி | | |
| | (அ) கூடுதல் வழிந்தோடி அமைத்தல் | 150.00 | மதிப்பீடு தயாரித்தல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி |
| | (ஆ) வழிந்தோடி கதவுகள் அமைத்தல் | 320.00 | அழைக்கத் தேவையான |
| | (இ) அணையின் பின்பக்கம் வலுப்படுத்தும் கான்கிரீட் போடுதல் | 650.00 | ஆவணங்கள் தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளன. |



1998 ஏப்ரல் 22]

| வ. எண். | அணையின் பெயர் பணி. | வேலையின் மதிப்பு ரூ. இலட்சங்கள். | தற்போதைய நிலை. |
|---|---|---|---|
| 10. | பொன்னியாறு அபாய தடுப்பு (அ) உடைப்பு பகுதி அமைத்தல் | 180.00 | வேலை ஆரம்பிக்கப்பட உள்ளது. |
| 11. | சித்தமல்லி | | |
| | (அ) மண் அணை புனரமைப்பு | 143.00 | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| | (ஆ) அபாய தடுப்பு உடைப்பு பகுதி அமைத்தல் | 180.00 | வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| | (இ) பழுதான வழிந்தோடி குளத்தை சீரமைத்தல் | 74.00 | பணிகள் நடைபெற்று வருகின்றது. |
| 12. | குண்டேரிப்பள்ளம் (அ) மண் அணை உயர்த்துதல் | 31.00 | மண் அணை உயர்த்தும் பணி முடிந்துவிட்டது. அதன் மீது சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. |
| 13. | உப்பாறு | | |
| | (அ) அபாய தடுப்பு உடைப்பு பகுதி அமைத்தல் | 96.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | (ஆ) கைப்பிடிச் சுவர் | 38.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 14. | மணி முக்தா நதி | | |
| | (அ) கூடுதல் வழிந்தோடி அமைத்தல் | 330.00 | வடிவமைப்பு அணை பாதுகாப்பு |
| | (ஆ) நீர்ப் பிடிப்பு பகுதியில் மண் அரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல் | 330.00 | பரிசோதனைக் குழுவினால் முடிவு செய்யப்பட உள்ளது. |

இத்திட்டத்தில் ஆரம்பம் முதல் இதுவரை ஏற்பட்ட செலவினம் பிப்ரவரி 98 முடிய ரூ.1,861.66 இலட்சங்கள், இதில் கண்டுள்ள அனைத்துப் பணிகளும் செப்டம்பர் 99-க்குள் முடிக்கப்பட வேண்டும்.

1998-99 திட்ட மதிப்பீட்டில் ரூ.573.63 லட்சங்கள் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**25.0 பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்தல்**

ஆனமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆழியாறு, தேக்கடியாறு பாலாறு மற்றும் ஆழியாறு ஆகிய ஆறுகள் மற்றும் இவைகளின் நீர்வரத்து ஓடைகளில் வரும் தண்ணீரை உபயோகித்து மின் உற்பத்தி மற்றும் பாசனம் செய்வதற்குண்டான, 9.11.1958 என்ற முன் தேதியிலிருந்து நடைமுறைபடுத்தும் வகையில் 29.5.1970 அன்று தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளிடையே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தம் 9.11.1958-லிருந்து 30 ஆண்டு காலத்திற்கு பிறகும் அதன் பிறகு ஒவ்வொரு 30 ஆண்டுகட்கும் மறு பரிசீலனை செய்யப்பட்டு, ஏற்கெனவே பெறப்பட்டுள்ள பட்டறிவின் அடிப்படையில் இருசாரரும் ஒப்புக்கொள்ளும் வகையிலான மாறுதல்களை ஒப்பந்தத்தில் செய்துகொள்ளலாம் என்று வகை செய்யப்பட்டது. இவ்வாறான மறுபரிசீலனை 9.11.1988-ல் செய்யப்பட வேண்டும்.

எனவே, மேற்குறிப்பிட்ட ஒப்பந்த மறுபரிசீலனை சம்பந்தமான அவரவர்களது கருத்துக்கள் பற்றிய ஆவணங்களை 21.09.1989 அன்று இரு அரசுகளும் பரிமாறிக் கொண்டன. தொடர்ந்து அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் அளவிலான பற்பல கலந்தாலோசனைகள் நடைபெற்றன. ஒரு கட்டத்தில், தமிழ்நாடு மற்றும் கேரள அளவிலான அதிகாரிகளை உள்ளடக்கிய இருமாநிலங்களுக்கிடையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டது. பரம்பிக்குளம் ஆழியாறு ஒப்பந்தம்பற்றி மறு ஆய்வு செய்து அதன் மீதான இக்குழுவின் ஒருமித்த அறிக்கை அளிப்பதற்காகவே இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் கூட்டம் திருவனந்தபுரம் மற்றும் அட்டக்கட்டி ஆகிய இடங்களில் நடைபெற்றன. ஆனால், ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை.

இதனிடையே, கேரளம் தனது மாநில சட்டமன்ற உறுப்பினர் 19 பேர் அடங்கிய ஒரு ஆய்வுக் குழுவை தன்னிச்சையாக நியமித்து அதன் கருத்தைக் கேட்டது. அக்குழுமம், தமிழ்நாடு ஒப்பந்த விதிகளை மீறியுள்ளதாகக் குற்றம் சாட்டியது. இதுபற்றி, கேரள முதல்வர் தமிழ்நாடு





முதல்வருக்குத் தெரிவித்தபோது தமிழ்நாடு முதல்வர், அவ்வாறு ஒப்பந்த விதிகளைத் தமிழ்நாடு மீறவில்லையென உடனே பதில் அளித்தார்.

தமிழ்நாட்டின் கீழ்க்கண்ட கோரிக்கைகளைக் கேரள அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1. இடமலையார் நீர்மின் திட்டம் முடிவடைந்து விட்டதால் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்டுள்ளபடி ஆனமலையாற்றிலிருந்து 2.5. டி.எம்.சி. நீரைத் தமிழகத்திற்கு திருப்ப கேரளம் ஒப்புதல் தர வேண்டும்.

2. இடமலையார் மற்றும் இடுக்கி திட்டங்கள் முடிவடைந்து விட்டதால் ஒப்பந்தப்படி மேல் நீராற்றில் வரும் மொத்த நீர் வரத்தையும் அக்டோபர் 1-ம் தேதி முதல் ஜனவரி 31-ம் தேதி முடிய உள்ள காலத்தில் எவ்விதத் தடையின்றி வழங்கவும் தமிழகமே பயன்படுத்தவும் அனுமதி அளிக்க வேண்டும்.

3. உபயோகப்படுத்த முடியாத உபரி நீரைத் தேக்கி அதன் மூலம் பாசன நிலங்களுக்குப் பாசன உறுதி செய்ய மனக்கடவு மதகிற்கு மேலே ஒரு சமநிலை நீர்த்தேக்கம் அமைக்க கேரள அரசு அனுமதி அளிக்க வேண்டும்.

4. மேல் நீராற்று நீரை, நீரிழப்பைத் தவிர்க்கும் பொருட்டு சுரங்க வழியாக நல்லாற்றுக்குத் திருப்புதல், நல்லாற்றில் மின் நிலையம் அமைத்தல், பின்னர் நீரைத் திருமூர்த்தி அணைக்குத் திருப்பி விடுதல் ஆகிய புதிய திட்டங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

5. சிட்டூர் பழா வடிநிலத்திற்குத் தண்ணீர் தேவைப்படுமானால், தமிழகத்திற்குரிய 2.5. டி.எம்.சிக்கு மேல் உள்ள உபரிநீரை ஆனமலை யாற்றிலிருந்தோ அல்லது தேக்கடியாறு நீரைத் திருப்பிவிடுவதன் மூலமாகவோ செய்யலாம். கடந்த 28.11.96-ல் இரு மாநில பாசன அமைச்சர்கள் மட்டத்தில் சென்னையில் பேச்சுவார்த்தைகள் நடை பெற்றன. முதலில் பிரச்சினைகள் குறித்து அரசு அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று கேரள பாசன அமைச்சர் தெரிவித்தார். தமிழ்நாடு அரசு அதற்கிணங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## 26.0 பாண்டியார் - புன்னம்புழா திட்டம்

கடந்த 28.11.96ல் சென்னையில் நடைபெற்ற கேரளம் மற்றும் தமிழ்நாடு பாசனத் துறை அமைச்சர்கள் பேச்சுவார்த்தையின் போது, பாண்டியார் புன்னம்புழா திட்டத்தின் மின் உற்பத்திக்குப் பிறகு வெளியேறும் நீரில் குறைந்தது 7 டி.எம்.சி. யாவது தமிழ்நாட்டுக்குத் திருப்ப அனுமதிக்க வேண்டும் என்று கேரள அமைச்சரை தமிழ்நாடு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். திட்டத்திற்கான அறிக்கையை பரிசீலித்த பிறகு அதன் மீது கருத்து தெரிவிப்பதாக கேரள அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

இத்திட்டத்திற்கான அறிக்கையை தமிழ்நாடு மின் வாரியம் தயாரித்துள்ளது. அந்த அறிக்கையின்படி திட்டம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் கிடைக்கும் 14 டி.எம்.சி. நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்த பின் வெளியேறும் நீர் முழுவதையும் கேரளத்திற்கே திருப்பி விடுவது. இரண்டாவது கட்டத்தில் 7 டி.எம்.சி நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்து வெளியேறும் நீரை கேரளத்திற்கே திருப்பி விடவும், எஞ்சிய 7 டி.எம்.சி. நீரை சுமார் 27 கிலோ மீட்டர் நீளமுள்ள குகைப்பாதை வழியாக தமிழ்நாட்டில் பாயும் பவானி மோயார் ஆற்றின் துணை ஆறான சிகர் ஆற்றிற்கு கொண்டு வந்து அங்கு மின் உற்பத்தி செய்த பின் பாசனத்திற்குப் பயன்படுத்துவது.

இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான அறிக்கையைத் தயாரிக்கும்படி தமிழ்நாடு அரசு தமிழ்நாடு மின் வாரியத்தைப் பணித்துள்ளது. தமிழ்நாடு மின் வாரியம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

## 27.0 மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்புதல்

நீர்வள மேம்பாட்டுக்காக மத்திய அரசால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகளை இணைத்தல் ஒரு அங்கமாக உள்ளது. அதில் மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பும் திட்டமும் அடங்கியுள்ளது. தீபகற்ப ஆறுகளை இணைக்கும் பணிக்கான திட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தேசிய நீர்வளக் குழுமத்தை மத்திய அரசு அமைத்துள்ளது.



தேசிய நீர்வளக் குழுமம் அவ்வாறே தீபகற்ப இந்தியாவின் ஆறுகள் அனைத்திலும் ஆய்வினை மேற்கொண்டு இணைப்புப் பணிகளுக்காக அறிக்கைகளைத் தயாரித்து வருகிறது. இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் பம்பா - அச்சன்கோயில் வைப்பார் இணைப்புத் திட்டத்தை தேசிய நீர்வளக் குழுமம் தயாரித்துள்ளது. இத்திட்டம் கேரளத்தில் பம்பா மற்றும் அச்சன் கோவில் ஆறுகளின் உபரி நீர் வளத்தைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பும் கருத்தைத் தெரிவிக்கின்றது.

பம்பா - அச்சன் கோவில் - வைப்பார் இணைப்புத் திட்டத்தின்படி இரண்டு நீர்த்தேக்கங்கள், ஒரு விசை இறைப்பானால் நிரப்பப்படும் நீர்த்தேக்கம், மின் உற்பத்திக் கேந்திரங்கள் மற்றும் தமிழ்நாட்டுக்கு நீரைக் கொண்டு வருவதற்கு சுமார் 50 கி.மீ. நீளமுள்ள கால்வாய் ஆகியவை அமைக்கப்படும். திட்டத்தின்படி சுமார் 22 டி.எம்.சி அளவு நீர் தமிழ்நாட்டிற்குத் திருப்பப்பட்டு அதனால் கோவில்பட்டி, சங்கரன்கோவில், சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி தாலுகாக்களில் சுமார் 91,400 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும். தமிழ்நாட்டிற்குப் பாசன வசதியுடன் ஆண்டுக்கு சுமார் 1,114 மில்லியன் யூனிட் மின் உற்பத்தியும் கேரளத்திலுள்ள வேம்ப நாடு ஏரியின் உப்புத் தன்மையைப் போக்கவும் மற்றும் கேரளத்தில் குடிநீர் வசதியும் இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு சுமார் ரூ.1,398 கோடி (1992 விலைப்பட்டியலின்படி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டுள்ளதுடன் இத்திட்டத்திற்கு மத்திய நீர் குழுமத்தின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தினைக் கேரள அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. கேரள ஆறுகளில் உபரிநீர் ஏதும் இல்லையென்றும், கேரள ஆறுகளிலிருந்து நீரை வெளியே கொண்டு சென்றால் அதனால் கேரளத்தின் வளமும் சுற்றுச்சூழல் நிலையும் மாசுபடும் என்றும் கேரளம் கருதுகின்றது.

ஆறுகள் இணைப்பிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மாநிலங்களின் கருத்தை மாற்றவும், இணைப்புத் திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களின்

ஒப்புதலைப் பெறவும் மத்திய அரசு ஒரு "துணைக் குழுவை" அமைத்துள்ளது. அக்குழுமம் பம்பா-அச்சன் கோயில் - வைப்பார் இணைப்பிற்குக் கேரளத்தின ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கும்.

தமிழ்நாடு அரசும் கேரளத்தின் ஒப்புதலைப் பெறத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## 28.0 காவிரி டெல்டாப் பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல்

காவரி டெல்டாப் பாசனம் சுமார் 2000 ஆண்டுகள் பழமையானது. இதிலுள்ள அடிப்படை வசதிகள் நவீனப்படுத்தப்பட்டால்தான் இப்பாசனத் திட்டம் திறம்பட செயல்படும். முதன்முதலில் 1970-ம் ஆண்டில் தமிழக அரசு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள் புனரமைப்பு உள்ளிட்ட காவிரி டெல்டாப் பாசனத் திட்ட நவீன மயமாக்கும் பணிக்கு ஒரு பெரும் திட்டம் (மாஸ்டர் பிளான்) தீட்டியது. பன்னாட்டு நிதியுதவி பெறும் நோக்கத்தில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இருந்தாலும் மாநிலங்களுக்கிடையே பிரச்சினை உள்ளதால் இத்திட்டத்திற்கு மைய அரசின் நீர்வள அமைச்சகத்தின் இசைவு கிடைக்காமற் போனது. அதனால் இத்திட்டத்திற்கு வெளிநாட்டு உதவி ஏதும் கிடைக்கவில்லை, இருப்பினும் பாசனம். வெள்ளக் கட்டுப்பாடு, மற்றும் வடிகால்கள் இவற்றின் அவசரத் தேவைகளுக்காக காவிரி டெல்டாப் பகுதிகளில் சிறு பணிகள் அவ்வப்போது மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றப்பட்டன. இம்முயற்சிகள் காவிரி டெல்டாப் பாசன திட்டத்தின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யவில்லை.

எனவே, காவிரி டெல்டாப் பாசனப் பகுதி நவீனமயமாக்கும் திட்டத்தை மூன்று பகுதியாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இதன் முதற் பகுதியாக 460 கோடி ரூபாய்க்கு ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு உலக வங்கி உதவிக்காக அனுப்பும்பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் பின்வரும் பணிகள் உள்ளடங்கியுள்ளன.

1. 70,000 எக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 10 ஆறுகளைப் புனரமைப்புச் செய்து நவீனமயமாக்குதல்.

2. 323 கால்வாய்களைப் புனரமைப்புச் செய்து நவீனமயமாக்குதல்.



3. 109 வடிகால்களை மேம்படுத்துதல்.

4. ரூ.23.02 கோடி மதிப்பிற்கு வெள்ளக் கட்டுப்பாடுப் பணிகளை நிறைவேற்றுதல்.

5.. ஏனைய பல்வகைப் பணிகளை நிறைவேற்றுதல்.

இந்த முதல் கட்டப் பணிகளை நிறைவேற்றும்போது 70,000 எக்டேர் பாசனப் பரப்பில் மேலான, நியாயமான. சமமான, நம்பத் தகுந்த பாசன வசதிக்கு வழி வகுக்கும்.

## 29.0 காவிரி நதிநீர் தாவா

29.1 தமிழக அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், உச்ச நீதி மன்றத்தின் அறிவுரைகளின்படியும், மத்திய அரசு மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டம் 1956-ன்கீழ் காவிரி நீர் நடுவர் மன்றத்தை 1990-ம் வருடம் ஜூன் மாதம் நியமித்தது. பாதிக்கப்பட்ட மாநிலங்களின் கருத்துரைகளைக் கேட்டபின். இந்நடுவர் மன்றம், ஒரு பாசன ஆண்டில், கர்நாடக மாநிலத்தில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருந்து 205 டி.எம்.சி. நீர் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்குக் கிடைக்குமாறு, தண்ணீர் திறந்து விடுமாறு கர்நாடகத்திற்கு 25.6.1991-ம் நாள் இடைக்கால ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. இந்த இடைக்கால ஆணையில் மாதந்தோறும் அனுப்ப வேண்டிய நீரின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மாதந்தோறும் அனுப்பப்பட வேண்டிய நீர் வாரந்தோறும் சமமாகப் பங்கிட்டு வழங்கப்பட வேண்டும் எனவும், ஒரு வாரத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவுநீர் அனுப்பப்படவில்லை யெனில் இது அடுத்த வாரத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவு நீருடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும் எனவும், இடைக்கால உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

29.2 இவ்வாறு நடுவர் மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை முறியடிக்கும் நோக்கத்துடன் கர்நாடக அரசு சட்டம் ஒன்றை தனது சட்டமன்றத்தில் இயற்றியது. உச்ச நீதி மன்றத்திலும் இந்த இடைக்கால உத்தரவு செல்லத்தக்கதல்ல என அறிவிக்குமாறு கோரி மனு தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 143-ல் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லையின் கீழ், நடுவர் மன்ற இடைக்கால உத்தரவு வருவதால் கர்நாடக

மாநிலத்தால் இயற்றப்பட்ட சட்டம் செல்லத்தக்கதல்ல. எனவும் நடுவர்
மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவு மாநிலங்களுக்கான
நதிநீர் தாவா சட்டம் பிரிவு 5(2)ன்கீழ் வரும் அறிக்கை மட்டும்
முடிவானதாகும் என பதிலளித்தது. உச்ச நீதிமன்றத்தின் மேற்கூறிய
பதிலைத் தொடர்ந்து கர்நாடக அரசு தனது மனுவை திரும்பப்
பெற்றுக் கொண்டது. உச்ச நீதிமன்றமும் 5.4.95 அன்று கர்நாடக அரசு
மனுவை திரும்பப் பெற்றதாகக் கூறி இதனைத் தள்ளுபடி செய்தது.

29.3 மாநிலங்களுக்கான நதிநீர் தாவா சட்டத்தின்படி, நடுவர்
மன்றம் முடிவு எடுக்கலாமே தவிர, அந்த முடிவை செயல்படுத்தும்
அதிகாரம் அதற்கு இல்லை. எனவே, தமிழக அரசு நடுவர் மன்றத்தின்
இடைக்காலத் தீர்ப்பை அரசியலமைப்புச் சட்டம் பிரிவு எண் 131-ன்
படி கர்நாடக மாநிலத்தைச் செயல்படுத்த அறிவுறுத்துமாறு உச்ச நீதி
மன்றத்தில் வழக்கு ஒன்றை (வழக்கு எண் 1/1992) பதிவு செய்தது.
மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவா சட்டம் 1956 பிரிவு 6ன்
படி இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை
மத்திய அரசு வகுக்க வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்க
வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு கோரியது.

29.4 மேற்குறிப்பிட்ட மனு நிலுவையில் இருக்கும்போதே, காவிரி
ஆற்றின் நீர் ஓட்டம் முழுவதையும் கர்நாடக அரசு தனது
நீர்த்தேக்கங்களில் சேமித்ததால் காவிரி டெல்டாப் பாசனப் பாப்பில்
தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்ட காலங்களில் எல்லாம் நடுவர்
மன்றத்தில் இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீர் திறந்துவிட கர்நாடக
அரசுக்கு உத்தரவு இடக்கோரி தமிழக அரசு இடைக்கால பல
மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்தது. இவ்வாறு கோரும்
மனு 1996-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் கடைசியாகப் பதிவு
செய்யப்பட்டது. 30.7.1996 அன்று இம்மனுவைப் பரிசீலித்த உச்ச நீதி
மன்றம், தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில முதல்வர்கள் சந்தித்து
தமிழகத்தில் உடனடி பயிர் தேவைகளுக்காக கர்நாடகம் தண்ணீர்
திறந்துவிடுவது குறித்து ஒரு நடைமுறைத் திட்டத்தை வகுக்கலாம்
எனக் கருதியது.

29.5 இதனைத் தொடர்ந்து 1996-ம் ஆண்டு ஆகஸ்டு முதல் ஐந்து
சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 1997-ம் ஆண்டு ஜனவரி
திங்கள் 5-ம் தேதி இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.
எனினும் காவிரி தாவா குறித்து எந்தவிதமான குறுகிய அல்லது



நீண்டகாலத் தீர்வும் இந்தப் பேச்சுவார்த்தைகள் மூலம்
எட்டப்படவில்லை. நல்லகாலமாக கர்நாடகாவில் உள்ள கபினி
நீர்த்தேக்கம் வழிந்தோடியதாலும், வடகிழக்குப் பருவமழை நல்லபடியாக
பெய்ததாலும் பயிர்கள் பாதுகாக்கப்பட்டது. மாநில
முதல்வர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவு
குறித்து ஓர் அறிக்கையை 4.2.1997 அன்று உச்ச நீதிமன்றத்தில்
தற்போது நிலுவையில் உள்ள மனு எண் 1/1992 மீது தக்க தீர்ப்பு
வழங்குவதற்கு ஏற்ப தாக்கல் செய்யப்பட்டது.

29.6 இத்தருணத்தில், உச்ச நீதிமன்றம் சிவில் வழக்கு 1/92-ல் 21.3.97
ஆம் நாளன்று கணிசமான சட்ட நுணுக்கம் மற்றும் அரசியல்
அமைப்பிற்கு விளக்கங்கள் தேவை ஏற்படுவதால் இந்த வழக்கு
அரசியலமைப்புப் பிரிவால் விசாரிக்கப்பட்டு முடிவு எடுக்கலாம் என
உத்தரவிட்டது. உச்ச நீதிமன்ற அரசியலமைப்புப் பிரிவு விசாரணையை
மேற்கொண்டு விவாதங்கள் நடைபெற்று வரும் தருணத்தில் 9.4.1997
அன்று இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர் கீழ்க்கண்டவாறு உச்ச
நீதிமன்றத்தில் தெரிவித்தார்:-

"நடுவர் மன்ற இடைக்கால ஆணையை பயனுள்ள வகையில்
செயலாக்கம் செய்யும் பொருட்டு பிரிவு 6 'ஏ'-ன்கீழ் ஒரு திட்டத்தை
உருவாக்க மத்திய அரசு இசைகிறது. இந்தத் திட்டத்தை அடுத்த எட்டு
வாரத்திற்குள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தினைப் பெறுவதற்காக
அனுப்பப்பட்டு அது பின்னர் மத்திய அரசால் இறுதியாக்கப்பட்டு,
சட்டமுறைப்படி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்."

29.7. உச்ச நீதிமன்றத்தில் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றும்
பொருட்டு மத்திய அரசு ஒரு வரைவு திட்டத்தைத் தயாரித்து
30.5.1997 ஆம் நாளன்று சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தை
அனுப்புமாறு கேட்டுக்கொண்டது. தமிழ்நாடு அந்த வரைவு திட்டத்தின்
சட்டத்திற்கு உட்பட்டு ஒரு சில கருத்துக்களுடன் பொதுவாக
ஏற்றுக்கொள்வதாக மத்திய அரசுக்கு 23.6.1997 அன்று தெரிவித்தது.

29.8 இந்தத் திட்டம் காவிரி நதிநீர் அதிகார மன்றம் என்ற ஒரு
மன்றத்தை நடுவர் மன்றத்தின் தீர்வினைச் செயலாக்க நிறுவுவதற்கான
திட்டமாகும். கீழ்க்கண்ட நடுவர் மன்றத்தின் முக்கியமான தீர்வினைச்
செயலாக்க இத்திட்டம் அமைகிறது:

(அ) தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. நீரை மாதாமாதம் வாராந்திர அடிப்படையில் வழங்க கர்நாடகா உறுதி செய்ய வேண்டும்.

(ஆ) பாண்டிச்சேரிக்கு 6 டி.எம்.சி. நீர் விடுவதைத் தமிழ்நாடு உறுதி செய்ய வேண்டும். மற்றும்

(இ) காவிரி நதிநீரைப் பயன்படுத்தி பாசனம் செய்துவரும் 11.2 லட்சம் ஏக்கருக்கு மேல அதன் பாப்பினை கர்நாடகா விரிவாக்கம் செய்யக்கூடாது என்று உறுதி செய்யப்பட வேண்டும்.

·29.9 மேற்படி அதிகார மன்றம், காவிரி நதியில் உள்ள நீர்த்தேக்கங்களின் செயல்பாட்டை கண்காணிக்கும் பொருட்டு களப் பணியாளர்கள் குழுவை ஏற்படுத்தும். 25.6.1991-ம் நாளிட்ட நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயல்படுத்தும் பொருட்டு ஒரு ஒழுங்குமுறைக் குழுவினை அதிகார மன்றம் ஏற்படுத்தும். இதில் மன்ற நடைமுறைகள், கூட்டங்கள் கூட்டுதல், கூட்டத்திற்கு வருகை தருவோர் விதி, வாக்களித்தல், களப்பணி அமைப்பு, விதிக்கும் ஆணைகளை மறு ஆய்வு செய்தல் உள்ளடக்கி இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நடுவர் மன்றம், இறுதி ஆணை பிறப்பித்த பிறகும், அந்த ஆணையைச் செயல்படுத்த ஒரு கருவியாக இந்த அதிகார மன்றம் தொடர்ந்து செயல்பட இத்திட்டத்தி லல் வகை செய்யப்பட்டுள்ளது. நடுவர் மன்றத்தின் முடிவிற்கு ஏற்ப, தேவைப்பட்டால் அவ்வப்பொழுது இத்திட்டத்திற்கு மத்திய அரசு திருத்தம் வெளியிடலாம்.

29.10 மத்திய அரசின் வரைவு திட்டத்தைக் கொள்கை அளவில் கர்நாடகா எதிர்த்ததால், அந்த வரைவு திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்காக 30.9.1997 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் காவிரிப் படுகை மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தை கூட்டி விவாதித்தார். வரைவு திட்டத்திற்கு எவ்வித மாற்றமும் இல்லாமல் அதை உடன் இறுதி செய்து அரசிதழில் வெளியிட வேண்டும் என்று இவ்வரசு வற்புறுத்தியது. இதுகுறித்து பாரதப் பிரதமருக்கு, 9-7-1997, 23-7-1997 மற்றும் 1-11-1997 அன்று முதலமைச்சரிடமிருந்து நேர்முகக் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. 29-7-1997 அன்று சென்னைக்கு பாரதப் பிரதமர் வருகை தந்தபோது அவரிடம் நேரில் ஒரு கோரிக்கையையும் முதலமைச்சர் கொடுத்தார். முதலமைச்சரின் விருப்பத்திற்கேற்ப, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 24-9-1997 அன்றும்



30-9-1997 அன்றும் மத்திய நீர்வளத் துறை அமைச்சரையும், 7-11-1997 அன்று பாரதப் பிரதமரையும் நேரில் சந்தித்து, இத்திட்டத்தை விரைவில் இறுதியாக்கி அரசிதழில் வெளியிட கேட்டுக் கொண்டார். இவ்வரசால் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வந்தபோதும், மத்திய அரசு இது குறித்து காரணமற்ற காலதாமதம் செய்து வருவதால் 10.11.1997 அன்று உச்ச நீதிமன்றத்தில் இத்திட்டத்தை உடனே இறுதியாக்கி அரசிதழில் வெளியிட மத்திய அரசுக்கு ஒரு உத்தரவு பிறப்பிக்குமாறு ஒரு மனுவினை பொதுப்பணித் துறை அமைச்சர் தாக்கல் செய்தார். துரதிருஷ்டவசமாக, ஏதாவது ஒரு காரணங்களுக்காக இத்திட்டத்தை இறுதிசெய்ய மத்திய அரசு, உச்ச நீதிமன்றத்திடம் கால அவகாசம் பெற்று வருகிறது. இந்த வழக்கு 31-3-1998 அன்று நான்கு வாரங்களுக்குப் பின் எடுத்துக்கொள்ள தள்ளிப் போடப்பட்டது.

29.11 காவிரி நடுவர் மன்றத்தைப் பொருத்தவரையில் தமிழகத்தைச் சார்ந்த ஒன்பது சாட்சிகள் மற்றும் பாண்டிச்சேரியில் ஒரு சாட்சி ஆகியோரது குறுக்கு விசாரணைகள் முடிவடைந்துள்ளன. தற்பொழுது கர்நாடகாவில் இரண்டாவது சாட்சியின் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தக் குறுக்கு விசாரணை முடிவடைந்த உடன் கேரளா தரப்பு இரண்டு சாட்சிகள் குறுக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்படும். குறுக்கு விசாரணைகள் முடிவடைந்தவுடன் மாநிலங்களின் விவாதம் மேற்கொள்ளப்படும். காவிரி நடுவர் மன்றத்தில் விவாதங்கள் முடிவுற்று இறுதித் தீர்ப்பு விரைவில் கிடைக்கும் என்று தமிழ்நாடு ஆவலோடு எதிர்பார்த்துள்ளது.

29.12 காவிரி பாசனப் பகுதி விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக நல்ல தீர்ப்பினைப் பெறுவதற்கும் இவ்வரசு தொடர்ந்து எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

## 30.0 சென்னை நகரிலுள்ள நீர்வழிகளைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்

கூவம் கழிமுகத்திற்கும் அடையாறு கழிமுகத்திற்கும் இடைப்பட்ட பக்கிங்காம் கால்வாயின் 7.2 கி.மீ. நீளப்பகுதி மழைக் காலங்களில் இவ்வாறுகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கத்தைத் தணித்து கால்வாயின் மருங்கிலுள்ள சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, இராசா அண்ணாமலைபுரம் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தை வடிக்கும் கால்வாயாகப் பயன்பட்டு வருகிறது. ஆனால் கூடவே ஆண்டு முழுவதும்

இப்பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரும் கால்வாயில் கலப்பதால் அருகிலுள்ள குடியிருப்புகளின் சுற்றுச் சூழல் மிகவும் பாதிக்கப்படுகிறது.

இவை தவிர சேப்பாக்கத்திலிருந்து லஸ் வரை கால்வாயோடு பிணைந்தாற்போல அமைக்கப்பட்டு வரும் துரித இரயில் பாதைத் திட்டப் பணிகளுக்கான தூண்கள், இணைப்பு விட்டங்கள் அடுத்தடுத்துள்ள இரயில் நிலையங்கள் ஆகியவற்றின் கட்டுமானக கூளங்கள் விழுந்து கால்வாயின் நீரோட்டம் பெரிதும் தடைப்பட்டுள்ளது. இவை தவிர 1996 ஜூன் மாதம் பெய்த அடைமழையும் சேர்ந்து ஏற்படுத்திய வெள்ளத்தினால் கால்வாயில் சேதங்கள் ஏற்பட்டு சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் பலநாள் பெரும் அல்லலுக்கு ஆளாயினர்.

இத்தகைய இடர்ப்பாடுகளைத் தவிர்க்கக் கூவம் கழிமுகத்திலிருந்து லஸ்-ஆர்.கே. மடம் சாலை வரையிலான 4 கி.மீ. நீளம் கொண்ட இக்கால்வாய் பகுதியை அடிவரையிலும் தூர்வாரிச் செப்பனிட தமிழக அரசு ரூ.190 இலட்ச மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தை நிறைவேற்றியதால் இப்பகுதியில் நீர் தேங்குவது தவிர்க்கப்பட்டு டிசம்பர் 1996 மழைக்காலம் முழுவதும் அல்லலின்றி இருந்தது.

இவ்வாண்டும் தொடர்ந்து மேற்கண்ட பாலத்திலிருந்து அடையாறு வரை மீதமுள்ள இக்கால்வாயைத் தூர்வாரிச் செப்பனிட ரூ.132 இலட்சத்திற்கும், அதே போன்று ஓட்டேரி நல்லாவைத் தூர் வாரிச் செப்பனிட ரூ.112 இலட்சத்திற்கும், கோட்டூர்புரம் பகுதியில அடையாற்றின் கரைகளை வலுப்படுத்தி உயர்த்த ரூ.85 இலட்சத்திற்கும் மதிப்பீடுகள் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. பக்கிங்காம் கால்வாயில மேலே கூறப்பட்ட இடங்களில் தூர்வாரிச் செப்பனிட மத்திய அரசு ரூ.68 இலட்சம் கடனுதவி அளித்துள்ளதால் இப்பணிகளைச் செய்ய ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. தூர்வாரும் பணி நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இவை நீங்கலாக, கூவம், அடையாறு, ஓட்டேரி நல்லா, பக்கிங்காம் கால்வாய், அரும்பாக்கம், விருகம்பாக்கம் கால்வாய்கள் மாம்பலம்-நந்தனம் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், மலேரியா தடுப்புக் கால்வாய் ஆகிய சென்னை நகர் வழியே ஓடும் ஒன்பது நீர் வழிகளையும் செப்பனிட்டுச் சீரமைக்கும்



பெருந்திட்டமொன்றைச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இப்பெருந்திட்டத்தின் செயல் வடிவினை முடிவு செய்ய தக்க கலந்துரைஞர்களை நியமிக்கும் பொருட்டு உலகளாவிய முறையில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டன. 12 நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த போதிலும் அவற்றில் பலரது ஒப்பந்தப் புள்ளிகளில் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாததால் 21-1-1998 கடைசி நாளாக நிர்ணயித்து மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. மறு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்று ஒப்பந்தம் முடிவு செய்யும் நிலையில் உள்ளது. இம்மதிப்பாய்வு முடிவானதும் மேற்கண்ட பெருந்திட்டத்தின் செயலாக்க முறையினை, அதாவது பயனீட்டாளர்கள் முதலீட்டின் மூலமாகவா, அன்றி உலக வங்கி போன்ற அயல்நாட்டு நிதி மூலங்கள் உதவியுடனா என்பதை அரசு முடிவு செய்த பின்னர் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**31.0 கடலரிப்பு தடுப்புப் பணிகள்**

சென்னை இராயபுரம் மீன் பிடிப்புத் துறைமுகத்திலிருந்து எண்ணூர் விரைவு சாலை நெடுகிலும் 9.08 கி.மீ. தொலைவுக்கு கடற்கரை கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. இக்கரைப் பகுதியையும், எண்ணூர் விரைவு சாலையையும் கற்குவியல் சுவரெழுப்பிப் பாதுகாக்கும் பல கட்டச் செயல் திட்டமொன்றை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

இதற்காக அரசு நடப்பாண்டு 1997-98-க்கு உரிய திருத்திய மதிப்பீட்டில் ரூ.221.67 இலட்சம் நிதி ஒதுக்கியது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காட்டுப்புதூர் மற்றும் மேற்கு நீரோடி என்ற இடங்களில் எடுத்துக்கொள்ளப்பட்ட கடலரிப்புத் தடுப்புப் பணிகள் முடிவடைந்து விட்டன. மற்றும் வட சென்னையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. வரும் 1998-99 ஆம் ஆண்டில் இப்பணிகளுக்கு ரூ.128.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ.75 கோடி மதிப்பீட்டில் தமிழ் நாட்டில் கடலரிப்புத் தடுப்புப் பணிகளுக்காக ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அதனை தேசிய கடற்கரை பாதுகாப்புத் திட்டத்தில் சேர்த்து வெளிநாட்டு உதவிபெற வழிவகை செய்ய மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வட சென்னையில் இராயபுரம் கடலரிப்பை நிரந்தரமாகவும் சரியான முறையிலும் தீர்வு காணும்பொருட்டு இத்துறையில் உள்ள நிபுணர்கள் மற்றும் நெதர்லாண்டு நிபுணர்கள் அனைவரையும் அழைத்து 21-11-1996-ல் ஒரு செயற்கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் விரிவான விவாதங்கள் - கருத்துப் பரிமாற்றங்களுக்குப் பின்னர் நெதர்லாண்டு வல்லுநர்களுடனான ஒரு கூட்டு முயற்சியாக கடற்கரைக்கு செங்கிடையாக, கரை குறடுகள் (கிராயின்) அமைக்கும் பணிக்குரிய மாதிரி உரு செய்து கடலரிப்புப் போக்கை ஆராய்வது என்று முடிவு செய்யப்பட்டது.

நெதர்லாண்டு அரசிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உதவி பெறுவதற்கான கருத்துரு நெதர்லாண்டு அரசின் ஒப்புதலுக்காக உள்ளது.

## 32. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்

1998-99-ம் நிதியாண்டில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் பணிபுரியும் 900 பொறியாளர்களுக்கும் 60 களப்பணியாளர்களுக்கும், மற்றும் 600 விவசாயிகளுக்கும் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்க ரூ.30 லட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் 200 பொறியாளர்கள் இந்தியாவிலும் மற்றும் அயல்நாடுகளில் நடக்கும் பாசன மேலாண்மை, பாசன மேலாண்மையில் விவசாயிகளின் பங்கு, நீர்த்தேக்கங்களை இயக்குதல், தானியங்கி மதகுகள் பொருத்தப்பட்ட கால்வாய்கள் விவரம் அறிதல், கணிப்பொறிப் பயிற்சி மற்றும் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் பொறியாளர்கள் மற்ற மாநிலங்களில் உள்ள பாசனத் திட்டங்களின் இயக்குதலும், பராமரித்தலும் பற்றி தெரிந்து கொள்வதற்காக கல்விச் சுற்றுலாவிற்கு மற்ற மாநிலங்களுக்கும், அதேபோல அயல்நாடுகளுக்கும் சென்றிட ரூ.241 இலட்சம் செலவில் மற்றும் வெளிநாடு பயிற்சித் திட்டத்தின்கீழ் சென்றுவர திட்டமிடப்பட்டுள்ளது.



| | | |
|---|---|---|
| அ) 50 பயிற்சிகள் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் | | 30 இலட்சம் |
| ஆ) 20 தேசிய பயிற்சிகள் (ஹைதராபாத், பூனா, ரூர்கி, டெல்லி மற்றும் ஹரியானா) | 81 இலட்சம் | |
| இ) 10 கல்விச் சுற்றுலா மற்றும் 5 கருத்தரங்குகள் | 60 இலட்சம் | |
| ஈ) 20 பேர் வெளிநாடுகளுக்கு அனுப்புதல் (இஸ்ரேல், நெதர்லேண்டு யுனைட்டட் கிங்டம் மற்றும் போர்ச்சுகல்) | 100 இலட்சம் | 241 இலட்சம் |
| மொத்தம் | | 271 இலட்சம். |

## 33.0 நீர் ஆய்வு நிறுவனம்

நீர் வளத் திட்டங்கள் வகுக்க நீர் ஆய்வு நிறுவனம் இயங்குகிறது. மேலும் இந்நிறுவனம் தமிழக அரசின் நீர் ஆதார அமைப்பின் தொழில்நுட்ப செயலகமாகவும் விளங்குகிறது. நீர்வளத்தை விஞ்ஞான முறையிலே திட்டமிடவும் மதிப்பிடவும் மற்றும் மேலாண்மைக்கு வழி வகுக்கவும் இந்நிறுவனம் செயல்படும். தமிழ்நாட்டில் உள்ள ஆற்றுவடி நிலங்கள் 17 ஆற்றுப்படுகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

காவேரி ஆற்று வடிநிலம் தவிர மற்ற ஆற்றுப் படுகைகளுக்குப் பரந்த அளவிலே நீர்வளத் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவையாவன சென்னை, பாலாறு, வரகாநதி, பொன்னையாறு, வெள்ளாறு, அக்கினியாறு, பாம்பாறு, கோட்டைக் கரையாறு, வைகை, குண்டாறு, வைப்பாறு, கல்லாறு, தாமிரபரணி, நம்பியாறு, கோறையாறு பரம்பிக்குளம் ஆளியாறு ஆகிய ஆற்றுப்படுகைகளாகும்.

ஒவ்வொரு ஆற்றுப் படுகைகளிலும் கிடைக்கின்ற நில மேற்பரப்பு நீரும் நிலத்தடி நீரும் விஞ்ஞான முறையிலே கணக்கிடப்பட்டிருக்கிறது. குடிநீர், விவசாயம், கால்நடைகள், தொழிற்சாலைகள், மின் உற்பத்தி, ஆகியவற்றிற்குத் தேவையான நீர் 1994-ம் ஆண்டிற்கு கணக்கிடப்பட்டு மேலும் வருங்கால ஆண்டுகள் 1999, 2004, 2019, 2044 ஆகியவற்றிற்குத்

[1998 ஏப்ரல் 22

தேவையான நீரும் கணக்கிடப்பட்டுள்ளன. இவ்வாண்டுகளில் நீர் மிகுதியும் நீர் பற்றாக்குறையும் கொண்ட ஆற்றுப்படுகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் வருங்காலத் திட்டங்கள் வகுக்க வழி வகைகள் ஏற்படுகின்றன. நீர் பற்றாக்குறையான ஆற்றுப் படுகைகளில் நீரைச் சேமிக்கவும், மாற்று வழிகளில் நீரைக் கொண்டுவரவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநில நீர்வளத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் துல்லிய அளவிலே ஒவ்வொரு ஆற்றுப் படுகைகளிலும் நீரின் இருப்பு, தேவை போன்றவற்றை அறிய திட்டமிடப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டு வைகை ஆற்றுப் படுகை எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

வகுக்கும் திட்டங்கள் உண்மையானதாக அமைய நீர் உரிமையாளர்களின் அறிவுரைகளும் கருத்துகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எனவே வைகை ஆற்றுப் படுகையின் நீர் உரிமையாளர்கள் கூட்டத்தை மதுரையிலே நடத்தி அவர்களுடைய கருத்துக்கள் திட்டங்களிலே புகுத்தப்பட்டுள்ளன.

நிலையான நீர்வள மேம்பாட்டிற்கும், சுற்றுச்சூழல் சார்ந்து திட்டமிடவும், இவை தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாழ்படுவதைத் தடுக்கவும், உயிரினப் பன்முகச் சமநிலையைப் பராமரிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீர் வள ஆதாரங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை அளிக்க, நீர் ஆய்வு நிறுவனத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தகவல் சேமிக்கவும், நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் ஒரு சுற்றுச் சூழல் பிரிவு செயல்பட்டு வருகிறது. பல்வேறு ஆற்றுவடி நிலப் பகுதிகளில் சுற்றுச்சூழல் நிலைமை பற்றிய அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. முதல் கட்டமாக நீர் மாசுபடுதல் மற்றும் இதைத் தடுப்பது குறித்த ஆய்வுகள் பவானி மற்றும் வைப்பாறு வடிநிலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீர் ஆய்வு நிறுவனத்தில் ஒரு தொலையுணர்வு மையம், நீர் ஆய்வு நிறுவனத்தின் நீர்வளம் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மைத் திறனைப் பெருக்குவதற்காக இயங்கி வருகிறது. தொலையுணர்வு தொழில் நுட்பத்தால், நோக்க ஆய்வு வரைபடங்களான புவியியல் நில உபயோகம்,



1998 ஏப்ரல் 22]

புவி மேற்பரப்பு, நில சாய்வு, வடிகால் மண்வகை, நில வெடிப்பு, நீரியல் வரைபடங்களைத் தயாரிக்கலாம். தொலை உணர்வு தொழில் நுட்பத்தைக் கொண்டு பாலாறு மற்றும் வைகை படுகைகளுக்கு நில உபயோகம், நில வெடிப்பு, வடிகால், புவி மேற்பரப்பு, போன்ற ஆய்வு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த வரைபடங்களின் உதவிகொண்டு ஆழ்குழாய்க் கிணறு துளையிடவும், திறந்த கிணறுகள் அமைப்பதற்கு ஏற்ற சரியான இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மற்றும் கசிவு நீர்க் குட்டைகள், நீர்தடுப்பு அமைப்புகள் கட்டுவதற்கு தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுக்கவும் முடிகிறது. இந்த தொழில்நுட்பத்தின் உதவி கொண்டு, பஞ்சாயத்து யூனியன் வாரியாக நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு உரிய சாதகமான இடங்களைத் தேர்வு செய்ய முடிகிறது. நான்கு ஒன்றியங்களுக்கு இப்பணி முடிக்கப்பட்டது. மற்ற ஒன்றியங்களுக்கு இப்பணி தொடர்கிறது.

## 34.0 தமிழ்நாடு கொதிகல ஆய்வகம்

கொதிகலன்கள் உள்ளிட்ட இந்தியாவிலேயே உயர் அழுத்தக் கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்களுக்கும் தேவையான உயர் அழுத்த உதிரி பாகங்கள் தயாரிப்பில் தமிழகம் முதல் நிலையில் இருந்து வருகின்றது. இந்த மாபெரும் வளர்ச்சிக்கு தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், தனது சிறப்பான செயல்திறத்தால் மிகவும் உறுதுணையாக இருந்து வந்து கொண்டிருக்கின்றது.

தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறையின் ஓர் அங்கமாக இயங்கிவரும் தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது.

மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ள இந்தியக் கொதிகலன்கள் சட்டம், 1923-ஐ மாநில அரசுகளால் இணைப் பொறுப்பின்கீழ் அமலாக்கப்பட வேண்டியிருப்பதையொட்டி, மேற்படி சட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்தும் பொறுப்பினை தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் முக்கியமான பொறுப்பாக மேற்கொண்டு இயங்கி வருகின்றது.

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்களின் உதிரி பாகங்கள் மற்றும் எக்னாமைசர்கள் இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950-ல்

வரையறுக்கப்பட்டுள்ளபடி நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதும் இக்கொதிகலன்கள் ஆய்வகத்தின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். இதன் பணி சட்ட ரீதி மற்றும் தொழில்நுட்ப வகையினைச் சார்ந்ததாகும்.

மேலும், தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் இயங்கி வரும் கொதிகலன்கள் அனைத்தும் தேர்ச்சி பெற்ற பணியாளர்களாலும், தேர்ச்சி பெற்ற பொறியாளர்களாலும் இயக்கப்படுவது தொடர்பாக, தமிழக அரசினால் பிறப்பிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கொதிகலப் பணியாளர் விதிகள், 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்கப் பொறியாளர்கள் விதிகள், 1965 ஆகிய விதிகளைச் செயல்முறைப்படுத்தும் பொறுப்பும் இவ்வாய்வகத்தின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், பழுதுபார்க்கும் நிறுவனங்கள் மற்றும் அனல் மின் நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் உயர் அழுத்த பற்றவைப்பாளர்கள், உரிய தரத்துடன் இருப்பதை உறுதி செய்யும்பொருட்டு, பற்றவைப்பாளர்களுக்கான தேர்வுகளை நடத்தி, அதற்கான சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் தயாரிக்கும்போது, அவற்றின் பல்வேறு பாகங்களும் தரமான பொருட்களைக் கொண்டும், தரமான வேலைத் திறன் கொண்ட பணியாளர்களைக் கொண்டும், நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்ய, இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950, அடிப்படையாக அமைகின்றது. இவ்விதிமுறைகளின்படி, கொதிகலன்கள் மற்றும் அதன் உபரி பாகங்கள் வடிவமைத்து தயாரிக்கப்படுவது உறுதி செய்யும் விதமாக இவ்வாய்வகம் கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பின் ஒவ்வொரு நிலையிலும் நிலை ஆய்வுகள் மேற்கொண்டு, அவற்றின் தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றது. இத்தகைய நிலை ஆய்வுகள் ஒவ்வொரு தயாரிப்பின் கச்சாப்பொருள் நிலையிலிருந்து இறுதி வடிவம் பெறும் நிலை வரையிலும் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் இவ்வாய்வகத்தினால் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் தரத்திற்குச் சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன.



இவ்வகையில் 1997-98-ம் நிதியாண்டில் ஆசியாவிலேயே மிகப் பெரிய அளவில் கொதிகலன்களைத் தயாரிக்கும் பாரத மிகு மின் நிறுவனம், தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலும், மற்றும் அதற்கு அடுத்த நிலையில் உயர் அழுத்த கொதிகலன்கள் தயாரிப்பில் புகழ் பெற்று விளங்கும் திருவாளர்கள். சிரார் வெசல்ஸ் லிமிடெட், திருச்சி, ஜி.பி. இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி, பிரிமியர் இன்டஸ்ட்ரீஸ், திருச்சி, ரஜினி பேப், திருச்சி, பைப் லைன்ஸ் அண்டு புராசஸ் எர்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சிராப்பள்ளி ஐஏஇசி இன்டஸ்ட்ரிஸ் (மெட்ராஸ்) லிமிடெட், சென்னை. பின்னி இன்ஜினியரிங் டிவிஷன் லிமிடெட், சென்னை, ஐபில்டெக், கும்மிடிப்பூண்டி, டாயிஷ் பாப்காக் பல்பேதர் லிமிடெட், பூந்தமல்லி, ஜெயா அண்டு கம்பெனி, கோயம்புத்தூர் ஆகிய தயாரிப்பு நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட ஏறத்தாழ நானூறு கொதிகலன்களை, அனைத்து நிலைகளிலும் ஆய்வு செய்து, அவற்றிற்கு தரச் சான்றிதழ்களை வழங்கி. இந்தியாவிலேயே கொதிகலன்கள் தயாரிப்பினில், தமிழகம் தொடர்ந்து முதல்நிலை வகிக்க வழிகோலியுள்ளது.

அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான சர்வதேச அளவில் தயாரிக்கப்படும் கொதிகலன்களுக்கு ஈடாக 500 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்குத் தேவையான பாரத மிகு மின் நிறுவனம், திருச்சி, நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பிரம்மாண்டமான உயர் அழுத்த கொதிகலன்களுக்கும் இவ்வாய்வகம் வடிவமைப்புக்கு ஒப்புதல் அளிப்பதுடன் ஒவ்வொரு நிலையிலும் ஆய்வு செய்து, தரச் சான்றிதழ்களையும் வழங்கி, மேற்படி கொதிகலன்கள் எந்த ஒரு தயாரிப்புக் குறைவும் சுட்டிக்காட்ட இயலாதவாறு மிகத் திறம்பட செயல்பட்டு வருவது, சர்வதேச நிறுவனங்களுக்கு இணையாக தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் செயல்படுவதை உறுதி செய்கின்றது. மேலும், தமிழகத்திலிருந்து தயாரிக்கப்படும் உயர் அழுத்தக் கொதிகலன்கள் ஒருசில அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்போதும் இவ்வாய்வகத்தால் வழங்கப்படும் தரச் சான்றிதழ்களின் அடிப்படையில், அவை தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்தகைய கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், புதியதாக கொதிகலன்களைத் தயாரிக்க அனுமதி கோரி விண்ணப்பிக்கும்போது, இவ்வாய்வகம் அத்தகைய விண்ணப்பங்களுக்குத் தேவையான

அனைத்துவித உதவிகளையும் வழங்கி, உரிய தொழில்நுட்ப நெறிமுறைகளை வழிகாட்டுவதன் மூலமாக மேற்படி நிறுவனங்கள் எந்தவித இடர்பாடின்றி. தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் துவக்கவும். அவ்வாறு துவக்கப்படும் தொழிற்சாலைகள் வெகு விரைவான உற்பத்தி பணிகளைத் துவக்கவும். இவ்வாய்வகம் அனைத்து உதவிகளையும் செய்து ஊக்குவித்து வருகின்றது. பல்வேறு மாநிலங்களில் இயங்கி வந்த இத்தகைய பல கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள் தற்போது தமிழகத்தில் தங்கள் தயாரிப்புகளுக்கான தொழிற்சாலைகளைத் துவக்க முன் வந்துள்ளதை சிறப்பம்சமாக குறிப்பிடலாம். சான்றாக, கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வந்த தி/ள். டாயிஷ் பாப்காக் பால்கோஷர் லிமிடெட் என்ற ஜெர்மானிய கூட்டுத் தயாரிப்பு நிறுவனம், அனல் மின் நிலையங்களுக்கு தேவையான கொதிகலன்களைத் தயாரிக்கும் தனது மிகப் பெரிய தொழிற்சாலையை இப்பொழுது சென்னைக்கருகில் பூந்தமல்லியில் துவக்கி, உற்பத்திப் பணிகளை தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான தடைபடாத மின்சார விநியோகம் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்துள்ள தமிழக அரசு, தொலைநோக்கு பார்வையுடன் தமிழகத்தின் மின்சார உற்பத்தியை பல மடங்கு உயர்த்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இது தொடர்பாக பல்வேறு தனியார் அனல் மின் நிலையங்களுக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்து, அவற்றின் ஆக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இம்மின் நிலையங்கள் அமைப்பில் கொதிகலன்கள் பெரும்பங்கு வகிப்பதால், இவற்றின் நிர்மானத்திற்கு கொதிகலன்கள் ஆய்வகம் அனைத்து உதவிகளையும் நல்கி வருகின்றது. தி/ள். தமிழ்நாடு கெமிகல் புராடக்ட்ஸ் நிறுவனத்தாரால் கும்மிடிப்பூண்டியில் அமைக்கப்பட்டுள்ள 63.75 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையத்திற்குத் தேவையான கொதிகலனை தென் ஆப்பிரிக்கா நாட்டில் ஜோகன்ஸ்பர்க் என்ற இடத்தில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள கொதிகலனை கொள்மூலம் செய்ய மேற்படி நிறுவனம் இக்கொதிகல ஆய்வகத்தை கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், மேற்படி கொதிகலன் இந்திய தரப்பாட்டிற்கு இணையாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் மேற்படி கொதிகலன் இறக்குமதி செய்வது பயனளிக்கத்தக்கதா என்பதை கண்டறியவும். இக்கொதிகல ஆய்வக தலைமை அதிகாரியான தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர்



மற்றும் மூத்த உதவி அதிகாரியான சென்னை வட்ட துணைத் தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர் அடங்கியகுழு ஒன்று தென் ஆப்பிரிக்கா ஜோகன்னஸ்பர்க்கிற்கு நேரில் சென்று, கொதிநிலையை நேரிடையாக ஆய்வு செய்ததன் அடிப்படையில், தற்போது மேற்படி கொதிகலன் கும்மிடிப்பூண்டியில் நிறுவப்பட உள்ளது. இதேபோல், மேட்டூரில் திவாளர்கள் மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி நிறுவனத்தாரால் அமைக்கப்படவுள்ள உற்பத்திக்குத் தேவையான கொதிகலன்களை முதன் முறையாக சீன மக்கள் குடியரசிலிருந்து கொள்மூலம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதால், மேற்படி கொதிகலன்களையும் வடிவமைப்புக்கும், தரத்திற்கும் ஒப்புதல் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் சென்னைக்கருகில், ஸ்ரீபெரும்புதூரில் தென்கொரிய கார் தயாரிப்பு நிறுவனமான, திருவாளர்கள் இந்துஸ்தான் மோட்டார் கார் தயாரிப்பு நிறுவனம், திருவள்ளூரில் அமைந்துள்ள கார் தயாரிப்பு தொழிற்சாலைக்குத் தேவையான கொள்கலன் மற்றும் நீராவி குழாயமைப்புகளுக்கு தேவையான அனைத்து ஒப்புதல்களையும் வழங்கி, திட்டமிட்டபடி, உற்பத்தி பணி துவக்கப்பட இவ்வாய்வகம் வழிகோலியுள்ளது. இக்கொதிகல ஆய்வகம், 1997-98-ம் ஆண்டில், தமிழகத்தில் புதியதாக நூற்று முப்பத்து நான்கு புதிய கொதிகலன்களையும், அவற்றுக்கான நீராவி குழாயமைப்புகளுக்கும் ஒப்புதல் வழங்கி. அவற்றைப் பதிவு செய்வதன் மூலம் உற்பத்திப் பணிகள் துவக்கப்பட்டு தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்து வருகின்றது.

மேற்படி கொதிகலன்கள், அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், துணியாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், சர்க்கரை ஆலைகள், உரம் தொழிற்சாலைகள், மருந்துப் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள், உருக்காலைகள். அனல் மின் நிலையங்கள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவமனைகள், நட்சத்திர ஹோட்டல்கள் போன்ற பல்வகைப்பட்ட தயாரிப்பு நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ளதிலிருந்து தமிழகத்தின் ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சியில், கொதிகலன்கள் ஆய்வகம் பெரும் பங்கு வகிப்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொதிகலன்கள் தயாரிப்பு, நிறுவனங்களைத் தவிர கொதிகலன்கள் உதிரி பாகங்களான அடைப்பான்கள், குழாய்கள், பற்றவைப்பு கம்பிகள் போன்ற உபகரணங்களைத் தயாரிக்கும் பெரும்பாலான நிறுவனங்களும்

தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளதால், மேற்படி தொழிற்சாலைகளில தயாரிக்கப்படும் உதிரி பாகங்கள் அனைத்தும் பலவேறு நிலைகளில ஆய்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு தரச் சான்றிதழ் வழங்கும் பணியினையும், இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் உபகரணங்கள் இந்தியாவின் மொத்தத் தேவையில் பெரும் பங்கு வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வகையில் உலகத்தரம் வாய்ந்த அடைப்பான்களைத் தயாரிக்கும் திருவாளர்கள் ஆட்டோ இந்தியா நிறுவனம், சென்னை, பனப்பாக்கத்தில் ஒரு தொழிற்சாலையுடன் துவங்கி, தற்போது மறைமலைநகரில் ஒரு தொழிற்சாலையும், காஞ்சிபுரத்தில் ஒரு தொழிற்சாலையும் மூன்று தொழிற்சாலையாக தனது உற்பத்தித் திறனை விரிவுபடுத்தி உள்ளது. கொதிகலன்கள் ஆய்வகம் தமிழகத்தில் தொழிற் வளர்ச்சியில் ஆற்றி வரும் மிகப் பெரிய பங்கினை எடுத்துக் காட்டுகிறது. உதிரி பாகங்கள் தயாரிப்பில், மேற்படி நிறுவனத்தை தவிர, விராலிமலையில் பி/எல்.எப்.எம்.சி சன்மார் லிமிடெட், சென்னையில் பிஷார் சோமார்ஸ் சன்மார் லிமிடெட் நிறுவனம், கோவையில் கே.எஸ்.பி. பம்ப்ஸ் நிறுவனம், ஹேருரில் பி/ள். சிவானந்தா பைப் பிட்டிங்ஸ் நிறுவனம் ஆகியவை மிகப் பெரிய அளவில் உதிரி பாகங்கள் தயாரிப்பு இவ்வகையில் இந்நிதியாண்டில் (1997-98) இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது கொதிகலன்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் இயக்கத்திற்குச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. இத்தகைய ஆய்வுகள் மேற்படி நிறுவனங்களின் உற்பத்தி பாதிப்பிற்கு இடமளிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கொதிகலன்கள் ஆண்டாய்வின்போது பழுதடைந்ததாக கண்டுபிடிக்கப்பட்ட சுமார் 150 கொதிகலன்கள் பழுது நீக்கப்பட தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர் அவர்கள் நிலையில் பழுதுகள் ஒப்பளிக்கப்பட்டு, அவற்றில் சுமார் 150 கொதிகலன்களுக்கான பழுதுகள் சீர்செய்யப்பட்டு, இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய கொதிகலன்கள் ஒழுங்கு முறை விதிகள் 1950-ல் விதி 391 (ஏ)-க்கு தற்போது மத்திய கொதிகலன்கள் குழுமத்தினால் வழங்கப்பட்டுள்ள திருப்பங்களின் அடிப்படையில், கொதிகலன்களை இதுவரை உபயோகப்படுத்தப்பட்ட ஆண்டுகளை கணக்கில் கொண்டு, அவற்றில் ஒப்புவிக்கப்பட்ட அழுத்த சக்தி பிறனைவினை சதவீத



அளவில் குறைத்து நிர்ணயிக்க ஆணையிடப்பட்டுள்ளது. தொடர்ந்து தமிழகத்தில் பயன்பாட்டில் உள்ள சுமார் 1000 கொதிகலன்கள் தொடர்பாக இத்தகைய திருத்திய அழுத்த சக்தித் திறனுக்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இவற்றின் செயலாக்கம் கண்காணிக்கப்படுகிறது. இதன் மூலம், தமிழகத்தில் பயன்படும் கொதிகலன்கள் வயது முதிர்வின் காரணமாக விபத்துக்குள்ளாவது தடுக்கப்பட்டு அவை பாதுகாப்பாக இயங்குவதற்கு உறுதி செய்யப்படுகின்றது.

கொதிகலன்கள் நிறுவப்படவும், குழாய் அமைப்புப் பணிகள் அமைக்கப்படவும், பழுதுகள் சீர்செய்யப்படவும், தகுதி வாய்ந்த பல்வேறு நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கும் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது. மேற்படி நிறுவனங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், தகுதி வாய்ந்த உயர் அழுத்த பாகங்கள், பற்றவைப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டிருப்பதையும், மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப அனுபவத்தினையும் கருத்தில் கொண்டு பல்வேறு தரங்களில் இதற்கான ஒப்புதல்கள் அளிக்கப்படுகின்றன.

இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923-ன் விதிமுறையின்படி தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்களே கொதிகலன்களை இயக்க வேண்டும் என்று வகுக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள தமிழ்நாடு கொதிகலன்கள் பணியாளர்கள் விதிகள், 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்குப் பொறியாளர்கள் விதிகள், 1965 ஆகியவற்றின் விதிகளைச் செயல்படுத்தும் அமைப்பாகவும், இவ்வாய்வகம் செயல்பட்டு வருகின்றது. இதற்காக இந்த ஆய்வகம், கொதிகலப் பணியாளர்களுக்கெனவும் (தரம்-1, தரம்-2 மற்றும் தரம்-3) கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்களுக்கெனவும் காலமுறை தோறும் தேர்வுகளை நடத்தி தேர்ச்சி பெறும் பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு தகுதிச் சான்றிதழ்களை வழங்கி வருகிறது. தமிழகத்திலிருந்து இத்தகைய சான்றிதழ்களைப் பெறுபவர்கள் பல வெளிநாடுகளில் பெரும் வரவேற்பைப் பெறுவதிலிருந்து இவ்வாய்வகம் நடத்தும் இத்தகைய தேர்வுகளின் தரம் எளிதில் விளங்கும். இவ்வாறு தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்கள்/பொறியாளர்களால் கொதிகலன்கள் பாதுகாப்பாக இயங்கப்படுகின்றனவா என்பதை கொதிகலன்கள் ஆண்டாய்வின்போது, இவ்வாய்வகம் உறுதி செய்கின்றது.

பதிவு பெற்றுள்ள கொதிகலன்களைத் தவிர, பதிவு பெறாமலும், சான்றிதழ்களை பெறாமலும் இயக்கப்படும் கொதிகலன்களைக் கண்டறிந்து, அவற்றின் இயக்கத்தைத் தடை செய்வதுடன், அத்தகைய கொதிகலன்களை பயன்படுத்துவோர் பிற இந்தியக் கொதிகலன்கள் சட்ட விதிகளுக்கு முரணாக பொது மக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் கொதிகலன்களை அங்கீகாரமின்றி இயக்கி வருவதற்காக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மிக முக்கியமான பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், கண்காணிப்புப் பொறியாளர் நிலையிலுள்ள தலைமைக் கொதிகலன்கள் ஆய்வாளர் தலைமையில் மூன்று துணைத் தலைமைக் கொதிகலன்கள் ஆய்வாளர்களை சென்னை திருச்சி மற்றும் கோவையில் வட்டார நிலை அலுவலர்களாகக் கொண்டும், பதினோரு கொதிகலன்கள் ஆய்வாளர்களையும் (இவர்களுள் ஆறு கொதிகலன்கள் ஆய்வாளர்கள் தனி பொறுப்பிலும்) பதினைந்து உதவி கொதிகலன் ஆய்வாளர்களையும் கொண்டு இயங்கி வருகிறது. இப்பதவிகளின் நிருவாகச் செலவுகளை ஏற்கும் குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்குத் தேவையான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, பதினொரு கொதிகலன் ஆய்வாளர் பதவிகளில் ஒன்பது பதவிகள் நிரந்தரமாகவும், மற்ற இரண்டு பதவிகள் நியமன நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குத் தற்காலிகமாகவும், ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அதுபோல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட பதினைந்து கொதிகலன் உதவி ஆய்வாளர் பதவிகளில், இரண்டு பதவிகள் நிரந்தரமாகவும், மீதமுள்ள பதின்மூன்று பதவிகள் நியமன நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குத் தற்காலிகமாகவும், இப்பதவிகளில் நிருவாகச் செலவுகளை ஏற்கும் பல்வேறு தொழிற்சாலைகளுக்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளும்பொருட்டு, ஒப்பளிப்புச் செய்யப்பட்டது.

## பொதுப் பணித் துறை - கட்டட அமைப்பு

பொதுப் பணித் துறை, கட்டட அமைப்பு 01-04-1996 முதல், 16 கட்டட தனிப்பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. வட்டம் மற்றும் கோட்டம் பற்றிய விரிவான விபரங்கள் இணைப்புப் பகுதியில் உள்ளது.

தமிழ்நாடு பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு, அரசுத் துறைகளான வருவாய், மருத்துவம், கல்வி, சட்டம், நீதி, கால்நடை,



விவசாயம், வணிக வரி, பொது, சமூகநலம் மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றுக்காகக் கட்டடங்கள் கட்ட திட்டமிடுதல் மற்றும் வடிவமைத்தல், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு திறம்படச் செயல்பட்டு வருகிறது. மேலும், இத்துறை அரசு நினைவு இல்லங்கள், ஸ்தூபிகள், சதுக்கங்கள் கட்டும் பணிகளையும் நிறைவேற்றுகிறது. மத்திய மற்றும் மாநிலச் சார்புத் துறைகளான தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம், பல்கலைக் கழகங்கள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், ஆடுகள் வளர்ப்புத் திட்டம், டானிடா (DANIDA) வளர்ச்சித் திட்டம், ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக்குழு திட்டம், உலக வங்கி உதவிப்பணிகள், நகர்புற வளர்ச்சி திட்டப்பணிகள் (IDMST) ஆகிய பிரிவுகளின்கீழ் வரும் கட்டடப் பணிகளை வைப்புநிதி மற்றும் செலுத்துத் தொகைப் பணிகளாக நிறைவேற்றுகிறது. மேலும் இக்கட்டட அமைப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்படும், நாடாளுமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும், தொகுதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மாவட்ட சார்பு நிதியிலிருந்து அளிக்கப்படும் நிதிசார்பு பணிகளையும் மேற்கொள்கிறது.

இத்துறை அரசுக் கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், அரசினர் தோட்டம், ஆளுநர் மாளிகை, அமைச்சர்கள் மற்றும் மிக முக்கியமானவர்கள் இல்லக் கட்டடப் பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்கிறது. தமிழகத்தில் உள்ள பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகளின் பராமரிப்பு மற்றும் மெரினா பராமரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது. மேலும், புயல், வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றத்தால் அரசுக் கட்டடங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைச் செப்பனிடும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு செயல்படுத்துகிறது.

மேலும் கட்டட அலுவலர்கள், காவல் துறை புலனாய்வுக் குழுமம் மற்றும் நீதிமன்றங்கள் கோரும் வழக்கு சார்ந்த கட்டடங்கள் மற்றும் சொத்துக்களின் மதிப்பீடுகளைத் தயார் செய்து தருகிறார்கள். மேலும், இக்கட்டட அமைப்பு, திரைப்பட அரங்குகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான உறுதிச் சான்றிதழ வழங்குதல மற்றும் அரசு அலுவலகங்கள் வாடகைக்கு அமர்த்தியுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை நிர்ணயச் சான்றிதழ் ஆகியவை வழங்குவதிலும் ஈடுபடுகிறது. மேலும் இவ்வமைப்பு, மிகமிக முக்கியமானவர்களின் வருகையின்போது செய்யப்பட வேண்டிய சாலை

ஓரத் தடுப்பு, கம்பு வேலி அமைப்புகள், மேடை அமைப்பு, ஒலி மற்றும் ஒளியமைப்புகளையும் செய்து வருகின்றது.

மற்றும் சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையம் கீழ்வரும் பணிகளை பொதுமக்களுக்கு அளித்து வருகிறது.

1. பொதுப் பணித் துறை கட்டட மையம் மூலம் பொறியாளர் மற்றும் கட்டடத் தொழில் வினைஞருக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

2. பொதுப் பணித் துறை கட்டட மையம், கட்டடப் பணிகள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும் பணிகளையும் மேற்கொள்கிறது. கட்டடக் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான விலை குறைந்த, தரம் வாய்ந்த கட்டுமானப் பொருள்கள், கருவிகள் தயார் செய்து சந்தைக்குக் கொண்டு வருவது மற்றும் கட்டுமானப் பணிகளில் உபயோகிப்பது ஆகிய பணிகளிலும் ஈடுபடுகிறது.

3. கட்டுமானப் பொருள்கள் தரப்பரிசோதனை செய்தல், அடிப்படை ஆய்வுப்பணி, மற்றும் பயனீட்டு ஆய்வுப்பணிகளையும் நடத்துகிறது.

4. பழுதடைந்த கட்டடங்களை கூர்ந்து ஆய்வு செய்தல், தேவையான புனரமைப்பு பணி சிபாரிசு செய்தல், மற்றும் அவற்றை நன்நிலைமைக்குக் கொண்டுவர தேவையான யுக்திகள் கையாளுதல் போன்ற சேவைகளையும் அளிக்கிறது.

*தலைமைக் கட்டடக் கலைஞர் பிரிவின் பணிகள்*

தலைமைப் பொறியாளர் மட்டத்தில், தலைமைக் கட்டடக் கலைஞரின் தலைமையில் கட்டட வரை கலைப்பிரிவு தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பிரிவு பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட்டு வரும் அனைத்து அரசுக் கட்டடங்களுக்குத் தேவையான வரைபடங்களைத் தயாரிக்கின்றது. மேலும் இப்பிரிவு புதிய கட்டடங்களுக்கான ஆரம்ப வரைபடங்கள், விளக்க வரை படங்கள், முகப்புத் தோற்றம் மற்றும் வெட்டுத் தோற்றங்களை கொண்ட வரைபடங்களையும் தயாரிக்கின்றது. இக்கட்டடங்களுக்குத் தேவையான வண்ணப்பூச்சு பற்றிய விபரங்களையும் அளிக்கின்றது. இப்பிரிவு நினைவிடங்கள், மண்டபங்கள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றுக்கான



மிகப்பெரிய வரைபடங்களைத் தயாரிப்பதோடு அல்லாமல், கட்டுமானப்பணிகளான புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் தலைமையிட அலுவலகங்கள் உள்ளடங்கிய பெருந்திட்ட வளாகத்திற்குத் தேவையான உள்ளமைப்பு வரைபடங்களையும் தயாரிக்கின்றது. மேலும், தொகுப்பு அங்கீகாரம் மூலம் வழங்கப்படும் திட்டப்பணிகளான ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூட கட்டடங்கள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான மாதிரி வடிவமைப்பு வரைபடங்களையும் தயாரிக்கின்றது.

## 1997-98 ஆம் ஆண்டில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகள்

### 1. சுகாதாரத் துறை

**1.1 தமிழ்நாட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

1996-97-ல் 300 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஒவ்வொன்றுக்கும் ரூ.6.00 இலட்ச மதிப்பீட்டில் மொத்தம் ரூ.18.00 கோடிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

மேலும் 1997-98-ல் தமிழ்நாட்டில் 352 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஒவ்வொன்றுக்கும் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.31.68 கோடிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. ஆக மொத்தம் 652 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் புதுமையான வடிவமைப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு இது வரை 296 கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பெற்றும், மீதமுள்ள இடங்களில் பணிகள் நன்முன்னேற்றத்திலும் உள்ளதால் அனைத்துப் பணிகளும் இவ்வாண்டின் இறுதிக்குள் முடிக்கப்பட உள்ளது.

**1.2 சுகாதார துணை நிலையங்கள் :**

மேலும் தமிழ்நாட்டில் 200 சுகாதார துணை நிலையங்கள் கட்டுவதற்கு ரூ.9.00 கோடிக்கு அரசு அனுமதி அளித்ததில், 50 இடங்களில் பணிகள் நடைபெற்றும், மீதமுள்ள இடங்களில் பணிகள் 1998-99-ல் மேற்கொள்ளப்படவும் உள்ளன. அனைத்துப் பணிகளும் 1998-99 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ளன.

**1.3 விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைப் பிரிவுகள்**

10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசரகால சிகிச்சை மருத்துவமனைகள், மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளான பெரம்பலூர், உசிலம்பட்டி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய நான்கு இடங்களில் கட்ட ரூ.1.184 கோடிக்கு அரசு அனுமதி அளித்து, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**1.4 காசநோய் சிகிச்சைப் பிரிவுகள்**

தமிழ்நாட்டில் 10 படுக்கைகள் கொண்ட காசநோய் சிகிச்சைப் பிரிவுகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளான தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, திருப்பூர் உசிலம்பட்டி, திருவாரூர், நாமக்கல், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய 11 இடங்களில் கட்ட அரசு ரூ.3.3 கோடிக்கு அனுமதி அளித்துள்ளது. இப்பணிகள் அனைத்தும் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**1.5 மருத்துவமனைகள் மேம்படுத்தல் திட்டம்**

மாவட்டத் தலைமை, தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.2.50 கோடிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

இப்பணிகளாவன:

(அ) திருவள்ளூர், உசிலம்பட்டி, திருவாரூர், நாமக்கல் மற்றும் கும்பகோணம் ஆகிய மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் வரவேற்பு மற்றும் விசாரணை முகப்பிடம் கட்டுதல்.

(ஆ) சங்கரன்கோயில் மற்றும் இராஜபாளையம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள தாலுகா மருத்துவமனைகளில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல வார்டுகள் கட்டுதல்.

(இ) இராமநாதபுரத்தில் கண்காணிப்பாளர் குடியிருப்பு இல்லம் கட்டுதல்.



(ஈ) ஆத்தூர் அரசு மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு கட்டுதல்.

(உ) மணப்பாறை அரசு மருத்துவமனையில், குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவைச் சிகிச்சைக் கூடம் கட்டுதல்.

(ஊ) ஊத்துக்கோட்டை அரசு மருத்துவமனையில், பழைய கட்டடத்தையும், புதிய வார்டையும் இணைக்கும் இணைப்பு வழிக் கட்டடம் கட்டுதல்.

(எ) கொடுமுடி அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலர் குடியிருப்பில் சிறப்பு மராமத்து பணிகள் செய்தல்.

(ஏ) பரமக்குடி அரசு மருத்துவமனையில், ஆழ்துளைக் கிணறும், நீர் வழங்கு வசதியும் செய்து தருதல்.

(ஐ) அந்தியூர் மற்றும் தொண்டாமுத்தூர் அரசு மருத்துவமனையில் பிண அறுவைக்கூடம் கட்டுதல்.

(ஒ) ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவைச் சிகிச்சைக் கூடம் கட்டுதல்.

(ஓ) பேர்ணாம்பட்டு மற்றும் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் கூடம் கட்டுதல்.

**1.6. மருத்துவக் கல்வி இயக்குநர் சார்ந்த பணிகள்**

திருச்சி அரசு உடற்கூறு சிகிச்சைக் கல்லூரியில், ஆண் மற்றும் பெண் மாணவர் விடுதிகள் கட்ட ரூ.2.73 கோடிக்கு அரசு அனுமதி அளித்து, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத்திட்டம்.**

தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத்திட்டம் 1991-92 முதல் ரூபாய் 37.10 கோடி மதிப்பில் ஏழாண்டுத் திட்டமாக அரசால் நிறைவேற்றப்படுகிறது. இவ்வாண்டில் 53 கட்டடப்பணிகள் ரூபாய் 24.55 கோடிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிகள் கீழ்க்கண்டவாறு முன்னேற்றத்தில் உள்ளன:

2 (அ). வேளாண்மைத்துறைப் பணிகள் [1998 ஏப்ரல் 22

| வ. எண் | பணி விபரம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **1. அரசு ஆணை எண் 223 (வி.து.) நாள் 23-5-1997** | | |
| 1. | இணை இயக்குநர் (விவசாயம்) அலுவலகக் கட்டடம் கட்டுதல், காஞ்சிபுரம் | 121.00 |
| 2. | ,, வேலூர் | 121.00 |
| 3. | ,, தர்மபுரி | 104.50 |
| 4. | ,, புதுக்கோட்டை | 107.80 |
| 5. | ,, மதுரை | 145.20 |
| 6. | ,, விருதுநகர் | 104.50 |
| 7. | ,, இராமநாதபுரம் | 102.30 |
| 8. | ,, தூத்துக்குடி | 115.50 |
| **2. அரசு ஆணை எண் 319 (வி.து.) நாள் 7-8-1997** | | |
| 1. | இணை இயக்குநர் (விவசாயம்) விழுப்புரம் அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 165.00 |
| **3. அரசு ஆணை நிலை எண் 177 (வி.து.) நாள் 9-12-1997** | | |
| 1. | வேளாண்மைத் துறை சென்னை இயக்குநருக்கான கூடுதல் அலுவலகக் கட்டடம் (பகுதி 2). | 230.00 |
| **4. அரசு ஆணை நிலை எண் 223 (வி.து.) நாள் 23-5-1997** | | |
| 1. | உதவி இயக்குநர் அலுவலகம் கட்டுதல் ஊத்துக்கோட்டை | 24.42 |
| 2. | ,, உத்திரமேரூர் | 24.42 |
| 3 | ,, ஆற்காடு | 24.42 |
| 4. | ,, காட்டுமன்னார்கோவில் | 24.42 |
| 5. | ,, வேதாரண்யம் | 24.42 |
| 6. | ,, திருவாரூர் | 24.42 |
| 7. | ,, திருவிடைமருதூர் | 24.42 |



1998 ஏப்ரல் 22]

| வ. எண் | பணி விபரம் | மதிப்பு (ரூபாய், இலட்சத்தில்) |
|---|---|---|
| 8. | உதவி இயக்குநர் அலுவலகம் கட்டுதல் பேராவூரணி | 24.42 |
| 9. | ,, ஆவுடையார்கோவில் | 24.42 |
| 10. | ,, ஆலங்குடி | 24.42 |
| 11. | ,, பெரம்பலூர் | 24.42 |
| 12. | ,, திருப்பத்தூர் | 24.42 |
| 13. | ,, மணப்பாறை | 24.42 |
| 14. | ,, குளித்தலை | 24.42 |
| 15. | ,, பல்லடம் | 24.42 |
| 16. | ,, நத்தம் | 24.42 |
| 17. | ,, தேவகோட்டை | 24.42 |
| 18. | ,, விலாம்பட்டி | 24.42 |
| 19. | ,, ஓமலூர் | 24.42 |
| 20. | ,, ராசிபுரம் | 24.42 |
| 21. | ,, பெண்ணாகரம் | 24.42 |
| 22. | ,, திருக்கோவிலூர் | 24.42 |
| 23. | ,, தென்கனிக்கோட்டை | 24.42 |
| 24. | ,, முதுகுளத்தூர் | 24.42 |
| 25. | ,, பத்மநாபபுரம் | 24.42 |
| 26. | ,, சிவகிரி | 24.42 |
| **5. அரசு ஆணை நிலை எண் 177 (வி.து.) நாள் 9-12-1997** | | |
| 1. | உதவி இயக்குநர் அலுவலகம் கட்டும்பணி செய்யூர் | 23.00 |
| 2. | ,, ஆரணி | 23.00 |
| 3 | ,, பண்ருட்டி | 23.00 |
| 4. | ,, வேடசந்தூர் | 23.00 |
| 5. | ,, கமுதி | 23.00 |
| 6. | ,, இராஜபாளையம் | 23.00 |
| 7. | ,, தென்காசி | 23.00 |

| வ. எண் | பணி விபரம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில) |
|---|---|---|
| | **6. விதை சான்றிதழ் துறைப்பணிகள் அரசு ஆணை நிலை எண் 128 (விது.) நாள் 25-3-1997** | |
| 1. | கோயம்புத்தூரில் விதைச் சான்றுத்துறை இயக்குநர் அலுவலகத்தில பயிற்று மைய அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 32.50 |
| | **2.2 கால்நடை பராமரிப்புத் துறைப் பணிகள். அரசு ஆணை நிலை எண் 248 (விது.) நாள் 16-6-1997** | |
| 1. | அபிஷேகப்பட்டியில் 200 எண்கள் பசுக்கொட்டகை மற்றும் 100 எண்கள் கன்றுக் கொட்டகைகள், உணவுத் தளம், வைப்பறை ஆகியவை கட்டும்பணி | 100.00 |
| 2. | அபிஷேகப்பட்டியில் 100 எண்கள பசுக்கொட்டகை மற்றும் 50 எண்கள் கன்றுக் கொட்டகைகள் கட்டும் பணி, உணவுத்தளம் வைப்பறை ஆகியவை கட்டும் பணி | 85.00 |
| | **2.3 தோட்டக் கலைத்துறை கட்டடப்பணிகள்** | |
| 8. | **அரசு ஆணை நிலை எண் 540 (வி.து.) நாள் 16-12-1997** | |
| 1. | மாநில தோட்டக்கலைப்பணிகள் — நுவலோகம் | 11.76 |
| 2. | ,, — ஆத்தூர் | 22.35 |
| 3. | ,, — மாதவரம் | 17.02 |
| 4. | ,, — திருவில்லிப்புத்தூர் | 6.50 |
| 5. | ,, — கன்னியாகுமரி | 31.49 |
| 6. | ,, — மேலகதிர்பூர் | 17.41 |
| 7. | ,, — மேலாதிவாக்கம் | 18.86 |
| | | **2455.22** |



**3. கல்வித் துறைக் கட்டடப்பணிகள்**

**3.1. பள்ளிக்கல்வி கட்டடங்கள்**

1997-98-ம் ஆண்டில் கீழ்க்கண்ட பள்ளிக்கல்விக் கட்டடங்கள் கட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாய், கோடியில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் 50 இடங்களில் இரண்டு வகுப்பறைகள் கட்டுதல் | 2.00 |
| 2. | தமிழ்நாட்டில் 120 இடங்களில் இரண்டு வகுப்பறைகள் கட்டுதல் | 4.80 |
| 3. | தமிழ்நாட்டில் 129 இடங்களில் இரண்டு வகுப்பறைகள் கட்டுதல் | 5.16 |
| 4. | தமிழ்நாட்டில் 80 இடங்களில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுதல் | 6.72 |
| 5. | தமிழ்நாட்டில் 39 இடங்களில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுதல் | 32.76 |
| 6. | தமிழ்நாட்டில் 200 இடங்களில் பெண்களுக்கான கழிப்பறைகள் கட்டுதல் | 1.44 |

மேற்கண்ட பணிகள் விரைவாக நடைபெற்றும், கழிப்பறை கட்டும் பணிகள் விரைவில் முடிக்கப்பெறவும் உள்ளன.

**3.2 உலகவங்கி நிதியுதவியின்கீழ் நடைபெறும் பள்ளிக் கட்டடப் பணிகள்**

பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், மாவட்ட ஆரம்பப் பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ் உலக வங்கியின் நிதியுதவியில் கீழ்க்கண்ட பள்ளிக் கட்டடப் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | பணியின் பெயர் | மொத்த எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட மொத்த மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் அரசுக் கல்லூரிகளுக்கு வகுப்பறைகள் மற்றும் உள்ளமைப்பு வசதிகள் அமைத்தல் | 8 | 30.50 |
| 2. | கல்லூரிக் கட்டடங்களில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டுதல் | 7 | 500 |
| 3. | அரசு கலைக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 8 | 197 |

மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

### 3.3 கல்லூரிக் கல்வி கட்டடங்கள்

1997-98ஆம் ஆண்டில் கீழ்கண்ட கல்லூரிக் கல்விக் கட்டடப்பணிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மொத்த எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட மொத்த மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளுக்கு வகுப்பறைகள் மற்றும் உள்ளமைப்பு வசதிகள் அமைத்தல் | 8 | 30.50 |
| 2. | கல்லூரிக் கட்டடங்களில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டுதல் | 7 | 500 |
| 3. | அரசு கலைக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 8 | 197 |





## 4. நினைவகங்கள்

### 4.1. அண்ணா நினைவகம்

சென்னை மெரினாவில் பேரறிஞர் அண்ணா நினைவக மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.2.14 கோடி அனுமதிக்கப்பட்டு ஆறுமாத காலத்தில் பணிகள் சிறப்பாக கண்கவரும் வண்ண மின் அலங்கார அணி விளக்குகளுடன் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால், 1996 பிப்ரவரி 3ல் திறந்து வைக்கப்பட்டது.

### 4.2 பக்தவச்சலம் நினைவகம்

